# பாரதிதாசன் பன்மணித்திரள்

## காட்டுக்குறத்தி—நாட்டுப்புறத்தான் கலப்புத் திருமணம்!

**தெருவில் குறத்தி :**

ஐயே! ஐயே...!
தெற்குப் பொதிகைமலை எங்கள் மலைதான்—நல்ல
தென்பாங்கும் நாட்டியமும் எங்கள் கலைதான்
தக்கதக்க தக்கதக்க என்றாடுவோம்—நல்ல
தாயான தமிழையே கொண்டாடுவோம்!

ஐயே! ஐயே...!

சாதி சனங்கள் என்னை இட்டு வந்தாங்க—தன்னந்
தனியே என்னை இங்கே விட்டுப் போனாங்க!
வீதியிலே ஆடிப்பாட நானோ ஒருத்தி—ஐயோ
வெட்கமா இருக்குது நான் சின்ன குறத்தி!

ஐயே! ஐயே...!

(வீதியில் அவளைப் பார்த்துக் கொண்டிருந்த நாட்டுப் புறத்தான் எதிரில் நெருங்கிக் கூறுகின்றான்.)

**நாட்டான் :**
வெட்கமென்ன சிக்களென்ன சொல்லடி பெண்ணே—இந்த
வீதியிலே யாருமில்லை நில்லடி கண்ணே!
சொக்குப்பொடி தூவிவிட்டால் என்மேலே
சோலைக்குநீ வாடிஇள மயில்போலே

குறப்பெண்ணே...!

**குறத்தி :**

என்னை வளைக்க இவன் வலை போட்டான்—நல்ல
இன்பம் பரிமாற இலைபோட்டான்
மின்னல் அடித்ததுபோல் கண்ணை அடித்தான்—காதல்

வேதனையினாலேமனம் துடிதுடித்தான்

ஐயே...! ஐயே...!

நீ நாட்டுப் புறத்தான்—நான்
காட்டுக் குறத்தி!

**நாட்டான் :**

நாட்டு மக்களில்—வேறு
பாட்டைக் கண்டாயோ?

**குறத்தி :**

நாம்—கூட்டுவாழ்க்கை வாழுவது
கைகூடுமோ—இந்த
கோதைக்குநீ மாலையிட
எண்ணிடலாமோ?
ஐயே! ஐயே...!

**நாட்டான் :**

காதல் கொண்டபின்—நம்மில்
சாதி ஏதடி?

**குறத்தி :**

வேதனை தரும்—இந்தச்
சோதனை ஏனோ?

**நாட்டான் :**

மாதரசி உனக்கென்மேல் ஆசையில்லையா? உனை
வைத்துப் படைக்க எனக்கு மீசையில்லையா?
குறப்பெண்ணே...

**குறத்தி :**

உனக்கு,

ஆடத் தெரிந்தாலும் போதுமே—கொஞ்சம்
பாடத் தெரிந்தாலும் போதுமே—!—மிக

அரிதாகிய கனல் ஒன்றுமே
தெரியாத ஓர் பழிகாரனை

நாடுவதால் என்ன புண்ணியம்—உளம்
நத்துவதால் என்ன கண்ணியம்?

**நாட்டான் :**

ஆட்டத்தி லேஒரு சேரன்நான்—நல்ல
பாட்டில் சோழ பாண்டியர் பேரன்நான்—நீ

அச்சப் படுவதை விடுவாய்
ஆசைக் கனிஇதழ் தருவாய்—நம்மைக்

கூட்டியதும் கலை தானடி—நல்ல
கோடையிலே குளிர் தேனடி!

**குறத்தி :**

எடுஎடு எடுஎடு ஒரு புறப்புறை தங்கமாமா!
தடதட தடதட வென முழங்குவோய் தங்கமாமா!

**நாட்டான் :**

கொடு கொடு கட்டிமுத்தம் புள்ளிமானே—நான்
கொள்ளக் கொள்ள இன்பமடி புள்ளிமானே

**குறத்தி :**

விட ஒருநொடி முடியாது தங்கமாமா—உனை
விட்டாலுயிர் தரியாது தங்கமாமா!

**நாட்டான் :**

தடதடவெனப் பாயுதடி இன்பவெள்ளம்
தடங்களில் துள்ளுதடி நம்முள்ளம்

## அவள் உதடு!

சிரிப்பைக் கொண்டு செய்த உதடு
சிரித்துக் கொண்டே இருந்தது—பாங்கனே!
சிரித்துக் கொண்டே இருந்தது

ஒருதிங்களாய்உன் முகம்காணேன் என்றாள்—நான்
ஒன்றுமே சொல்லாமல் ஊமைபோல் நின்றேன்
உருவப் படம்கேட்டேன் தரவில்லை என்றாள்
ஓகோ நானதை மறந்தேனே என்றேன்
அரிவை உள்ளம் அழுதுகொண் டிருந்ததெனினும்
சிரிப்பைக் கொண்டு செய்த உதடு
சிரித்துக் கொண்டே இருந்தது—பாங்கனே!
சிரித்துக கொண்டே இருந்தது!

உனைக்காணா திரவில் தூங்கிடேன் என்றாள்—உனை
ஒருநொடி யேனும் பிரிந்திடேன் என்றாள்
எனக்குப் பிறநாட்டில் வேலையுண் டென்றேன்
இரண்டு திங்கள் வரேனென்று சொன்னேன்
புனைபாவை உள்ளம் அழுதுகொண் டிருந்ததெனினும்
சிரிப்பைக் கொண்டு செய்த உதடு
சிரித்துக் கொண்டே இருந்தது—பாங்கனே!
சிரித்துக் கொண்டே இருந்தது!

இருப்பதாய் இருந்தால் என்னிடம் சொல்க—நீ
போவதாய் இருந்தால் என் கட்டைக்குச் சொல்என்றாள்
வருத்தத்தால் ஒன்றுமே சொல்லவில் லைநான்

வாழ்வென்னைக் கைவிடு மோஎன் றெண்ணினேன்
இருப்பாலை உள்ளம் அழுதுகொண் டிருந்ததெனினும்
சிரிப்பைக் கொண்டு செய்த உதடு
சிரித்துக் கொண்டே இருந்தது—பாங்கனே!
சிரித்துக் கொண்டே இருந்தது!

## அவள் யார்?

ஓர் நிலவே அவள்தானோ கதிர்தானோ
கொம்புத் தேனோ—நடை
ஓவியமோ புள்ளி மானோ—வேண்டும்

நேயத்திலே நெஞ்சம் தோயும்போதிற்—புதிதாய்
நேரிட்ட இன்பத்தேன் ஊற்றோ—வந்து (ஓர்)
நெஞ்சைத் தொடும்குளிர் காற்றோ?

மாணிக்கம் சிரிப்புக் காரியோ—நெஞ்சை
மகிழ்விக்கும் வானம் பாடியோ
ஆணிப் பொன்னே அவள் மேனியோ—பொழி (ஓர்)
அனைத்தும் தித்திக்கும் சீனியோ?

ஆடும் மயிலோ பாடும் குயிலோ...படம்விரித் (ஓர்)
தாடும் மயிலோ பாடும் குயிலோ ?

நாடும் அகப் பொருளி னுக்கே —அவள்
நல்லதோர் இலக்கியமோ
தேடரிய கலைப் பொருளோ—அருமைக் (ஓர்)
செந்தமிழின் இன் சுவையோ?

## அவன்மேற் காதல்...

ஆடட்டுமா?—கொஞ்சம் (ஆ)
பாடட்டுமா? அத்தான்...

உயிர் தளிர்க்கப் பாடும் பாவலனே—என்
உளங் களிக்கப் பேசும் நாவலனே
மய லுக்கு மருந்தொன்று தேடிவந்தேன்—உன் (ஆ)
மலராத முகங்கண்டு மனம் நலிந்தேன்

வெண்பாத்தேன் சொரியும் ஒருநேரம்—பின்
விருத்த மழைபொழியும்(உன்) இதழோரம்
கண்பார்த்துன் பொன்னான வாய்திறந்தால்—நல்ல (ஆ)
கட்டாணி முத்துக்கள் சிந்திவிடுமோ?

மறவன் உருவியஓர் வாள்போலே—ஒளி
வாரி வழங்கும்உன் கண்ணாலே
நிறையஎன் மனம்பட்ட புண்ணாலே—உன் (ஆ)
நினைவு கலங்குவதும் எதனாலே?

சோலையுள் வானமும் நீலக்கடலும்—பசுந்
தோகை மயிலும்ஒரு கொஞ்சுகிளியும்
காலப் புதுமையும்உன் உள்ளத்திலே—கவி
காட்டினவா தமிழ் வெள்ளத்திலே! (ஆ)

## அவள்...!

பாருக்கோர் புதுமை
மாதர்க் கரசியவள்
பார்க்கும் பார்வை தன்னிலே—வந்து
பாயும் காதல் மின்னலே!

அவள் வார்த்தை ஒவ்வொன்றுமே
நேர்த்தி மட்டுமல்ல!
நறுக்கிப் பிழிந்தநற் கன்னலே!

நேருக்கு நேரிரண்டு
கெண்டை கண்டேன் நெற்றி

நீராழி மண்டபத்தில்—அதற்
கப்புறம் ஓர்புறத்தில்—கடும்

போருக்குப் பாரை
அழைக்க வளைத்தஇரு

புருவங் கண்டேன் திறத்தில்!

பவழமோ கோவைப்
பழமோ மின்னற் பிழம்போ

பாவை இரண்டுதடுமே—உண்டால்
சாவையும் நீக்கி விடுமே!—அங்கே

தவழும் ஒளிச்சிரிப்பைத்
தான் கண்டால் என்னுள்ளம்
பேரின் பத்தைத் தொடுமே!
நுண் இடையும் அன்னம்போன்ற
நடையும் நிறையமடை
உடையும் அழகின் பெருக்கா?—இவை
கடையில் விற்கும் சரக்கா?—மேல்
உடைஎன்று மின்னுடுத்தி
உலவிடும் தங்கத்தேர்
எனக்கல் லாமற் பிறர்க்கா? (பாருக்)

## ஏனோ இன்னும் துன்பம்?

முல்லை கமழும் தென்றல்
மொய்க்கும் வண்டின் பாடல்!
எல்லை யற்ற இன்பம்!—நெஞ்சே
ஏனோ இன்னும் துன்பம்?

சொல்லி வைத்த தைப்போல்
சொல்லிக் கொஞ்சும் கிள்ளை,
எல்லை யற்ற இன்பம்—நெஞ்சே
ஏனோ இன்னும் துன்பம்

எங்குப் போக வேண்டும்?
யாரை அடைய வேண்டும்?
இங்கு மெத்த இன்பம்—நெஞ்சே
ஏனோ இன்னும் துன்பம்?

## பிறக்க முடியாது

பிறக்க முடியாதடி
உனைப்போல் ஒருத்தி
பெண்ணழ கால்இந்த
மண்ணரசாள இனிப்
பிறக்க முடியாதடி
உன்னைப்போல் ஒருத்தி
மறக்கவும் முடியாது
கண்ணே உன் முகத்தையும்
வாரி ஒளிவீசும்
நகைமுத்துச் சரத்தையும்!
இறக்கவும் முடியாதே
உனை இழந்தே னென்றே
இருக்கவும் முடியாதே
உனைப் பிரிந்தே னென்றே
பிறக்க முடியாதடி
உனைப் போல் ஒருத்தி!

பறக்கவும் முடியாது
நீ எனை விட்டே;
பச்சைமயி லேவாளன்
வாழ்வின்பொ ருட்டே
திறக்கவேண்டும் உன் வாய்
என் நலம் கோரி
தென்னாடு பெற்றஎன்
கிளிப்பேச்சுக் காரி
பிறக்க முடியாதடி
உனைப்போல் ஒருத்தி!

## பிரிவு

வாழுமாந்தர்க்கு வான்மழை போன்றது
மணாளர்வந் தெனக்குத் தருவதோர் இன்பம்
தோழியே அவரின்றி நான்படும் தொல்லை
சொல்லிக் காட்டல் இலேசிலே இல்லை

சிறுகொம்பு பெரும்பழம்
தாங்குவது போலே என்
சிறிய உயிர் பெருங்காதல்
தாங்குவ தாலே
மறத்தமிழன் விரைவில்
வராவிடில் உடலில்
மளுக்கென்று முறியும் என்
ஆவிமண் மேலே
பிறர்செய்த தீமையை
மறந்திடுதல் மறதி
"இறந்துபோ வாளே
யான்போக வேண்டுமே"
என்பதில் மறதியா
அது என்றன் இறுதி!

## அவள் அவன் நேர்ந்தாடல்!

அவன்
மந்தை மாடு வீடுவரும் மாலை நேரத்தில்
வந்துநின்ற தென்னேடி சாலை ஓரத்தில்?

அவள்
சந்தையிலே கூடுவாங்கப் போனதி னாலே
தயங்குகின்றேன் சாயுந்திரம் ஆனதி னாலே

அவன்
சந்தையிலே கூடுவிற்க வில்லையா கண்ணே?
தக்கதாக இல்லைஎன்ற தொல்லையா பெண்ணே?

அவள்
சந்தையிலே கூடுவிற்க வில்லை நல்ஐயா
தனித்துவந்தேன் என்னபண்ண நீயே சொல்லையா?

அவன்
கூடுநல்ல கூடுகோழிக் கூடுவேண்டுமா?

அவள்
கூடுநல்ல கூடுகோழிக் கூடு வேண்டுந்தான்

அவன்
பாடு பெண்ணே பாடுநல்ல கூடுதருவேன்

அவள்
ஆடு கொஞ்சம் ஆடுநானும் பாடி வருவேன்

அவன்
கூடு, கோழி கூடுவதுபோலக் கூடுவோம்.

அவள்
கூடு, சிட்டுக் கூடுவது போலக் கூடுவோம்.

அவன்
கூடு கூடு கொஞ்சுமொழி சொல்லிச் சொல்லியே
அவள்
கூடக்கூட நெஞ்சில் ஆசை தீரவில்லையே!

## தலைவனும் தலைவியும்!

தலைவன் :
காதல் வாழ்வே வாழ்வென்று வள்ளுவர்
கருதிய தேன்? புகல்வாய்!

தலைவி :
மாதரும் துணைவரும் மனமொத்ததே இன்பம்
மற்றுமோர் இன்ப முண்டோ?

தலைவன் :
காதலி இடத்தில் காதலன் காட்டும்
கடமைதான் யாதுரைப் பாய்?

தலைவி :
காதலி நலமே தன்னல மென்று
கருதியே வாழ்ந்திடு வான்!

தலைவன் :
மாதர்கள் எல்லாம் மணவாள ரிடத்தில்
வாழும் முறைமை உரைப்பாய்?

தலைவி :
ஆதிமந்தி பிறந்த அருந்தமிழ் நாட்டில்
அவள் அவனைப் பிரிதல் இல்லை!

## உனக்கென்று நான்...எனக்கென்று நீ!

(தென்பாங்குக் கண்ணிகள்)

உனக்கென்று நான்பிறந்தேன்
உண்மையிலே பெண்மயிலே!
எனக்கென்று நீபிறந்தாய்
என் குயிலே பொன்வெயிலே!

தனக்கென்று வாழ்வதில்லை தமிழினத்தான் உலகினிற்றான்
மனமொன்று பட்டால்இன்ப வாழ்க்கையிலே நாம்ஒன்றுதான்
(உனக்)

நான்என்னை உனக்களித்தேன்
நடையழகி இடையழகி
நீஉன்னை எனக்களிப்பாய்
நேயப்பெண்ணே! வாஎன் கண்ணே!

வான்ஒன்று நிலவொன்று இணைந்ததனால் அழகுண்டு
நானொன்று நீஒன்று நணுகுவதால் வாழ்வுண்டு
(உனக்)

தேனுனக்கு நான் துணைவன்
தீங்கரும்பே! கோங்கரும்பே!
கோன்எனக்கு நீதுணைவி
கொஞ்சும்கிளி! வஞ்சிக்கொடி!

ஏனுனக்கு மனக்கசப்புநீ எனக் கதைவிளக்கு
நானுனக்கும் நீஎனக்கும் நாமளித்த அன்பளிப்பு!
(உனக்)

## பெண்

எடுப்பு

பெண்ணென்றால் அவளல்லவோ பெண்?—உலகில் (பெண்)

உடனெடுப்பு

கண்ணவள் மாமியார்க்கே காப்பவள் மாமனார்க்கே
உண்மையில் வாழ்க்கையிலே உயிராவாள் கணவனுக்கே
(பெண்)

அடிகள்

பொன்னான குணமுடையாள் பொய்யில்லா மணமுடையாள்
முன்னான அறமுடையாள் முத்தான சொல்லுடையாள்
தென்னாட்டின் பண்பாட்டில் தீராத பற்றுடையாள்
தன்வீட்டு விருந்தினர்மேல் தாய்போன்ற அன்புடையாள்
(பெண்)

மாண்புடைய தமிழ்நெறிக்கு மாத்தமிழர் புகழ்ஒளிக்குக்
கோணல்வந்தால் ஒருதுளிக்கு நாணம்வரும்அந் தக்கிளிக்கு
காணநல்ல நகைவேண்டாம் கற்பொன்றே அவள்பூண்டாள்
ஆணழகன் வீட்டினுக்கே அறம்வளர்க்கும் திருவிளக்கே!
(பெண்)

காலையிலே தான்எழுவாள் கன்னித்தமி ழைத் தொழுவாள்
வேலைஎதிலும் வழுவாள் வீணர்நிலைக் கேஅழுவாள்
ஏலாத சாதிமுறை எள்ளளவும் அவள் தழுவாள்
ஞாலத்து வள்ளுவனார் நன்னெறிவிட்டே நழுவாள்
(பெண்)

பெண்டிர்க்குப் பெருமாட்டி பிள்ளைகட்கு வழிகாட்டி
அண்டிடும் ஏழைகளை ஆதரிப்பாள் அமுதூட்டி!
வண்டமிழ்த் தாயான வையத்து மூதாட்டி
தொண்டுக்கே அன்புகாட்டித் தொழுவாள் மணமலர் சூட்டி!
(பெண்

## திரும்பிப் பார்த்தால என்ன?

திரும்பிப் பார்த்தால் என்ன?
விரும்பிப் பார்த்த என்னை அவன்
திரும்பிப் பார்த்தால் என்ன?
பெரியவேலை உள்ளவன்போலே
பெண்ணை வெறுத்தவன் போலே
அரும்பும் சிரிப்பை அடக்கிச் சென்றான்
அசையும் தேரைப்போல — அவன்

திரும்பிப் பார்த்தால் என்ன?

குன்று சார்ந்த நாடும் வீடும்
கொடுவென்று கேட்டேனா — நான்
சென்று வழியை மறித்துச் சிரித்து
மடியிற் கைபோட்டேனா — அவன்

திரும்பிப் பார்த்தால் என்ன?

மானென் றும்ஒரு மயிலென் றும்எனை
அழைக்கச் சொன்ன துண்டா? — எனை
ஏன் என் றொருசொல் சொன்னால் உள்ளம்
ஒடிந்திடுமோ துண்டா? — அவன்

திரும்பிப் பார்த்தால் என்ன?

சதையில் மெருகும் முகத்தில் அழகும்
தாங்கிச் சென்றான் கொடியன் — நான்
அதிலே கொஞ்சம் இதிலே கொஞ்சம்
அள்ளிக் கொள்ளவா முடியும் — அவன்

திரும்பிப் பார்த்தால் என்ன?

பாதி மறைத்துப் பாதி விலக்கும்
படத்து நடிகை யாநான்?
காதல் கொண்டஎன் முகத்தைப் பார்க்க
கண்ணும் கூசுவ தேனோ? — அவன்

திரும்பிப் பார்த்தால் என்ன?

## எனை மறந்தான்

(தென்பாங்குக் கண்ணிகள்)

கண்ணைப் போட்டான் என்மேலே;
கையைப் போட்டான் தோள்மேலே;
மண்ணை அள்ளிப் போட்டாண்டி
என் வாழ்விலே!—ஒரு
பெண்ணைக் குழியில் போட்டாண்டி
இந்நாளிலே!

காலைப் போட்டான் என்வீட்டில்,
கதையைப் போட்டான் என்காதில்,
வேலைத் தூக்கிப் போட்டாண்டி
என் நெஞ்சிலே!—என்
தோலை நெருப்பில் போட்டாண்டி
இந்நாளிலே!

பல்லைப் போட்டான் என்உதட்டில்
படியைப் போட்டான் முத்தளக்க
கல்லை வாரிப் போட்டாண்டி
என தலைமேலே!—சொன்ன
சொல்லை மறந்து போனாண்டி
இந்நாளிலே!

பூவைப் போட்டான் என்தலைமேல்
பொடியைப் போட்டான் நான்மயங்க
சாவைத் தூக்கிப் போட்டாண்டி
என் வாழ்விலே!—இந்தப்
பாவையைத்தான் மறந்தாண்டி
இந்நாளிலே!

## அறிவு மணம்

புதுநிலவு போல்முகத்தாள் நின்றாள் வெளியில்
மிதிவண்டி மேல்விரைந்து சென்றான்—மதிவாணன்
பார்த்தான் அவள்பார்த்தாள் பாய்காதல் மின்தாக்கி
வேர்த்தாள் அவன்வேர்த்தான் நெஞ்சு!

மறுநாளின் மாலை மதிவாணன் வந்தான்
பிறைநுதலா ளும்காணப் பெற்றாள்—சிறுக
விரித்தான் விரித்தாள் இதழ்க்கூட்டு மின்னச்
சிரித்தாள் சிரித்தான்அச் சேய்!

மூன்றாநாள் முத்துநகை நின்றிருந்தாள் முன்போல
தோன்றாத் துணையானான் தோன்றினான்—ஈன்றாரை
மீறென்றான் மீறினாள்! மின்னே மிதிவண்டி
ஏறென்றான் ஏறினாள் பெண்.

பெற்றோர் இதுகேட்டார் சற்றும் பிடிக்கவில்லை
அற்றனவே சாதிமதம் ஆ! என்றே—சுற்றமுடன்
கட்டைவண்டி ஏறிக் கதறி மிதிவண்டி
தொட்டவழிச் சென்றார் தொடர்ந்து!

சாதிமதக் கட்டைவண்டி தன்னிலே செல்லுகையில்
கோதையும் சேயும் குளத்தூர்போய்—ஓதியே
அன்புற்றார் வாழ்ந்த அறிவு மணமுடித்தே
இன்புற் றிருந்தார்கள் நன்கு.

## சோலை ஆடல் அரங்கு!

விட்டுவிட்டுக் குழல் ஊதும்
மெட்டு வைத்துக் குயில் பாடும்
வட்டாரச் சோலையிலே
மாமயில் ஆடும்—நல்ல
மரங்கொத்தி அரங்கத்தில்
தாளங்கள் போடும்.

கட்டுக்கரை அலை மோதும்
காதினிக்கும் ஒரு மேளம்
தட்டாமல் ஒத்தூதும்
தாமரை வண்டு—நல்ல
சிட்டுச் சலங்கை போடும்
ஒத்தாசை கண்டு.

வெள்ளைப் பட்டுப் பெடைஅன்னம்
வீறாப்பு நடை அன்னம்
உள்ளோடு லாவையிலே
ஒட்டாரக் கிள்ளை—நல்ல
ஒழுங்குபேசிக் கொண்டிருக்கும்
ஓயாத பிள்ளை.

கொள்ளை கொள்ளை கொடிமுல்லை
கோத்தமுத்தும் இணை இல்லை
கள்ளொழுகும் உதடு காட்டிச்
சிரித்தாள் ஒருத்தி—அவள்
காட்சியெல்லாம் கண்டிருந்தது
ஓர்செம் பருத்தி!

## மனத்தினை அவளுக் கீந்தான்
## மங்கையும் தன்னைத் தந்தாள்

நடந்தது நாள் ஒவ்வொன்றாய்
நகர்ந்தன நான்கு திங்கள்?
மடமயில் தனைநெருங்கும்
வாய்ப்பில்லை. பேச்சும் இல்லை
அடைந்தேன் இன்றவள்வரைந்த
அழகிய 'காதல் அஞ்சல்'
"அடைகஎன் வீட்டைக் காலை
ஐந்தரை மணிக்கு நீவிர்"

அஞ்சலைப் படித்தான் பாரி,
அற்றைநாள் இரவு தன்னைக்
கெஞ்சினான் திட்டிப் பார்த்தான்
கேட்கவே இல்லை அஃது;
மிஞ்சுகா லணிகள் பூண்ட
மெல்லிபோல் மெதுவாய்ச் செல்ல;
கொஞ்சிற்றுப் பரிதி கீழ்பால்
கொடியிடை வீடு சென்றான்.

வருகஎன் றுரைத்தாள்—கண்ணால்
வரவேற்று நின்றாள்; பாரி
இருகையால் தழுவப் போனான்
'இரும்' என்றாள் 'என்ன' என்றான்?
ஒருமனப் பட்டு வாழ்க்கை
ஒப்பந்தம் செய்து கொள்வோம்
பருகுவோம் பிறகு காதற்
பழச்சாற்றை என்று சொன்னாள்.

உம்மதம் என்ன என்றாள்
உம்பெயர் என்ன என்றாள்
"எம்மதம் ஆனால் என்ன
யான் ஒரு முசிலீம் என்றான்.
செம்மைசேர் புனை பெயர் தான்
பாரிஎன் றுரைத்தான் செம்மல்.
"இம்மியும் நமது வாழ்வில்
ஒற்றுமை இராதே" என்றாள்.

என்மதம் மயிலே உன்னை
வரவேற்க மறுப்ப தில்லை
கன்னலின் உதட்டை என்பால்
காட்டுக என்றான் காளை

நன்மனத் திர்! உ மக்கு
நான்வேண்டு மாயின், நீவிர்
உம்மதம் துறக்க வேண்டும்
உள்ளத்தும் வெளிப் புறத்தும்!

என்றனள் இதனைக் கேட்டான்.
திடுக்கிட்டான் இயம்பு கின்றான்.
என்மதம் இஸ்லாம், ஆம்ஆம்
எனினும்நான் திராவி டன்தான்
என்றனை. மங்கை நல்லாள்
இதுகேட்டாள் சிரித்துச் சொல்வாள்;
மன்னிய திராவி டர்க்கு
மதமில்லை சாதி இல்லை!

தளைமதம் விடுக நீவிர்
தனிவிடு தலைமேற் கொள்க.
களையினை நெஞ்ச கத்துக்
கழனியில் வளர்த்தல் வேண்டாம்
இளமையின் பயனும் வாழ்வின்
இன்பமும் மதத்தில் இல்லை
விளைந்திட்ட தீமை எல்லாம்
மதவெறி விளைத்த தென்றாள்;

நினைவினில் ஆழ்ந்தான் நெஞ்சில்
நிறைஇருள் நீங்கப் பெற்றான்.
தனிப்பெருந் திராவி டத்தைத்
தான்எனக் கண்டான். மானே
இனிஒரு மதத்துக் காட்பட்
டிரேன் என்றான் தூய்மை யான
மனத்தினை அவளிக் கீந்தான்
மங்கையும் தன்னைத் தந்தாள்.

## குறத்தி பாட்டு

என்னடி கானக் குறத்தி—எனக்
கின்பம் தராதிருக் கின்றாய்
பொன்னடி நத்திய என்னை—ஒரு
போதும் விலக்கிட வேண்டாம்!
பின்னடி தோளோடு தோளை—பேச்சுப்
பேசவும் கூசுவ தேனோ?
கன்னல் உதட்டினைக் கொஞ்சம்—உண்ணக்
காட்டடி நீட்டாண்மைக் காரி!

முத்துச் சிரிப்புடை யாளே—மலர்
மொய்குழ லேஇள மானே

தித்திக்கும் தேன்மொழி யாளே—எங்கும்
தேடக் கிடைக்காத பொன்னே
ஒத்துக்கொள் ஒத்துக்கொள் என்னை—இடை
ஓரத்தி லேஎன்னைச் சேர்ப்பாய்!
தொத்தும் பசுங்கிளி போலே—என்
தோளில்வந் தேறடி பெண்ணே!

கல்லைக் கவண்கொண் டெறிந்தாய்—கடைக்
கண்ணெறிந் தாயடி என்மேல்
கொல்லையிற் புள்ளினை வாட்டி—எனைக்
கொன்றனை உண்மையல் ஊட்டி
அல்லல் அகற்றடி மானே—எதிர்
ஆடியும் பாடியும் காட்டி
இல்லைஎன் னாதுகொ டுப்பாய்—அடி
என்னிரு கன்னத்திலே முத்தம்!

## முதியோர் காதல்

"தோழனே உன்னிடத்தில் சொல்லுகின்றேன் என்காதல்
பாழாகக் கூடாது. பாழானால் வாழ்வேது?
நேற்றுமுன்னாள் நேரிழையை நேரினிலே கண்டேன்நான்.
நேற்றிரவு கண்டு நெடுநேரம் பேசினாள்.
என்னைக் கணவனென எண்ணிவிட்டாள் ஆதலினால்
பொன்னான வாய்திறக்கப் பூவையவள் நாணமுற்றாள்.
மின்னல் இடையாள் மிகுமையல் கொண்டுள்ளாள்.
என்னையிவள் காதலித்தல் நானறிவேன் நானவளைப்
பொன்னாய் மதிப்பதையும் போயுரைக்க வேண்டாமா?
ஆதலின் நீபோய் அவளிடத்திற் கூறிவிடு
மாதரசி சொல்வதைநீ வந்துசொல்வாய் என்னிடத்தில்
செங்கதிரே மேற்கில் மறைந்ததுகாண்! தேனிதழாள்
அங்கிந்த நேரம் அழகாக வந்துநிற்பாள்
மாமரத்தின் தெற்கில வழிபோகும் அங்கேஓர்
பூமரமும் நிற்கும் புளியமரத் தண்டையிலே!
சோளம் வளர்ந்திருக்கும் கொல்லையொன்று தோன்றுமதன்
நீள வரப்பினில்தான் நின்றிருப்பாள் என்கின்றேன்"
என்று தலைவன் இசைக்கவே அத்தோழன்—

"இன்றிரவே இன்னும் அரைநொடியில் அன்னவளை
மெய்யிறுக நான்தழுவ வேண்டுமடா தோழா!
விரைந்தோடு மங்கையிடம் என்னுடைய மேன்மை
பெருஞ்செல்வம் கல்வி பெரியபுகழ் அத்தனையும்
சொல்லி மடமயிலாள் தொட்டிழுக்கத் தோதுசெய்வாய்
வல்லியிடம் என்றன் வயதைமட்டும் கூறாதே!
வாங்கிய வில்போல் வளைந்த உடல் எனினும்
ஆங்கே பிறப்பில் அமைந்ததென்று சொல்லி வைப்பாய்!

நன்மனத் தீர்! உ மக்கு
நான்வேண்டு மாயின், நீவிர்
உம்மதம் துறக்க வேண்டும்
உள்ளத்தும் வெளிப் புறத்தும்!

என்றனள் இதனைக் கேட்டான்.
திடுக்கிட்டான் இயம்பு கின்றான்.
என்மதம் இஸ்லாம், ஆம்ஆம்
எனினும்நான் திராவி டன்தான்
என்றனன். மங்கை நல்லாள்
இதுகேட்டாள் சிரித்துச் சொல்வாள்;
மன்னிய திராவி டர்க்கு
மதமில்லை சாதி இல்லை!

தளைமதம் விடுக நீவிர்
தனிவிடு தலைமேற் கொள்க.
களையினை நெஞ்ச கத்துக்
கழனியில் வளர்த்தல் வேண்டாம்
இளமையின் பயனும் வாழ்வின்
இன்பமும் மதத்தில் இல்லை
விளைந்திட்ட தீமை எல்லாம்
மதவெறி விளைத்த தென்றாள்;

நினைவினில் ஆழ்ந்தான் நெஞ்சில்
நிறைஇருள் நீங்கப் பெற்றான்.
தனிப்பெருந் திராவி டத்தைத்
தான்எனக் கண்டான். மானே
இனிஒரு மதத்துக் காட்பட்
டிரேன் என்றான் தூய்மை யான
மனத்தினை அவளிக் கீந்தான்
மங்கையும் தன்னைத் தந்தாள்.

## குறத்தி பாட்டு

என்னடி கானக் குறத்தி—எனக்
கின்பம் தராதிருக் கின்றாய்
பொன்னடி நத்திய என்னை—ஒரு
போதும் விலக்கிட வேண்டாய்!
பின்னடி தோளோடு தோளை—பேச்சுப்
பேசவும் கூசுவ தேனோ?
கன்னல் உதட்டினைக் கொஞ்சம்—உண்ணக்
காட்டடி நீட்டாண்மைக் காரி!

முத்துச் சிரிப்புடை யாளே—மலர்
மொய்குழ லேஇள மானே

தித்திக்கும் தேன்மொழி யாளே—எங்கும்
தேடக் கிடைக்காத பொன்னே
ஒத்துக்கொள் ஒத்துக்கொள் என்னை—இடை
ஓரத்தி லேஎன்னைச் சேர்ப்பாய்!
தொத்தும் பசுங்கிளி போலே—என்
தோளில்வந் தேறடி பெண்ணே!

கல்லைக் கவண்கொண் டெறிந்தாய்—கடைக்
கண்ணெறிந் தாயடி என்மேல்
கொல்லையிற் புள்ளினை வாட்டி—எனைக்
கொன்றனை உன்மையல் ஊட்டி
அல்லல் அகற்றடி மானே—எதிர்
ஆடியும் பாடியும் காட்டி
இல்லைஎன் னாதுகொ டுப்பாய்—அடி
என்னிரு கன்னத்திலே முத்தம்!

## முதியோர் காதல்

"தோழனே உன்னிடத்தில் சொல்லுகின்றேன் என்காதல்
பாழாகக் கூடாது. பாழானால் வாழ்வேது?
நேற்றுமுன்னாள் நேரிழையை நேரினிலே கண்டேன் நான்.
நேற்றிரவு கண்டு நெடுநேரம் பேசினான்.
என்னைக் கணவனென எண்ணிவிட்டாள் ஆதலினால்
பொன்னான வாய்திறக்கப் பூவையவள் நாண்முற்றாள்.
மின்னல் இடையாள் மிகுமையல் கொண்டுள்ளாள்.
என்னையிவள் காதலித்தல் நானறிவேன். நானவளைப்
பொன்னாய் மதிப்பதையும் போயுரைக்க வேண்டாமா?
ஆதலின் நீபோய் அவளிடத்திற் கூறிவிடு
மாதரசி சொல்வதைநீ வந்துசொல்வாய் என்னிடத்தில்
செங்கதிரே மேற்கில் மறைந்ததுகாண்! தேனிதழாள்
அங்கிந்த நேரம் அழகாக வந்துநிற்பாள்
மாமரத்தின் தெற்கில் வழிபோகும் அங்கேஓர்
பூமரமும் நிற்கும் புளியமரத் தண்டையிலே!
சோளம் வளர்ந்திருக்கும் கொல்லையொன்று தோன்றுமதன்
நீள வரப்பினில்தான் நின்றிருப்பாள் என்கின்றேன்"
என்று தலைவன் இசைக்கவே அத்தோழன்—

"இன்றிரவே இன்னும் அரைநொடியில் அன்னவளை
மெய்யிறுக நான்தழுவ வேண்டுமடா தோழா!
விரைந்தோடு மங்கையிடம் என்னுடைய மேன்மை
பெருஞ்செல்வம் கல்வி பெரியபுகழ் அத்தனையும்
சொல்லி மடமயிலாள் தொட்டிழுக்கத் தோதுசெய்வாய்
வல்லியிடம் என்றன் வயதைமட்டும் கூறாதே!
வாங்கிய வில்போல் வளைந்த உடல் எனினும்
ஆங்கே பிறப்பில் அமைந்ததென்று சொல்லி வைப்பாய்!

தேன்தடவ நேர்ந்ததனால் சேர்ந்தநரை என்று
மான்விழியா ளுக்குரைத்து வைத்துவிடு முன்னமே!
முப்பத் திரண்டுபல்லும் மோழையே! ஏனென்றால்
உப்பில்லாப் பத்தியத்தில் அப்படிஎன் றோதிவிடு!
கண்ணின் ஒளி மங்கியதைக் காதலிக்குக் கூறாதே!
பெண்ணரசை மெல்லத் தடவிப் பிரித்திடுவேன்
சார்ந்த இருட்டில் தடுமாற்றம் யாருக்கும்
வாய்ந்த இயற்கைஎன வஞ்சியவள் எண்ணிடுவாள்
கற்பை எனக்களித்த பின்பு கதைதெரிந்தால்,
குற்றமில்லை! போபோபோ என்றான் கொடுங்கிழவன்
தோழன்போய் மீண்டுவந்து சொல்லுகின்றான்; ஐயாவே
வாழைத் துடையுடைய வஞ்சிவந்து காத்திருந்தாள்
சொன்னதெல்லாம் சொன்னேன் துடித்துவிட்டாள்
காதலினால்

மின்னலின் சாற்றைக் குடித்துண்ண வேண்டுமென்றாள்,
காற்றாய் விரைந்துவந்து கட்டித் தழுவிமையல்
ஆற்றா விடில்நான்போய் ஆற்றில் விழுந்திறப்பேன்
என்று பறந்தாள். இதோஎன்றேன் ஓடிவந் ்தன்
சென்றுபே ரின்பத் திரைக்கடலில் மூழ்கிடுவீர்
போய்வா ரீர்! என்று புகன்றுதோ ழன்மறைந்தான்.
வாய்வழியும் எச்சிலொடு காலால் வழிதடவி
முன்னில் விழுந்தெழுந்து முன்காலில் புண்ணடைத்து
கள்ளுண்டான் போலஉடல் தள்ளாடிக் காலிடறச்
சோளம்வளர் கொல்லையிலே நின்றிருந்த தோகையினை
முளும் வெறியாலே மொய்குழலே என்றணுகித்
தாவி அணைந்தான் தனித்திருந்த அவ்வைக்கோற்
பாவையுடன் வீழ்ந்தான் படுகிழவன்; அண்டை
மறைந்திருந்த தோழன் அங்கு வந்திருந்த நல்லவர்பால்
அறைவான்; கிழவன் மணம்கேட்பான். அஃதியற்கை
தன்னொத்த மூத்தாளைத் தான்தேட வேண்டும்இள
மின்னொத்தாள் வேண்டும் எனல் தீது.

## பிழைத்தேனா? செத்தேனா?

நாம்வைத்த அன்பு மலையினும் பெரிதே
நம்தோழன் அன்பு கடுகினும் சிறிதே! (நாம்)

பாம்பொன்று சீறும்: தென்றலாம் அதன்பெயர்
பழிபேசித் திரியும்; குயிலாம் அதன்பெயர்!
தேம்பி அழவைத்தான் மாலைச் சுடுகாட்டில்
திறங் கெட்டுப்போகுமோ முகம்காட்டிப் போனால் (நாம்)

கண்ணிருந் தும்உடல் மரத்தினில் மோதும்
காதுகள் இருந்தும் கேட்கிலேன் யாதும்!
பெண்ணிருந் தேன்பெறும் பேறென்ன பெற்றேன்?
பிழைத்தேனா செத்தேனா வந்தானா அவன்றான்? (நாம்)

மார்பின் பூச்சோ எனஎன்னும் மூக்கு;
வண்டுசொற்படி அது முல்லையின் தாக்கு!
தேரின் மணியோ என்றும்என் நெஞ்சம்;
சிட்டுக்கள் அப்படி அல்லவா கொஞ்சும்; (நாம்)

பன்முறை அல்ல, ஒருநொடி விருந்து
பழந்தமிழ்! ஒருசொல்! என்சாவா மருந்து
பொன்னுடல் காதல் தணலால் உருகிற்றே
பூவிதழ் அவனைக் காணாது கருகிற்றே.

## சாதி புதைந்த மேட்டில் மாது புதைந்தாள் அழகன் மார்பிலே

1

அன்புடை அழகர்க்கு வரையும் அஞ்சல்;
நீர்ஒரு சாதி! நான் ஒரு சாதி!
ஆயினும் அன்பால் இருவரும் ஒருவர்,
நம்மைப் பெற்றவர் நச்சுச் சாதியாம்
பாழுங் கிணற்றில் வீழ்ந்திருப்பவர்
அம்மணல் தவளைகள் நமமணம் ஒப்பார்!
என்னைப்பிரிந் திருப்ப துமெக்கெப் படியோ,
உமைப்பிரிந் திருப்பதென் உயிர்பிரிந் திருப்பதே.
இன்றே இருவரும் எங்கேனும் ஓடலாம்
ஒன்றாய்—உயிரும் உடலுமாய் வாழலாம்.
எழுதுக உடன்பதில்! இங்ஙனம் ''அன்றில்''

2

இனிய காதல் அஞ்சலை எழுதினாள்
எழுதிய அதனை எவர்கொண்டு போவார்?
என்று நன்று கருதி யிருந்தாள்.

3

அழகன் அழகுடல் அங்குவைத் தழகனின்
அன்பு நெஞ்சை அன்றில்பால் வைத்தான்
அவளுடல் தழுவி இவண்வரும் தென்றலைத்
தழுவலால் சாகா திருந்தேன் ஆயினும்
நாணிக் குனிந்தொரு நாள்அவள் சிரித்த
மாணிக்கச் சிரிப்புத் தென்றலில் வருமா?
ஐயோ என்றே அலறினான் அழகன்!
சாதிமுடிச்சு மாறித் தனத்தை
தம்புவார் பிடிக்குத் தப்பிநான் அவனோடு
கம்பி நீட்டினால் கனிகசந் திடுமோ!
என்றே அழகன் எதிர்நோக் குகையில்
இந்தா அஞ்சல் என்றொரு கிழவர்
தந்தார்! அழகன் சடுதியிற் படித்தான்

அவன் எழுதிய பதில் :-

அன்புடை அன்றிலே!
இன்றே இரவே இரண்டு மணிக்கே
இரண்டு பேரும் பரங்கிப் பேட்டைக்
கோடி விடலாம்! உறங்கி விடாதே!
மெலுக்காய் எழுந்து வளையலைக் குலுக்காது
நடந்துதாழ் திறந்து குறட்டை நண்ணுக,
வாழைக் குலையை வேழம் தூக்கல்போல்
எடுத்துச் செல்வேன். இங்ஙனம் "அழகன்"

4

எழுதி முடித்த இந்த அஞ்சலைக்
கிழவ ரிடத்தில் அழகன் கொடுக்க
அஞ்சினான்! அவன்பா டையப்பா டானதே!
தவறா தவளிடம் தருதல் வேண்டுமே
என்றான் அழகன். இணங்கினார் கிழவர்.
எவரும் அறியா திருக்க வேண்டுமே
என்றான் அழகன் எவரும் அறியார்
என்றார் கிழவர். என்னஇது என்று
பிடுங்கினால் பெருங்கே டன்றே என்றான்.
நெடுமூச் செறிந்து கிழவர் "நீர் இவ்வா
றையப் படுதல் அடுக்குமோ" என்றார்.
இவ்வா றிருவர் பேச்சும் நீண்டது.

5

அழகன் தந்தை அறையின் சன்னலின்
வழியாய் இந்த வழக்கறிந் தவனாய்க்
கொல்லையால் குடுகுடு வென்றே ஓடி
அன்றிலின் தந்தையை அழைத்து வந்தான்,
பதுங்கி இருந்து பார்த்திருந் தார்கள்.

6

கெட்டவர் அஞ்சலைக் கேட்கவும் கூடுமே
என்றான் அழகன். இரார்என் றார்அவர்.
உம்மை நம்ப ஒண்ணுமோ என்றான்
என்னை நம்புக என்றார் கிழவர்
இதற்குமுன் உம்மை யானறி யேனே
என்றான் அழகன்

எதிரில் கிழவன்
அன்றிலாய் நின்றே "யான்தான் அத்தான்
அன்றில்" நாழிகை ஆயிற் றென்றான்
ஒருவெண் பொற்காசுக் கிரண்டுபடி அரிசி
கண்டநல் லாட்சி கண்டான் போல

மகிழ்ச்சி மனத்திற் றாண்டவ மாடக்
கொடிய சாதிநாய் குலைக்கு முன்னே
நடந்துவா அன்னமே விரைந்துவா மானே
தொத்தடி கிளியே தோளில்! என்றான்.

7

அழகனும் அன்றிலும் வியக்கும் வண்ணம்
இருவரின் தந்தைமார் எதிரில் வந்தனர்.
இருவரும் திருமண மக்கள் என்றனர்
சாதி புதைந்த மேட்டில்
மாது புதைந்தாள் அழகன் மார்பிலே!

## வந்த சேதி முடிந்ததே ?

வந்த சேதி முடிந்ததே—இயங்கு
வண்டி ஓட்டுவாய் வலவனே விரைவாய் (வந்த)

செந்தேன் உண்ட நினைவு சிறிதுநேரம் இருக்கும்
சேயிழை இன்பநினைவு எப்போதும் இருக்கும்
நொந்தது நோக்காது விழிபார்த்து நிற்கும்
நூலிடை எனைக்கூவிக் கூவி அழைக்கும் (வந்த)

புதுவை நகருக்கு விரைந்துபோக வேண்டும்
பொறி இயக்குநெய் எத்தனைபடி வேண்டும்?
இதோஎன்று பொறியினை முடுக்கிடு தாளில்
இன்பம் என்று போய்விடுவேன் அவள்தோளில் (வந்த)

தாவும்வழியில் புக்கத்துறை கண்டு நிறுத்துத்
தமிழன் உணவுவிடுதி காண்பதென் கருத்து—நல்
ஆவல் ஊசலாட்ட அகத்தும்புறத்து மாகி
அழுவாளின் மார்பில் எனைக்கொண்டு பொருத்து (வந்த)

## காதல் ஒப்பந்தம்

விழலாக வில்லை என்
காதல் விண்ணப்பம்!
அழகிய மயிலுக்கென் நன்றி!
விழியினால் எழுதினாள் ஒப்பந்தம் முற்றும்
வெண்ணகையா லிட்டாள் கையெழுத்தும் (விழ)

பிழைசெய்த தச்சுக்கு வழிகாட்டும் வடிவு!
பெண் ணமைப்புக்கு முடிந்தஓர் முடிவு!
வழியிலோ ஏழைக்கு வாய்த்தபொற் குவியல்!
வளவயல்நான்; அவள் சம்பா நடவு (விழ)

மங்கைதரு மின்பம் மட்டுப்பட வில்லை
வையம்என் நினைவில் தட்டுப்பட வில்லை
ஐயோ அவளைப் பிரியமுடிய வில்லை
ஆர்பொறுப்பார் பிரிவால்வரும் தொல்லை (விழ)

தமிழகம் நெல்லையும் விலக்குதல் முடியும்
தையல்கை விலக்குதல் எப்படி முடியும்?
கமழ்ந்திரும் முல்லையிற் படிந்த வண்டு
கடைப்பார்ப்பாள் உணவுண்ணல் எங்கே உண்டு! (விழலாக)

வைய மல்ல இன்பக் கடல்இது!
வாழ்க்கை அல்ல அன்பின் தொடர்பிது!
எய்திய இந்நிலை மாறாமை வேண்டும்
இருபத் தைந்து கோடி ஆண்டும்! (விழலாக)

## மாடியில் நிலவு

மாடியிலே உலவும் வானப் புது நிலவு
கூடிக் குலவ எனைக் கேட்டு—மெல்லப்
பாடினாளே ஒரு பாட்டு—நல்
வாழ்வுக் கினிதாகிய நாள்
மகிழச்செய்யுந் திருநாள்
தேடிய நற்சுவைக் கூட்டு—வந்து
சேந்தி னாளே வலை—போட்டு!

ஏடு விரிந்தமலர் எட்டி பார்த்தெனையே
மாடிக்கு வரும்படி கூவும்—கைம்
மலர்கள் நீட்டி எனைத் தாவும்
வாளப் பறவையும் நானா?
மங்கை வராததும் ஏனோ?
வீடு நுழையவும்அ வாவும்—அந்த
வீட்டார் தடுத்தால் உளம் நோவும்.

கண்கள் அழகை எட்டும் காதுமொழியை எட்டும்
பெண்ணைத் தொடவோ கைஎட் டாது—நல்ல
பேரின்பம் இன்றுகிட் டாது.
பிசைமுக் கனியின் சாறே
மிகவும் பெரியதோர் ஆறாய்
அண்டையி லேஓடும் போது—நான்
அள்ளி அருந்த முடியாது.

தண்ணென்ற தென்றலே சாற்றுவேன் ஒன்றையே
கண்ணாட்டிக் கேசென்று கூறு—நான்
சுழறுவதையே ஒரு வாறு
கதிரொளி மங்கிற்று
விரைவினில் தோட்டத்துத்
திண்ணையின் மேலேவந் தேறு—வந்து
சேறுவேன் ஏதிடை யூறு?

## அவள் அப்படி

(தனித்தமிழ் வண்ணம்)

(இசை : கானடா தாளம் : ஆதி)

தனதன தனதன தனதன தத்தன
தனதன தனதன தனதன தத்தன
தனதன தனதன தனதன தத்தன
தனதன தனதன தனதன தத்தன தனதானா

அமிழ்தமிழ் தமிழ்தெனில் இருதமிழ் கிட்டிடும்
அவளிதழ் நினைவினில் விளைவன முத்தமிழ்
அழகிய முழுமதி அவள்முகம் ஒப்பது
கருவிழி இருகயல்! மொழிகனி ஒப்பது—கதையாமோ!

கமழ்குழல் மலரொடும் அணிகள் சுமப்பது!
குறுநகை உலகினை ஒளியில் அமைப்பது!
கனமணி அணியிழை கவிஞர்ம லைப்பது!
கலையது கதிரிழை நெசவில்வி ரித்தது—மிகையாமோ!

சுமையுடல் எனமிகு துயர்கொ ளுடுக்கையை
மெலிவுறு கொடியினை நிகருமி டுப்பினள்
சுனையினை அழகுசெய் மரையின்ம லர்க்கையின்
விரலிடை நகமது கிளியைநி கர்ப்பது—தவறாமே

நமதொரு தமிழகம் அடைவதொர் வெற்றியும்
நடைமுறை தனிலுறும் மகிழ்தரு பெற்றியும்
நணுகிய தெனமனம் மகிழ்வைய ளிப்பவள்
நடுவெயில் இடையவள் நறுநிழல் ஒப்பவள்—அறிவாய்நீ

## நீ வேண்டாம்

இலவுகாத்த கிளியானேன் நானே—அவன்
என்னைத்தெருவில் விட்டுச்சென்றிட் டானே
நிலையாக நம்பியிருந் தேனே—அவன்
நினைத்ததைநான் அறியவில்லை மானே!

தண்ணென்ற தென்றலே சாற்றுவேன் ஒன்றையே
கண்ணாட்டிக் கேசென்று கூறு—நான்
சுழறுவதையே ஒரு வாறு
கதிரொளி மங்கிற்று
விரைவினில் தோட்டத்துத்
திண்ணையின் மேலேவந் தேறு—வந்து
சேறுவேன் ஏதிடை யூறு?

## அவள் அப்படி

(தனித்தமிழ் வண்ணம்)

(இசை : கானடா தாளம் : ஆதி)

தனதன தனதன தனதன தத்தன
தனதன தனதன தனதன தத்தன
தனதன தனதன தனதன தத்தன
தனதன தனதன தனதன தத்தன தனதானா

அமிழ்தமிழ் தமிழ்தெனில் இருதமிழ் கிட்டிடும்
அவளிதழ் நினைவினில் விளைவன முத்தமிழ்
அழகிய முழுமதி அவள்முகம் ஒப்பது
கருவிழி இருகயல்! மொழிகனி ஒப்பது—கதையாமோ!

கமழ்குழல் மலரொடும் அணிகள் சுமப்பது!
குறுநகை உலகினை ஒளியில் அமைப்பது!
கணமணி அணியிழை கவிஞர்ம லைப்பது!
கலையது கதிரிழை நெசவில்வி ரித்தது—மிகையாமோ!

சுமையுடல் எனமிகு துயர்கொ ளுடுக்கையை
மெலிவுறு கொடியினை நிகருமி டுப்பினள்
சுனையினை அழகுசெய் மரையின்ம லர்க்கையின்
விரலிடை நகமது கிளியைநி கர்ப்பது—தவறாமே

நமதொரு தமிழகம் அடைவதொர் வெற்றியும்
நடைமுறை தனிலுறும் மகிழ்தரு பெற்றியும்
நணுகிய தெனமனம் மகிழ்வைய ளிப்பவள்
நடுவெயில் இடையவள் நறுநிழல் ஒப்பவள்—அறிவாய்நீ

## நீ வேண்டாம்

இலவுகாத்த கிளியானேன் நானே—அவன்
என்னைத்தெருவில் விட்டுச்சென்றிட் டானே
நிலையாக நம்பியிருந் தேனே—அவன்
நினைத்ததைநான் அறியவில்லை மானே!

தலையில்அடித் தான்மணப்பேன் என்று—"நீ
தமக்கை மகளே" எனப்பு கன்று
குலையில்அடித் தான்பாவி இன்று—கருங்
குரங்கிடத்தில் அன்புவைத்தான் சென்று!

தேனிருக்க வேம்புகொள்ள லாமா?—என்னைத்
திகைக்கவிட்டா யோஅருமை மாமா!
நானிருக்க அவளைஎண்ண லாமா?—என்னை
நலியவிட்டா யோஅருமை மாமா?

நானிப்படி கேட்டேனடி கெஞ்சி—அவன்
நவின்றமொழி கேளடிஎன் வஞ்சி;
யானெழுதும் அஞ்சலையும் மிஞ்சி—பள்ளி
ஏகலில்லை நீசிறுநெ ருஞ்சி

உருவணக்கம் தரும்உனக்கே இன்பம்—வே
றொருவனைஏன் மணக்க வேண்டும் பின்பும்?
திருமாலின் சிவனாரின் முன்பும்—நீ
செங்கைகூப்ப வாய்த்ததாஉன் அன்பும்?

வரும்பார்ப்பைச் சாமிஎன் றழைத்தாய்—உன்
மாண்குடியும் நாணமுற வைத்தாய்
பெரியாரின் நன்னெறிப ழித்தாய்—தமிழ்ப்
பெருநாட்டின் பெருமைமயக்கு லைத்தாய்!

## நெட்டுக்காரி

கொஞ்சம் திரும்பிப் பாராயா?—நான்
கூப்பிடும் போதும் வாராயா?
நெஞ்சின் ஆசை திராயா?—உன்
நேயம் எனக்குத் தாராயா?

கெஞ்சும் மொழியும் கேளாதா?—நீ
கேட்டுத் திரும்ப மாளாதா?
தஞ்சம் அளிக்கத் தாளாதா?—உன்
தாராளம் என்னை ஆளாதா?

ஒருசொல்லுக்குப் பஞ்சமா?—என்
உள்ளக்கொதிப்புக் கொஞ்சமா?
இரும்புதான்உன் நெஞ்சமா?—அடி
என்மேல்உனக்கு வஞ்சமா?

திருவி ளக்கடி வீட்டுக்கே!—நீ
செந்தமி ழடிஎன் பாட்டுக்கே!
உருவி ளக்கடி நாட்டுக்கே!—நீ
உயிரடி என் கூட்டுக்கே!

அன்னத் தொடுநடைப் போட்டியா?—என்
ஆசைம னத்தினில் ஈட்டியா?
பின்னழ கைமட்டும் காட்டியா—நெஞ்சு
பிளந்தனை மையல் மூட்டியா?

முன்னழ கும்நகை முத்தழகும்—நல்ல
முத்தமிழ் கொட்டும்உ தட்டழகும்
என்னழகும் சேர்இ ரண்டழகும்—அடி
இன்பத்தி லேநீந் தப்பழகும்!

## கைப்புண் நோக்கக் கண்ணாடியா வேண்டும்?

என் மேல் ஆசை இல்லாவிட்டால்
எனைக்கண்டு சிரிப் பாளா?

அன்னநடை நடப்பாளா?—என்
முன்னே முன்னேவரு வாளா?
தன்னுடை திருத்து வாளா?—தன்
மின்னிடை குலுக்கு வாளா?—அவளுக்
கென்மேல் ஆசை இல்லாவிட்டால்
எனைக்கண்டு சிரிப் பாளா?

இப்படி வந்தால் தோளா—லெனை
இடித்துக் கொண்டு போ வாளா?
அப்படிப் போகவி டாளா?—என்
அடியை யும்மதிப் பாளா?—அவளுக்
கென்மேல் ஆசை இல்லாவிட்டால்
எனைக்கண்டு சிரிப்பாளா?

காலங் கடத்தக் கூடா—தென்று
கையோடு பிடிப் பாளா?—அவள்
ஆலம் பழத்தைப் பொறுக்கிப் பொறுக்கி
என்மேலே அடிப் பாளா?—அவளுக்
கென்மேல் ஆசை இல்லாவிட்டால்
எனைக்கண்டு சிரிப்பாளா?

கொல்லைக்கு நான்போம் போதே—அவள்
கொஞ்சும் கருங்குயில் போலே
மெல்ல மெல்லப் பாடு வாளா?—அவளுக்
கென்மேல் ஆசை இல்லாவிட்டால்
எனைக்கண்டு சிரிப் பாளா?

என் நாய்க்குட்டிக்கு முத்தம்—அவள்
என்னெதி ரேகொடுப் பாளா?
சின்னசிட் டுக்களின் கூடல்—கண்டே
என்னையும் பார்த்தழு வாளா?—அவளுக்
கென்மேல் ஆசை இல்லாவிட்டால்
எனைக்கண்டு சிரிப் பாளா?

## இன்ப வெள்ளம்

அன்றைக்குத்தான் சரிஎன் றாயே
அப்புறம் என்னடி நாணம்?
இன்றைக்குத்தான் தனித்திருந்தாய்
இன்னும் என்னடி வேணும்?
ஒன்றுக் கொடு கன்னத்திலே
உயிரைக் காக்க மயிலே
ஓடைப் புனலில் ஆடவேண்டும்
உறவு செய்யடி குயிலே

நன்றாகஉன் முகத்தைக் காட்டு
நட்டுக் கொண்டதும் ஏனோ?
குன்றில்ஏறிக் கொம்புத் தேனைக்
கொள்ளை கொண்டிடு வேனோ
அன்றிலைப்பார் சிட்டுக்கள் பார்
அலுப்பில்லாத காதல்
ஆளிருந்தும் அறிவிருந்தும்
உனக்கேனடி சாதல்?

வலிதிழுப்பான் மகிழ்ச்சி கொள்வோம்
என்று சும்மா நின்றாய்
கலிதவிர்க்க வந்தவளே
கண்டுகொண்டேன் நன்றாய்
எலி இழுக்கும் மாம்பழம்போல்
இருந்தேன் முன் னாலே
எட்டி இழு! கட்டித் தழுவ
ஏன் சுணக்கம் மேலே!

மலை காணேன் மலர் காணேன்
வையகத்தைக் காணேன்
நிலை காணேன் உடல் காணேன்
நிறை பொருள்கள் காணேன்
கொலைபுரிந்தாய் என் உடலைக்
கொள்ளை கொண்டாய் உள்ளம்
கூடிவிட்டாய் காண்பதெலாம்
ஓர் இன்ப வெள்ளம்

## அவன்மேல் நினைவு

மணவீட்டினில் அவனிருக்கையில்
மறந்துறங்குவ தெடபடி—அடி
வஞ்சிக்கொடியே செப்படி!—அவன்
இனிக்குந்தமிழ் நாடிச் சென்றான்
என்று சொல்வதும் தப்படி—என்
மணவீட்டினில் அவனிருக்கையில்

இனிக்கப்பேசும் வாய் மறந்தே
யான் உறங்குவ தெப்படி?—அடி
ஏந்திழையே செப்படி!—அவன்
எனைவிடுத்தான் படிக்கச் சென்றான்
என்று சொல்வதும் தப்படி—என்
மனவீட்டினில் அவனிருக்கையில்

கட்டி அணைக்கும் கையை மறந்து
கண்ணுறங்குவ தெப்படி!—அடி
கானக்குயிலே செப்படி!—அவன்
எட்டிச் சென்றான் தமிழ் ஆய்ந்திட
என்று சொல்வதும் தப்படி—என்
மனவீட்டினில் அவனிருக்கையில்

ஒட்டும் அன்பன் உடல் மறந்தும்
உறக்கம் கொள்ளுவ தெப்படி!—நடை
ஓவியமே செப்படி!—அவன்
எட்டச் சென்றான் தமிழ் பரப்பிட
என்று சொல்வதும் தப்படி—என்
மனவீட்டினில் அவனிருக்கையில்

தொட்டால் சுவைக்கும் விரல் மறந்தே
தூக்கம் கொள்ளுவ தெப்படி?—அடி
தோகையேநீ செப்படி—அவன்
எட்டுத் திசையும் தமிழுக்குச் சென்றான்
என்று சொல்வதும் தப்படி—என்
மனவீட்டினில் அவனிருக்கையில்

பட்டால் இனிக்கும் உதட்டை மறந்து
பாயிற் படுப்ப தெப்படி?—அடி
பச்சைக் கிளியே செப்படி?—அவன்
இட்டே தமிழ் பரப்பச் சென்றான்
என்று சொல்வதும் தப்படி—என்
மனவீட்டினில் அவனிருக்கையில்

## அவன் எழுதிய அஞ்சல்

### அஞ்சல் விளக்கம்

கேளாய் தோழி? கேட்டில் உழன்றநான்
ஆளன் எழுதிய அஞ்சலால் மகிழ்ந்தேன்.

செய்திச் சுருளுக்குச் செப்பும் பெயரே
அஞ்சல் என்பதாம்; அதுகாரணப் பெயர்!
நானதை விளக்குவேன் நன்று கேள்நீ:

எழுதிய செய்திச் சுருளை எவரும்
ஆவணத்திற் சேர்ப்பர்; அவற்றை
ஊர்க்கொரு பையே யாகச் சேர்த்தே
அஞ்சற் காரன் வாயிலாய் அனுப்புவர்.

தகட்டுச் சிற்றிலை மிகப்பல கோத்த
வளையம் தலையில் வாய்ப்புறப் பொருந்திய
கலகலத் தடியும் கையும் ஆகிய
வலியான் "அஞ்சல் வன்சுமை" தாங்கிய
நெடுவழி செல்லுவான் நீகண் டிருப்பாய்!
அஞ்சலோன், அதைப்பிறர் பறிப்பார் என்றே
அஞ்சலால் செய்திச் சுருளுக்கு அஞ்சல்
என்பதோர் ஆகு பெயரா யிற்று.

மற்றுமோர் காரணம் வழுத்துவ துண்டு
"அரசினர் ஆள்இவன்" என்று சலங்கை
உரைத்தலால் பறிக்க எண்ணுவார் உள்ளம்
அஞ்சலால் செய்திச் சுருளைத் தமிழர்
அஞ்சல் என்றனர்! என்பதும் அறிக.

இவ்விரு காரணம் இருக்க நானுமோர்
காரணம் கழறு கின்றேன்! அயலூர்
சென்ற காதலன் சேயிழை என்னை
மறந்தா னோஎன மருண் டிருக்கையில்
அஞ்சா தேஎனும் அருமைப் பொருள்படும்
அஞ்சல் என்றதால் சுருளுக்கு
அஞ்சல் என்றபேர் அமைந்தது நன்றே!

## அம்மாபோய்விட்டாள் அன்பை அழை!

காளையடி வீட்டுக் கொல்லையிலே!—சென்று
கட்டிப்போட்டுலாடி என்மயிலே
வேளையொடு சென்று புல்லிடுவேன்—பயன்
விருந்துக்கு நன்றி சொல்லிடுவேன்
தாளினைப் போடடி! என்அன்னை—வீட்டில்
தனியே விட்டுச்செல் வாளென்னை
பாளை பிளந்த சிரிப்புடையாய்—அந்தப்
பத்தமடைப்பாயை நீவிரிப்பாய்!

என்னம்மை இன்னமும் போகவில்லை—தோழி
இங்குநம் ஆசையும் தீரவில்லை
இன்ப இலக்கியம் கையிலுண்டு—நம்
ஏக்கம் தவிர்த்திட வாய்ப்புமுண்டு

இன்றைய வாய்ப்பினை நானிழந்தால்—வே
றெப்போது நான்பெறக் கூடுமடி?
அன்பனைச் சென்றழை என்தோழி—என்
அம்மையும் சென்றுவிட்டாள் வாழி!

## அவன் மேற் காதல்!

ஓடிவா ஓடிவா ஓடிவா!
ஓடிவா வானம் பாடியே! — விரைவில் (ஓடிவா)
வேடிக்கைக் காரி — இங்கு
வாடிக்கை காரி — உன்னைத்
தேடினேன் ஊரி — லின்பம்
நாடினேன் கோரி — விரைவில் (ஓடிவா)

எண்சுவைக் கூட்டு — நின்
செந்தமிழ்ப் பாட்டு — நான்
கேட்டுக் கேட்டு — வந்தேன்
தல்வழி காட்டு — விரைவில் (ஓடிவா)

பெண் நடக்கு மாம் — கண்ட
அன்னம்சொக்கு மாம் — இரு
கண்சிமிழ்க்கு மாம் — அவை
மின்னல் கக்கு மாம் — விரைவில் (ஓடிவா)

இங்கு நிற்கின் றேன் — கண்ணை
எங்கு வைக்கின் றாய்? — நீ
அங்கு நிற்கின் றாய் — உன்
அன்புகேட்கின் றேன் — விரைவில் (ஓடிவா)

## வந்தால் வரச்சொல்...
## ...தந்தால் தரச்சொல்

கண்ணுக்கொரு வண்ணப் புறா
காதுக்கவள் கானக்குயில்
பெண்ணுக்கரசானவளை
வந்தால் வரச்சொல்—எனக்கே
பேச்சுப்படி ஆசை முத்தம்
தந்தால் தரச்சொல்!

உள்நாட்டுச் சிற்றாடை
ஓரப்பட்டுப் பாவாடை
கண்ணாட்டி கட்டிப்போக

வந்தால் வரச்சொல்—கணக்கில்
கண்டபடி ஆசைமுத்தம்
தந்தால் தரச்சொல்!

அண்டை வீட்டுச் சின்னகண்ணே
அன்புடைய பொன்னுக் கண்ணே
வண்டிக்கே தவறிடாமல்
வந்தால் வரச்சொல்—மிகவும்
கண்டிப்பாய் வந்தமுத்தம்
தந்தால் தரச்சொல்!

கொண்டையிலே செங்கோங்கு
தண்டையிலே தென்பாங்கு
கொண்டவளைக் கண்டவுடன்
வந்தால் வரச்சொல்—அவளைக்
கண்டிப்பாய் வந்துமுத்தம்
தந்தால் தரச்சொல்!

நாட்டுக்கு மீட்சியடி
நம் தமிழர் ஆட்சியடி
நாட்டச்செல் வேன்அதற்குள்
வந்தால் வரச்சொல்—எனக்கே
நல்லபடி ஆசைமுத்தம்
தந்தால் தரச்சொல்!

காட்டுப் புலியடி நான்
கட்டி என்னைச் சிறையிடுவார்
கூட்டுக்குள் போகு முன்னே
வந்தால் வரச்சொல்—பேசிக்
கொண்டபடி ஆசை முத்தம்
தந்தால் தரச்சொல்!

## மருமகள் பூரிப்பு

(சிந்து கண்ணி)

தென்றல் அடிக்கையில் பச்சிளங் கீற்றுச்
சிலிர்த்து நிலைகுலைந் தாடுதல்போல்
இன்றைக்கு நீகொண்ட பூரிப்பின் காரணம்
என்னடி மின்னல்இ டைச்சிறுக்கி?
நின்ற உன்கால்கள்நி லைக்கவில் லைகடல்
நீராய் தெளிந்தது பொன்னுடலும்
அன்றைக்குச் சென்றவன் என்மகன் வீட்டை
அடைந்த மகிழ்ச்சித்தி ருக்கூத்தோ?

மாற்றிஅணிவதும் சேலையி னைமலர்
வாங்கி அணிவதும் கூந்தலிலே—ஒரு
காற்றென ஓடிச்சி ரிக்கும்மு கத்துக்குக்
கண்ணாடி காட்டிப்பின் மீளுவதும்
நேற்றில்லையே இன்று பூரிப்ப தென்னடி?
நீள்புரு வத்துநி லாப்பிறைச்சி
வேற்றூர்க்குச் சென்றவன் என்மகன் வீட்டுக்கு
மீண்ட மகிழ்ச்சித்தி ருக்கூத்தோ?

கறிகள் சமைத்தபின் தெருவினில் விற்றிடும்
காய்களை ஓடிஅ ழைப்பதுவும்
சிறுவிரல் மோதிரம் பார்ப்பதுவும் பார்த்து
மகிழ்வதும் செவ்விதழ் சேர்ப்பதுவும்
அறையினை நோக்கலும் நேற்றில்லை யேநீ
அப்படி பூரிப்ப தேதுக்கடி?
பிறநகர் சென்றவன் என்மகன் ஊர்வர
பெற்றம கிழ்ச்சித்தி ருக்கூத்தோ?

கச்சையை நோக்கலும் கண்கள் மலர்வதும்
கைவளை யைச்சரி செய்வதுவும்
மொச்சை உரிக்கையில் முன்கட்டில் ஓடி
முழங்கும் சிலம்படி மீளுவதும்
பச்சைப் பசுங்கிளி தானெனக் கொஞ்சலும்
பார்த்தில னேஇன்று பூரிப்பதேன்?
அச்சீமை சென்றவன் என்மகன் வீட்டை
அடைந்தம கிழ்ச்சித்தி ருக்கூத்தோ?

## அவன் கலங்கரை விளக்கடி

பட்டிமகன் போனவாரம்
கடற்கரை ஓரம்—எனைக்
கிட்டிவந்தான் கெஞ்சி நின்றான்
ஒருமணி நேரம்.

கட்டழித்தான் தொட்டிழுத்தான்
கட்டி அணைத்தான்—இளங்
காளையவன் என் உதட்டுப்
பாளை அவிழ்த்தான்.

முன்னிருப்பார் பின்னிருப்பார்
என்ன நினைப்பார்!—வாய்
முல்லைக் காட்டின் அண்டையிலே
முத்தம் விளைத்தான்.

முன்னிலவும் எழுந்ததுவே
முடிமுடி என்றேன்—என்

முகநிலவின் குளிரிலே தன்
முகத்தை நனைத்தான்.

கலைந்தகுழல் திருத்திவிட்டான்
கன்னத்தைத் தொட்டான்
குலைந்த ஆடை திருத்திவிட்டான்
இன்னமும் தெவிட்டான்.

விலங்கறுத்தே தமிழ்நாட்டை
மீட்க நடந்தான்—அவன்
கலங்கரை விளக்கடி என்
காதல் நிலைக்கே.

## அவன்மேல் நினைவு

நான்கு பக்கமும் வேடர்சுற்றிட
நடுவில் சிக்கிய மான்போல்—இங்(கு)
ஏன் பிறந்தேன் இவர்கள் வீட்டில்
கரையில் இட்டதோர் மீன்போல்!

நீரை மொண்டிடப் போகையில்அவன்
நினைப்பு வாட்டிடும் நெருப்பு—நல்ல
மோரை மொண்டிடும் மொந்தையி லேஅவன்
கலகல எனும் சிரிப்பு!

எடுத்த சுள்ளியில் அடுப்பெரிக்கையில்
எழில்எழில் அவன் எழிலே—பின்
இடைக்கிடை எனைக் குலுக்கிடும் அவன்
இயற்றிய கலைத் தொழிலே!

அசைப்பினில்அவன் அவன்அவன்என
அருகிற் சென்றதும் உண்டு—அட,
நிசத்தினில் அந்த கருக்கலில்தலை
நீட்டிய கதிர் கண்டு.

சிறக்க உண்ணடி பழங்கள் என்றெனைத்
திருத்த வந்தனள் அக்கை—சீ
பறக்க மட்டிலும் சிறகெனக்கிலை
பழம் இதுவெறும் சக்கை!

## அன்புத் *திருமணம்

ஓட்டிப் போகமறந் தானா—நம்மை
ஒன்று சேர்க்கநினைத் தானா

மாட்டுக் காரன்வந்து நம்மை—இடை
மறிக்கு முன்னர்இரு நெஞ்சும்
கூட்டி அன்புபரி மாறி—இன்பம்
கொள்க என்றுவெள்ளைக் காளை
பாட்டுப் பாடிநின்ற போது—விடை
பகரும் நல்லதொரு கறுப்பு.

நாளும் பார்த்துவரு கின்றோம்—நம்
நாட்டு மனிதர்மன அழகை
மேள தாளத்துடன் ஐயர்—மேல்
வெள்ளைக் கயிற்றினொடு குந்தி
ஆள னிடத்துமொரு கயிற்றை—கொடுத்
தவளின் கழுத்திலிடச் செய்வார்
காளையே அருமை மாமா—அந்தக
கயிற்று மணம்புரிந்து கொள்வோம்.

உள்ளம் ஒப்புவது மணமாம்—இந்த
உண்மை தனைஅந்த மனிதர்
எள்ளத் தனையும்உணர்ந் திலரே—நம்
இனத்தைக் கண்டுமவர் திருந்தார்!
தள்ளி விடடிஅதை மச்சி—என்று
சாற்றி நின்றதுநற் காளை
வெள்ளப் புனல்நடக்கும் ஓடை—கரை
வீசிநடக்கும் குளிர் காற்றில்
அள்ளி இரண்டுப் நுகர்ந் தனவே—பேர்
அன்புத் திருமணத்தின் பயனை.

## அவன் வரவில்லை

மங்கைமா ரோடு கூடி
மடுக்கரை செல்லு கின்றாய்
தங்கமே என்வின் னைப்பம்
தனித்துவா என்ப தாகும்.
இங்ஙனம் சொன்னான்; சொல்லி
எழிலுறு முகத்தை இங்கே
பொங்குதா மரையில் காட்டி
பொன்னுடல் மறைத்திட் டானே!

குடத்தினை இடையில் தாங்கிக்
குளிர்புனல் மடுவைச் சார்ந்த
இடத்தினை அழகு செய்ய
தனித்துவா என்று கூறித்
தடத்தில்நான் வருந்தும் வண்ணம்
தடந்தோளைக் குன்றில் வைத்தான்!
குடத்தேனை நிகர்த்த மெய்யைக்
கொண்டுபோய் மறைத்திட்டானே!

வெறுத்திட அயல்மங் கைமார்
மேவிட வந்தால், உன்பால்,
குறுக்கிட்டுப் பேச அன்பிற்
குளித்திட முடியா தென்றே
அறுத்துப்பே சியதால் வந்தேன்
அழகாடு நடையை அன்னோன்
தருக்குறு களிற்றில் வைத்தான்
தன்னுடல் மறைத்திட் டானே!

வரிப்புலி போன்ற நீழல்
மண்ணிலே காட்டும் ஆல
மரத்திடை தனித் திருந்தால்
வரத்தடை இல்லை என்று
விரிப்புறச் சொல்லி என்றன்
விருப்பத்தைப் பெருக்கி னான்;தான்
சிரிப்பைமுல் லைபால் காட்டித்
திருமேனி மறைத்திட் டானே!

சதிர்வரும் நடையும் உன்றன்
தனிமையும் இனிக்க அங்கே
எதிர்வரக் காத்தி ருப்பேன்
மடுக்கரை வாராய் என்றான்
முதிர்தரு காதல் பொங்கி
முன்னங்கை வளையும் சோர்ந்தேன்
கதிரில்தன் பார்வை காட்டிக்
கனியுடல் மறைத்திட் டானே!

## மதிமுகம்

மாலைப் பொழுதினிலே—தேனை
வண்டு நுகர்கையிலே
சோலைக்குள் ளேபுகுந்தேன்—என்
சுந்தரி அங்கில்லை!

பாலைப் பழிப்பதுவாம்—அந்தப்
பாவையின் சொல் லெல்லாம்
வாலைக் குமரியவள்—என் றன்
மாண்பினுக் கேற்றவளாம்!

வாளினை வென்றகண்ணாள்—வாளின்
வயிர நெஞ்சுடையாள்
பாளைச் சிரிப்பினிலென்—மனமோ
பறிகொடுத் திருந்தேன்!

சோலையில் எவ்விடத்தும்—அந்தச்
சுந்தரி காணவில்லை

காலை வலித்தல்லால்—என் றன்
கண்பெற்ற தொன்றுமில்லை;

அந்தி இறுதிகண்டேன்—என் றன்
அன்பினைக் காணவில்லை
வந்த இருள்தனிலே—வானில்
வந்தது வட்ட நிலா!

மாசில் முகங்கண்டேன்—அவளின்
மதிமுகம் கண்டேன்
பாசம் அதிகரித்தே—விண்ணில்
பாய்ந்ததென் காதலுள்ளம்!

## உண்மையில் கசப்பா?

குறும்புடன் அவள் பார்த்த பார்வை
குலுக்கி விட்டதென் அகத்தை—அந்த
நறுமலர்க்கொடி மறைத்து விட்டது
நகைத்திடுமவன் முகத்தை!

வெடுக்கென என் றன் சடைப்பின் னல்தனை
இழுத்த திக்கினைப் பார்த்தே—அத்
துடுக்கன் அங்கொரு மரத்தில் தன்னுடல்
தோய்தல் கண்டுளம் வேர்த்தேன்!

தவித்து நிற்கையில் அலரி மொட்டினை
தலையில் விட்டெறிந் திட்டான்—விரல்
குவித்த கையினை முழுதும் கண்டிட
குளிர் விழிக்கவன் எட்டான்!

பூவும்பு தர்களும் தோளிற்ப டும்படி
போயினன் அந்தமட் டோடு—என்
நாவும் துடித்தது தோளும்து டித்தது
நான்தனி யானபிற் பாடு.

## விடியுமுன் குறுநகை

விடிந்தது! தங்க வெய்யில் வந்தது!
மடிந்தது! காரிருள் மடிந்தது பனிப்புகை!
பசும்புல் கதிரொளி பட்டு விளங்கின
விசும்பிற் காக்கைகள் பெண்ணென விளங்கின!

சேவற் கோழி தெருவில் பெடையினை
ஆவற் கொருமுறை அணையும் தேவைக்குத்

தீனி பொறுக்கித் திரியும் அடடா
வானம் பரிதி!'' ஆயிரம் வண்ணம்
கண்ணெதிர் காட்ட வந்ததோ என்னவோ!

தெருவில் நன்னிழல் சேர்க்கும் மரங்கள்
இருபுறம் தளிரொடு தங்க மெருகு
பெருக நின்றன. குருவிகள் பாடின
அருகில் தென்னைகள் பாளைகள் அவிழ்ந்தன.

ஒளிபடும் காலையில் ஒலித்தது சிற்றூர்!
எளிய உழவர்கள் ஏரொடு மாட்டொடு
தம்மில் இனிமைத் தமிழிற் பேசி
அம்மருங்கு வரிசையில் அகன்றனர்! பெண்கள்
முன்றா னையினைமுன் னிழுத்துச் செருகி,
அன்றாடத் தொண்டிற் சென்றனர்; ஆயினும்
இன்னும் படுக்கைவிட் டெழாத பொன்னி
தன்னுளம் பறித்த பொன்னனை எண்ணி
வெயிலிற் புழுப்போல் மின்னிடை ஒடிய
அயில்விழி நீர்பெற அழுது புரண்டாள்!

இன்னும் பொன்னி எழாத தென்ன?
நன்னீர் எடுக்க நாடாத தென்ன?
நீராடி வந்து நாரோடு பூக்கள்
சீரோடு கட்டிச், சீவிக் குழலில்
சூடாத தென்ன? தோழிமா ரோடுசென்
றடா தென்ன? அன்னைஇவ் வாறு
கருதி எதிர்வந்து கண்ணே என்றாள்
நடுங்குடல் காட்டாது நங்கை எழுந்து
மயக்கம் என்றாள்; மங்கைமெய் சொன்னாள்.

சட்டி பானை தவலை செம்புகள்
தொட்டவ ரில்லை, துலக்கியோர் இல்லை!
அடுக்களை பெருக்கா தழகிலா திருந்தது.
எடுக்க வில்லை அடுப்புச் சாம்பல்
அன்னை தன்மகள் அருகில் நின்றவள்
பொன்னியே 'குந்துநீ' என்று புகன்று
தானும் அமர்ந்து தலைசாய்ந் திருந்தாள்
மயக்கம் என்று மங்கைமெய் உரைத்தாள்.
என்ன மயக்கம்? என்ன மயக்கம்?
என்ன மயக்கம்? என்றுகேட் டாள்தாய்.
காரணம் சொல்லக் கார ணத்தால்
தாய்உளம் துவளத் தலைசாய்த் திருந்தாள்

அஞ்சல் அஞ்சல் என்ற ஒருகுரல்
வஞ்சியின் காதில் வீழ்ந்தது; வஞ்சி,
அஞ்சல் அம்மா அஞ்சல் என்று
விரைவில் எழுந்து வெளிப்புறம் ஓடி

அஞ்சலைப் பெற்றாள் அதனைப் படித்தாள்.
பொன்னி படிக்கையில் சின்ன விழிகள்
மின்னக் கடையுதடு கட்ட விழ்ந்து
முத்துக் காட்ட முன்னின்ற தாயை,
மங்கை நோக்கிஉன் மருமகன் நாளைக்
காலையில் கட்டாயம் வருமாம்! அம்மா!
புகைவண்டி நிலையம் புதுமாட்டு வண்டியை
அனுப்ப வேண்டுமாம் அறிக என்று
கூறிப் பறந்தாள் கொல்லை நோக்கி!
துலக்கின பானை தூக்குச் சட்டிகள்
குடங்கள் செம்புகள்! கொட்டில், அடுக்களை
பெருக்கி அடுப்பை எரிக்கச் சமையல்
முடித்துத் தாயிடம் முடிவு கூறினாள்.
கடிதில் தாய்தன் கணவனுக் காகக்
கொல்லைக்குச் சோறு கொண்டு போனாள்!

எப்போ தன்னை இங்கு வருவாள்?
எப்போது மாலை வேளை ஏகிடும்?
அழகிய மணியிருள் எப்போ தகலும்?
விடியுமுன் அப்பா விழிக்க வேண்டும்
வண்டி ஓட்டியை வா எனல் வேண்டும்
அண்டைக் குடிசையில் அவனோ தூங்குவான்!
கூச்ச லிட்டுக் கூப்பிட வேண்டும்
பேச்சுக் கொஞ்சம் பேச வேண்டும்
புதுமாட்டு வண்டி புகைவண்டி நிலையம்
இடக்கில் லாமல் ஏக வேண்டும்!
அத்தான் வண்டிவிட் டங்கே இறங்கி
மெத்த விரைவாய் இவ்வண்டி மீது
குந்துவார் கழுத்து மணிகள் குலுங்க
இந்தா இந்தா என்றவன் அதட்ட,
வண்டி வந்து வாயிலில் நிற்கும்!
அண்டி வந்தெனை ஆரணங் கேஎன்
அழைக்கும்! நானோ அறையிற் பதுங்கி
இழுப்பும் பறிப்புமாய் ஏனென்று சொல்லுவேன்
என்று பொன்னி எண்ணிக் கிடந்தாள்.

மறுநாள் விடியுமுன் மங்கை
குறுநகை காட்டினாள் கொழுநனுக் கெதிரே?

## முது மாலைப் போதில்...!

மலர்ந்ததடி அல்லி—அதோ
வந்ததடி நிலவு
குலைந்ததடி என்பொறுமை கொல்லாதே!
கொஞ்சிவிளை யாடஅட்டி சொல்லாதே

விலகிற்றடி வெப்பம்—இதோ
வீசுகின்றது தென்றல்
தலைசுற்றிடும் என்னாசை தட்டாதே!
தாவுங்கையை விலக்கிஎன்னைத் திட்டாதே!

கமழ்ந்ததடி முல்லை—இதோ
காணடிநம் தனிமை
அமிழ்துகொடு நின்உதட்டை ஆட்டாதே!
அன்புமறைத்து வன்முகமும் காட்டாதே!

நமக்கென்னடி குறைவு—இது
நல்லமுதிய மாலை
தமிழ்உண்டு காதலுண்டு தள்ளாதே!
தழுவுந்தோறும் மகிழ்ச்சிபொங்கித் துள்ளாதே!

## அறிவு பெற வருக தமிழ்!

(வண்ணம்)

தனன தனனா தனன தனனா
தனன தனனா தன தானா
அழகு முகிலே தவழும் மலைமேல்
அருவி ஒருபால் இசையோடே
அமிழும்! அதிலே சிதறு துளிபோல்
அணிமலரெலாம் எழும்மேலே

எழுதும் முழுதோ வியமும் நிகரோ
எனவுறைகுவார் மடவோரே
எறிகவணிலே குருவி கடிவார்!
இனிய மொழிசேர் தமிழ்நாடே

தழைவு பெறவே வருக தமிழே
தமிழர் உயிரே வருவாயே!
தழுவு குழல்யாழ் கிளிமொழியுமோர்
அமிழ்தும் உனையே நிகர் ஆமோ?

விழியின் ஒளிநீ எமது புகழ்நீ
விரிதிருவுநீ எனயாமே
விழைவதறிவாய் அறிவு பெறவே
விரைவில் வருவாய் ஒரு தாயே!

## தமிழ் வரலாறு

கேளீர் தமிழ்வர லாறு—கேட்கக்
கேட்க அதுநமக்கு முக்கனிச் சாறு (கே)
நாள்எனும் நீள்உல கிற்கே—நல்ல
நாகரி கத்துணை நம்தமி ழாகும்
வாளுக்குக் கூர்மையைப் போல—அது
வாழ்வுக்குப் பாதை வகுத்ததுமாகும் (கே)

இயல்பினில் தோன்றிய தாகும்—தமிழ்
இந்நாவ லத்தின்மு தன்மொழியாகும்
அயலவர் கால்வைக்கு முன்பே—தமிழ்
ஐந்தின்இ லக்கணம் கண்ட துமாகும்! (கே)

அகத்தியன் சொன்னது மில்லை—தமிழ்
அகத்திய மேமுதல் நூலெனல் பொய்யாம்
மிகுதமிழ் நூற்கொள்கை மாற்றிப்—பிறர்
மேல்வைத்த நூலேஅ கத்தியமாகும்! (கே)

நாடுதொல் காப்பிய நூலும்—இங்கு
நம்மவர் கொள்கைந வின்றிடவில்லை
ஏடுகள் தந்தன ரேனும்—தமிழ்
இயற்கைக்க ருத்தந்த நூற்களில் இல்லை (கே)

கல்லையும் செம்பையும் கண்டே—இரு
கைதொழும் கொள்கைத மிழ்க்கொள்கை இல்லை
நல்லொழுக் கம்சிறப் பென்னும்—அறம்
நாடி அதன்திறம் பாடும்த மிழ்தான்! (கே)

ஆன்மாவை ஒப்புவ தில்லை—தமிழ்
அணுவென்று கூறிடும் உயிரினை அஃதே!
கோனாட்சி தன்னைச்சி ரிக்கும்—அது
கோலெடுத் தோன்செயல் என்றுவெ றுக்கும் (கே)

('உயிரும் நுண்மையும் அணுவென லாகும்' என்பது பிங்கலந்தை. கோல் என்பது கொல்லுவது; முதனிலை திரிந்த தொழிற்பெயர். அக்கோல் என்பது ஆட்சிக்கும் கோலன் அரசனுக்கும் பெயராயினமை காண்க.)

முள்முடிக் கோனாட்சி ஒப்பும்—தமிழ்
முன்னிருந் தான்வேலானைக் காவலன் என்னும்
ஆள் என்னும் சொற்பொருள் காண்பீர்—தனி
ஆளுக்கும், ஆள்கைக்கும் வேற்றுமை இல்லை— (கே)

காட்டாறும் மக்களைக் கொல்லும்—மூங்கிற்
காடும்க னல்பட்ட ழித்திடும், அந்தக்
கேட்டுக்குத் தெய்வமென் றேபேர்—அதைக்
கெஞ்சல்இ றைஞ்சல்த மிழ்க்கொள்கை இல்லை (கே)

('தெய்என் கிளவி கொள்ள லும் கோ றலும்'
என்பது பிங்கலந்தை)
மாசற்ற எண்ணத்தி னாலே—இன்ப
வாழ்வைஅ டைவது நந்தமிழ்க் கொள்கை
ஈசன்என் றேஒன்றைக் கூறி—இடர்
ஏற்பதை நம்தமிழ் ஏற்பதுமில்லை (கே)

('மாசற்ற கொள்கை மனத்தில் உதித்தக் கால ஈசனைக் காணும் உடம்பு' என்பது ஔவைக்குறள். மாசற்ற எண்ணத்தைவிட வேறாக ஒருபொருள் உன்னை நினைப்பார்க்கு மறுப்பாகும்.)

முருகெனல் அழகின மைக்காம்—எனில்
முருகனை நந்தமிழ் ஒப்புவ தில்லை
விரிவுறு முல்லைநி லத்தில்—வரும்
வேட்கையை மால்என்று நந்தமிழ் சொல்லும் (கே)

கோயிலும் மன்னவன் இல்லம்—அந்தக்
கோயில்வ ணங்கும்இ டந்தானுமில்லை!
தாயும் தகப்பனும் அன்றோ—தொழத்
தக்கவர் ஆவர்என் றேதமிழ் சொல்லும்

(கே)

சாதி மதம்தமிழ் இல்லை! — அந்தச்
சாதி மதத்தைத் தமிழ்கொள்வ தில்லை
தீதுறு 'தெவ்வே'ப கைமை — அந்தத்
தெவ்வில் விளைந்தது தேவர்எ னுஞ்சொல்

(கே)

## அங்கரத்தினம்—சாவுக்கு வரவேற்பு

அன்னையின்சீர் அழிப்ப தற்கே
ஆளவந்தார் முயலு கின்றார்
இன்னுமவர் திருந்த வில்லை
சாவே வா! — அவர்
இனியேனும் திருந்து தற்கே
சாவே வா!

தென்தமிழின் சீரழிக்கத்
தில்லியினோர் முயலு கின்றார்
இன்னுமவர் திருந்த வில்லை
சாவே வா! — அவர்
இனியேனும் திருந்து தற்கே
சாவே வா!

வானொலியை நீக்கி, ஆகாஷ்
வாணிஎன்று முழங்கு கின்றார்
மானங் கெட்டோர் நடுங்கும்படி
சாவே வா! — என்
வண்டமிழர் எழுச்சி கொள்ளச்
சாவே வா!

ஆனதமிழ் அமைச் சரையும்
அறிவழித்தார் தில்லியி னோர்
தேன் என்றே உனையழைத்தேன்
சாவே வா! — என்
செந்தமிழர் எழுச்சி கொள்ளச்
சாவே வா!

அரிது செய்தான் அரங்க ரத்தினம்
அறம் விளைத்தான் என்னும்படி
இருகையால் வரவேற் றேன்
சாவே வா! — என்
இன்பத் தமிழ் வாழ்ந்திடவே
சாவே வா!

தெரியட்டுங்காண் உலகுக் கெல்லாம்
செந்தமிழர் எழுச்சித் திறம்
புரியட்டுங்காண் தில்லிக் கொடுமை
சாவே வா! — உயிர்
போகட்டுங்காண் தெரியுஞ் சேதி
சாவே வா!

## அங்கரத்தினம் உண்ணா நோன்பு வாழ்க!

ராகம் : தன்யாசி
தாளம் : சாபு

அழகைச் செய்தாய் தமிழ்மொழிக்கே அரங்கரத்தினமே — நீ
அன்பு செய்தாய் தமிழ்மொழிக்கே அரங்கரத்தினமே
தழைவைச் செய்தாய் தமிழ்மொழிக்கே அரங்கரத்தினமே— நீ

தலைமை வைத்தாய் தமிழ்மொழிக்கே அரங்கரத்தினமே
எழுக எழுக தமிழ்மொழியை இழிவுசெய்கின்றார்—விழித்
தெழுகஎன்று முழக்கஞ் செய்தாய் அரங்கரத்தினமே
ஒழுகும்முறை எமக்குரைத்தாய் அரங்கரத்தினமே—நல்
உயிரினும் தமிழ்மே லென்றாய் அரங்கரத்தினமே!

கத்தாத கழுதைகண்டு கண்கலங்கினாய்— நல்ல
கழுத்தொடிந்த மாடுகளைக் கண்டு துடித்தாய்
ஒத்தாசை நீ புரிந்தாய் அரங்க ரத்தினமே — நீ
உணர்வு தந்தாய் தமிழருக்கே அரங்க ரத்தினமே
நத்தாத உயிரு முண்டோ முத்தமிழ் தனையே
கைத்தாளம் போடுகின்றாய் புகழ்நிலத்திலே—நீ
காட்டாற்றின் எழுச்சிவைத்தாய் எம்முளத்திலே!

அந்தமிழ்த்தாய் முகத்தினிலே ஆரியக்கறைஏன்? — நம்
அழகுதமிழ்ச் சோலையிலே ஆகாஷ்வாணி ஏன்?
செந்தமிழ்க்கே இழிவுகண்டால் என் உயிர்தான் ஏன்—நல்ல
செந்தமிழர் வாழ்க்கைச்சுவை அந்தமிழால் தான்
இந்தப்படி தவங்கிடந்தாய் அரங்க ரத்தினமே — வெற்றி
எய்துகநின் உண்ணாநோன்பும் அரங்க ரத்தினமே
வந்ததுண்டு தமிழ்க்குயர்வு தோழா உன்னாலே
வாழ்கபுகழ் வாழ்கதமிழ் அரங்க ரத்தினமே!

## பெயர் மாற்றம்

சென்னையில் சீழ்ப்பாக் கத்தைத்
தேடினேன். ஓர் இளைஞன்
அன்னதோர் ஊரே இல்லை
என்றனன்! அப்பக் கத்தில்
இன்னொரு முதியோர் தம்மை
வினவினேன் ; இருப்ப தாகச்
சொன்னார் அவ்வூர்க்குப் போகத்
தோதொன்றும் சொல்ல லானார்.

மக்களின் இயங்கி வண்டி
இங்குத்தான் வந்து நிற்கும்
இக்காலம் வருங்கா லந்தான்
ஏறிச்செல் வீர்கள் என்றார்.
மக்களின் இயங்கி வண்டி
வந்தது குந்திக் கொண்டேன்
சிக்கென ஓர் ஆள் "எங்கே
செல்லுதல் வேண்டும்" என்றான்.

கீழ்ப்பாக்கம் என்று சொன்னேன்
கேலியை என்மேல் வீசிக்

''கீழ்ப்பாக்கம் என்ப தில்லை
மேல்பாக்கம் தானும் இல்லை
கிழிறங் கிடுவீர்'' என்றான்.
அங்கொரு கிழவர் கேட்டுக்
கீழ்ப்பாக்கம் உண்டு காணும்!
வரலாறு கேட்பீர் என்றார்;

கீழ்ப்பாக்கம் என்னும் அஃது
''கீல்பாக்கம்'' என்றாகிப் பின்
தாழ்வுற்றுக் ''கெல்லிஸ்'' என்று
தான்மாறிற் றென்று சொன்னார்.
கீழ்ப்பாக்கம் கெல்லிஸ் ஆனால்
கிள்ளையும் அள்ளி யுண்டு
வாழ்த்திடும் தமிழ மிழ்தின்
வரலாறே மாறி டாதோ!

தமிழ்நாடு தமிழ்நா டென்ற
தன்பெயத இழந்தி டாதோ!
தமிழ்நூலும தமிழ்நூ லென்ற
தன்பெயர் இழத்திடா தோ!
தமிழரும் தமிழர் என்ற
தம்பெயர் இழந்திடா ரோ!
தமிழ்ப்புகழ் தொலைப்பார் தங்கள்
தனியாட்சி நிறுவிடா ரோ!

இவ்வாறு வருந்தா நின்றார்;
இயங்கியும் கெல்லிஸ் என்ற
அவ்விடம் நிற்கக் கண்டார்
அங்ஙனே இறங்க லுற்றார்
செவ்விதிர் கீழ்ப்பாக் கத்தின்
தெருக்கண்டார் தமிழ் வழங்கும்
கொவ்வைசேர் இதழ்கள் கண்டார்
கொம்புலிக் கூட்டம் கண்டார்

தமிழ்நலம் காக்க! இன்பத்
தமிழகம் காக்க! அன்புத்
தமிழரே தமிழ கத்தில்
தமிழரின் ஆட்சி காக்க
இமைமூடித் திறக்கு முன்னே
எதிரிகள் கோடி இன்னல்
சமைக்கின்றார்! அவர்கள் தோளைச்
சாய்ப்பது பெரியார் பாதை!

## குண்டு போடு!

தமிழுக்கு நீசெயுந் தொண்டு—நின்
பகைமீது பாய்ச்சிய குண்டு (தமிழுக்கு)

தமிழில்நீ புலமைபெற வேண்டும்—அது
தமிழ்பெறத் தமிழரைத் தூண்டும்
தமிழிலே யேபேச வேண்டும்—அது
தனித்தமிழ் வளர்ச்சியைத் தூண்டும் (தமிழுக்கு)

தமிழ் பேசு: தமிழிலே பாடு—நீ
தமிழினிற் பாடியே ஆடு
தமிழ்ப்பாட்டை யேகாதிற் போடு—தமிழ்
தப்பினால் உன்காதை மூடு (தமிழுக்கு)

வணிக விளம்பரப் பலகை—அதில்
வண்தமிழ் இலாவிடில் கைவை
காண்கநீ திருமண அழைப் பைப்—பிற
கலந்திருந் தால்அதைப் புய் புய் (தமிழுக்கு)

பொருள்களைத் தமிழினில் அழைப்பாய்—பிற
பொருந்தாப் பெயர்களை ஒழிப்பாய்
தெருப்பெயரில் தமிழே இழைப்பாய்—அதிற்
சீறுவார் மடமையை ஒழிப்பாய் (தமிழுக்கு)

தமிழிலே வழிபாடு வேண்டிப்—பின்
தளர்ந்தனன் முன்னமோர் ஆண்டி
அமைவாக அவனையும் தூண்டி—நீ
அறஞ்செய்க சோம்பலைத் தாண்டி (தமிழுக்கு)

உரைசெய்ய நூலெழுத வந்தோர்—அவற்
றுள்வடசொல் ஏன்தாம் கலந்தார்?
சரிசெய்ய ஆனதை நீபார்—அவர்
தடுத்தால் தொடங்குவாய் மொழிப்போர் (தமிழுக்கு)

வருமொழி புகழ்ந்திடும் தமிழ்வாய்—எதிர்
வரக்காணில் காறிநீ உமிழ்வாய்
கடன்என்று தமிழ்த்தொண்டில் அமிழ்வாய்—ஒரு
கடல்போன்ற புகழ்கொண்டு கமழ்வாய் (தமிழுக்கு)

இறைதடுத் தாலும்இந்நாட் டுக்கு—மற்
றிங்குளோரின் குறைபாட் டுக்குச்
சிறிதும்அஞ் சேல்தொண்டு செய்வாய்—கடுஞ்
சிறையறை திருமணவறை உனக்கு! (தமிழுக்கு)

## இரகசியச் சொல்

ஏடா தூதா இங்குவா தனியே
என் உதடு நின்செவி இரண்டையும் ஒன்றுசேர்
இரகசி யச்சொல் இயம்பு கின்றேன்
உற்றுக் கவனி; உயர்ந்த செய்தி
இறந்தது வடமொழி என்று தமிழர்
இயம்பி வந்த துண்டா இல்லையா?
இறந்தது மெய்தான் என்னும் தமிழர்
இப்படிச் சொன்ன துண்டா? ஆமாம்!
மெய்யை எதற்கு விளம்பினார் தமிழர்?
வடமொழி இறந்த தென்றதால் தமிழை
மாய்த்திட வந்தனர் வடமொழிக் குரியவர்!
வீணை ஒலிக்கெதிர் வேண்டா அழுகைபோல்
கருங்குயில் இசைக்கெதிர் கழுதைகத் தல்போல்
நங்கையர் மொழிக்கெதிர் நரியின் ஊளைபோல்
இன்தமிழ்ப் பயிற்சிக் கெதிரில் அவதி
இந்தியைக் கொணர்ந்தார் இன்தமிழ் நலியும்
வட மொழி இறந்ததால் வடமொழிக் குரியார்
தமிழையும் அழிக்கச் சந்ததம் முயன்றார்
என்ற சேதியை இங்கிருந் தோடி
எனது பெரியார் இன்னுயி ரனையார்
தமிழின் தலைவர் தமிழ வீரர்
இப்புவி மாயம் எழிலின் கூட்டம்
ஒப்புறக் காட்டும் உயர்தமிழ்க் கவிஞர்
இன் தமிழ் மாணவர் இளஞ்சிங் கங்கள்
இன்னவ ரிடமெலாம் இயம்புவாய் விரைவில்!
இங்கிருந் தேநான் தமிழர்
அங்கங் கொதித்தெழும் ஆர்ப்பால் அறிவேனே!

## இந்தியா?

தமிழை ஒழிப்பவன் உலகினில் இல்லை
தமிழை எதிர்த்தவன் வாழ்ந்ததும் இல்லை (தமிழை)

தமிழை ஒழிக்க இந்தியை நுழைப்பவர்
தம் வர லாற்றுக்கு மாசி ழைப்பவர் (தமிழை)

இன்பத் தமிழ்மொழி உலக முதன்மொழி!
இந்தி மொழியோ ஒழுங்கிலா இழிமொழி!
என்ன போயினும் தமிழர்க்குத் தமிழ்மொழி
இன்னுயிர் ஆகும் வாழ்க தமிழ்மொழி (தமிழை)

ஒருமொழி ஓரினம் கொண்டதோர் நாடு
பிறன் அதில் அடிவைக்க நினைப்பதும் கேடு
பெருமொழி அழித்தும் பேரினம் அழித்தும்
பெறுவது நாடன்று தன்பிண மேடு (தமிழை)

தீதுற ஆள்வதோர் ஆட்சியே அன்று
செந்தமிழ் நாட்டிலே இந்தியா நன்று?
மோதுறும் பதவி நிலையிலா ஒன்று;
முழங்காற்றங் கரைமரம் நிலைக்குமா நின்று? (தமிழை)

ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேரும் தகைத்தென்பர் வித்தகர்
தீக்கனவு காண்கிறார் இந்திபற் றியவர்
தெற்குச் சூறைக்கு நிற்காது வடசுவர் (தமிழை)

## தமிழுக்கு உயிர் அளித்தான்

ஆட்டு பந்தையிற் காட்டுப்புலி
பாய்ந் தாற்போல்—என்
அன்புடையான் களம் புகுந்தான்
வா தோழி
பாட்டுப் பெற்றானா உயர்ந்த
சா வாலே—அவன்
பழியைப் பெற்றானே இழிந்த
வாழ் வாலே
நாட்டின் புறப் போர்க்களமே
வா தோழி—நீ
நம் தமிழர் இனப் பெருமை
பார் தோழி
கேட்டதுபார் போர் முழக்கம்!
வா தோழி—பார்
கிழிந்ததுவே வானவெளி
வா தோழி!

செங்குருதி ஓடையிலே
யா னைகள்
செத்தபடி மிதப்பனவும்
பார் தோழி
எங்கணுமே தேர்குதிரை
கா லாட்கள்
இறந்தனபார் இறந்தனபார்
என் தோழி!

தங்கம் நிகர் ஒருடம்பு
வான் நோக்கிப்—பார்
தரைக் கழகு செய்தவனைப்

பார் தோழி
சிங்கமடி செந்தமிழன்
என் காதல்
செல்வமடி செத்துவிட்டான்
பார் தோழி!

முன்மார்பில் உடலெல்லாம்
வேல் தாங்கி—அவன்
முள்ளம்பன்றி போற்கிடந்தான்
பார் பார் பார்
என்மார்பு தழுவியவன்
போர் மாதின்—நல்
இளமார்பு தழுவியபின்
புகழ் மாதின்
பொன்மார்பு தழுவுகின்றான்
பார் தோழி!
புதியசுவை எனக்களித்தான்
பார் மீதில்
என்ஆசைத் தமிழ்காத்தான்
காணேடி—என்
எழிற்றமிழ்க் குயிர் அளித்தான்
சீர் வாழ்க!

## "காங்கிரசா தமிழைக் காத்தது?

செத்தவட மொழியினில்
செந்தமிழ் பிறந்ததென்று
பொய்த்திடும் வையாபுரிகள் போக்கினையும் ஆதரித்த
கத்துநிறை காங்கிரசா எங்கள்தமிழை—இங்குக்
காத்ததென்று புகன்றனை நாணமில்லையா?

செம்பொனிகர் பைந்தமிழைத்
தேர்ந்துணரா டீ,கே.சி.யைக்
கம்பனென வேஅணைத்த கல்கியினை ஆதரித்த
வம்புமிகும் காங்கிரசா எங்கள்தமிழை—இங்குக்
காத்ததென வரைந்தனை வெட்கமில்லையா?

தாய்மொழி இலக்கணத்தைத்
தாக்கிஒரு கம்பனுயர்
தூய்கவி அலைக்கழித்துச் சொற்பிழைக்கும் டிகேசியைப்
போய்உயர்த்தும் காங்கிரசா எங்கள் தமிழை—இங்குக்
காத்ததென்று புகன்றனை அறிவில்லையா?

காளையர்கள் ஓதுதமிழ்க்
கல்வியையும் பெற்றறியா
மூளிகளைக், காப்பிக்கடை முண்டங்களை நல்லஎழுத்

தாளரெனும் காங்கிரசா எங்கள் தமிழை—இங்குக்
காத்ததென்று புகன்றனை உணர்வில்லையா?

கூறுதமிழ் சொல்லாக்கக்
குழுவினர் என்று சொல்லி
மாறுபட்ட வடசொல்லில் மாற்றுவதை ஆதரிக்கும்
வீறுதவிர் காங்கிரசா எங்கள் தமிழை—இங்குக்
காத்ததென்று விள்ளுகின்றாய் மேன்மையில்லையா?

துய்யதமிழ் மறைமலை
சோமசுந்த ரம்திருவி
எய்துகலி யாணம், பல இன்தமிழ்வல் லார் இருந்தும்
நொய்களைச்சார் காங்கிரசா எங்கள் தமிழை—இங்குக்
காத்ததென்று நுவன்றனை? கருத்தில்லையா?

வண்தமிழை எம்முயிரை
வடசொல்லி னால் அழிக்க
எண்ணிடுவார் தமக்கெல்லாம் ஏற்றமதைத் தேடிவந்த
திண்மையற்ற காங்கிரசா எங்கள்தமிழை—இங்குக்
காத்ததென்று செப்பலுற்றாய் செம்மை இல்லையா?

தாயகத்திற் கேவணக்கம்
என்பதைவந் தேமாதரம்,
தூயதிரு என்பதைஸ்ரீ என்றுரைக்க தோது செய்த
தீயசட்டக் காங்கிரசா எங்கள்தமிழை—இங்குக்
காத்ததென்று சேப்பலுற்றாய் சீர்த்தி இல்லையா?

இந்துவெல்க என்பதனை
ஜேய்இந்து என்பவர்க்கும்
நந்தமிழ்சொல் வணக்கத்தை நமஸ்காரம் என்பவர்க்கும்
தந்தினம்சொல் காங்கிரசா எங்கள் தமிழை—இங்குக்
காத்ததென்று சாற்றவந்தாய் தகவில்லையா?

கோயில்மண வாயில்களில்
கொஞ்சுதமிழ் நீக்கித்தங்கள்
தீயவட சொல்புகுத்தும் தெக்கணாமுட்டி கட்கெல்லாம்
போய்அளக்கும் சாங்கிரசா எங்கள் தமிழை—இங்குக்
காத்ததென்று புகன்றனை கண்ணுமில்லையா?

காலமெலாம் விடுதலை
காணவுழைத் தோம்என்பவர்
ஏலுந்தமிழ் கட்டாயமாம் என்றுரைக்கக் கேட்டதில்லை
தோலைவிற்கும் காங்கிரசா எங்கள் தமிழை—இங்குக்
காத்ததென்று சொல்லலுற்றாய் தூய்மை யில்லையா?
தென்னிலத்தை உழவில்லை
செந்தமிழ்வி தைக்கவில்லை

இந்நிலையில் இந்திஒதி நாட்டிடவும் எண்ணுகின்ற
புன்மையுறு காங்கிரசா எங்கள்தமிழை—இங்குக்
காத்தமென்று புகன்றனை வெட்கமில்லையா?

செந்தமிழ்க்கு நின்ற உயிர்
இந்திவந்தால் நின்றுவிடும்

## என் தமிழா!

கட்டாயம் இந்திதனைக் கற்க அரசினர்கள்
சட்டமியற்றுவதில் சம்மதமோ என்தமிழா!
கன்னல் தமிழ்க்கல்வி கட்டாய மாக்காமல்
இன்னல்தரும் இந்தியினை எண்ணுவதோ என்தமிழா!
தாய்க்குச் சலுகையின்றித் தாழ்கின்றாள் இந்திஎனும்
பேய்க்கு நறுநெய்பால் பெய்களன்றார் என்தமிழா!

உறவிட்ட பார்ப்பனர்கள் இந்திஎன ஊளையிட்டும்
பிறவிக் குணங்காட்டும் பெற்றியுணர் என்தமிழா!
'தமிழழியு மானால் தமிழர் அழிவர்'—இதை
நமைவிழுங்க வந்தவர்கள் நன்கறிவர் என்தமிழா!
தம்மவர்கள் நன்மைக்கே தக்கதென்றால் இந்திதனை
நம்மவர்கள் அன்னவர்கால் நக்குகின்றார் என்தமிழா!

உடல்காக்கச் சோறில்லை என்னுங்கால் நம்பகைவர்
கடல்காட்டி வீழ்என்று கத்துகின்றார் என்தமிழா!
தென்றற் பொதியமலை செந்தமிழ்க்கு மீறியதாய்
நின்றஉயிர் இந்திவந்தால் நீங்கிவிடும் என்தமிழா!
மொகலாயர் வந்து முடிபூண்டும் தம்மொழிதான்
சகலர்க்கும் சட்டமென்று சாற்றவில்லை என்தமிழா
தாய்மொழிக்கு நேரெதிர்ப்பாய்த் தம்மொழியை
வற்புறுத்தும்
பேய்களை நாம் கண்டதில்லை பேருகில் என்தமிழா!
அன்று தமிழ்நூல் அழித்தார்கள் ஆரியர்கள்
இன்றுதமிழ் வேரறுக்க எண்ணிவிட்டார் என்தமிழா!

காய்ச்சலுறு நாட்டில் கனித்தமிழே யல்லாது
மூச்சுறுத்தும் இந்திவந்து மூட்டுவதா என்தமிழா!
தேளுக் கதிகாரம் சேர்ந்துவிட்டால் தன்கொடுக்கால்
வேளைக்கு வேளை விளையாடும் என்தமிழா!
இயற்கைத் தமிழ்மொழியை ஈடழிப் பதோஇந்திச்
செயற்கைமொழி உள்நாக்கைத் தீண்டுவதோ என்தமிழா!

உய்யும் தொழிற்கல்வி உள்ளதுவா இந்தியிலே
துய்ய கலைக்கதிலே தோதுமுண்டா என்தமிழா!
நாட்டுரிமை நாட்ட நடுமொழியாய் இந்திதனை
நாட்டிவிட்டால் அவ்வுரிமை நாடிடுமோ என்தமிழா!
பலபாஷை ரஷ்யர்களின் பச்சை விடுதலையை

உலகோர் வியப்ப துணராயோ என்தமிழா!
நிலவடையும் தண்தமிழை நீக்குவதோ? இந்திக்
கலவடையை மாட்டிக் கதறுவதோ என்தமிழா!

இந்தியிலே வீரம் இருக்குமெனும் ஈனர்களின்
புந்தியிலே பொய்யே புழுத்ததுவோ என்தமிழா!
இந்திக் கருத்துக்கள் இங்குண்டு செந்தமிழின்
கந்தமெலாம் இந்தியிலே கட்டச்சொல் என்தமிழா!
இந்தி தனைப்புகுத்தி ஏற்படுத்தும் நல்லுரிமை
பந்தியிலே வேறான பார்ப்பனர்க்காம் என்தமிழா!

நல்லுரிமை தேடும் நரிகள் முகமொன்றே
சொல்லும் அவர்எண்ணும் சூழ்ச்சிகளை என்தமிழா!
பார்ப்பனர்க்கே இந்திவரும் பச்சைத் தமிழரெலாம்
சீர்ப்படுதல் எவ்வாறு செப்பிடுவாய் என்தமிழா!
பள்ளியிலே தேர்ச்சிபெறும் பத்தில் ஒருதமிழன்
தெள்ளெனவே இந்திவரின் தேறான்காண் என்தமிழா!

சாதி யொழித்துச் சமயப்பித் தம்தொலைத்தால்
மீதி இருத்தல் விடுதலைதான் என்தமிழா!
பேதம் வளர்க்குமொரு பீடையினை இந்திஎன்றால்
ஏதும் தவறில்லை என்றறிவாய் என்தமிழா!
பொதுமொழிவேண் டாம்வேண்டாம் புன்மை மடமை
எனும்

மதிப்பழக்கம் தீர்ந்தால் வரும்உரிமை என்தமிழா!
எல்லாரும் ஒப்புடையார் என்ற பெருநோக்கம்
எல்லார்க்கும் ஏற்பட்டால் இன்பமடா என்தமிழா!

## வெல்க !

என்தாய் நாடே! இன்தமிழ் நாடே!
பொன்னிறக் கதிர்விளை நன்செய் வளத்தினை
தேன்மலர்ச் சோலையும் தென்னையும் வாழையும்
வானிடை உயரும் மங்காச் சிறப்பினை!
கனியென்று கட்டிக் கரும்பென்று வையத்
தனியென்று செந்நெல் தருவதோர் வளத்தினை!
குன்றாப் பயன்தரு குன்றுகள் உடையைநீ!
இன்பெனும் புதுப்புனல் ஆறுபாய் எழிலினை!
காடுகள் கழனிகள் ஓடைகள் புள்ளினம்
பாடும் பொய்கை பலப்பல உடையைநீ!
மின்தூங்கு மணிகள் மேவினை மாற்றுயர்
பொன்தூங்கு நிலவறை பொன்றாத் திருவினை!
உலகினை அழைக்கும் ஒளிமுத்துக் கடல்கள்
இலகு பவழ இலக்குகள் உடையைநீ!
இப்பார் எல்லாம் ஏந்துகை நிரப்பும்
உப்பளச் செல்வம் உதவும் திறத்தினை!

உழுவார் மனப்படி மழைபெறும் பேற்றினை!
ஒழியா தசையும் தென்றல் உடையைநீ!
முகத்து நிலவு காட்டி மகளிர்
அகத்திறம் காட்டி ஒழுகும் அழகினை!
நாளை தூக்குக உலகைஎனில் இன்றே
வாளைத் தூக்கும் மறவர்உன் மக்கள்!
தத்துவ முதல்நூல் உலகுக்குத் தந்தனை!
கத்திலா இலக்கியம் கடலெனக் கண்டனை!
அமிழ்தென ஒருபொருள் உண்டெனக் காட்டும்
தமிழ்உன் மூச்சும் பேச்சும் ஆம்எனில்
என்ன இல்லை உன்பால்?
அன்னாய் அளப்பரும் பரப்பினை வெல்கவே.

## மீட்சிப் பத்து

(கட்டளைக் கலித்துறை)

பொன்னிலும் மண்ணிலும் பெண்ணிலும் நெஞ்சைப் புகுத்தலல்லால்
தன்னல நீக்கிப் பெரியார் நெறிநின்று தாய்நிலத்தை
முன்னுற மீட்டுத் தமிழ், கலை, வாழ்க்கை முறைதழைக்கத்
தன்மானம் காக்கவேண் டாமோ அருமைத் தமிழர்களே?

பாம்பாகச் சீறும் வடவரின் பல்லைப் புய்த்தலின்றி
மேமபாடு கோரி வெறும்பாடு பட்டுக் கிடப்பதுண்டோ?
நாம்பாடு பட்டதெல் லாம்விழ லோ?தமிழ் நாட்டுரிமை
வேம்பா? அடிமைநிலை கரும்பா? தமிழ் மேன்மக்களே!

உணவூற்ற சோறும் பறித்தான்! தமிழின் உயர்வழித்தான்!
மணவூற்ற தென்றான் தமிழகம்! செந்தமிழ் மாணவரே
தணலற்ற வீட்டுக்குள் தைப்பொங்கல் பாடும்தலைவருண்டா?
நுணலாநாம்? தேவாங்கா? ஆமையா சற்றே நுவலுவிரே!

ஊர்ப்படம் நீக்கிப்பன் னாட்டுப் படத்தின் உருளரிக்கும்
தீர்ப்படங் கற்கும் இணக்கம் தராமல் திரைப்படத்திற்
பேர்ப்படங் காட்டிடும் பெண்ணான பத்தரை மாற்றுத்தங்க
வார்ப்படங் கண்டால் மலைப்படங் கான்ஓர் கலப்படமே!

யார்தாம் தலைவர்? நல்வழி காட்டுவோர் யாவர்?இந்நாள்
யார்தாம் தமிழரைக் காக்கப் பிறந்தார்? இனிப்பிறவார்
யார்தாம்? அவர்நம் பெரியார்தாம் இல்லை எனில்பிறகு
யார்தாம் புகலுவிர் யார்தாம் புகலுவிர் இந்நிலத்தே!

மெய்யேந்தித் தோளினில் வேலேந்தி வாழ்ந்த தமிழரிடம்
கைஏந்தி, வேந்தரின் காலேந்தி ஏந்திக் கயல்விழியால்
மையேந்து மாதர் இதழினை மன்னர்கள் உண்ணஏந்திப்
பொய்யேந்தும் ஆரியர் நாட்டின்கோல் ஏந்தவும் போந்தனரே!

முந்தைக்கு முந்தை அதன்முந்தை ஆட்சி முறைவகுத்த
எந்தைக்குத் தந்தை அவன் தந்தை யின் தந்தை பெற்றபுகழ்,
கந்தைக்கும் சோற்றுக்கும் இல்லாமை தன்னிற்கரைந்திடில்என்
மைந்தரின் மைந்தர்க்கு வைப்பேன் விடுதலை வாழ்வினையே!

விழிக்குத் தெரிந்த தமிழகம் இல்லையாம்—மேலுமிந்த
மொழிகட் சிறந்த தமிழ்முதல் இல்லையாம் மூன்னவரின்
வழிக்கென்று யாதும் வரலாறும் இல்லையாம் ஆரியரைப்
பழிக்குப் பழிவாங்கல் அன்னாரின் ஆட்சி பறிப்பதுவே!

தமிழரின் மேன்மை இகழ்ந்த வடக்கர் தறுக்கடக்கி
அமைந்தனர் மூவேந்தர்; அன்றே அவரை அழித்திருந்தால்
இமையம் பிறந்திடு முற்பிறந் திட்டஇன் பத்தமிழைத்
தமது வடமொழி தந்ததென் னார்அச் சழக்கர்களே!

நாவலந் தீவே நமது! பிறகு நமை அடைந்த
பாவிகள் ஆரியர் கூலியாய்க் குற்றக் குழுவினராய்
மேவினர் நம்மடி மெல்லவே நம்தலை மேலுமுற்றார்;
யாவையும் வல்வினர் ஈவதுண் டோதமிழ் நாட்டை யுமே!

## தன்னாட்சி

தன்னாட்டைத் தான்பெறான் உலகில்
எந்நாட்டா னாயினும் இழிந்தவன் தோழி!

முன்நாட்டை ஆண்டவன்
முழுவாழ்வு வாழ்ந்தவன்
தென்னாட்டான் இந்நாளில்
தில்லிக் கடியவன்
என்னேடி தோழி
இழிவில் இழிவன்றோ!

ஒன்றே குலம்என்றான்
புகழே உயிர்என்றான்
அன்றாடம் சாகின்றான்
தில்லிக்கே ஆட்பட்டான்
நன்றோடி தோழி?
நாயினுங் கேடானான்!

செந்தமிழ் காத்தான்
திருக்குறளில் ஆர்வத்தான்
இந்தி சுமக்கின்றான்
தில்லிக் கிளிக்கின்றான்
இந்தாடி தோழி
இவனா தமிழ்மறவன்?

மானம் இழப்பதிலும்
மாள்வதே மேல்என்பான்
ஆனதமி ழன்இந்நாள்
தில்லிக்கே ஆட்பட்டான்
பூனைக்குத் தோழி
புலியும் அடங்குவதோ!

## மன்னைமா நாட்டுத் தீர்மானங்களின் கருத்து

தமிழ்நாடு தில்லியின் தனிஅடி நாடா?
வரியின் வாயிலாய் அறுபது கோடியை
இந்தா என்றே இங்கே கொடுக்கும்
தில்லியின் செய்கை தில்லு முல்லே!

பதினோ ராண்டில் பணத்தாள் அச்சிட்டு
முப்பத் தைந்து கோடியை முடக்கிய
தில்லியின் சுரண்டல் திடுக்கிட வைத்தது!

பணம்உறை நிலையம் ஆயுட் பதிவு
வாய்புகை வண்டி அஞ்சல் நிலையம்
வாணிக ஒற்றுமை நிலைய வாய்ப்பு
வகுக்கும் இவற்றின் வருமானத்தில்
செந்தமிழ் நாட்டுக்குச் சேர வேண்டிய
சிலகோ டியையும் தில்லி விழுங்கிற்றே!

அயல்நா டுகளை அரித்து வாங்கும்
கடன்தொகை தனில்விழுக் காடு பார்த்துத்
தமிழ்நாட் டுக்குத் தருதல் வேண்டுமே!
அதையும் தில்லி அழுத்திக் கொண்டது!

பலதுறை களிலும் பதினோ ராண்டாய்
ஏமாற் றியபணம் எண்ணூறு கோடி

இதனால் தமிழரின் உழைப்பும் இழப்பும்
வளர்ந்ததால் இங்கு வறுமை வளர்ந்தது!
நம்தொழி லாளரும் நடுத்தர மக்களும்
வாழ்வில் இடிந்து கண்ணீர் வடித்தனர்

பண்டை நாளில் உலகமே பார்த்து
வியக்கும் பேரர சாக விளங்கிய
தமிழ்த்திரு நாடு தில்லியின் தாளில்
அடிமை என்ற நிலையை அடைந்தது.

இந்தியா ஒருநா டென்று கூறித்
தமிழ ரைச்சிறு பான்மைய ராக்கி
உயிரை உறிஞ்சு கின்றது தில்லி!

அடிமை விலங்கை அகற்றிடும் விடுதலைக்
கொடிநட்டு மீட்சி கொள்ள வேண்டுவது
மிகவும் தேவை யாகி விட்டது!

இத்தமிழ் நாட்டில் இந்தியைத் தில்லி
புகுத்தி மனத்தைப் புண்ணாக் கிற்றே!
தமிழுக் குரிய தக்க இடங்களை
இந்தியே விழுங்கி ஏப்ப மிட்டது!
வண்டி நிலையம் வரும்பல அஞ்சல்
அட்டை பணம்அனுப் புத்தாள் அனைத்திலும்
இந்தி புகுத்தி இடர்வி ளைத்ததே!
அயல்இந் திக்கே ஆட்சிஏன் இங்கே?
தமிழர் நாட்டில் தமிழ்த்தாய் அடிமையா?

இந்த நிலையை இனியும் பொறோம்பொறோம்
இந்த மாநா டிவற்றை எல்லாம்
விளக்கிக் காட்ட விரும்பு கின்றது

நம்தமிழ் நாடு நாலு கோடி
மக்களைப் பெற்று வாழு கின்றது.
மற்றவை போலும் மாத்தமிழ் நாடும்
வல்லர சாக வாழலாம் அன்றோ!

ஐ.நா. என்ற நிறுவன மதனில்
உயர்தமிழ் நாடும்ஓர் உறுப்பை அடையும்
தகுதி அடைதற்குத் தடைதான் என்ன?
அயலா ருக்குநாம் அடிமை என்பதே?
உடனடி யாக உரிமை வேண்டும்.

பணநிலை உயரவும் பழம்புகழ் உயரவும்
உயிர்நிகர் தமிழ்தான் உயர்வு கொள்ளவும்
உரிமை மக்களாய் உலகில் திகழவும்
வறுமை நீங்கி வாழ்வில் உயரவும்
இனத்தின் உரிமை இன்றியமையாதது!

தில்லியின் பிடிப்புச் சிறிது மின்றி
உரிமைத் தமிழகம் உண்டாக்கு வதிலும்
எவ்வழி யும்நமக் கில்லை என்றும்
கருது கின்றது பெரிதிம்மா நாடு!

உரிமை நாட்டை உடனே அடையவும்
உமது குறிக்கோள் நாடெலாம் அறியவும்
தமிழினம் தமிழ்நாடு தமிழர்நாம் என்ற
உணர்ச்சியை வளர்க்கவும் உடனடி யாக
நற்றமிழ் நாடில்லா நாவலந் தீவின்
படத்தை எரிப்ப தென்று பாரில்இம்
முழுமா நாடு முடிவுசெய்வ தோடு
எல்லாத் தமிழரும் இதிற்பங்கு கொள்க
எனவும் வேண்டு கின்றதிம் மாநாடு!

பட எரிப்புநாள் எந்நாள் என்பதைப்
பெரியார் குறிக்க என்று
அரியஇம் மாநா டறிவிக் கின்றதே!

## வருக நேருவே!

வருக நேருவே வருக வருக !
பெருகு தமிழர்க்குப் பெரும்பகை நீவிர் ;
வரவேற்க வேண்டும், மறுப்பது சரியன்று !

வருக நேருவே வருக! நீவிர்
உலகின் அரசியல் உணர்ந்த துண்டோ?
அரசியல் ஒழுக்கம் அடைந்த துண்டோ?
பதவி யாளர்க் குள்ளபண் பாடுகள்
உம்மிடம் உண்டா? உலகின் பொதுவறம்
உம்மிடம் உண்டா? செம்மையாய் எண்ணினால்
இல்லை, எதுவும் இல்லை என்பதே
என்றன் எண்ணம் ஆகும்! கேட்பீர்:—

ஓரி னத்தின் உயிரே ஆன
ஒருதனித் தொன்மொழி ஆன தமிழை
அழிக்க முடியுமா? அழிக்க எண்ணும்
எண்ணம் அறமா? இந்த உலகில்
இம்மனப் பான்மையை எந்தத் தலைவர்பால்
கண்டீர்! காட்ட முடியுமா உம்மால்!
என்னதி கார எல்லையின் ஒருமொழி
வளர்ந்தால் என்றன் பதவியும் வளரும்
என்றுதாம் எண்ணுவர் எந்தத் தலைவரும்!

ஓரி னத்தை அதிலும் ஒண்தமிழ்ப்
பேரினத்தை பெரிதும்கூட் டழித்து
நும் அதிகார நுழைவைப் பெருக்க
எண்ணுவது சரியா? இந்த வண்ணம்

எந்த அரசியல் தலைவ ரிடத்தில்
கண்டீர்! அல்லது கல்வி, அறிவு
ஒழுக்கம் என்ப வற்றில் ஒன்று
நன்றெனச் சொல்லுமா இந்த நடத்தையை!

நாட்டு மக்களைப் பிரிவினில் நடத்தி
ஆட்சி நடத்தினால் ஆங்கிலன் என்றீர்
நீர்செயும் வேலை எப்படி? நினைத்தீரா?
தமிழர் எடுத்த தமிழ அமைச்சரைத்

தமிழரி னின்று தடுத்தாட் கொண்டீர்;
அவர்களை எமக்குப் பகைமை ஆக்கினீர்
அவர்கள் கையால் அல்லல் இழைத்தீர்;
எத்தனை நாளைக் கிம்முறை செல்லும்?

நீரைப் பிரித்தால் நிலையிற் பிரியுமா?
அரிசியைப் பிடுங்கினீர்; அயலார்க் களித்தீர்
இதுவே சிறிது முற்றினால் போதுமே
தமிழினம் ஒன்றுபட் டும்மைத் தாழ்த்த!

வருக நேருவே வருக! வந்து—
அரியஎம் அமைச்சர் உள்ளத் துள்ளே
உம்முள் ளத்தையும் ஒட்டி, உள்ள
நிலைமையின் துடிப்பை நேரில் உணர்க.

தமிழர்க்குச் சாவு வருவதைத் தமிழரின்
அமைச்சர் ஒப்புவார் அல்லர்;
தமிழர்கள் அவர்கள்!! தமிழகம் வாழ்கவே.

## கொடுங்கோல் முறிக்கும் பெரியார் வாழ்க!

### சில கேள்விகட்கு விடை

பன்னும் முகை—மாப் பாண்டியன் காண்க
பாரதி தாசன் உரைப்ப திஃதே;
மன்னு தமிழே திராவிடம் என்று
திரிந்த தென்றால் மறுப்பவர் இல்லை.
அன்ன "திராவிடம்" என்ற பெயர்தான்
ஆயிரம் ஆண்டுகள் முன்னமே நமது
தென்பால் உள்ள ஐந்துநா டுகளையும்
தெரிவிப்ப தாயிற் றுலகுக் கெல்லாம்.

அதேகா லத்தில் "தமிழ்நா"டெனில் அவ்
வைந்தில் ஒன்றையே குறித்த தாகும்
இதனைக் கருதியே பெரியார் கண்ட
இயக்கத் திற்குத் "திராவிடர் கழகம்"
எதிரிக்கும் விளங்க—எனப்பெய ரிட்டார்
எதையும் எதிர்ப்பவர் இதையும் எதிர்த்தார்
எதையும் செய்யார் எதையும் மறுப்பார்.
எதிர்ப்பும் மறுப்பும் நாட்டுத் தொண்டாக

திராவிட நாடா! திருத்தமிழ் நாடா?
எதைமீட்க எண்ணம்? என்ப தான
ஒருபெரும் கேள்வியைக் கேட்கின் றவர்கள்
ஒருசின்ன உண்மையை மறக்கின் றார்கள்

திராவிட நாடே தமிழ்நா டன்றோ
திருத்தமிழ்நாடே திராவிட மன்றோ!
திராவிடம் மீட்பவர் தமிழ்நாடு மீட்பவர்.
தமிழ்நாடு மீட்பவர் திராவிடம் மீட்பார்.

திராவிட நாட்டினை ஒட்டி இருந்த
தெலுங்கு, கன்னடம் கேரளம் போனபின்
திராவிட நாடெனப் பெயர்கூறி இதனைப்
பிரிப்போம் என்று செப்புவதா என்பர்.
கராவா விழுங்கிற்றுக் கேரள நாட்டையே!
காக்கையா தூக்கிற்றுத் தெலுங்கு நாட்டை?
இராமல் எங்கே போயிற்றுக் கன்னடம்?
தில்லி இழுப்புநோய்க் குள்ளே உள்ளன!

மீதி யான திராவிட நாட்டை
மேன்மை யான நம்தமிழ் நாட்டை
ஓது மிந்தச் சென்னை அரசை
ஒன்று பட்டுநாம் மீட்கும்ஓர் ஆற்றலைக்
காதாற் கேட்கும் கேரளம் முதலன
தில்லியின் காலை விடாதிருந் தாலும்
ஏதும் செய்ய முடியாதா நம்மால்?
இன்றுள ஆற்றல் அன்றைக்கும் இருக்கும்

நாவலந் தீவென நவிலும் படத்தை
நம்சென்னை அரசினை நீக்கி—எரிப்பதால்
கூவுவார் தெலுங்கர் குதிப்பார் கேரளர்
கொடும்பகை கொள்வார் கன்னடர் என்று
நாவும் நோவ நவிலுகின் றார்சிலர்
நாங்கள் எரிப்பது படத்தையே படத்தையே
தீவில் உள்ள மக்களை அல்ல!
சிறிதும் இதனை மறந்திட வேண்டாம்.

படத்தை எரிப்பினும் கேரளம் முதலன
பகைக்கும் என்றால் பகைக்கட்டும் நன்றாய்ப்
படம் எரிப்பதன் நோக்கத்தை எண்ணிப்
பார்க்கட்டும்! காணட்டும்! பகைக்கட்டும் நன்றாய்த்
தடங்கொள் தமிழகத் தாய்க் குதவாத
தக்கைகள் பகைக்கட்டும் திருந்தட்டும் பின்பு!
கொடும்பகைத் தில்லி ஏந்தி டுங்கொடுங்
கோலை முறிக்கும் பெரியார் வாழ்கவே!

## விடுதலை பெறுவது முதல்வேலை!

### பெரியார் கட்டளை

(தனித்தமிழ் வண்ணம்)

தன தன தன தன தன தான
தன தன தன தன தன தான
தன தன தன தன தன தான — தன தானா

விடுதலை பெறுவது முதல்வேலை
அடிமையில் உழல்வது முடியாது
விழிதுயில் வதுமிகு தவறாகும் — எழுவீரே

மிகுபுகழ் உடையது தமிழ்நாடு
மிகுதிறம் உடையது தமிழ்நாடு
மிகநலம் உடையது தமிழ்நாடு — பழநாளே!

கொடியது கொடியது வடநாடு
குறுகிய செயலது வடநாடு
கொடுமையை விடுவது சிறிதேனும் — முடியாதே!

குவிபொருள் கவர்வது வடநாடு
பசியினில் உழல்வது தமிழ்நாடு
குறைவுடன் உறைவது தமிழ்வாழ்வில் — உளதாமோ!

அடிமைகள் எனஎமை வடவோர்கள்
நினைவதை விடுவது ஒருநாளும்
அதைவிட இழிவது எதுவாகும் — நிலமீதே!

அனைவரும் உறவினர் தமிழ்நாடர்
அனைவரும் ஒருநிகர் தமராதல்
அலைகடல் எனஎழ இதுவேளை — விரைவீரே

நடைபெறு மிதுநம துயர்வேலை
நரிகளும் நரிகளின் அடியாரும்
இடர்புரி வதில்மயிர் இழையேனும் — முடையாமோ?

நலிவினை உணருக! பெருவாழ்வின்
நலமினை உணருக இதுவேளை
நமைஎழ வினைபுரிபவர் திருவாளர் — பெரியாரே.

## தென் பாங்குக் காரி

நாலடுக்கு மல்லிகையாம்
நாரெடுத்துப் பூத்தொடுக்கும்
சேலெடுக்கும் கண்ணாளே — செங்கேணி!
திரும்பாதோ உன் முகந்தான் — செங்கேணி!
அடியே
இரும்போடி உன் மனந்தான் — செங்கேணி!

மேலடுக்கு மாடியிலே
நம்நாடு தாழையிலே
காலடுக்கு வெற்றிலையோ — கங்காணி!
கையடுக்குச் சிட்டாட்டமா — கங்காணி
போடா பொ
சொல்லடுக்கி நாட்டை விற்கும் — கங்காணி!

அஞ்சுவிரல் மோதிரமாம்
அங்கைமேல் பச்சைக்கிளி
கொஞ்சுகின்ற நேரத்திலும் — செங்கேணி!
கொஞ்சமும்நீ கொஞ்சாததேன் — செங்கேணி!
அடியே
நெஞ்சந்தான் செங்கல்லோ — செங்கேணி!

பஞ்சணையில் அரசியலோ
சாதிநம்மைப் பழிக்கையிலே!
தஞ்சமென்ன பார்ப்பானிடம் — கங்காணி
தமிழர்களை விலைக்கு விற்கும் — கங்காணி
போடா போ
தண்டாதே சட்டிச்சோறு — கங்காணி!

வண்டுக்குக் கும்மாளமாம்
வாயுதடு தேனூற்றாம்
கண்டுங்காணாததுபோல் — செங்கேணி!
சாட்டுகின்றாய் நீட்டாண்மை — செங்கேணி!
அடியே
கற்றதெல்லாம் என்னிடமா — செங்கேணி!

தொண்டுக்கு மூட்டுக்கட்டை
துட்டுக்குச் சிட்டானாய்
வெண்தாடி வேந்தன் நாட்டு — கங்காணி!
விடுதலைக்கு மறுதலையா — கங்காணி!
போடா போ
கெடுதலைக்குப் பாடுபட்டாய் — கங்காணி'

## திராவிடர்க்கு விண்ணப்பம்

தென்னாட்டுத் தாய்மாரே தந்தை மாரே
திராவிட நல் இளைஞர்களே உடன் பிறந்தீர்!
முன்னாட்கு முன்னாளே நாவற் றீவை
முழுதாண்ட மூவேந்தர் மரபி னோரே
மன்னர்க்கு மன்னரென வடவர் வாழ்த்த
வாழ்ந்திட்ட வாழைக்குக் கீழ்க்கன் றன்னீர்!
கன்னடரே கேரளரே துளுவப் பாங்கீர்
கவின்தெலுங்கப் பாங்கினரே உணர்வு மிக்கீர்

திருத்தமிழத் துருக்கர்களே சமண மக்காள்
திராவிடத்துக் கிறித்தவரே, புத்தச் சார்பீர்;
திருத்தமிகு வைணவரே சைவத் துள்ளீர்—
தென்னாட்டுப் பார்ப்பனரே என்விண் ணப்பம்;
தெருத்தோறும் ஊர்தோறும் வீடுதோறும்
செல்லுமா றேவிடுத்த என்விண் ணப்பம்!
வருத்துகின்ற நாட்டுநிலை மாறச் செய்து
மானத்தைக் காத்திடுமோர் ஆவ லாலே

நெடுங்குன்றத் தோளுடை யார் திராவி டர்தம்
நெஞ்சுதொறும் ஏறவிட்ட என்விண் ணப்பம்?
அடங்காத எழுச்சினைச் செய்க! வெற்றி
அடையுமட்டும் உருவியவாள் உறைகா ணாத
கடும்போரை வளர்த்திடுக குருதி யாற்றங்
கரையினிலே திராவிடர்கள் வாகை சூடி
நடுந்தறியின் பணிக்கொடியால் திராவி டர்தம்
நல்வாழ்வை உயர்த்துகவிண் ணப்பம் கேளீர்!

இன்றல்ல நேற்றல்ல பன்னூற் றாண்டாய்
இந்நிலத்தைப் பொன்னிலத்தைத், திராவிடத்தை
என்றேனும் எவ்வகையி லேனும் பற்றி
ஈடழிக்க வழிபார்த்தார் வடக்கு நாட்டார்!
ஒன்றல்ல அவர்சூழ்ச்சி மனு நூல் தன்னை
ஒழுக்கநூல் எனச்சொல்லி வலைவி ரித்தார்
அன்றுமுதல் இருடியரை முனிவர் தம்மை
ஆள்வளைக்கத் திராவிடத்தில் அனுப்பிப் பார்த்தார்.

திராவிடரை இழிவுறுத்தும் கதைகள் கோத்துத்
திராவிடரை நம்பும்வகை செய்து பார்த்தார்,
இராவிடத்தில் தலைநிமிர்ந்தும் மறவர் மக்கள்
இருப்பிடத்தில் அடிவீழ்ந்தும் பார்த்தார்; தெய்வ
மரபினர்கள் தாம்என்று கூறிப் பார்த்தார்.
மன்னர்களைப் பல்வகையால் மயக்கிப் பார்த்தார்
ஒரேநாட்டார் நாம் என்று சொல்லிப் பார்த்தார்
ஒரேஇனத்தார் நாம்என்று புளுகிப் பார்த்தார்

மொகலாயர் முதல்அயலார் படை எடுப்பால்
முழுகிவிடும் இந்துமதம் என்று கூறி
மிகநயமாய்த் திராவிடத்தை வளைக்கப் பார்த்தார்
வீழ்ஆலின் வெளவாலைக் குயில்என் பார்போல்
தகுமொழிஎன் றும்தேவ மொழியீ தென்றும்
தம்மொழியைத் திராவிடத்தில் உயர்த்தப் பார்த்தார்.
புகழ்தமிழாம் பூங்காவின் குயிலை மண்ணிற்
புதைத்திடவும் ஏதேதோ செய்து பார்த்தார்.

மேனாட்டார் இங்குவந்தார் அவரிடத்தே
மிகத்தாழ்ந்து தம்கொள்கைஒப்ப வைத்து
வால்நாட்டி அவரைப்பின் ஆழம் பார்த்து
வாலறுக்கத் தலைப்பட்ட மேனாட் டாரை
ஆனமட்டும் எதிர்ப்பதுபோல் வெளிக்குக் காட்டி
அலுவல்பெறக் கால்பிடித்துத் தலை நிமிர்ந்து
தேன் அடடா தேசபக்தி என்று கூறி
திராவிடத்தில் விளம்பரமும் செய்து கொண்டார்

நானிலத்துப் போர்வரவே ஆங்கிலத்து
நரிக்குள்ள வலிமையொடுங்கிப் போனதாலே,
மானிகள்போல் இந்நாட்டின் அதிகாரத்தை
வால்குழைத்த வடக்கரிடம் ஒப்படைத்தார்
ஓநாய்க்கோர் அதிகாரம் வந்து விட்டால்
உயர்புலியும் ஆடாகத் தோன்றி டாதோ?
தீநினைப்பை வெளிக்காட்ட லானார் இங்கே!
திராவிடர்என் றோரினமே இல்லை என்றார்.

செங்குட்டு வன்பிறந்த திராவிடத்தைச்
சிறுவடக்கர் ஆளுவதோ நன்று! நன்று
மங்கிற்றுத் திராவிடந்தான் எனும் நினைப்போ?
மாண்டார்என் றெண்ணினரோ மறவர் மக்கள்!
எங்குற்றீர் உறவினரே! ஏன் உறக்கம்?
எழுந்திருப்பீர் பகைநினைப்பை ஒழிக்க வேண்டும்
செங்குத்துத் தோளெங்கே மறத் தனத்தைச்
சிறிதறிய வேண்டுமிந்தப் பகைவர் கூட்டம்.

வடமொழியாற் பிறந்ததென்றார் தமிழை! என்ன
வாய்ப்பதட்டம்! இவ்வையம் அறிய நம்மேல்
சுடுமொழியை வீசுகின்றார் அன்றோ? நம்மைத்
துரும்பெனவே எண்ணுகின்றார் அவ் வடக்கர்
படியரிசித் தேவைக்கும் முழத் துண்டுக்கும்
பல்லிளித்துத் தமைநோக்கிக் கெஞ்சத் தக்க
அடிமைநிலை நோக்கவந்தார் இதுவும் சொல்வார்
அடக்காமல் விட்டுவைத்தால் எதுவும் சொல்வார்!

வடநாட்டுப் பொருள்விற்கும் சந்தை யாக்கி
வடிகட்ட வழிசெய்தார் திராவி டத்தை!
அடிப்படையாம் விளைபொருள்கள் அவர் ஒப்பந்தம்
அரசினரின் சலுகைக்கோ குறைச்ச லில்லை!
விடிவிளக்கில் தூங்காமல் வடவர் இங்கே
மிகும்வட்டி குவிப்பதுவும் பெரும் வேடிக்கை!
உடனடியாய்ச் செயத்தக்க தொன்றே ஆகும்
உள்ளதிரா விடர்நமக்குள் பிளவு வேண்டாம்.

அமைச்சரென நம்மவர்க்குப் பெயர் அமைத்தே
அவர்கையால் திராவிடரைக் கெடுப்ப தன்றி
இமைப்போதும் அவர்விருப்பம் போல் நடக்க
எள்ளளவும் இடந்தரார் இதைஎண் ணாமல்
நமக்குரிய திராவிடர்கள் சில்லோர், இன்று
நம்கொள்கைக் கெதிராக நடக்கின் றார்கள்
தமக்குரியார் வடவரல்லர் என்னும் உண்மை
தாமறிவார் இன்றில்லா விடினும் நாளை !

பழையவர லாறுண்டு நடப்பும் கண்டோம்
பச்சைநஞ்சாம் வடவருக்குத் திராவி டர்கள்
தழைந்ததிரா விடநாட்டை அடக்கி ஆளத்
தலைமுறைத லைமுறையாய் முயற்சி செய்தார்
இழைத்துணையாய்ப் பழகிடினும் திராவி டர்கள்
இராக்கதர்என் றருவருக்கின் றார் வடக்கர்.
வழுக்கிவிட நேர்ந்திடினும் வடக்கன் போட்ட
வலைக்குள்விழும் திராவிடன்தன் மானம் விற்போன்

"இரையுண்டு நாள்கழிப்பர் திராவி டர்கள்"
கெட்டழிவார் இவ்வாறு நம்மைச் சொன்னார்.
தேரைஎன மதிக்கின்றார் வேங்கை தன்னை!
தென்னாட்டை இவர்தாமோ வாழ வைப்பார்?
ஊரையடித் துலையிலிடும் வடக்கர் கொள்கைக்
கொத்துழைத்தல் பொதுத்தொண்டாம், தம்மினத்தின்
பேரை அழிக் கின்றார்கள் திராவி டத்திற்
பிறக்கின்ற பெரும்பேறு பெற்ற சில்லோர்!

சிறப்புடைய குடித்தனத்தான் மறத் தனத்தால்
செங்கோல்கொண் டிந்நாட்டை ஆளத் தக்கான்,
அறத்துறையில் பண்பட்டான் "தன்நாட்டார்க்கே
ஆவதொன்றை" ஈகஎன்று நாண மின்றித்
தறுக்குடைய வடக்கனிடம் செல்லு கின்றான்
தனித்துநின்று வடபுலத்தைத் தகர்க்க வல்லான்!
துறக்கின்றான் தன்மானம்; தூதூ தூதூ
துடிக்கின்றோம் உடன்பிறந்தான் நிலைமை கண்டே!

இதுவேநம் தலைமுறைக்குத் தேர்தல் காலம்
இடர்சூழ்ந்த திராவிடத்தை மீட்க வேண்டும்
முதுவேனில் காலத்தே எறும்பின் சாரை
முடுகுதல்போல் அணிவகுத்து முன்னேறிப்போய்ப்
புதியதொரு வரலாற்றில் பொன்னெழுத்தால்
புறங்காட்டி னார்பகைவர் என்று தீட்ட
எதிரிகளை வலியடக்கி வாகை சூடி
இனவெற்றிக் கொடிதன்னை ஏற்ற வேண்டும்.

## தமிழ் நாட்டை விடுதலை செய்வோம்

தமிழ்நாட்டை விடுதலை செய்வோம்—கெட்ட
சழக்கர் ஆட்சியை வேரொடு கொய்வோம்

அமையாப் பார்ப்பனப் பகைவர்க்குத் தமிழரை
அண்ணாத் துரைகள் காட்டிக் கொடுத்தாலும்,
தமிழுக்கு வடமொழி தாய்என்று தெ. பொ
மீனாட்சி அழகுகள் சாற்றித் திரிந்தாலும்
தமிழ்நாட்டை விடுதலை செய்வோம்—கெட்ட
சழக்கர் ஆட்சியை வேரோடு கொய்வோம்!

நேருவின் அடியில் காம ராசர்கள்
நெடுஞ்சான் கடையாய் விழுந்திட்ட போதிலும்
தீராப் பகையொடு தமிழர்கூட் டத்தைச்
சிறையில் தள்ளிக் கொலைசெய்த போதிலும்
தமிழர்நாட்டை விடுதலை செய்வோம்—கெட்ட
சழக்கர் ஆட்சியை வேரோடு கொய்வோம்!

தமிழர் செய்த தவம்பலித் திட்டது
பெரியார் திருவுளம் எமைக்காக்க வந்தது
சமையம் சாதி ஆரியம் இந்தி
தலைதூக்கி எங்கள் காலைக் கவ்வினும்
தமிழ்நாட்டை விடுதலை செய்வோம—கெட்ட
சழக்கர் ஆட்சியை வேரோடு கொய்வோம்!

## தமிழ்நாட்டு வாழ்த்து

தமிழ் நா டே வாழ்க—எம்
தாய் நா டே வாழ்க
அமிழ் தா கியஇய லிசைகூத் தென்னும்
தமிழா கிய உயிர் தழையும் விழுமிய

தமிழ்நாடே—வாழ்க!

இலங்கை சிலம்பும் குமரித் திருவடி தென்பால்
எழிலார் விந்தக் குழலார் வேங்கடம் வடபால்
கலங்கொள் முத்துக் கடலும் பவழக்
கடலும் கிழக்கு மேற்கில் உடுத்த

தமிழ்நாடே—வாழ்க!

குன்றுகள் வான்தொறும் எரிமலை அறியாய்
பெருநில முடையாய் நடுக்க மறியாய்!
தென்றற் குளிரும் செங்கதிர்ச் செல்வமும்
தெண்ணீர் வளவயல் செந்நெலும் கொழிக்கும்

தமிழ்நாடே—வாழ்க!

## நாடு நலம்பெற வேண்டும்

நாடு நலம்பெற வேண்டும்—மக்கள்
நாகரி கம்பெற்று வாழ்ந்திட வேண்டும் —நாடு

ஏடுகள் மெய்பேச வேண்டும்—பிழை
எங்குக்கண் டாலும்இ டித்திடல் வேண்டும்
ஆடுகள் போல்விழ வேண்டாம்—இங்
கவரவர் எண்ணத்தை மேற்கொள்ள வேண்டும்.
வீடிருந்தாற்குடி தோன்றும்—நல்ல
விடுதலை உள்ளத்தில் நடுநிலை தோன்றும்
மேடுபள் ளங்களைக் கண்டே—நலம்
விதைக்கள ழுத்துழு வோன்எழுத் தாளன் —நாடு

அன்னையும் தந்தையும் போலே—மக்கள்
ஆளவந் தாரைநி னைத்திடும் வண்ணம்
தன்னலம் என்பதை நீக்கி—ஒரு
சார்பிலும் சாராமல் ஆளுதல் வேண்டும்
இன்னல் விளைத்திடும் சாதி—மதம்
யாவினு மேதமை நீக்கிஎல் லார்க்கும்
தன்மை விளைப்பவர் தம்மை—இந்த
நாடு வணங்கிடும் நாடோறும் என்பேன் —நாடு

அலுவல கத்தவர் யாரும்—அந்த
அலுவல கத்தின்த லைவர்கள் யாரும்
சலுகைகள் காட்டுதல் இன்றி—எங்கும்
சரிநிகர் நீதிசெ லுத்துதல் வேண்டும
கொலைகளை வென்பன யாவும்—அவர்
கோணல்உ ளத்தில்வி ளைவன அன்றோ?

தலைவர் நம் காந்தியின் சாவும்—அந்தச்
சாய்ந்தக ராசின் விளைவென்று சொல்வேன் —நாடு

நாட்டின் தலைவர்கள் சாதி—மத
நாய்வெறி தன்னைந றுக்குதல் வேண்டும்
கோட்சேயைக் கண்டனரன்றோ—அவன்
கூட்டத்தின் உள்ளடக்கி டக்கையும் கண்டோர்
கேட்டைத்த விர்த்திட வேண்டும்—மக்கள்
கேண்மையும் ஆண்மையும் நாளும்வ ளர்த்தே
வாட்டம் தவிர்த்திட வேண்டும்—அன்பே
வாழ்வுக்கு நல்லவ கைசெய்ய வேண்டும்! —நாடு

## சாதி உண்டு

ஒட்டாரம் செய்வதென்ன தங்கச்சி?—நீ
உன்கணவன் வீட்டுக்குப்போ தங்கச்சி
வட்டாரம் சிரிக்குமடி தங்கச்சி—உனை
வாழாவெட்டி என்று சொல்லும் தங்கச்சி

கட்டினான் தாலியடி அக்கச்சி—என்
கைதொட்டதில் குறைக்கவில்லை அக்கச்சி
தட்டினான் அவன் உறுதி அக்கச்சி—எனைத்
தாழ்ந்தசாதி என்ற சொன்னான் அக்கச்சி

இழிந்தவேலை செய்திருக்கத் தங்கச்சி—நீ
ஏற்றுக்கொண்டால் வாழமுடியும் தங்கச்சி
ஒழிந்தநேரம் உனை அழைத்தால் தங்கச்சி—நீ
ஒத்துக்கொண்டால் வாழமுடியும் தங்கச்சி

தழைத்திருந்த தமிழ்நாட்டில் அக்கச்சி—இந்தச்
சாதிஉண்டோ சொல்லேடி அக்கச்சி
வழங்கிவரும் ஆட்சியிலே அக்கச்சி—நான்
வழக்குப்போடப் போகின்றேன் அக்கச்சி

என்னசொல்லி வழக்கிடுவாய் தங்கச்சி?—சாதி
இல்லைஎன்று வழக்கிடுவேன் அக்கச்சி
தன்னரசு போனதடி தங்கச்சி—நம்
தலையரசும் போனதுண்டோ? அக்கச்சி

என்னதீர்ப்பைக் கோருகின்றாம் தங்கச்சி?—சாதி
இல்லைஎன்ற தீர்ப்புவேண்டும் அக்கச்சி
உன்னரசின் தன்மையைக்கேள் தங்கச்சி,—சாதி
உண்டென்னும் சட்டமுண்டு தங்கச்சி!

## வீடுண்டு விளக்கில்லை

எண்சீர் விருத்தம்

வையப்போர் நடக்கையிலே ஒருநாள் காலை
வடிவேலன் வீட்டுக்கு முத்தன் வந்தே
''ஐயாஉம் இல்லத்தை நீரே ஆள்க
அரசினர்க்குத் தேவையில்லை'' என்று சொன்னான்.
துய்யநடுப் பகல்தனிலும் முத்தன் வந்து
சொன்னான்''உம் மின்னியக்க வண்டி தன்னை
மெய்யில்அர சினர் வேண்டாம் என்றார்'' என்றே'
விளக்குவைக்கும் வேளையிலும் மீண்டும் வந்தான்.

உம்வீட்டு நெல்லெல்லாம் உமக்கே ஆகும்
ஒருநெல்லும் அரசினர்க்கு வேண்டாம் என்றான்
இம்மொழிகள் கேட்டவடி வேலன் ''ஐயா
இல்லும்பெற் றேன்நெல்லும் பெற்றேன் எண்ணெய்
இம்மியில்லை விளக்கில்லை வெளிச்ச மில்லை;
எனக்குரிமை இருந்துபயன் என்ன'' என்றான்,
மெய்ம்மைஅது வடிவேலன் நன்று சொன்னான்
விடுதலையாற் பயனில்லை கல்வி இன்றேல்!

## வறுமை ஒழிப்பு

வீட்டுத் தெருக்கதவைச் சாத்தியவுடன் — வந்து
வெளித்திண்ணை மேலுறங்கும் ஏழைமக்களும்
மாட்டுத் தொழுவத்தினில் கொசுக்கடியில் — எரு
மண்ணில் உறங்குகின்ற எண்ணற்றவரும்,
பாட்டை இன்புறுத்தும் நாய்விலக்கியே — அங்குப்
படுத்திர வைக்கழிக்கும் பாழ்மக்களும்,
கேட்கும் அறிவுமில்லை 'ஒண்ட இடந்'தான் — எனில்
கெட்டதென்ன உங்கள்விழி ஆளவந்தீரே!

போக்கு வரவகன்ற பொட்டல்களிலும் — புழு,
பூச்சி உலவுகின்ற சாலைகளிலும்
சாக்கடை, கழிவன போக்கறையிலும் — பெற்ற
தாய்மடியில் பிள்ளையழக் கல்லடுக்கியே
ஆக்கி வடித்தெடுக்க அடுப்பெரிப்பார் — உண
வருந்தியஅல் விடம்துயில் புரிந்திடுவர்.
நீக்கத் தெரிந்ததில்லை தங்கள் குறையை — எனில்
நீங்கள் புரிந்ததென்ன ஆளவந்திரே!

ஒண்ட இடம் இன்றிஇவர் துன்பமுறுங்கால் — நீவிர்
உற்றுதவி செய்வதன்றி என்ன செய்கின்றீர்?
கொண்டபணக் காரர்களின் குறைகேட்டே — அவர்
கொள்ளை இன்னும் அடித்திட உழைத்தீரோ?

எண்டிசையும் தாயகத்தில் ஏழைகளழு ம்—கண்ணீர்
ஈட்டி ஒக்கும் என்னுமொழி கேட்டதில்லையோ?
தொண்டுபுரிந் தின்பமுற எண்ணமிருந் தால்—நீவிர்
துன்பமுறும் ஏழையர்க்குத் தொண்டுசெய்கவே!

## தீவாளியா?

அசுரர்என்று தமிழர்களை ஆரியர்கள்
அழைத்தார்கள்; சுரர் என்று தம்மைச் சொன்னார்
பசிகொண்ட நரிபோலே ஆரியர்கள்
பழந்தமிழர் தமையணுகி வயிற்றைக் காட்டி
இசைந்தவர்பால் கூத்தாடி இனத்தைக் கூட்டி
இடம்பெற்றுக் கலாம்விளைத்துக் குடித்தனத்தை
வசம்பார்த்துப் பெரிதாக்கி வைத்த பின்னர்
வளநாட்டில் ஆதிக்கம் பெறநினைத்தார்!

செங்கதிரை நாழிகைகள் மேற்கில் தள்ளும்
செயல்போலே ஆரியர்கள் தமிழ் வாழ்வில்
பொங்குதமிழ்க் கலைச்செல்வம் மறையும் வண்ணம்
புனைசுருட்டுச் செய்துவந்தார் ஐய கோ! நம்
மங்காத தமிழ்மறவர் ஏரலா றெல்லாம்
மங்கும்வகை செய்தார்கள்: வையம் கண்ட
தங்கத்தை இரும்பென்று சொன்னார்; ஐயோ!
தமிழரெலாம் அசுரர்கள் தாம்சு ரர்கள்!

அரக்கரென்றார்; அசுரரென்றார்; நம்மை எல்லாம்
அழகற்றோர் ஒழுக்கமிலார் என மொழிந்தார்
சுரக்கவில்லை மலையருவி உணர்ச்சி வெள்ளம்
தோன்றவில்லை நெஞ்சத்தில் நமை மறந்தோம்
குரங்கினங்கள் என்றுரைத்தார் நம்மை எல்லாம்
குரங்கரடிக் கூட்டமென்றார் கேட்டி ருந்தோம்
அரிக்கின்ற செல்அழிக்க மறந்த தோள்கள்
அன்றுபோல் இன்றுமுண்டு குன்றத் தைப்போல்

வாலியின்பால் வஞ்சகத்தைச் செய்த ராமன்
வாலிக்கு மோட்சத்தை அருள்செய் தானாம்
கோலைத்தன் வசமாக்கச் சதையை விற்ற
கொடியவன்பேர் ஆழ்வானாம் உடன் பிறந்தீர்
கேவிஎன்று கேட்பீரோ நரகன் என்போன்
கீழ்ச்செயல்கள் செய்தானாம் சுரர்கட் கெல்லாம்!
ஏலாத செயல்செய்த பாவி யாம்அவ்
விந்திரனின் ஆட்சியையும் பறித்த துண்டாம்.

பெண்ணினத்தைக் கொல்லாமை கடைப் பிடித்த
பெரியானை நரகனெனும் தமிழச் சேயைப்
பெண்டாட்டி தனையனுப்பி மான மின்றிப்,
பெருவெற்றி கிழித்தாராம் கண்ண வீரர்

பண்டிகையாம் தீவாளி! அந்த நாளாம்;
பல்லக்கை வழிகூட்டி அனுப்புகின்ற
பெண்டுக்குப் போடுதல்போல் கழுத்துக் கோடி
பெரிதுபெரி தாய்வாங்கிப் படைய லிட்டே!

அணிந்திடவும் வேண்டுமாம் அந்த நாளில்
அகமகிழ வேண்டுமாம் அதுவு மன்றித்
தணியாத மகிழ்ச்சிதனை அறிவை அந்நாள்
தலைமுழுக வேண்டுமாம் தமிழர் மானம்
தணல்பட்டுப் படபடென வெடித்த தென்று
சாற்றுதல்போல் வெடிகொளுத்த வேண்டுமாம்! இப்
பணியிட்டோர் ஆரியர்கள் தமிழர் என்னும்
பண்டிதர்கள் இலற்றிற்குக் கவிதை செய்தோர்!

இனமழிப்பார் அடிசுமக்கும் படிச்சு வர்கள்
இனமழிப்பார் அடிசுமப்பார் படிச்ச வர்கள்
கனவென்று நடுங்கினரோ நம்மி னத்தை
கசந்தாரோ? வற்றியதோர் ஓலையைப் போல்
மனம்சுருண்டு போனாரோ? தம்மைத் தாமே
மறந்தாரோ ஐயகோ தமிழர் தம்முன்
முனமிருந்தார் சிலகம்பர் விட்ட தாலே
முளைத்தகம் பக்கிளைகள் மும்ம டங்கோ?

## சுயமரியாதை எக்காளம்

நெருப்பில் துடித்திடும் மக்கட்கெல்லாம் நல்லகாப்பு—நல்கும்
நீதச்சுயமரி யாதைஎனும் குளிர் தோப்பு—அங்குச்
சுரப்பதெல்லாம் இன்ப மாகிய வண்புனல் ஓடை—நீவிர்
சுகித்திடவோ அறிவான இயக்கத்தின் வாடை—இங்கு
விருப்ப மெலாம்விழ லாக்கியவாழ்க்கையின் கோணை—அங்கு
விளையும் கருத்துக்கள் காதிலினித்திடும் வீணை—இங்
கிருப்பதெலாம் ஒருவர்க்கொரு வர்செயும் சேட்டை—அங்
கெழுப்பி யிருப்பது சமத்துவ மானகற் கோட்டை!

உப்பினை உண்டு கரிப்புக் கழும்சிறு பிள்ளை—வாழ்வில்
ஊமைக்கடவுள் எதற்குத்தொட்டீர் அந்த முள்ளை—தேயம்
முப்பத்து முக்கோடி மக்களி னால்பெற்ற பேறு—இங்கு
மூச்சுவிடக்கூட மார்க்கமில்லா மதச் சேறு—மண்ணில்
எப்பக்கங் காணினும் இன்பத்திலேறு முன் னேற்றம்—இங்
கின மதப்பலி பீடத்தி லேமுடை நாற்றம்—சொல்விர்
எப்பதம் பெற்றனிர் இந்நாள் வரைக்கும் மண்மேலே—நீர்
எதற்கும் உமக்குள் உதிக்கும் மதகொள்கை யாலே!

''தாழ்ந்தவர்'' என்பர் உயர்ந்தவர்க் கிம்மொழி
இன்பம்—இந்தச்
சாத்திரத்தால் இந்த நாள்வரைக் கும்துன்பம் துன்பம்
—மண்ணில்
தாழ்ந்தவ ரென்றொரு சாதியுரைப்பவன் தீயன்—அவன்
தன்னுடலைப்பிறர் சொத்தில்வளர்த்திடும்—பேயன்—நீர்
தாழ்ந்து படிந்து தரைமட்டமாகிய நாட்டில்—இனிச்
சாக்கரு விச்சத்தும் நீக்கிடுவீர்மன வீட்டில்—இன்று
வீழ்ந்தவர் பின்னர் விழிப்பதற்கே அடையாளம்—வாய்
விட்டிசைப் பீர்சுயமரி யாதைஎக் காளம்!

## பெண்கள் பாட்டு

### எடுப்பு

எறிந்தஎன் பூப்பந்தை எடுக்க முடியுமோ
இசைப்பீர் தோழியரே

### உடனெடுப்பு

அறிந்த வரைக்கும் பந்து வானை அளாவிப்பின்
ஆத்திகன் நடுவீட்டில் போய்ச்சேர்ந்த தாலே —எறிந்த

பார்ப்பனன் கால் மாடு—தலையைவைத்துப்
படுக்கும் அப்புல்லனோடு—முட்கள் செறிந்து
மூர்க்கமாய் வளர்ந்திடும் மூடவழக்கக் காடு
மொய்க்கும் ஆத்திகன் வீடுமுடைநாற்றச் சுடுகாடு—எறிந்த
அகத்தில் ஆணவம் கொழுக்கும்—பொய்வஞ்சைப்பாசை
அணுகவும்கால் வழுக்கும—ஏழைக்குமட்டும்
இகசுகம் பொய்மைஎன்னும் இதயத்தின் அழுக்கும்
இழுக்கமெல்லாம் மறைக்க முகத்திற்குறி பழுக்கும் —எறிந்த

கடவுள்கள் என்னும் உலையே—மூட்டி வைத்த
கடுமத வாள்கொள் நிலையே—நிலையாய் நின்று
படியில்தாழ்ந்தோர் என்போரைப் பன்னும்படு கொலையே
பாங்கிய ரேஅதனைப் பார்க்கசகிக் குலையே —எறிந்த

ஏழைஅறிவை வேட்டை—இட்டத்தினாலே
இழிகோயி லென்னும் காட்டை—விழியிற் காட்டிப்
பாழாக்கச் சொல்லியதிற் பறித்திடும் பணமூட்டை!
பார்க்கவும் சகியேன் ஆத்திகன் வீட்டை! —எறிந்த
பொய்மைப் புராணப் பேச்சில்—மக்களறிவைப்
புதைக்கும் அவனின் மூச்சில்—வெளிமயங்க
மொழிக்கும் விருதா பக்திமொழிந்திடும் கைவீச்சில்
முகம்கருகி யிருக்கும் என்பந்து சீச்சீ! —எறிந்த

## பெண்கள் விடுதலை

(சிறு காப்பியம்)

கிழக்கு வெளுக்கக் கிளிமொழியாள் தங்கம்
வழக்கப் படிவிட்டு வாயிற் படிதுலக்கி
கோலமிட்ட பின்பு குடித்தனத்துக் கானபல
வேலை தொடங்கி விரைவாய் முடிக்கையிலே
ஏழுமணிக் காலை எழுந்தாள் அவள்மாமி
வாழுகின்ற பெண்ணாநீ வாடிஎன்றாள் தங்கத்தை
இந்நேரம் தூங்கி யிருந்தாயா? என்பிள்ளை
எந்நேரம் காத்திருப்பான் இட்டலிக்கும் காப்பிக்கும்
என்றே அதட்டி இழுத்துத் தலைமயிரை
நின்றபொற் பாவை நிலத்தில் விழச்செய்தாள்.

வாரிச் சுருட்டி மலர்க்குழலைத் தான்செருகி
கூரிய வேல்விழியாள் கொண்டதுயர் காட்டாமல்
தொட்ட பணிமுடித்துச் சுள்ளி அடுப்பேற்றி
இட்டலியும் பச்சடியும இட்டஒரு தட்டுடனும்,
காய்சுவை நீருடனும் கொண்டான் தனிஅறையில்
போய்ப்பார்த்தாள் இன்னும் பொழுது விடியவில்லை
என்று நினைத்தே இருவிழி திறக்காமல்
பன்றிபோல் பாயில் படுத்து புரளுகின்ற
அத்தான் நிலைகண்டாள் அத்தைசொல் தான்நினையாள்.
முத்தான வாய்திறந்து மொய்குழலாள் கூறலுற்றாள்;
எட்டு மணிஅத்தான் எழுந்திருப்பீர் தந்தையார்
திட்டுவார் கண்கள் திறப்பீர் விரைவாகக்
காலைக் கடன்முடித்துக் காப்பி முடித்துடனே

வேலைக்குப் போவீரே என்று விளம்பக்
கழுதைபோல் தன்னிரண்டு கால்கள் உயர்த்தி
அழகு மனையாளை அப்படியே தானுதைத்தே
தூக்கத்தில் வந்தெனக்குத் தொல்லை கொடுக்கின்றாய்
போக்கற்ற நாயே,நீ போடி எனப்புகன்றான்.

செப்போடும் தட்டோடும் சேயிழையாள் கூடத்தில்
வெம்பும் உளத்தோடும் மீளவந்து பார்க்கையிலே
மாமனார் வந்து மலைபோலக் காத்திருக்க
ஊமைபோல் சென்றே உணவை எதிர்வைத்தாள்
எங்கேஉன் அத்தான் எழுந்திருக்க வில்லையோ?
எங்கிருந்து வந்தாய்நீ என்குடித்த னம்கெடுக்க?
இன்னுமா தூங்குகின்றான் ஏன்குரங்கே மூஞ்சியைப்பார்,
ஒன்பதுக் கெழுந்திருந்து பத்துமணிக் கூண்முடித்துக்

கையில் குடையேந்திக் காலிற் செருப்பணிந்தே
ஐயாதம் வேலைக்குச் சென்றால் அடுத்தநாள்
வீட்டுக்குப் போக விடைபெறலாம் அல்லவோ
காட்டுக் குறத்திபோல் கண்ணெதிரில நிற்காதே!

என்றுதன் பிள்ளை இழைத்த பிழைக்காகக்
கன்னல் மொழியாள்மேல் காய்ந்துவிழுந் தேமாமன்
உண்ணத் தலைப்பட்டான் இட்டலியை ஒண்டொடியாள்
எண்ணத் தலைப்பட்டாள் தன்னிலையை! என்செய்வாள்?

அத்தான் எழுந்தான் அரைநொடியிற் பல்துலக்கிப்
பொத்தல்நாற் காலியின்மேல் பொத்தென்று குந்தினான்
உள்ளே விழுந்தபடி ஓவென்று கூச்சலிட்டான்
பிள்ளை நிலைகண்டும் பெற்றோர் அருகிருந்தும்
கொல்லைக் கிணற்றில் குடிதண்ணீர் மொண்டிருந்த
மெல்லி விரைந்துவந்து மேலே எடுத்துவிட்டாள்.
புண்பட்ட தோஎன்று பூவையாள் பார்க்கையிலே
கண்கெட்ட துண்டோ! கடியநீ ஓடிவந்து
தூக்கினால் என்ன தொலைந்துபோ என்றுரைத்துத்
தாக்கினான் தையல் தலைசாய வீழ்ந்தெழுந்தாள்.

அப்போது மாமி அருமை மகனிடத்தில்
கொப்பேறிக் குந்தும் குரங்குபோல் உன்மனைவி
மேலேறிக் குந்தியே நாற்காலி மேற்பிரம்பைக்
கேலி பிறர்செய்யக் கிழித்துத் தொலைத்துவிட்டாள்
என்றாள். அருகில் இருந்திட்ட மாமனோ
நின்றால் அடித்திடுவான் நீபோஎன் றேஉரைக்க
அப்படியே பிள்ளையும் ஐந்தாறு தந்திடவே
பொற்பாவை கண்ணில் புனல்சாய உட்சென்றாள்!

மாலை ஒருமணிக்கு மங்கை அடுப்பருகில்
வேலைசெய் யும்போது முற்பகுதி வீட்டறையில்
எண்ணெய்ஏ னத்தை எலிஉருட்டிப் போயிருக்கப்
பெண்ணுடைத்தாள் என்று பெரும்பழியை மாமிஅவள்
சூட்டினாள் அந்தத் துடுக்குமகன் தாயின்சொல்
கேட்டுக் கயிற்றால் கிளிமொழியை ஓர்தூணில்
கட்டினான் கட்டிக் கழியால் அடிக்கையிலே
மங்கையைப் பெற்றவர்கள் வந்தார். நிலைகண்டார்!
தங்கமே என்று தலைமீது கைவைத்துத்
தேம்பி அழுது சிறிது பொறுப்பீரோ
கட்டவிழ்க்க மாட்டீரோ என்று கதறஅவன்
கண்ணான பெண்ணாளைக் கட்டவிழ்த்துப் போஎன்றான்

பெண்ணாளின் மாமியவள் பெண்ணென்றால் இப்படியா?
கொண்டவனை மீறுவதா? கொண்டவனை அண்டாமல்
கண்டவனை அண்டிக் கதைபேசப் போவதுண்டா?
என்று பலபொய் எடுத்தெடுத்து வீசலுற்றாள்;
என்றைக்கும் வாழாள் இவளென்றான் மாமனும்!

அந்நாள் இரவில் அணங்குதனைப் பெற்றவர்கள்
பொன்னையன் வீட்டுக்குப் போய்இத னைக்கூறி
எதுசெயலாம் என்று வினவ அவன்சொல்வான்

இதுவெல்லாம் முன்னாள் பிரமன் எழுதியதாம்
ஆரும் அழிக்க முடியாது கொண்டவனால்
நேருவதை நாம்தடுக்க எண்ணுவதும் நேர்மையில்லை
பெண்டாட்டி என்றும் பிழைசெய்யக் கூடியவள்
கொண்டவன் கொல்வான்; அணைப்பான் அவன்விருப்பம்
இந்நாள் இதுவெல்லாம் நான்சொல்லும் சொல்லல்ல
அந்நாள் மனுவே அழுத்தி எழுதியவை,
என்றுரைக்கப், பெற்றவர்கள் உள்ளம் எரிந்தவராய்க்
கன்றைப் பிரியும் கறவையெனக் காலையிலே
பெண்ணைப் பிரிந்து பெருந்துன்பம் மேலிட்டு
வெண்ணெய்நல்லூர் வண்டியின் மேலேறிச் சென்றார்கள்.
வஞ்சி மரச்சருகு வாதனூர்ச் சாலையிலே
கொஞ்சநஞ்ச மல்ல குவிந்து கிடந்திடுதே
ஆலைச்சங் கூதும் அதிகாலையில் நீபோய்
நாலுசுமை கட்டிவந்தால் நாலுபணம் மீதியன்றோ?
என்றுரைத் தாள்மாமி இதுகேட்ட தங்கம்தன்
பொன்னான அத்தான்பால் போயுரைக்க லாயினாள்
வஞ்சிச் சருகுக்கு மாமியார் போஎன்றார்
கொஞ்சம் விலையே கொடுத்தால் அதுகிடைக்கும்
பத்துக்கல் ஓடிப் படாப்பாடு பட்டிட நாம்
சொத்தில்லா ஏழைகளா சொல்லுங்க ளென்றுரைத்தாள்
நன்செயிலும் புன்செயிலும் நானூறு காணியுண்டு
இன்னுமுண்டு தோப்புப இருப்பும் இருந்தாலும்
என்தாயின் சொல்லைநீ ஏன்மறுத்தாய்? நாள்தோறும்
சென்று சுமந்துவர வேண்டுமென் றான் தீயவனும்!
நெஞ்சம் துடித்தாள் நிலைதளர்ந்தாள் அத்தானைக்
கெஞ்சினாள் அந்தப் பழக்கம் கிடையாதே?
ஒன்றியாய்ப் போவதற்கும் என்னுள்ளம் ஒப்பாதே
இசன்றுரைப்பீர் மாமியிடம் செலலா வகைசெய்ய,
என்றாள் பயனில்லை இரவு கழிந்தவுடன்
சென்றாக வேண்டுமென்று சிங்கச் கனாக்கண்டாள்!

மாடியிலே மங்கையர்க ளோடிருந்து பந்தாடி
வாடினேன் என்று வலஞ்சுழியும் அப்பவகை
உண்ணென்று தாய்எனக்கே ஊட்டுகையில் நானவற்றை
மண்ணென் றுமிழ்ந்ததெல்லாம் எண்ணி அழுவேனா!
சூட்டுமலர் வாடமணிச் சுட்டியொடு நான்களைந்தே
போட்டு வயிரப் புதுச்சட்டி வாங்கியதை
எண்ணி அழுவேனா! எருமைமுது கென்புபோல்
பண்ணிய தங்கமணிக் கோவை பழையதென்று
வேலைக்கா ரிக்கு விடியலில் நான்தந்து
மாலையிலே மற்றொன்று வாங்கியதை எண்ணி
அழுவேனா! மான்குட்டி கேட்ட அளவில்
எழுதி வரவழைத்த தெண்ணி அழுவேனா!
தன்னாடை மேலென்றாள் தான்காண நான்அன்றே

பொன்னாடை பூண்டதை எண்ணி அழுவேனா!
அண்டைத் தெருவுக்கும் ஆடும் இருகுதிரை
வண்டிஎன்றால் வந்துநின்ற தெண்ணி அழுவேனா?
இந்நாளில் என்கணவர் இல்லத்தில் நாள்தோறும்
தொன்னையிலே நொய்க்கஞ்சி தூக்கிக்குடிஎன்னும்
அன்பில்லார்க் காட்பட்ட தெண்ணி எழுவேனா!
உள்ளம் அறிய ஒருப்ழைசெய் யாவிடினும்
தள்ளித் தலையுடைப்ப தெண்ணி அழுவேனா!
வஞ்சிச் சருகெடுத்து வாஎன்ற சொல்லுக்கே
அஞ்சி நடுங்குவ தெண்ணி அழுவேனா!
என்று துடிதுடித்தழுதாள் ஏனழுதாய் என்றுரைத்த
முன்வீட்டு மூத்தம்மா என்னும் முதியவள்பால்
அப்போது தங்கத்தின் அத்தானும் மாமனும்
எப்போதும் போல இருந்தார்கள் திண்ணையிலே
ஆளவந்தார்க் காளாய் அமைந்திட்ட காவலர்கள்
வாள்இடுப்பில் கட்டி வலக்கையில் செப்பேட்டை
ஏந்தி இவர்கள் எதிரினிலே வந்துநின்று
சூழ்ந்துள்ள மக்களுக்குச் செல்வார் பெருங்குரலில்
பெண்டாட்டி என்ற பெயரடைந்த நாள்முதலே
ஒண்டொடிக்கும் சொத்தில் ஒருபாதி உண்டுரிமை!
தன்மனைவி செத்தால்தான் வேறுமணம் தான்செயலாம்
இன்னல் மனைவிக் கிழைத்தால் கொலைக்குற்றம்
ஆளவந்தார் ஆணை இதுவென்றே அறிவித்து
வாளுருவிக் காட்டி வழிநடந்து சென்றார்கள்!

ஃ ஃ ஃ

மங்கை அதுகேட்டாள் மணவாளனுங் கேட்டான்
அங்கிருந்த மாமனும் கேட்டான் அவன்சென்று
தன்மனைவி காதல் தனியாக நின்றுரைத்தான்
முன்னிகழ்ந்த துன்ப வரலாறு முற்றிற்றே!

ஃ ஃ ஃ

பின்பொருநாள் வீட்டுப் பெருங்கணக்கு மாறுபட
என்னவகை கண்டறிவ தென்றறியா மாமன்தான்
தன்மகனைக் கேட்டும் சரிசெய்யத் தோன்றாமல்
அன்பு மருமகளை அண்டி "ஒரு விண்ணப்பம்
என்றான் மருமகளும் என்னவென்றாள "இக்கணக்கில்
நின்ற பிழைதன்னை நேராக்க வேண்டுமென்றான்.
இன்னும் அரைமணிக்குப் பின்னால் நினைப்பூட்டிச்
சொன்னால் சரிபார்க்கத் தோதுபடும் என்றுரைத்தாள்.

ஃ ஃ ஃ

அப்போது மங்கையின் அன்னையும் தந்தையும்
எப்போதும் போல்பார்க்க எண்ணியங்கு வந்தார்கள்

ஃ ஃ ஃ

வீட்டுத் தனியறையில் மெல்லிஇருந் தாள்தலையை
நீட்டாமலே வெளியில் நின்றிருந்தார் மாமனார்
அத்தான் அலுவ லகத்தினின்று வீடுவந்து
முத்து நகைக்காரி முகம்பார்க்க எண்ணி
மனையின் அறைக்குள் "வரலாமா" என்று
தனிவிர லால்கதவைத் தட்டி வெளிநின்றான்.
காத்திருக்கச் சொன்னாள் கனிமொழியாள் தான்கணக்குப்
பார்த்தபின் பெற்றோரைப் பார்த்துப் பலபேசி
மாமன் கணக்கை வகைசெய்து காட்டியபின்
நாமலர்ந்தாள் நல்லத்தா னோடு.

## திராவிட நாட்டுத் தொண்டால் வரும் இன்பம்

அவன் :

பிறர் நலம் கண்டுநாம் பொறாமை கொள்கிலோம்;
நிலைபொருள் பெறினும் குறைபாடு கருதும்
அவாவை உடையோம் அல்லோம், வெகுளியால்
எவர்க்கும் தீமை இயற்றுவோம் இல்லை
இன்னாத கூறலும் இல்லை! நம் நா
டிந்நாள் இச்கொடி வரைக்கும் நல்லறம்
வழுவாது வாழ்க்கை நடத்துதல் எண்ணிநான்
மகிழும்இவ் வேளையில், வண்டின் இசையும்
புகுகுளிர் தென்றலும் பூக்களின் மணமும்
அம்ம கிழ்ச்சியைப் பெருக்கின அன்றியும்,
முத்துப்பல் சிரித்தால் முகமெலாம் சிரிக்கும்உன்
அத்து மீறிய அழகும் இளமையும்
பழயபடி பழய படிஇழுத் தென்னை
நிழலுறு காவிரி நீர்த்துறை போன்றதோர்
இன்பத்தில் ஆழ்த்தின அன்பின் பொய்கையே.

திடலவள் :

பிரியினும் உம்திரு வுருவம்என் நெஞ்சில்
பிரிய வில்லை எனினும் அருகில்
நீவிர் இருந்தால் தான்என் ஆவி
இருப்ப தாகும் அருகில் இருக்கவும்
தழுவிடில் என்னுயிர் தளிர்ப்ப தாகும்நான்
தழுவ நீவிர் தமிழ்பேசி யணைப்பின்
சொல்லொணா இன்பம் தூய மணாளரே!

அவள் ;

இதனைப் போன்ற இன்பம்இவ் வுலகில்
வேறெதனாலும் விளையக் கூடுமோ?
அதனை அறிய ஆவல் உற்றேன்.

அவன் ;

முத்துக் கடல்முரசு முப்புறம் முழங்க
வடக்கின் வங்கத் திடதுகால் ஊன்றி
வானவில் ஒத்த வாளா யுதத்தை
இமயம் நோக்கி எடுத்த திருக்கோலப்
பெருநாட் டைநமைப் பெற்றபொன் னாட்டைத்
திராவிட நாட்டைச் சிலர்எதிர்க் கின்றனர்.
அச்சிலர் அந்நாள் பிச்சைஎன்று வந்தவர்,
திராவிடர்க்குச் சேயிழை கூட்டிக் கொடுத்தல்
செய்து வந்தவர் இந்நாள் அவர்கள்
நையும் சூழ்ச்சி நாடாளலாயினர்
திராவிடர் ஒன்று சேரா வண்ணம்
கலாம்விளைக் கின்றனர்? நிலாமுகப் பெண்ணே!
இன்று நாம் நாட்டுக் கிழைக்கும் ஒவ்வொரு
சிறிய தொண்டும் பெருநலம் செய்யும்,
இழைக்கும் தொண்டெலாம் இன்பம் செய்யும்.

மானம் பாழ்பட வாழ்வதைப் பார்க்கிலும்
ஊனுடல் ஒழிவதே உயர்வை நல்கும்,
தூங்கும் திராவிடத் தோழன்இல் சென்று
தீங்குறு திராவிட நிலைமை செப்பி
அன்னோன் அயர்வைச் சிறிதே அகற்றுவோன்
நெஞ்சினில் தோன்றும் இன்பம் கொஞ்சமன்று.
திராவிடர் மொழிக்கும் திராவிடர் கலைக்கும்
திராவிட நாகரிகத்தின் சீர்க்கும்
மதம்சாதி என்னும் மடமைக் கப்பால்
தூய நெஞ்சமும் தூய கொள்கையும்
மேற்கொண்டு வாழும்நம் மேன்மை தனக்கும்
இடையூ றுக்கும் கடையரை எதிர்த்துப்
போராடு கின்ற போது பொரிபடும்
வாளிடைத் திராவிடன் தோள் கிடந்தே
அசையும் ஒவ்வோர் அசைவிலும் அன்னோன்
கசிதேன் பெண்இதழ் காட்டும் அதனினும்
பேரின் பத்தை அடைவான்
ஆரிதை மறுப்பார் அன்பு மங்கையே?

## மூட நம்பிக்கை

காக்கைசொல் நம்பிக் காசைமட்டும் போக்கடிக்காதே!

காக்கை இறைப்பில் கத்திக் கிடந்தது
வீட்டுக் காரன் கேட்டு வருந்தினான்
பறந்தது காக்கை சிறிதுநே ரத்தில்
மறந்த நண்பன் வந்தான் விருந்தாய்!

மற்றும் ஒருநாள் வந்து காக்கை
கத்திக் கிடந்தது—கடிதில் ஒருவன்
விருந்தாய் வந்தான் வீட்டுக் காரன்
தெரிந்து கொண்டான் காக்கையின் திறமையை

ஒருநாள் விருந்தினர் ஒன்பது பேர்கள்
வரலா னார்கள் வருவதன் முன்பு
காக்கை எதுவும் கத்தவே யில்லை.
காக்கை மறந்ததாய்க் கருதினான் வீட்டினன்!

ஒருநாள் காக்கை ஓயாது கத்தவே
வரும்விருந் தென்று வழிபார்த் திருந்தான்

அஞ்சு மணிவரை ஆருமே வருகிலர்
அஞ்சல் வந்த தயலூரி னின்றும்
ஒருவன் வருவதும் ஓலை வருவதும்
சரிநிகர் என்று தான்நினைத் திருந்தான்!
நாளை வருவதாய் நண்பன் ஒருவன்
ஆள்ஒரு வனிடம் அஞ்சல் அனுப்பினான்.
மறுநாள் காக்கையும் வாய்ப்பறை அறைய
அறிவித் தபடி அவனும் வந்தான்.
மாரி யம்மன் தேருக்கு நண்பன்
காரூரி னின்று கடிது வருவான்
என்று நினைந்துகொண் டிருந்தான் வீட்டினன்.
அன்று காக்கையின் அறிக்கை தன்னை
நோக்கி யிருந்தான் காக்கையும் வநதது,
காக்கா காக்கா என்றுகத் தியது.
மனைவியை அழைத்து வருபவ னுக்குத்
தனியே ஒருபடி சமைஎனச் சொன்னான்.
காக்கை மேலும் கத்தியே கிடந்தது
நோக்கி யேதுப் பாக்கியோ டொருவன்
அண்டைவீட் டின்மேல் அமைவாய் வந்து
குண்டு பாய்ச்சிக் கொன்றான் காக்கையை!
கரிய காக்கை கழறிய வண்ணம்
மனையாள் சமைத்தாள்—வந்தவன் உண்டான்,

வீட்டுக் காரனே விளம்புவேன் கேட்பாய்!
மோட்டுக் காக்கை முழங்குவ துண்டு,
மக்கள் விருந்தாய் வருவ துண்டு
மும்முறை அன்று முந்நூறு தரம்!
இம்முறை சரியாய் இயலுவ துண்டு.
காக்கைசொல் நம்பிக் காசை மட்டும்
போக்கடிக்காதே புகல்வேன் இன்னும்
தன்பின் தொடரும் சாவை அறியாக்
கன்னங் கரிய காக்கையா அறியும்
இல்லிடை விருந்து வருவதை?
நல்லதா மூட நம்பிக் கையதே?

## அமைதி யுலகம்

உறங்கிட இடமும் தந்தோம்
உணவிட்டோம் உடைய ளித்தோம்
திறமிகு பணிப்பெண் ணேநீ
செய்திடும் வீட்டு வேலை
அரைகுறை யாவ தல்லால்
அழகில்லை திருத்த மில்லை
பொறுப்பில்லை என்று சொன்னாள்
பொறுப்புள்ள வீட்டுக் காரி!

நானென்ன செக்கு மாடா?
நாள்தோறும் வேளை தோறும்
ஊனெல்லாம் சோர்ந்து போத
உழைப்பதால் குறைகள் சொல்ல
லானதென் றுரைத்தாள் வேலைக்
கமர்ந்தவள். வீட்டுக் காரி
யானும்அவ் வாறே நாளும்
உழைத்திட விலையோ என்றாள்.

தீயினை முகத்திற் கொட்டிச்
சென்றனள் வேலைக் காரி.
ஆயஇச் செய்தி தன்னை
அணங்குதன் மணவா ளன்பால்
போயுரைத் திட்டாள், "பெண்ணே
புதல்வர்க்கும் கண வனுக்கும்
நீயுழைக் கின்றாய் அன்னாள்
நிறைகூலிக் கேயு ழைத்தாள்!

ஒருத்திக்கும் ஒருவனுக்கும்
வாழ்க்கையின் உடன்பா டென்னும்
திருமணம் ஒழிய வேண்டும்.
தெரிந்தவர் கூடி அன்பு
புரிவதால் தோன்றும் மக்கள்
பொதுமக்கள் ஆதல் வேண்டும்.
அருந்துதல் உறைதல் எல்லாம்
பொதுவென அமைதல் வேண்டும்.

கட்டாய வேலை வேண்டும்
மட்டான அறிவு கொண்ட
வையகம் நான்கு றித்த
தெட்டிலா அமைதி நோக்கிச்
செல்வதே! சென்ற பின்னர்
தட்டில்லை எவ்வே லைக்கும்
தடையொன்றும இருக்கா தென்றான்.

## மதம் எதற்கு?

எடுப்பு

இராமல் ஒழிக மதப்பேய் என்றார்
இராமலிங்க அடிகள் (இராமல்)

உடனெடுப்பு

வராத தென்ன இம்மதி அவரை
மதிக்கும் அடியார்க்கே (இராமல்)

அடி

ஒரே ஒருகடவுள் எவர்க்கும் என்றால்
உலக மதங்கள் ஏனோ
இரவு பகலாக மதமே பேசுவோன்
அதன்படி நடப் பானோ!
பெரியதோர் அன்பும் வாய்மையும் உடையோர்
பேரின்பம் எய்துதல் திண்ணம், (இராமல்)

## சாதிகள் இல்லை

மக்கள் நிகர் என்று மாநிலம் அதிர
எக்காளம் ஊதடா மறவா—நீ
எக்காளம் ஊதடா ஊது!
பொய்க்கூற்று வஞ்சகம் ஏமாற்று யாவும்
புதைந்தன யார்க்கும் எதிலும் ஒரே நிலை (மக்கள் நிகர்)

கைக்குள் ஆட்சி வந்ததாய் எண்ணிய
கானாறு சாதியாய் கீழ்நோக்கி ஓடினும்
மக்கட் பெருங்கடல் தனில் அது வீழும்
வாய்மைக் கழிவில்லை சாதிகள் இல்லை! (மக்கள் நிகர்)

## அரசியல் வகையின் அயல்மொழிப் பெயர்கள்

சோசலிசம்

இரண்டு கறவைகள் உன்னிடம் இருந்தால்
அண்டைவீட்டானுக்கொன் றளித்தல் சோசலிசம்!

காப்டலிசம்

கறவைகள் இரண்டில் கடிதொன்றை விற்றுக்
காளை வாங்குவது 'காப்ட லிசமா'ம்!

கம்யூனிசம்

ஆவிரண் டனையும் ஆள்வோர்க்கு விற்றுத்
தேவைக்குப் பால்பெறச் செப்பல் 'கம்யூனிசம்'!

பாசிசம்

பகரிரு கறவையைப் பறித்தஆள் வோரிடம்
தொகைதந்து பால்பெறச் சொல்வது 'பாசிசம்'!

நாசிசம்

உரியவன் தன்னை ஒழித்தே
கறவை இரண்டையும் கைப்பற்றல் 'நாசிசம்'

நியூடிலிசம்

இரண்டு கறவையால் திரண்டபால் அனைத்தையும்
சாக்கடைக் காக்குவது தான் 'நியூ டி லிசம்'
எதனை இவற்றில் ஏற்பாய்?
அதனைஉன் நாட்டுக் காக்குக தோழனே!

## மக்கட் பிறப்பு

பிறவியில் என்னென்ன புதுமை—மக்கட்
பிறவியில் என்னென்ன புதுமை?
நறுமலர் சூடிய மங்கைஒ ருத்தியும்
நானிலம் மெச்சிடும் செம்மல்ஒ ருந்தனும்
சிறிதன்பு செய்குவர் சேயிழை ஈவாள்
சிப்பிமுத்துக் கிணை பச்சைக் குழந்தையை (பிறவி...)

பால்குடிக்கும் சிரிக்கும் சிறு கால்கைகள்
பார்த்திட ஆட்டும் தலைநிலை நின்றிட
எலும்பின் னேதவ ழும்பிற குட்கார்ந்து
எழுந்து நடக்கும் குழந்தைப் பருவத்தில் (பிறவி...)

அஞ்சொல் பயின்றுநற் பாவை விரும்பிஆண்
டைந்தாகப் பள்ளிக் கலைந்துகலை கற்று
மிஞ்சுபத் தாறினில் மெல்லியைக் கூடிப்பின்
மெய்தளர் வாரிந்த வையக மீதினில். (பிறவி...)

## நாத்திகன்

பன்றியை வெட்டிப் படைத்தாயே—கடைப்
படைச்சா ராயங்கொ டுத்தாயே!
தின்றுகு டித்துந லம்செய்யு மாவென்று
தெய்வத்தின் மேன்மைகெ டுத்தாயே!

மின்திகழ் கோழிய றுத்தாயே—கரு
மேதியின் வாழ்க்கைஓ றுத்தாயே!
கொன்றால் நலஞ்செய்யு மெனஎண்ணியே தெய்வக்
கொள்கையை முற்றும்வெ றுத்தாயே!

பெண்டாளக் கேட்டது தெய்வமென்றும்—தன்
பெண்டினைத் தந்தனன் மன்னனென்றும்
கண்டார் நகைக்கப்பு ராணங்கள் போற்றிக்
கசப்பாக்கி னாய்கட வுட்சிறப்பை!

அண்டும் குடல்தன்னைக் கவ்வவைத்தாய்—அதற்
கங்கா ளம்மைப்பட்டம் ஒவ்வவைத்தாய்!
தொண்டிது தெய்வத்துக்கென்றெண்ணியே—அதன்
தூய்மையும் வாய்மையும் நீவுவித்தாய்!

குழந்தையைக் கேட்டது தெய்வமென்றாய்—அதைக்
கொன்று சமைத்திட்ட தாய்ப்பு கன்றாய்
தழைந்த அருட்பெறும் தந்தையை இவ்வணம்
தாழ்வுப டுத்திம கிழ்ந்து நின்றாய்!

எவ்வுயிரும் கடவுட் கோயி லெனும்
எண்ணத்தை நீஒப்பு வாயாகில்—ஓடிக்
கவ்வவரும் வெறி நாய்போலே சாதிக்
கட்டுக்கள் ஏன்வரும் உன்வாயில்?

அவ்வவர் எண்ணுக அன்பேசிவம்—எனில்
அன்புக்குப் பெண்டாட்டி பிள்ளைமனம்
ஒவ்வாத செய்கைகள் உண்டாக்கி யேதெய்வ
உண்மை மறுப்பது வாஉன்தவம்?

கொழுந்தனை யாளிடம் தூதாக—உருக்
கொள்ளாப் பெரும்பொருள் சென்றதெனில்
ஓழிந்ததன் றோஉன்றன் உள்ளத்தி லேபொருள்
உண்டெனும் கொள்கைசொல் வாயாக!

## குரங்காட்டி

சடுகுடு சடுகுடு சடுகுடு சடுகுடு
எசமான் கொஞ்சம் இங்கே பாருங்க,
கடிக்கா துங்க காட்டுக் கொருங்கு
படிக்கத் தெரிஞ்சும் பயந்த கொருங்கு
நல்லநல்ல நாடகம் எசமான்
நாலணா குடுங்க நடத்றேன் எசமான்
(வீட்டுக்காரர் நாலணா கொடுக்கிறார்)

சடுகுடு சடுகுடு சடுகுடு சடுகுடு
மொட்டே கொருங்கு கிட்டே எழுந்துவா

வெள்ளக் காரனே மெதுவா புடிச்சி
கொள்ளே அடிக்கிற கோலே வாங்கி
வடக்கத்தி ஆளுவ வந்து கூடி
ஒங்க ஊறே உறிஞ்ச வந்தா
எப்படி சலாம்நீ இடுவே அவங்கி
(குரங்கு சலாம் போடுகிறது)

ஓகோ பலே பா ஓகோ பலே பா
சடுகுடு சடுகுடு சடுகுடு சடுகுடு
வடக்கத்தி ஆளு வாங்கன ஊட்டே
ஓடனே ஒழிச்சி குடுக்கச் சொன்னதும்
சர்க்கார் சட்டம் தலைகவுந் தாப்லே
கரணம் போடு கழுதே கொருங்கு
(கரணம் அடிக்கிறது)

சடுகுடு பலே பா சடுகுடு பலே பா
கண்ணான எனத்தே காட்டிக் குடுத்து
ஜல்தி வடக்கன் பக்கம்
பல்டி அடிநீ
(பல்டி அடிக்கிறது)

## நல்ல மாமி

மகனுக்கு வாய்ந்த மணியே, மயிலே
ஆகமொத்த அன்பின் அழகு மருமகளே
உன் அத்தான் உன்னை விரும்பத்தான் நாளும்
பொன்னைத்தான் ஆடையைத்தான் பூணத்தான் வேண்டுமெனில்
வீட்டிற்றான் மெல்லிநீ மாமனைத்தான் மாமியைத்தான்
கேட்டுத்தான் செய்வதென எண்ணாதே, கிட்டத்தான்
பெட்டியெண்டு நீதிறந்து பெண்ணே எடுத்துக்கொள்
அட்டியுண்டோ? இல்லை! அனைத்தும் உனதுடைமை
நீயும்என் மைந்தனும் நெஞ்சால் உயிரால்ஒன்
றாயினீர் ஆதலால் அன்னோன் விருப்பம்
உனக்குத் தெரியும் உடனே முடிப்பாய்
எனக்கிட்ட வேலையைநான் இன்பமெனச் செய்திடுவேன்
வானூர்தி உழைப்போ. அரசின் அலுவலோ,

வாணிகமோ, நல்ல மருத்துவமோ ஓவியமோ
மாணவர்க்குக் கண்ணளிக்கும் மாண்பு வினையோ
வேண்டுமெனில் வீட்டுச் சமையலுக்கு நானுள்ளேன்
ஈண்டுச் சமையல் இலக்கியம்உண் டாக்க"
விரும்புவை யாயின் அதுசெய்க; வெல்லக்
கரும்பேஉன் அத்தா னிடத்தில் கடுகளவு
தீய நடத்தை தெரிந்தால் திருந்தச்செய்
தூயவன்நீ நானுனக்குச் சொல்லல் மிகையாம்!
எனக்குமுன் மாமனுக்கும் என்னஇனி வேண்டும்?

உனக்குமுன் அத்தான் தனக்கும் உள்காதல்
ஆர்ப்பதும் இன்பத்தில் ஆடுவதும் பாடுவதும்
பார்ப்பதெம் வாழ்வின் பயன்!

## பாரதிதாசன் நல்வழி

மனுமுதலோர் முன்னாள் வகுத்ததற மென்னில்
இனியதை மாற்றலும் அஃதே—மனுதான்
பிறப்பினிலே தாழ்வுயர்வு பேசலற மாஅஃ
தறுப்ப தறமா அறை!

அறை : கூறு.

ஒன்றுக்கு வாங்கியதை ஒன்பதுக்கு விற்பவன்
நன்றதனைச் செய்தான்சீர் நாடானேல்—இன்றே
இமைதிறக்க ஒண்ணா திடுக்கணுறும் மக்கள்
அமைதி அடைதலெவ் வாறு.

நன்றதனைச் செய்தான் : தொழிலாளி

கற்கண்டு பொன்னாக்கும் நல்லுழைப்புக் காரர்நலம்
கற்கண்டு போற்சுவைக்கக் கற்றவர் கற்றிலரே
பாடுதான் செல்வம் பணமோ அதுகுறிக்கும்
ஏடுதான் என்னும் இது.

கற்கண்டு பொன்னாக்குதல்: கல்லைத் தேர்ந்
தெடுத்து அதை உருக்கிப் பொன்னாக்கல்.

மணந்தான் இறந்தானேல் மற்றொரு சேய்க்கே
இணங்கும்பெண் எண்ணம் மறுக்கும்—பிணங்காள்
நல்லறிஞர் மாமறவர் நல்குதலும் கூடுமவள்
வல்லகரு மாய்த்தலோ மாண்பு?

ஒருவன் ஒருத்தியுளம் ஒத்தல் மணமாம்
இருவரை முன்னின் றிணைத்தல்—மணமென்று
கொட்டு முழங்குவது கோடேறி ஓர்முதியோன்
எட்டுகனி என்னப் படும்.

கோடேறி; கிளையில் ஏறி
எட்டுகனி: எட்டுகின்ற கனி

சங்கிலியை ஓர்பறையன் தன்பறையை வேளாளன்
தக்கவே ளாளனையே சார்பார்ப்பான்—மிக்கஇழி
வாய்நடத்தல் போகாதேல் தாய்நாட்டின் ஆட்சியைஓர்
நாய்நடத்த நாடல்வியப் பன்று.

போகாதேல்: போகாவிட்டால்

மாதிடத்தில் அன்புபெற மாட்டான் மகள்தேடிச்
சோதிடத்தில் காட்டென்பான் தூய்மையிலான்—
சோதிடமாம்

பேரும் தமிழன்று பேறும் முயற்கொம்பே
ஆரும் அறிவிழக்கா தீர்.
மாதிடத்தில் பெண்ணிடம்

பேறு ; பயன்.

## கடவுளைக் கண்டீர்

*தாய்—*

பாம்பு கடித்ததம்மா பச்சைக் குழந்தையினை
மாம்பூ மலையில் மருந்திருக்கும் என்கின்றார்
நீதான் மருத்துவச்சி நீயதனை நன்கறிவாய்
தீது வருமுன்னே தேடிவந்து தந்திடுவாய்.

*மருத்துவிச்சி—*

சிட்டாய்ப் பறந்திடுவேன் சேயிழையே அஞ்சாதே
கட்டாயம் பிள்ளையினைக் காத்திடுவேன் அஞ்சாதே
கூடக் கணவனையும் கூட்டிநான் போய்வருவேன்
காடு செடிதாண்டிக் கடிதுநான் போய்வருவேன்
(போதல்)

*மருத்துவன்—*

எங்கேநீ சென்றிருந்தாய் என்னருமைக் கண்ணாட்டி?
தங்கமே நீபிரிந்தால் தாங்கிடுமோ என்னுள்ளம்?

*மருத்துவிச்சி—*

தெற்குத் தெருவினிலே செங்கேணி ஆச்சிபிள்ளை
பற்கிட்டித் தொல்லைப் படுகின்ற நேரமிது!
பாம்பு கடித்ததத்தான் பச்சிலைக்குப் போவோமே
மாம்பூ மலைநோக்கி வாராய் விரைவாக
(போகிறார்கள்)

வெய்யில் நடப்பாரை வேகடிக்கும் நேரமடி
ஐயோ நடுவழியில் அல்லல் மிகுந்ததடி

*மருத்துவிச்சி—*

அல்லல் மிகுந்தாலும் அத்தானே ஆச்சிபெற்ற
செல்வனை நாம் காப்பாற்றச் செல்வோம் விரைவாக
செங்காடு தாண்டிச் செங்காட்டை நாமடைந்தோம்
வெங்காயக் காட்டை விலக்கி அதோதெரியும்
மாம்பூ மலையில் மருந்தெடுக்க மாட்டோமோ?
பாம்புக் கடிவிலக்கும் பச்சிலையைத் தேடோமோ?
[போகிறார்கள்]

மருத்துவிச்சி—

அத்தான்என் காலிலே ஆணிமுள் தைத்ததுவே
தைத்த இடத்தினின்று செங்குருதி சாய்ந்திடுதே

மருத்துவன் —

கண்ணே மணியேஎன் கட்டிக் கரும்பனையாய்
வண்ணாத்திப் பூச்சி இறக்கைபோல் வாய்த்தஉன்
மெல்லடியின் உட்புறத்தில் வேல்பாய்ந்தால் என்னாகும் ?
சொல்லடி நீ மேல்நடக்கத் தோதுபடு மோஎன்ன?

மருத்துவிச்சி—

ஆணிமுள்ளை வாங்கிவிட்டேன் அத்தானே புண்வாயைப்]
பேணத் துணிகிழித்துக் கட்டிவிட்டேன் பேச்சென்ன?
இன்னும் விரைவாய் நடப்போம் இளையானைத்
தின்னுமந்த நஞ்சுதனைத் தின்ன இலைபறிப்போம்
[போகிறார்கள்]

மருத்துவன் —

புள்ளிச் சிறுத்தைஒன்று போர்முரசு கொட்டியது
அள்ளிச் சொரிந்ததுவே நம்மேல் அனல்விழியை

மருத்துவிச்சி—

அத்தானே அத்தானே என்அண்டை வந்திடுவாய்
செத்தாலும் சாகின்றேன் நீ எதிரே செல்லாதே
பாயும் சிறுத்தைமேல் பாச்சிடுவேன் என்கத்தி!
நாயின் விலாவின் நடுப்புயும் என்கத்தி!

மருத்துவன்—

சாக்காட்டுக் கஞ்சும் சழக்கன் நான் இல்லையடி
நோக்காட்டுக் காலோடு நூலிழையே செல்லாதே
வெள்ளரிக்காய் என்கத்தி வீச்சுக்கு நிற்குமா?
தள்ளடிநீ அச்சத்தைத் தங்கடிநீ இவ்விடத்தில்!

மருத்துவிச்சி—

கத்தியினை மேலெடுத்துக் காட்டினையோ இல்லையோ
பத்தரிசிக் கோடுகின்ற பார்ப்பான்போல் ஓடிற்று!
வந்த சிறுத்தையது வாலடங்க ஓடியது.
முந்தநாம் சென்று முடிப்போம் நமதுபணி.
[போதல்]

மருத்துவன்—

செங்குத்தாய் நிற்குமலை! தேனேநீ பார்த்தேறாய்
அங்குள்ள பள்ளத்தை ஆயிழையே பார்த்துநட!
[ஏறிப் போகிறார்கள்]

மருத்துவிச்சி—

அத்தானே நாம்தேடும் அம்மருந்தைக் காணோமே.
எத்தொல்லை பட்டேனும் இங்கதனைத் தேடுவமே!
[தேடுகிறார்கள்]

மருத்துவன்—

பாராய் இளமானே பச்சைப் பசேலென்று
நேரே இலைகள் நெருங்கப் படர்ந்தகொடி
எட்டா உயரத்தில் உள்ளதடி என்மயிலே
நெட்ட நெடும்பாறை நீளுச்சி மேலேறிக்
கையால் பறிக்கையிலே கால்தவறி விட்டாலோ
பொய்யாகிப் போகுமடி வாழ்வு புதுநிலவே!

மருத்துவிச்சி—

நானேறு கின்றேன் நவின்றி நீயிருப்பாய்
ஊனெடுத்தோம் என்ன பயன் ஊருக் குழைப்போமே!

மருத்துவன்—

கட்டாணி முத்தேஎன் காதலியே நீபொறுப்பாய்
எட்டா இலைதன்னை எட்டிப் பறித்திடுவேன்
[ஏறுகிறான், பறிக்கிறான்]

மருத்துவிச்சி—

பாறை வழுக்கிடுதே பாவையே என்செய்வேன்
வாராத சாக்காடு வந்ததடி வந்ததடி

[விழுகிறான், மனைவி முதுகால் தாங்குகிறாள். இருவரும் தரையில் வீழ்ந்து அடிபட்டுக் கிடக்கிறார்கள்—எழுகிறார்கள்]

மெல்ல நடப்போம்நாம் வேளையுடன் வீடுசெல்வோம்
சொல்லிய வண்ணம் சுருக்காக நாம்செல்வோம்
பாம்பால் கடிபட்ட பச்சைக் குழந்தைக்கு
நாம்போய் உயிர்மீட்போம் நல்லத்தான் வாராயே?
[போகிறார்கள்]

தாய்—

வந்தீரோ ஐயோ இலைகொண்டு வந்தீரோ?
தந்தால்என் பிள்ளைத் தலையேறும் நஞ்சுதனை
நீக்கலாம் இல்லைஎனில் நீங்குமே பிள்ளையுயிர்
வாய்க்குள் இலைச்சாற்றை வார்க்கவோ
சொல்லுகின்றீர் ?
[இலைச்சாற்றைப் பிள்ளைக்கு வார்க்கிறாள்]

மருத்துவிச்சி—

பிள்ளை விழித்ததுவே பெற்றவளே பார்த்தாயா
துள்ளி எழுந்ததுவே தூயவளே உன்பிள்ளை!

[சூழ்ந்திருந்தவர்களில் ஒருத்தி—

என்ன புதுமை இறந்தோன் உயிர்பெற்றான்
சின்னஞ்சிறியோன் திடுக்கென் றெழுந்தானே!

மற்றொருவன்—

செத்தார் பிழைக்கவைக்கும் சின்ன இலை கொண்டுவந்த
இத்தூய் மருத்துவருக் கென்கொடுத்தா லுந்தகுமே!

தாடி நிறைந்த தள்ளாதவர்—

அன்புடையீர் என்றன் அருமை மருத்துவரே
என்பேரன் உம்மால் பிறந்தான் இறந்தபின்பு;
பாடெல்லாம் பட்டீர் பகலெல்லாம் வெய்யிலிலே!
காடெல்லாம் சுற்றிக் களைப்பில் மலையேறி
வீழ்ந்துபுண் பட்டு விரைவில் குழந்தைநிலை
ஆழ்ந்து நினைத்தேபின் அல்லலொடும் இங்குவந்தீர்
காத்தீர் உமக்கென்ன கைம்மாறு வேண்டுமதை
ஆத்தாநீ சொல்வாய்என் அன்பனே நீசொல்வாய்

மருத்துவன்—

அப்பரே நீர்ஓர் அறிஞரென எண்ணுகின்றேன்
ஒப்பார் இலாத உயர்புலவர் நீர்போலும்!
உம்மைநான் கேட்பதெலாம் ஒன்றுதான் என்னவெனில்
கைம்மேற் கனிபோல் கடவுளைநீர் காட்டிடுவீர்!

உம்போன்றார் இந்த உலகில் கடவுளை
எம்போன்றார் காண எதிரினிலே காட்டினராம்.
நானும்என் காதலியாம் நங்கையும் காணும்வகை
ஆனது செய்தால் அதுபோதும் போதும்!

தாடி—

கடவுளைநான் உங்கட்குக் காட்டல் எளிதே
நடையுலகில் நீங்களது நம்பல் எளிதாகும்.
கோயிலி னுள்ளே குருக்கள்மார் காட்டுகின்ற
தூய உருவங்கள் கல்தச்சர் தோற்றுவித்தார்
கண்டீர் அவைகள் கடவுள்கள் அல்லஅல்ல.
குண்டான் பெருவயிறு கொண்டிருக்கும் ஓர் உருவம்
ஆறுமுகம் ஐந்துமுகம் நாலுமுகம் ஆகுமென்று
கூறுமுகம் யாவும் கடவுளெனக் கூறாதீர்!

இந்துமதம் சொல்லுகின்ற யாதும் கடவுளல்ல
பிந்திவந்த ஏசுமதப் பேறும் கடவுளல்ல
ஓதுநபி காட்டும் ஒலியும் கடவுளல்ல

எவ்வுருவும் எப்பெயரும் இல்லை கடவுளுக்கே.
அவ்வியமோ பற்றோ கடவுள் அடைவதில்லை
ஊருக் குழைக்கும் உணர்வே கடவுள் ஆம்,
ஊருக் குழைக்கும் உணர்வைஉம் முட்கண்டீர்
கண்டீர்நீர் அந்தக் கடவுளையே மெய்யாகக்
கண்ட கடவுள் தான் காட்டியதோர் இன்பத்தைப்
பெற்றீர் அதைவிளக்கிப் பேசுகின்றேன் கேட்டிடுவீர்!
தொல்லைஎலாம் ஏற்றீர்கள், தூயதாம் பச்சிலையால்
அல்லல் அடைந்த அயலாரின் பிள்ளையின்
ஆருயிர் காத்தீர் அகமார இன்புற்றீர்
உம்மைநான் வாழ்த்துகின்றேன் நெஞ்சார ஒப்பிலா
அம்மையே அப்பா இனிது.

## தச்சுக்காரனும் பிச்சைக்காரனும்!

அரிஅரி அரிஅரி அரிசி போடுங்க
அரிசி போடுங்க அம்மா அம்மா
என்று சொல்லி என்வீ டேறினான்
தின்று கொழுத்தஓர் திருநாமக் காரன்!

வீட்டுக் குறட்டில் வேலைசெய் திருந்த
தச்சன் அவனைத் தடுத்து நிறுத்திப்
போடுவா ரில்லை போஎன் றுரைத்தான்.

கொஞ்சம் போட்டால் குறைந்தா போகும்
என்றான் பிச்சைக் காரன்

கொஞ்சம் அளவு குறையு மல்லவா
என்றான் தச்சன்
பிடிக்குப் பிடியளவு புண்ணியம் பெருகும்
என்றான் இரப்பவன்.

ஊருக்குத் தொல்லை உண்டாக்கி உழைக்காது
வயிறு வளர்த்து வருவோய்
உனக்குக் கொடுக்கும் ஒவ்வொரு பிடியும்
நாட்டைப் பின்னே நகர்த்தும் என்று

தச்சன் சாற்றி னான்;
நாமக் காரன் நவிலு கின்றான்

வேதத்தி னின்றும் விரிந்த ஆகம
பாதத்தி னின்றும் பற்பல புராண
நூற்களி னின்றும் நுண்ணிதி காசப்
பாக்களி னின்றும் பகருவேன் காரணம்.

அவைகள் எல்லாம் அறிந்திருக் கின்றேன்
விளங்குமா உனக்கு வெறுந்தச்சுத் தொழில்

செய்பவன் நீஎன்று செப்பிய அளவில்,
தச்சன் சாற்றுவான்.

வேதாக மங்கள்உன் வெள்ளைப் புராணம்
எல்லாம் என்ன பயன்வி ளைத்தன?
தச்சுத் தொழிலினேன் உன்போல்
பிச்சை எடுத்துப் பிழைப்பே னில்லையே!

## கொடிய ஆட்சி

என்ன உரிமைஇது யாருக் குரிமை?
ஏதும் விளங்கவில்லை நாட்டு மக்களே
சின்ன நினைவுகளும் தீய செயலும்
தீர்ந்திடக் கண்டதில்லை நாட்டு மக்களே!

இன்னல் அடைகின்றனர் நாட்டின ரெல்லாம்
இன்பம் அடைகின்றனர் ஓரி னத்தவர்,
என்ன உரிமைஇது யாருக் குரிமை
ஏதும் விளங்கவில்லை நாட்டு மக்களே!

அடிமைப் படுத்திவந்த வெள்ளையர் சட்டம்—இங்
ககன்றிடக் கண்டதில்லை நாட்டு மக்களே
அடிமைப் படுத்திஇந்த நாட்டினரையே—இங்
கழித்திடக் கருதினர் ஓரி னத்தவர்

கொடுமைப் படுத்திவந்த வெள்ளையர் சட்டம்—ஒரு
கோணலில் லாதபடி காப்பது மன்றி
கொடுமை அனைத்தும் "இது கொடுமை என்னும்—
சட்டம்

கொடியர்கள் புதுக்கினர் நாட்டு மக்களே

விடுதலை என்றனர் நாட்டுமக்களே—அந்த
விடுதலை யாருக்கு நாட்டு மக்களே
கெடுதலை உங்கட்கு நாட்டு மக்களே—ஒரு
கீழ்நிலை உங்கட்கு நாட்டு மக்களே!

விடுதலை அடைந்தவர் ஓரினத்தவர்—உம்மை
விழுங்கிடத் தடையில்லை அன்ன வருக்கே?
இடுதலைத் தம்மவருக் கிடுத லின்றி—ஓர்
இம்மி இடுவதுண்டா உங்களுக் கெலாம்?

என்னருந்தி ராவிட நாட்டு மக்களே—இங்
கேழ்மை உமக்குரிமை இன்பம் அவர்க்காம்!
மன்னர் தமைநிகர்த்த அதிகாரம்—மற்றும்
வாழ்வை உயர்த்துகின்ற பேரலுவல்கள்,

இன்ன பிறவுமவர் தமக்குரிமை—இங்
கீடழிந் திடல்மட்டும் உமக்குரிமை!

என்ன உரிமைஇது நாட்டுமக்களே?
இன்பத்தி ராவிட நாட்டு மக்களே!

## இழந்த காந்திக்கு இரங்கல்

காந்தியார் இறந்தார் என்று
கழறினார் கலங்கிற் றுள்ளம்!
ஏய்ந்தஇம் முப்பா னாண்டில்
எழுந்தஅவ் வுணர்வின் ஊற்றால்
மாந்தரின் வறண்ட நெஞ்ச
வாயெல்லாம் விளைச்சல் கண்டோம்!
வீழ்ந்தநாட் டெழுச்சி கண்டோம்!
வையகம் வியக்கக் கண்டோம்.

இறந்தனர் காந்தி யாரென்
றியம்பினார் எரிந்த துள்ளம்!
சிறந்தனர் எவரும் ஏத்தச்
சிறந்தனர் நாம்சி றக்கப்
பிறந்தனர்! வாழார் வாழும்
பெருநெறி காணக் காட்டிப்
பறந்தனர்; இசை முழக்கப்
பறந்தது வானம் பாடி!

உயிர்நீத்தார் காந்தி யார்என்
றுரைத்தனர் துடித்த துள்ளம்!
துயர்நீக்கும் விடுத லைப்போர்
தொடங்கிட வேண்டி நாட்டை
நயமுற அழைத்தார் அன்றே
நாற்பது கோடி மக்கள்
புயலெனக் கிளம்பக் கண்டோம்
தனித்ததோர் புலமை கண்டோம்!

சுடப்பட்டார் காந்தி யார்என்
றுரைத்தனர். துயர்ந்த துள்ளம்!
உடல்உயிர் பொருள் உழைப்பை
நாட்டினுக் களித்தார்; நாட்டின்
கடல்நிகர் அன்பை யேதம்
காணிக்கை யாகப் பெற்றார்
கெடல்உண்டோ அன்னார் கொள்கை?
கிடைத்தது கேட்ட வெற்றி!

மாண்டனர் காந்தி யாரென்
றுரைத்தனர் வருந்திற் றுள்ளம்
ஈண்டெண்ணம் வேறு பட்டே
இன்றுள தலைவர் தாழும்
ஆண்டகை எனும் விளக்கில்

ஏற்றிய அகல் விளக்கே!
ஆண்டாண்டுத் தம்தோ ழர்க்கே
ஆம்புகழ்க் கவர் மகிழ்வார்!

வீடுற்றார் காந்தி யாரென்
றுரைத்தனர் விம்மிற் றுள்ளம்!
நாடுற்ற பழிக்குத் தம்மை
நலிவுக்குள் ளாக்கும் செய்தி
ஏடுற்ற கதையாய்க் கேட்டோம்
இன்னார்பால் எளிதிற் கண்டோம்
ஆடுவார் நெஞ்சந் தோறும்
அவர்பெயர் வாழ்க நன்றே!

## வெளிப்படை விண்ணப்பம்

முதல் அமைச்சர் ஓமந்தூரார்க்கு

நம்பெருமான் காந்தியினைக் கொலை புரிந்த
கோட்சேக்கள் நாடெங்கும் இருக்கின் றார்கள்!
வம்பகன்ற நம்மருமைத் திராவி டத்தும்
மறைந்தேவாழ் கின்றார்கள் அவர்கள் நோக்கம்
உம்போன்ற திராவிடரின் மேன்மை தன்னை
ஒழிப்பதுதான் விழிப்பாக இருத்தல் வேண்டும்!
எம்பெரிய அண்ணலே அஞ்ச வேண்டாம்.
இருக்கின்றோம் உங்களுடன் பிறந்தோம் நாங்கள்!

ஓமந்தூர்த் திராவிடனா முதல்அமைச்சன்?
ஒழித்துவிட மாட்டோமா எனநினைக்கும்
தீமாந்தர் இருக்கின்றார் இதுஉ மக்குத்
தெரியாதா? தெரிந்திருக்கும் மிகநன் றாக!
யாமுமக்குச் சொல்வதுதான் என்ன வென்றால்
இப்பெரிய திராவிடத்தில் உம்மைக் கொல்லப்
பாழ்மக்கள் கோட்சேக்கள் தூக்கும் கையைப்
பல்கோடித் திராவிடர்கை முறித்துப் போடும்!

தென்னாப்பி ரிக்காவில் அண்ணல் காந்தி
திருத்தொண்டு வெள்ளையர்க்கு வேம்பா யிற்று!
சொன்னாலும் உளம்பதறும் காந்தி தன்னைச்
சுட்டான்ஓர் கோட்சேஅக குண்டு தன்னைத்
தென்னாட்டுத் தமிழச்சி மார்பில் ஏற்றாள்.
செத்தொழிந்தாள்; காந்தியினை உலகுக் கீந்தாள்.
இன்னசெயல் அறிவீரோ? கோட்சே கூட்டம்
இவ்விடத்தில் வாலவிழ்த்தால் வேர றுப்போம்!

எங்கேஎன் றால்நடுங்கும் கோட்சே கூட்டம்
இதுநமக்குத் தெரிந்ததுதான், எனினும் நீங்கள்

உங்களுஞ் செல்வாக்கை இந்த நாட்டின்
உயர்வுக்கும் நன்மைக்கும் செலவ ழிப்பீர்!
அங்கங்கே கோட்சேக்கள்! எதிலும் அன்னார்
அடக்கிடுக அவர்க்குள்ள அதிகா ரத்தைக்!
கொங்குமலர்ச் சோலைசேர் திராவி டத்தில்
கோட்சேக்கள் அதிகாரம் குறைதல் வேண்டும்!

கும்பிட்டான் துப்பாக்கி தனைஎ டுத்தான்
கோட்சேயை அங்கிருந்தோர் மறித்த துண்டா!
எம்மண்ணால் ஓமந்தூர் இராம சாமி,
இதைநினைத்தால் சிரிப்புவரும். அண்ணல் காந்தி
இம்மண்ணில் சாய்ந்ததனை எண்ணும் போதே
இறைந்துடிக்கும் இனத்தாரின் மனம் துடிக்கும்!
நம்பிடுக; வடநாட்டான் தன்மை வேறு:
நாம்அவரின் ஒட்டுறவை அறுத்தல் வேண்டும்.

உயர்நிலைக் காமராசர்க்கு :

பெருநிலையில் இருக்கின்றீர் காம ராசப்
பெருந்தகையீர்! உம்பெருமை அவர்கள் கண்ணில்
கருவேலின் முள்போல உறுத்தும். நீவிர்
கடுகளவும் அஞ்சாதீர் கோட்சே கூட்டம்
திரைமறைவில் நோக்கத்தை வைத்தி ருக்கும்
வெளிப்புறத்தில் செல்வாக்கை வளர்க்கு மிந்த
விரிவுதனை நீர்அறிவீர் அஞ்ச வேண்டாம்
கோட்சேக்கள் செல்வாக்கை வீழ்த்த வேண்டும்.

ஏழைக்கும் செல்வனுக்கும் பன்ம தத்தார்
எல்லார்க்கும் எதிலும்நலம் புரிய எண்ணி
வாழ்ந்ததுவும் குற்றமெனக் காந்தி அண்ணல்
மார்புபிளந் தார்;காம ராச ரே,எம்
தோழரே! திராவிடரே! உமது மேன்மை
தொலைப்பதற்கும் வழிபார்க்கும் கோட்சே கூட்டம்!
ஆழ்ந்திதனை எண்ணிடுக கோட்சே கூட்டத்
ததிகாரம் ஒழியுமட்டும் மீட்சி இல்லை!

## கொன்றவன் பார்ப்பான்

காந்தியைக் கொன்றவன் பார்ப்பான்—எங்கள்
கண்ணை அவித்தவன் பார்ப்பான்.
வாய்ந்துள ஏழைக்கி ரங்கும்—அருள்
வள்ளலைக் கொன்றவன் பார்ப்பான்.
தாழ்ந்தவர் மக்களில் இல்லை—எனில்
யாவர்க்கு மேசரி நிதி
ஈந்திட எண்ணிஉ ழைத்தான்—அந்த
ஏந்தலைக் கொன்றவன் பார்ப்பான்.

"வெள்ளையன் ஆட்சிதொ லைத்தோம்—இனி
வேற்றுமை உற்றுக்கி டந்தால்
எள்ளி நகைபுரி யாரோ?—நமை
இப்பெரும் வையத்தி லுள்ளோர்
கொள்கை திருந்திடு வீரே—உங்கள்
குள்ள நினைப்பினை எல்லாம்
தள்ளுக என்றனன் எங்கள்—அன்பின்
தந்தையைக் கொன்றவன் பார்ப்பான்.

சட்டைகள் ஆகும் மதங்கள்—அந்தச்
சட்டைக்குள் எல்லாரும் மக்கள்
வெட்டி மடிந்திட வேண்டாம்—படு
வீழ்ச்சியைத் தேடிக்கொள் ளாதீர்.
குட்டைக் கருத்துக்கள் ஏனோ—எனக்
கூறிய எம்தலைப் பேற்றைச்
சுட்டுத் தொலைந்தவன் பார்ப்பான்—எங்கள்
தூயனைக் கொன்றவன் பார்பபான்!

## பலி விலக்கு மசோதா சட்டமாக வேண்டும்

உருவிலா ஒன்றுக் குருவ மைத்தது
பெரியதோர் மடமைஅவ் வுருவங் கட்கு
விலங்கு பறவைகள் வெட்டுவ தென்பது
கலப்பட மற்ற கயமை யாகும்.
மடமையை நாட்டில் மலிவு செய்தால்
உடைமையை லேசாய் உறிஞலாம் என்பது
பூசாரி எண்ணமும் ஆசாரி எண்ணமும்!
இந்து வேதம் என்பதி லிருந்தே
இந்தக் கொலைகள் இவ்வாறு பரவின;
யாகப் பேரால் வேக வைத்தே
ஆடு மாடுகளை அவர்கள் உண்பார்!
தெய்வத் திற்குத் தீக்கொலை விலக்கு மோர்
செய்தி அந்தணர்க்குச் சிறிதும் பிடிக்காது.
காந்தி அண்ணலார் "கடவு ளுக்கு
விலங்கு பறவைகள் வெட்டவேண்டாம்" என்று
சொன்னார் அவரைச் சுட்டுக் கொன்றவன்
இன்னான் என்பதை யாரும் அறிவார்.

அறிஞர் ஆதித்தர் அன்பு கூரிந்தே
பலிவிலக்கு மசோதா பகரும் சென்னைச்
சட்ட சபையில் சட்ட மாக்கிட
இட்டார் நாட்டின் எண்ணம் அறிந்தே.
சட்டம் ஆக்குதல் சரியே என்போம்
அந்தச் சட்டம் அந்தணர் யாகச்

செந்தீ உயிர்களைத் தீயவைப் பதையும்
தடுக்க வேண்டும்! தடுக்க வேண்டும்!!

பலியிட் டுயிர்களை நலிவுசெய் யாதீர்!
என்ற கருத்தை இத்தென் னாட்டில்
நாடொறும் நாடொறும் ஏடுகள் விடுத்தும்
வீடுகள் தோறும் விழாக்கள் தோறும்
சிற்றூர் தோறும் செழுநகர் தோறும்
சென்று பரப்பினோன் சீபால்! அடடா
என்னென்ன இன்னல் ஏற்றான். அவற்றை
இன்னல் என்னான் இன்பமென் றெண்ணினான்.
தன்னல மற்ற பெருந்தகைக்கு
நன்றி நவிலுக போல் வாழ்கவே!

## தமிழர் பண்பாடு

வைய கத்திற் சிறந்த பண்பாடு
வாய்ந்த நாடு செந்தமிழ் நாடு (வைய)

உய்யத் தமிழன் பிறன்பொருள் நண்ணிடான்
உயிரைப் புகழுக்கும் பெரிதென எண்ணிடான் (வைய)

தெய்வம் இல்லை மெய்யுணர் வுண்டு!
சிவன்முதல் உருவமெலாம் மெய்யென்று கொண்டு
நையும் மக்களின் நிலையினைக் கண்டு
நாளும் உழைப்பதே தமிழனின் தொண்டு! (வைய)

கற்பு, மாதர்க் குயிரினும் பெரிது,
கன்னி ஒருத்திக் கொருவனே தெய்வம்!
வெற்பு வந்து குறுக்கில மறிக்கினும்
விருந்தோம்பி வாழ்பவள் மேன்மைத் தமிழ்மகள் (வைய)

மக்கட் பிறப்பில் வேற்றுமை பேசும்
மாக்கள் தம்மை வெறுப்பவன் தமிழன்;
கைக்க நெஞ்சு செய்பாவத் திற்குக்
கழுவாய் உண்டெனல் கயமை என்பான் (வைய

அன்றைத் தமிழ்நான் மறைஉயிர் என்பான்
ஆரியர் பொய்ம்மறை ஒப்பான் தமிழன்:
நின்ற ஆடுதேவர்க் குவப் பெனும்
தீய வேள்வியைக் கான்றுமிழ் கின்றவன். (வைய)

தொடர்ந் தெடுத்த பல்படை எடுப்பிலும்
துயரு றாமல் தன்னுயிர்த் தமிழை
அடைந்து காத்தவன், ஆயிரம் படைகள்
அடைந்திட்டாலும் அஞ்சிடான் தமிழன் (வைய)

ஒருகுலத்துக் கொருநீதி சொல்வதும்
ஒருத்தி ஐவரை மணந்துயிர் வாழ்வதும்
பெருகு பொய்ம்மையை மெய்யெனப் பிதற்றலும்
பிறாநூற் கொள்கை; ஒப்பிடான் தமிழன் (வைய)

திருக்குறள் முதலெனக் காட்டிய நன்னெறி
செந்தமிழ் நாட்டான் பெற்ற தன்னெறி
இருப்பின் எல்லாரும் இன்புற் றிருக்க
எண்ணி வாழ்வான் இன்பத் தமிழ்மகன் (வைய)

## என் தாயே...கண்ணி

(பழிப்புறு தமிழனை விழிப்புறச் செய்வது

செந்தமிழா உன் நாட்டின் பேரென்ன செப்பென்றால்
இந்தியா என்றே இனிக்கின்றான் என் தாயே!
பைந்தமிழ் நாட்டினையும் பாரதம்என் றும்சொல்வான்
எந்தவகை இச்சேய் உருப்படுவான் என் தாயே!
தாயைத்தாய் என்றறியாமல் தாய்நாட்டைத் தீய்க்கின்ற
தீயைத்தாய் என்பரன் திருந்தானோ என் தாயே!
தமிழ்மொழிதான் தாய்மொழி என்னும் தமிழன்
தமிழ்நாடு தான் தனது தாய்நாடென் றெண்ணானோ
தமிழ்நாடென் தாய்நாடு தமிழ்மொழி தான் என்றன்
தமிழென் றுணரான் சழக்கனன்றோ என் தாயே!
கலைமுறைகா ணான்நாட்டைக் காட்டிக் கொடுப்பான்
தலைமுறைச்சீர் காணான் தலைவனென்பான் என் தாயே!
தொலையாச் சுரண்டல் தொலையாமல் தொண்டின்
விலைகேட்கும் வீணன் தலைவனா என் தாயே!
செந்தமிழ் நாட்டின் திருவிளக்கை மாய்க்கின்ற
இந்திவரக் கையொப்பம் இட்டான்ஓர் பேதையன்றோ!
நம்தாய் அடிமை வடநாட்டான் நம்ஆண்டான்
இந்தநிலை மாற்றா திருந்தென்ன என் தாயே!

## திருக்குற்றால மலை நீர்வீழ்ச்சி

அழகிய இயங்கிஎம் அனைவர் தம்மையும்
தழல்பெயும் கோடைக் கொடுமை நீக்கச்
சுமந்து விரைந்து பலகல் தொலைவைக்
கடந்ததும் கனலினின்று புனலிற் குதித்த
ஒருநிலை கண்டோம் திருக்குற் றாலம்
இன்னும் அரைக்கல்லே என்றனர்பின்
பசுந்தழை அடர்மரப் பந்தற் கீழ்குளிர்
பிசைந்த வழியேகி நின்ற தியங்கி
இனியாம் நடந்தே எழுதல் வேண்டும்
நானும் நேயரும் சிறிது நடந்ததும்

வான்கீழ் வெளியே அழகால் மறைத்த
திருக்குற் றால மலைநீர் வீழ்ச்சி
இதோபார் என்றனர் எதிர் நின்று நோக்கினேன்
பொன்வெயில் தழுவிய நன்மே னியுடன்
நின்றி ருந்தாள் நெடியோள் ஒருத்தி
அன்னவள் மென்குழல் அணிமலர்ச் சோலையாய்
விண்ணிடை விரைந்து நறுமணம் விரிக்கும்
ஆட வில்லை அசைகிலள் விடாது
பாடிக் கொண்டே இருந்தாள் பண்ணொன்று!

"தமிழ்வாழ்ந் தால் தமிழர் வாழ்வார்.
சாதிநோய் தவிர்க தமிழனே, என்றும்
தமிழ்மீன் டால்தான் தமிழ்நாடு மீளும்"
என்ற முழக்கம் எழுச்சியைச் செய்ததால்
தூய்தமிழ் மக்கள் தொடர்ந்தனர்! சூழ்ந்தனர்!
சுடர்படு முதியோள் தோளி னின்றும்
அடிமிசை வீழ்ந்து புரளும் சலசலப்
பொன்னா டைதனில் ஆடினர்
"அன்னாய் அகம்புறம் குளிர்ந்தோம்!" என்றே!

## வானவில்

(விண் எழுது கவிதை)

மண்ணுலகு கடல்மலை அனைத்தும் உள் ளாக்கியே
வளைந்தது வானவில்! என்னென்ன வண்ணங்கள்!
விண் முழுது கருமணல் அதன் மீது மாணிக்கம்,
வீறிடு நிறப்பச்சை வயிரத் தடுக்குகள்
உள்நிலவும் நீரோடை கண்ணையும் மனத்தையும்
உயிரொடும் அள்ளியே செல்கின்ற தல்லாமல்
எண்ணற்ற அழகினால் இயற்கைவிளை யாடலின்
எல்லைகா ணேன், அதைச் சொல் லுமா றில்லையே!
புதுமைஇது வாளிடைக் கண்டஅவ ளோவியம்
போய் முகிழ் புனலிலே நொடிதோறும் கரைந்ததே
இ(து)அது எனச் சொல்ல ஏலா தொழிந்ததே
இன்பமும் துன்பமும் யாவுமே இவ்வண்ணம்
கதுமெனத் தோன்றிடும் மறைந்திடும் என்பதைக்
கண்ணெதிர்க் காட்டவரும் விண்எழுது கவிதையாம்
அதுநமக் குத்தெரியும் அன்றியும் கவிஞருளம்
அவ்வான விரிவிலும் பெரிதென்ப தறிவமே!

## ஆடல் பாடல்

(பச்சைப் பட்டரங்கில்)

நான் ஓர் வரப்போடு போனபோது
நன்செயை அடுத்ததோர் சின்ன திட்டு

நில்என்று சொன்னது நின்றேன், வரிசை
மிஞ்சாது நீண்டு வளராது தரையை
மறைத்த வண்ணம் மண்டிய புற்களின்
நிறத்தையும் நிறத்திடை, நிறைத்த பொன்வெயில்
ஒளியையும் கண்டேன் உள்ளம்அவ் வழகில்
குளித்துக் களித்துக் கூத்தடித் திருந்தது
மற்றோர் இன்னொலி வந்தது காதில்
ஒற்றை நீல் ஒளிச்சிறை வண்டு
பாடியது தும்பைச் சிரிப்புடன்
ஆடியது பச்சைப் பட்ட ரங்கிலே!

## ஆடும் மயில்

தக தக
என் றாடுமாம் மயில்
நன் றாடுமாம் களிப்பீர்
நின் றாடுமாம் (தகதக என் றாடுமாம்)

மாலை வெயில் தனிமலர்ச்
சோலை தனில் நடமிடும்
நீல மயில் (தகதக என் றாடுமாம்)

கண்ணாயிரம் ஒளிவிடும்
மின்னாயிரக் மயில் அது
பெண்ணாய் வந்தே (தகதக என் றாடுமாம்)

பின்வாங்குமாம் அடகொடு
முன்வாங்குமாம் நடைமுறை
தென்பாங் கென்றே (தகதக என் றாடுமாம்)

மெச்சும்வகை மேனி
தச்சுக்கலை காட்டும்
பச்சை மயில் (தகதக என் றாடுமாம்)

பொன்னால்முடி புனைமயில்
மின்னால்விழி! அலகினில்
என்னே எழில் (தகதக என் றாடுமாம்)

மணிமா முகில் வளைகழுத்
தினைச் சூழவே அழகுற
அணிமா மயில் (தகதக என் றாடுமாம்)

அதிரும் படம் தங்கக்
கதிர் தூவிடும் உலகினை
மகிழ்வித் திடும் (தகதக என் றாடுமாம்)

## தென்றல்

மலர்மணம் கொண்டுவந்த தென்றலே—என்
வாழ்வில் இனிமைவைத்த தென்றலே
நிலவைப் பகலில்கண்ட தில்லைநான்—குளிர்
நிலவைத்தழு வவைத்த தென்றலே
பலஇசை கொண்டுவத்த தென்றலே—தென்
பாங்கின் தனிப்பிறவித் தென்றலே

இலகும் தளிரினிலோர் அசைவினை—நேரில்
எழுதிக் காட்டுகின்ற தென்றலே!
பேரைக் கேட்டதுண்டு தென்றலே—உனைப்
பேசாம் புலவரில்லை தென்றலே
நேரிலுனைக் கண்டதில்லை தென்றலே—
நினைக்கப் பெருவியப்பு தென்றலே—உன்
ஊரிடைப் பாடிவரும் தென்றலே—உன்
உதடு மணந்ததோ தென்றலே?

பூந்துகள் கொட்டுகின்ற தென்றலே—உன்கை
பூவோ பொழில் என்பதோ தென்றலே?—நீ
நீந்தும் வானப்புனல் எங்கனும்—உன்
நிழலையும் கண்டதில்லை தென்றலே
சாய்ந்தாடும் பூங்கிளையில் தென்றலே—நின்று
தட்டுப்பந் தாடுகின்ற தென்றலே
தீய்ந்து கருகவைக்கும் கோடையில்—நீ
செய்தது மறப்பதில்லை தென்றலே!

## முகிலுக்குள் நிலா

தெருவறைச் சன்னல் தன்னைத்
திறப்பாள்என் வரவு பார்ப்பாள்.
திருமுகம் காண்பேன் முல்லைச்
சிரிப்பினிற் சொக்கி நிற்பேன்!
ஒருநொடி தனிலே அன்னாள்
ஒளிமுகம் மறைந்து போகும்.
அரிவையின் முகநி லாவை
அடுத்தநாள் காண்பேன் அங்கே!

## தமிழர் யார்?

மன்னு தமிழ்க்குடியாம் வாழையடி வாழைஎன
இந்நிலத்தில் எங்குறைவா ரும்தமிழர்—பன்னும்இந்த
வாய்ப்பில்லார் தம்மை, அவர் வைப்பாட்டி மக்களை
ஏற்கமாட் டோம்தமிழர் என்று.

## செஞ்சாமந்தியும் தும்பைச் செடியும்!

செஞ்சா மந்தியும் தும்பைச் செடியும்
கொஞ்சிப் பேசிக் கொண் டிருந்தன.
செடியில் நிறைந்த செம்மலர், இளையோன்
புதுவகைச் சட்டை போலி ருந்தது.
தும்பையும் பூவும் தோகையும் சிரிப்பும்
உள்ளம் இரண்டும் ஒன்றே யாகி
இருப்ப தென்ற இவர்களின் முடிவை
யார்தாம் எதிர்க்க எண்ணுவர்? காற்றோ
இலவம் பழுப்பை எடுத்து வந்து
கலகம் செய்யும் கசுத்தால் அந்தச்
செஞ்சா மந்தியின் தலையிற் சேர்த்தது
தும்பை கேலியாய்ச் சிரித்தது!
செம்மலர் சினத்தால் மேலும் சிவந்ததே!

## பந்து விளையாட்டு

கரடிகள் கிழிருந்து கையேந்த ஏந்த
மரக்கிளை ஆடரங் காகக்
குரங்கு பந்தடித்தது விளாம்பழம் கொண்டே!

## குன்றூர்ப் பாட்டு

குன்றூர் குன்னூர் என்று சிதைந்து, பின்
குன்னூர் குன்றூர் எனத்திருந் திற்றாம்
அவ்வூர் மக்கள் பெரியார் ஆக்கிய
அறிவியக் கத்தை அடைந்தனர் ஆதலின்
குன்னூர் என்பதில் உள்ள குறையைக்
கடிந்து குன்றூர் என்று கண்டனர்
குன்னூர் என்று திரித்துக் கூறினோர்
யார் எனில், ஆங்கிலர் என்றே கூறுவர்;
ஆங்கிலர் தமிழை அறியார் அவருடன்
ஈங் கிருந்த பார்ப்பனர் ஆகிலும்
உண்மை இதுவென உரைத்த துண்டா?
இல்லை, ஏனெனில் பார்ப்பனர் தமிழின்
பகைவர்; பைந்தமிழ் கெட்டொழி வதையே
எண்ணி ஆவன செய்யும் இழிசினர்.

குன் றின் மீதில் அமைந்தது குன்றூர்!
அது. நம் பொறியியல் அறிஞர்க் கறிஞரும்
பொருட்பெற்றி யாய்ந்த முதுபெரும் புலவரும்
ஆகிய சி. டி. நாய டவர்கள்
வாழ்வதால் பெரும்புகழ் வாய்ந்த தென்று
செப்பும் கோவைக்கு—ஐம்பது கல்லுக்கு
அப்பால் அமைந்தது! வருவார்க்கெல்லாம்

இயற்கை ஈந்த அழகின் படைப்பு!
தேவைக்குப் பொன்மலி கோவை நகரின்
திராவிடர் கழகச் செயலா ளர் திரு.
அரங்க நாதன் அருமைத் தம்பியின்
திருமணத் திற்குநான் சென்ற காலை
என்னைக் குன்றூர்த் தமிழரும் "ஆங்குச்
சொற்பெருக் காற்ற வருகெனச் சொன்னதால்
ஒப்பினேன்; ஊரையும் பார்க்கலா மன்றோ!
கோவையி னின்று குன்றூர் போக
ஆவலோடு நான் இயங்கியில் அமர்ந்தேன்;

நடுப்பகல் நோக்கிக் காலை நகர்கையில்
பொன்வெயிற் பொன்வண் டாக வண்டி
பறந்து சென்று வாணிகம் பரந்த
மேட்டுப் பாளைய நகரின் மேன்மையைக்
காட்டு, வெப்பமும் காட்டி நின்றது!

வருவோர் போவோர் ஆகிய வாணிகர்
பல்லா யிரவர் விரைவதும் பார்த்தேன்.
அவர்களின் கால்களில் முயற்சி மின்னுவது
காட்சி அளித்தது, கா லும் தாளும்
முயற்சியும் ஆன மூன்றும் ஒன்றே
என்று தமிழர் இயம்புவது நினைத்தேன்!

மேட்டுப் பாளையக் கடைத்தெரு விட்டு
மே லும் விரைந்து செல்லும்என் வண்டி
இருபுறம் பாக்கு மரங்கள அடர்ந்த
ஒருவழி ஓடிற்று மரங்களும் உடன்வர!
அத்தனை நீளப் பெருவழி அதுதான்!
இரண்டுகல் தொலைவு; இரண்டடிக் கொன்றெனக்
கால்கீழ் ஊன்றிக் கண்கொளா உயரத்து
உச்சியில் பச்சை மட்டைகள் சுமந்து
கக்கத்தில் மணிக்குலை கவினுறத் தொங்க
அடைத்துள அழகிய கமுகினம்! வானைத்
துடைத்துத் தூசு போக்குவன போலும்!
வெப்பம் விலக்கின! நிழல்முடி கவிந்தன
கப்பம் கட்டின குளிர்காற்று வைத்தே!

என்னரும் வண்டி எழிலமைந் திருப்பினும்,
விரைந்து செல்லினும்; விரிந்து யர்ந்து
குளிர்தரு கமுகின் கூட்டம் இல்லையேல்,
என்பயன்? இயற்கையின் ஆதரவு செயற்கைக்குத்
தேவை என்பது சாவாத உண்மை!
குன்றின் அடிநிலை சென்று வண்டியி
னின்று முடிநிலை நிமிர்ந்து பார்த்தேன்
தோன்றியதென்ன?—தமிழகத் தொன்மைதான்!

நெடிய குன்றத்தின் நேர்ஒரே பக்கம்
வளைந்து வளைந்து செல்லும் வழியே
எனது வண்டி மேல்நோக்கி ஏறியது—
என்று சொல்லும் சொல்,மெய் இல்லை!
சுடரும் நிலவும் தோன்றிய நாளில்
தோன்றித் துலங்கும் குன்றூர் உச்சிக்கு—
இங் கிருந்து சென்று மீண்டும்
அங் கிருந்து சுவடுகாண மீளும்
என்றன் அருமைத் தமிழக முதியோன்
இன்று தன்னலம் நீக்கி என்றன்
வண்டியை வளைந்ததன் முதுகிற் சுமந்து
சாயாது சறுக்காது தாளிட்ட சுவடு
மாறாது மறவாது மலையுச்சி நோக்கி
ஏறுவான் ஆனான் ஏகுவேன் ஆனேன்!
நின்றி ருக்கும் அந்தக் குன்றின்
அடிநிலை தாண்டி நடுநிலை சென்றேன்;
குனிந்து கீழ்ப்புறம் நோக்கினேன்; குரல் எடுத்துக்
கீழுறு தமிழரே மேல்வா ரீரோ
என்று கூற எண்ணினேன்! "கேட்குமா?"
என்று வாளா இருக்க லானேன்!

குன்று வழியின் இருபுறத்து நின்ற
காடுகள் பாடின! அழகு காட்டின!
ஆடின கிளைத்தழை தோகை யாகவே!
பக்க வாட்டிற் பள்ளத்தி னின்று
மிக்கு நீண்ட கொடிப்பூ மின்னின!

நெட்டை மரமொன்று நிலத்தி னின்று
எட்டியா னிருந்த அளவாய் எழுந்து
தன்தலை தாவி என்நிலை நோக்கி
மகிழ்ந்தது மகனுக்கு மகிழ்தந் தைபோல்!
இதுதான் குன்றூர் என்றனர்! நடுப்பகல்
பதினொரு மணிவெயில் பாய்ந்த தாயினும்
குளிர்ந்த காற்று வெப்பினைக் குறைத்தது!

புதுமனை, பொதுமனை, கடைகள், தொழில்மனை
அழகுற அமைந்தி ருந்தன ஆங்கே:
நன்செய் புன்செய் நறுமலர் தோட்டம்
சுற்றிலும் அழகு தோற்று வித்தன
பயிர்த்தொழில் மக்கள், பலர்; சிலர்
சிறுதொழில் மக்கள் செறிந்தி ருந்தனர்.
திரண்ட செல்வம் இன்மையால் பார்ப்பனர்
சுரண்டலால் ஏற்படும் தொல்லைஅங் கில்லை!
நாய்கடி நலம்செயும் மருத்துவ விடுதி
குன்றூர் தன்னில் குறிப்பிடத் தக்கது.
வருவார் தங்கும் வளைவில் தங்கினேன்
நன்று விரிந்த இந்தக் குன்றூர்

குன்றின் உச்சியில் இருந்த கொள்கையை
எண்ணுந் தோறும் வியப்பை ஈந்தது.

வெயிலின் வெப்பம் எந்த நாளிலும்
துயரம் விளைப்ப தில்லை அங்கே?
சித்திரைத் திங்கள் வந்தால், ஊரில்
செத்தே போகும் செங்கதிர்க் கொதிப்பு!
வாழ்வன குளிர்ச்சியும் மகிழ்ச்சியு மாகும்.

வெப்பம் மிக்க தென்னாட்டார்கள்
குளிர்ச்சிக்குச் செல்வது குன்றூராகும்!
ஊட்டி என்றே ஆங்கிலன் உரைப்பதும்,
உதகை என்றே ஆரியன் உரைப்பதும்.
ஆகிய "தண்ணீர்ச் சுழலது" —வேதான்
அழகிய குன்றூர்க் கப்புறம் அமைந்தது.
நீல மலைஎன நிகழ்த்தலும் அதையே!

அடியி னின்று நெடுமுடி நோக்கினால்
சிறிதாய்த் தோன்றும் இடத்தில் பெரிய
நகரினைக் கண்டு நான்வியப் புறுகையில்
என்னைஎன் தோழர்கள் "இதுவியப் பன்று
பொன்னும் பன்னிற மணிகளும் பூவென்று
மின்னும் பெரும்பரப்பு வியப்பாம்?' என்றனர்.

ஊருக்கு-அரைக்கல் தூரம் நடந்தேன்.
நேரில்நான் கண்டது மலர்வனம்? மணிக்காடு!
உச்சிக் குன்றின் பக்க வாட்டில்
ஐந்நூறு காணிப் பரப்பை "அழகு"
மொய்து விளையாடக் குத்தகை பிடித்தது!

நிமிர்ந்தால் இலைஇலா நீலப் பூமரம்!
கமழும் முத்துப் பந்தர்க் கவின்மரம்!
மஞ்சட் பொடியை வாரி இறைக்கும்
செம்மலர் மரங்கள் சிறுபட் டாளம்
கண்ணோடு சென்று மனத்தைக் கவர்ந்தன!

கொன்றை பூத்த தங்கக் கோவை
தென்றலால் ஆடும், வண்டெலாம் பாடும்.
வண்ண மரங்களின் அழகில் வளைந்தஎன்
கண்ணைக் கீழ்ப்பாய்ந்த வரியணில் கவிழ்த்ததால்
பன்மலர் நிலத் தோவியம் பலித்தது.

பச்சை மணிச்சிற் றிலைச்செடி வரிசை
வட்டங் குறிக்க அதனுள் மஞ்சள்
சிவப்பு. நீலம் ஒளிபடு மலர்வகை
அப்பட்டம் பன்மணி இழைப்போன் அழுத்திய

மாதர் தலையணி வட்டமே ஆகும்.
பெருமுக் கோணத் துள்ளே உரோசு
விரிமலர் நறுமணம் வீசி மிளிர்ந்தன.
நீல உரோசும் ஒருபுறம் நிறைந்தன
சிவப்பு, ரோசும் ஒருபுறம் திகழ்ந்தன
வெள்ளை உரோசும் வியப்பைச் செய்தன
பன்னிறச் சாமந்திப் பரப்பையும்
இன்னும் இருந்த அழகின் சிரிப்பையும்
எழுதி முடிக்க இருப தாண்டு
கழியும் ஆதலால் அடுத்தது கழறுவேன்;

மேல்வந்து மின்னி உட்சென்று குமிழ்விடும்
சேல்விளை யாடும் பொய்கையும் திண்ணையும்
கலைஞன் படமும் காண்பார்க் கிடமுமாம்.
திண்ணையி னின்று பொய்கையிற் செலுத்திய
கண்களைத் தாமரை கண்டு மலர்ந்தன
அண்டையில் அல்லிகள் தன்முகம் கூம்பின!

பொய்கையைச் சுற்றும் புதரெலாம் பூக்கள்
பூக்களில் வடியும் தேனெலாம் ஈக்கள்
ஈக்களில் எழுவன இனிய பார்களாம்
திண்ணைக்கி பந்தல் ஒன்று செய்த
வண்ண மலர்குலுங்கு கொடிகளின் பின்னலில்
வீழ்ந்த வெயிலால் கீழிடம் இன்ப
ஓவியக் கம்பள விரிப்பைப் பெற்றது
விழிகள் அழகை உண்ணச் செவிகள்
எழுமின் னிசையினை உண்ண மூக்கு
நறுமணம் உண்ண நல்லுடல் குளிரை
உண்ணக் கிடந்த என்னை உடனே
உண்ண வருக என்றான் ஒருமகன்
இன்னும் என்ன உண்பதென்றேன்

கொத்துக் கறியின் குழம்பும் வறுத்த
மத்தி மீனும் வாய்க்கமு தன்றோ!
அங்குப் போகலாம் வருகஎன் றழைத்தான்
அவைகளும் இங்கே இருந்தால் அடடா
குறைவிலா இன்பக் கொள்ளை அன்றோ!

மெய்விழி, மூக்குச் செவிகள், விழுங்கும்
ஊறொளி நாற்றம் ஒலிஅமுது துறந்து
வாய்க்குச் சுவையமுது நோக்கிச் சென்றேன்;
கொன்றை விழிமலர் தேன்புனல் கொட்டிச்
சொல்விரோ என்று செப்பும் போதும்
சென்றேன், வருந்தி வழிநடந்து சென்று
கறுப்புடை ஏழைத் தோழர் காட்டிய
அன்பினில் கறியும் சோறும் அளாவ
உண்டு மகிழ்ந்தேன், நடுப்பகல் ஒருமணி

என்றது மணிப்பொறி! எழுந்து சென்றேன்
கூட்டம் நடக்கும் குறிப்பிடம் நோக்கி!

முப்புறம் கடையும் வீடும் இப்புறம்
தெருவும் சேர்ந்த சின்னதோர் திடலினுள்
தொட்டி இராட்டினம் சுழன்றுகொண்டிருந்தது:
வட்ட இராட்டினம் வண்ணம் பாடிற்று!
நாயிரண்டு போர்ப்பணி நடத்தின.
தாயும் தந்தையும் ஐந்தாறு—சேயரும்
ஏறிய இயங்கி ஒன்று புகுந்து
பம்பம் பம்பம் எனவம்பு புரிந்தது
திடலின் நடுவில் வெறுமை திகழ்ந்தது
தெருவினில் சிற்சிலர் நின்றுகொண் டிருந்தனர்
நானெனனுக்குச் சொற்பொழிவு நடத்தினேன்
என்னுரை எனக்குத் தெரிந்ததே ஆதலின்
உடனே நிறுத்தினேன்; உடனே
இடம்படு கோலைக் கேகினேன் இனிதே!

## தமிழர் திருநாள்

விடிந்தது தைம்முதல்! தொடங்கிற்றுத் திருநாள்!
விண்ணெலாம் மண்ணெலாம் தங்கக் கதிர்த்திரள்!
வடிந்தது வடிந்தது காரிருள் வெள்ளம்!
மாயமாய் மறைந்தது கொடுபனிக் காற்றே.
படித்தது தமிழர்கள் முகமெலாம் உணர்வும்
பத்தரை மாற்றுத் தங்கத்தின் பூச்சும்!
ஒடிந்தது பகைவர் ஆட்சியின் அச்சும்!
உலகம் மகிழ்ந்தது தமிழக மகிழ்ச்சியால்

புதுநெல் லறுத்த உழவர்கள் பாட்டும்.
பூவைமார் குற்றும் உலக்கைப் பாட்டும்,
இதுஎங்கள் தமிழகம் வெல்க வெல்கவே
என்று பாடும் இளைஞர்கள் பாட்டும்,
முதியவர் மீசையில் இடதுகை யிட்டு
முறுக்கேற்றி வடவரை நொறுக்கடா என்னும்
எதிர்ப்புப் பாட்டும் கடற்பின் அணியுடன்
எழுந்தன உலகெலாம் இசைத்தமி ழாக்கியே

இல்ல முகப்பெலாம் வாழையும், பாக்கும்
இளங்குருத் தோலையும், தெங்கின குலைகளும்,
சொல்லும் மாவிலைத் தொங்கலும் கூடியே
சோலை யாக்கின தமிழரின் தெருக்களை!
முல்லைச் சிரிப்பினர் செங்காந்தள் விரல்களால்
முன்றிலை வீட்டினை மாக்கோலம் ஆக்கினார்
செல்வ இளைஞர்கள் அள்ளுறப் போயினார்
செங்க ரும்பு வண்டிகள் சேர்வதால்!

மலையுடைத் தால்என பலாப்பழம் உடைத்தே
மாற்றுயர் பொற்கட்டி போல்களை பெற்றனர்.
தலைச்சுமை வாழைத் தேன்குவ ளைப்பழத்
தாறு வாங்கிச் சீப்பாடி வைத்தனர்.
வலக்கை தாங்காச் சேலத்துக் குண்டு
மாம்ப ழங்கள் வீடெலாம் கமழ்ந்தன.
விலக்கொ ணாக்கொடி முந்திரி கிச்சிலி
விளவன் னாசி விருப்பம் விளைத்தன.

நாழி அரிசிக்கு நானாழிப் பாலாக
நல்ல விழுக்காட்டுப் புத்துருக்கு நெய்பெறத்
தாழா நெருப்பின் அடுப்புத் தலைசுமக்கத்
தங்கப் புதுப்பானை செங்கரும்பின் சாற்றோடும்
ஏழு நரம்பு சரிபார்க்கும் வல்லவனின்
யாழ்த்தெறிப்புப் போலும் பொங்கி எழுந்தொலிக்க
வாழியோ வாழி என மங்கைமார் வாழ்த்த
மங்காத் தமிழர் பொங்கலோ பொங்கலென்றார்.

இறக்கிய பானையில் ஏலம் கமழ்ந்ததே!
எதிர்காண முந்திரிப் பருப்புச் சிரித்தன!
குறைப்பின்றி இடைக்கிடை கொம்புத்தேன் முக்கனி
கூட்டக் கண்டதும் இதுதமிழ் என்றனர்!
சிறுத்த இடைச்சியர் வலிய அணைந்தஎம்
திருவாளர் தருமின்பம் இதுவாகும் என்றனர்.
சிறார்எலாம் வரப்படுத் தியபாடம் என்றனர்
சேயிழை தேனிதழ் இறுஎன்றார் காளையர்

முகந்தெரிந் திடும்இள வாழைக் குருத்து
முழுவீடு நிறைய வரிசையின் விரித்துத்
தகுந்தார் தமிழர் வருகென அழைத்துத்
தள்ளுக டைஆ ரியனையும். ஆரியன்
மகனெனும் கலப்பட மகனை ஒழித்து
வானப் பருதிக்கு வாழ்த்துக் கொடுத்து
வகைசேர் தமிழக அன்னைசீர் நினைத்து
வயிறு புடைக்க உண்டனர் பொங்கலே!

பொன்னாடை கட்டி நல்ல இழையணிந்த
பூவைமார் சோலையெலாம் தாவிய ஊஞ்சல்கள்
முன்னோடப் பின்னோடக் குலுங்கு நகைப்பான
முகத்தொடு முத்தமிழ் செவிக்கமு தாமாறும்
தென்னாடு மற்றுள்ள எந்நாடும் காணாத
செங்கைத் தறியாடை தையற் கலைசிறக்க
மின்னும் பலசட்டை மேலாடை வேட்டியுடன்
வேலோடு வாளெடுத்துப் போரிட்டார் ஆமாறும்

பட்டுச் சிறாய்நல்ல பாவாடை பூவாடைப்
பசங்கள் தெருவழகு படைக்கின்றார் ஆமாறும்

கொட்டும் முழக்கம் கூத்தாட்டும் வாய்ப்பாட்டும்
கூடத்தும் மாடத்தும் கும்மாளம் ஆமாறும்
கட்டுமுளைக் காம்பவிழ்த்துக் கையிற் குடப்பாலைக்
காண உதவுகின்ற கறவை மலைஎருது
சொட்டுந்தேன் பூமாலை சூடித் தெருவெல்லாம்
சுவடு பொடிதுள்ளத் துள்ளுவன ஆமாறும்

பொங்கற் பெருநாள் பொன்னாம் தமிழ்த்திருநாள்
பொலிவும் மகிழ்ச்சி மலிவும் புகல்வதுண்டோ?
எங்கும் மகிழ்ச்சியாம் எப்பாங்கும் ஆர்ப்பாரும்
இலங்கைத் தமிழர்களும் நலங்கொல் மலையர்களும்
அங்கங்குப் பொங்கல் அழகு விழாக்கண்டார்
அங்கிருந்தார் ஆனாலும் இங்கிருந் தாரானார்கள்
எங்கள் தமிழ்வெல்க எங்கள் தமிழகம்தான்
எம்மாட்சி கொள்க! இன்பம் மலிகவே!

## காகிதப்பூ வேண்டாம்

எடுப்பு

இயற்கை உனக்களித்த மணமலர் இருக்கையில்
ஏனிந்தக் காகிதப்பூ? மகளே (இய)

உடனெடுப்பு

செயற்கை மலர்காட்டித் தேன்மல ரினம்கொல்லத்
தெரியார் முயல்கின்றார் தெரிவையே எதிரில் (இய)

அடிகள்

பொன்போலும் முதற்பொருள் விளைதல் அரிதாயின்
போலிப் பொருள்நாடல் உண்டு—கேள்,
என்னருந் தமிழகம் இந்தாமுல்லை, இந்தா
சாமந்தி என்பதும் கண்டு—நல்
அன்பிலார் போல்நீ அழகிலாக் காகிதம்
அழகிய கூந்தலில் அணிதல் எதைக்கொண்டு (இய)

காகிதப் பூவினில் இயற்கை மணமுண்டோ
கட்டழ கினில்உள்ள நுட்பம்—இளந்
தோகையே தாளிலே காண்பதும் உண்டோ?
தூய்மைஉண் டாகுளிர் உண்டோ?—நீ
ஏகுவாய் மகளே வண்டுபா டும்மலர்
எடுப்பாய் தொடுப்பாய் கூந்தலில் முடிப்பாய்

## கூதிர் விழா

கூதிர் விழா—நல்ல
குளிர் காலப் பொன்விழா
கொட்டடா கொட்டடா முரசம்!

வீதிக்கு வீதி—பல
வீட்டுப் புலித்தமிழர்
வில்லேந்தி வந்தனர் வாழ்க!

சூதற்ற தமிழ்மாதர்
சோலைப் பசுங்கிளிகள்
சுடர்விளக் கேந்தினார் வாழ்க!

போழ்தும் புறம்போகப்
பொன்னாடு வலம்வந்து
பொதுமன்று சூழ்ந்தனர் வாழ்க!

தமிழர் விழா—நல்ல
தண்கூதிர்ப் பொன்விழா
தடதடென் றோச்சடா முழவம்

அமுதென்று பாடுவோம்
அதுநன்று போற்றுவோம்
அறிவென்று சொல்லடா தமிழை!

நமதென்று நாட்டடா
நந்தமிழ்ப் பொன்னாடு!
நரிகளுக் கிங்கில்லை வேலை!

சமைகின்ற கலைஎலாம்
தமிழ்தந்த பணிஎலாம்
தலைஎன்று சாற்றடா உலகில்

ஊதடா நற்றமிழர்
ஒன்றென்று நாடெலாம்
ஊதடா ஊதடா தாரை!

மீதெலாம் கார்வானம்
விளைவெலாம் செந்நெல்
விருப்பெலாம் போர் ஆமென் றாது!

போழ்தெலாம் அறமென்று
புகைஎலாம் அகிலென்று
பொற்றாரை ஊதடா ஊது!

கூதிராம் ஐப்பசிக்
கார்த்திகைக் குளிர்விழா
கொட்டடா கொட்டடா முரசம்!

## இயற்கை தரும் உண்மை

பாலைக் காய்ச்சும் பக்குவம் அறியா
மனைவியின் மடமை மாற்றவேண்டி
அவளிடம் இதனை அறைவாய்; அதனால்
அவள்தன் மடமையை அகற்ற முயல்வாள்
என்றேன். என்றன் இதயம் முதலில்
இந்நாட்டு மக்கட் கிளம்புவேன் என்றது.
சனப்ரதிநிதிகளாய்ச் சார்ந்த மனிதரே,

சனங்களே, இங்குச் சகலமும் மாறும்,
உமது தீய ஒழுக்கம் மாற்றி
நல்லொழுக்கத்தை நாட வேண்டும்நீர்!
அண்டை வீட்டான் அழிய வேண்டும்
அன்னிய மதத்தான் அழிய வேண்டும்
மற்றச் சாதியான் மடிய வேண்டும்
என்று தினம்தினம் எண்ணி எண்ணி
இந்த எண்ணத்தை இதயம் பூசி
நாவையும் இப்படி நடத்தி நடத்திக்
கண்களை இந்தக் காட்சியில் பயிற்றி
அந்த மலத்தை அதிகம் பெருக்கி
எளிய புழுப்போல் அதனில் நெளிகிறீர்.
அனைவரும் நாட்டார் அனைவரும் சோதரர்
என்ற பெருநோக் கெப்போ திருந்தது?
நீங்கள் பூண்ட நீட்டுத் தளையைச்
சிறிது நீக்கச் செயல்செயும் போதும்
பிறனுடன் ஒற்றுமை மறுப்பதால் வெற்றி
பெறலாம் என்பதை அறிந்துள போதும்
ஒத்துப் போக உள்ளம் பிறந்ததே!
''அண்டை வீட்டான் அயல்மதம் சாதி
அழிய வேண்டும்?''—அந்தோ ஒழுக்கமா!
பல நூற்றாண்டுகள் பாழ்போயினவே!
மலப்புழு நிலையில் மாய்கின்றீரே!
குணங்கள் மாறும்; மாற்றலாம்
இணங்குக! உயர்க! இன்பம் வருமே!

ஒன்று மற்றொன்றாய் உலகிடை எவையும்
குணங்களில் மாறக் கூடியவைகள்!
தீயைச் சொரிந்த தெழுமைச் சூரியன்
மேற்றிசை யேகி வீழு முன்பு
கண்ணுக் கழகிய காட்சி தந்து
தீமை சிறிதும் இன்றித் திகழ்ந்தது.

அரைத்துளி நீரும் அற்ற ஏரியின்
அகன்ற நடுத்தலம்! அமைதியில் இருந்தேன்
தீப்பிடித் தெரிந்த ஆகாயத்தில்
தேகம் சிலிர்க்கக் காற்று மிதந்தது!

என்னைச் சுற்றிப் பெரியதோர் வட்டமாய்
எழிலுறு மரங்கள் பச்செனநிருந்தன!
இலைகள் பட்சி யினங்கள் அனைத்தும்
அனல்தவிர்ந்தனவாய் ஆடின பாடின!
உயர்ந்த வானிடை உற்ற மேற்கில்
ஒளிப்பிரவாகம் ஒருநூறு நிறங்கள்!
தகத்தகாயம் சார்ந்தஅந் நிறங்களில்
ஒன்றில் ஒன்று சங்கமம்! ஆங்கே
ஊதாவர்ணத் தடாகம், பொன்னின்
உருக்கு வெள்ளத்தில் ஓடிக்கலந்தது!

## அச்சந்தவீர்!

அஞ்சாமை வேண்டும் தமிழர்க்கே—பகையின்
அழிவுக் கடலின் ஆழத்தில் மகிழ (அஞ்சாமை)

கொஞ்சாமை பகைவரைக் கிட்டாமை பகைவர்சொல்
கேளாமை காட்டிக் கொடாமையின் விடாமைஎனும்
(அஞ்சாமை)

தஞ்சமாய் வந்தவர் தலையினில் ஏறினார்
தமிழர் மேன்மையைத் தாழ்த்திக் கூறினார்
நெஞ்சீர மற்றவர்; இட்டாரைச் சீறினார்
நேரினில் மக்கள் இயல்பையே மீறினார் (அஞ்சாமை)

பிச்சைக்கு வந்தவர் அதிகாரம் பெற்றார்
பிறர்நலம் அழிப்பதோர் பேடிமை உற்றார்
பொய்ச்சி ரிப்புச் சிரித்திடக் கற்றார்
பொதுவறம் கொல்வதில் நாணமே அற்றார் (அஞ்சாமை)

தமிழர் உணர்ச்சியைக் குறைத்தெடை போட்டார்
தமிழர் எதிர்ப்புக்குத் தப்பிட மாட்டார்!
தமிழ்நாட்டுக் குடையவர் யார்?தமிழ் நாட்டார்.
தமிழரை எதிர்ப்பவ ரோ அயல் நாட்டார்

வசைக்கும் சிறைக்கும் குண்டுக்கும் எதிர்ப்புக்கும்
வாட்டிடும் படுகொலைக் கும்வரும் சாவுக்கும்
அசைக்க முடியாத மலையை நிகர்க்கும்
அஞ்சாமை ஒன்றே வேண்டும் தமிழர்க்கு.

## புறப்படட்டும் புலிகள்!

தமிழ் நாட்டுவிடுதலை. தமிழ்ப்புலவர் விடுதலை!
நமக்கென்ன என்றிருப் பாரோ!—புலவர்
நமக்கென்ன என்றிருப் பாரோ! (தமிழ்)

தமிழைப் பேச உரிமையும் இல்லை
தாயை வாழ்த்தினும் வந்திடும் தொல்லை (தமிழ்)

தமிழ்மொழி எல்லாம் வடமொழி என்று
சாற்றுவார் பார்ப்பனர் பொய்யிலே நின்று
தமிழ்மொழி எல்லாம் தமிழ்மொழி என்று
சாற்றுவர் தமிழர்கள் மெய்யிலே நின்று
தமிழ்ப்பகைப் பார்ப்பனர் அடைவது நன்மை
தமிழ்ப்புல வோர்கள் அடைவது தீமை (தமிழ்)

நற்றமிழ் என்பது தில்லிக் காகாது
நம் அமைச் சர்க்கும் காதுகே ளாது
புற்றிலே மோதினால் பாம்புசா காது
புறப்ப டட்டும் புலிகள்இப் போது (தமிழ்)

தமிழ்விடு தலைப்போரைத் தட்டிக்க ழிப்பதா?
தட்டியே மனைவியின் முகத்தில்வி ழிப்பதா?
தமக்குள பெருமையைத் தாமே அழிப்பதா?
தமையீன்ற தாயின் குடலரைக்கி ழிப்பதா? (தமிழ்)

ஆட்டிப் படைப்பவர்க் கஞ்சுதல் வேண்டாம்
அமைச்சர் என்பார்க்கும் அஞ்சுதல் வேண்டாம்
காட்டிக் கொடுப்பார்க்கும் அஞ்சுதல் வேண்டாம்
கருத்திலாக் கட்சிகட் கஞ்சுதல் வேண்டாம்! (தமிழ்)

## விடுதலை முழக்கம்
(அகவல்)

இசை : சாமா தாளம் : ஆதி

'நம்தமிழ் நாடே நம்தாய் நாடு!
நம்தாய் நாடு வெல்க வெல்க!
நம்தமிழ் நாடு வாழ்க வாழ்கவே."
இந்த முழக்கம் எழுப்புக நன்றே
வீடெலாம் விடுதலை முழக்கம் மேவுக!
ஊரெலாம் விடுதலை முழக்கம் உயர்க!
காலையில் விடுதலை முழக்கம் காட்டுக!
உண்ணுமுன் விடுதலை முழக்கி உண்க!
உறங்குமுன் விடுதலை முழங்கி உறங்குக!

அன்னைமார் விடுதலை முழக்குவா ராகுக;
தந்தைமார் விடுதலை முழக்கம் தழுவுக!
மக்கள்மார் விடுதலை முழக்கம் வளர்க்க!
அலுவல்முன் விடுதலை முழங்குவார் ஆகுக!
தொழில்முன் விடுதலை முழக்கித் தொடங்குக!
விற்பனை விடுதலை முழக்கித் தொடங்குக
படிக்குமுன் விடுதலை முழக்கிப் படிக்க!
அழகிய விடுதலை மணிக்கொடி எழும்வரை
பகைவர்க் கென்றுமிங் கிடியென முழக்கவே!

## வெற்றி நமக்கென்று கொட்டடா முரசு

எங்குப் பிறப்பினும் தமிழன் தமிழனே
இங்குப் பிறப்பினும் அயலான் அயலானே
(எங்கு)

செங்குருதி தன்னில் தமிழ்த்தன்மை வேண்டும்
சிறிதும் அயலான் கலப்பின்மை வேண்டும்
(எங்கு)

சிங்கக் குகையில் நரிக்கிடம் தந்தோம்
செந்தமிழ் நாட்டின் உரிமை இழந்தோம்!
பொங்கும் உணர்வால் எழும்தமி ழரசு
போர்தொடங் கிற்றுக் கொட்டடா முரசு
(எங்கு)

ஆண்ட தமிழில் ஆரியம் சேர்த்தார்
ஆயினும் தமிழர் நெறிகண்டு வேர்த்தார்
மூண்டுணர் வால்எழுந் தது்தமிழரசு
முற்றும் வெற்றிஎன்று கொட்டடா முரசு
(எங்கு)

## தமிழினத்தார் ஒன்றுபட வேண்டும்

நாமெல்லாம் திராவிடர்கள் என்ற எண்ணம்
நம்முளத்தில் வேரூன்ற வேண்டும்! மேலும்
நாமெல்லாம் ஒரேவகுப்பார் என்ற எண்ணம்
நன்றாக நம்முணர்வில் ஏற வேண்டும்
தீமையுற நமைஎல்லாம் சமையம், சாதி
சிதறடிக்க இடங்கொடுத்தல் நமது குற்றம்.
ஆமைஉயிர் காக்குந்தன் முதுகின் ஓட்டை
அகற்றென்றால் அவ்வாமை கேட்க லாமா?

ஒற்றுமையைக் காப்பதற்கு மதமா? அன்றி
ஒன்றாகச் சேர்க்கத்தான் மதமா? சாதி,
அற்றஇடம் அல்லவோ அன்பு வெள்ளம்
அணைகடந்து விளைநிலத்தில் பாயக் கூடும்!
பற்றற்றோம என்பவர்கள் சமயம், சாதி
படுகுழிநீங் குகஎன்னும் முரசு கேட்டோம்.
உற்றநலம் உணர்ந்திடுக தமிழி னத்தார்.
உள்ளூர ஒன்றுபட்டால் வாழ்தல் கூடும்!

மக்கள்தமைப் பிரிப்பதென ஒன்றி ருந்தால்
மடமைதான் அதுவென்பேன் நாமெல் லாரும்
திக்கற்ற பிள்ளைகளாய் இருக்கின் றோம்இத்
தீயநிலை நீக்குதற்கு முடியும் நம்மால்!

எக்குறையும் தீர்ந்துவிடும்; வறுமை போகும்
எந்நலமும் பெற்றிடுவோம் அனைவ ருக்கும்
சர்க்கரைப்பந் தலிலேதேன் மாரி பெய்யும்;
சாதிவெறி சமயவெறி தலைக விழ்ந்தால்!

நம்தலையில் ஆணியைத்தா மேய டித்துத்
தாம்புதனை அதிற்கட்டிப் பிறரி டத்தில்
தந்துவிடும் மடமைதனை என்ன என்பேன்!
சாதிசம யத்தினிலே வீழ்ந்தோர் அன்றே
தொந்திபெருத் தோர்அடியில் வீழ்ந்தோ ராவார்!
தூவென்று சாதிமதம் காறி உமிழ்ந்தால்
அந்தநொடி யேநமது மிடி பறக்கும்
அடுத்தநொடி திராவிடரின் கொடி பறக்கும்!

உடையினிலே ஒன்றாதல் வேண்டும்! உண்ணும்
உணவினிலே ஒன்றாதல் வேண்டும்; நல்ல
நடையினிலே ஒன்றாதல் வேண்டும்; பேசும்
நாவிலும்எண் ணத்திலும்ஒன் றாதல் வேண்டும்
மடைதிறந்த வெள்ளம்போல் நம்தே வைக்கும்,
மாற்றாரை ஒழிப்பதற்கும் ஏறிப் பாயும்
படையினிலே ஒன்றாதல் வேண்டும்; வாழ்வின்
பயன்காண வேண்டுமன்றோ தமிழி னத்தார்!

## இன்னும் கொஞ்சம் எரிச்சல் கொள்க!

முதலமைச்சர்க்கு

தூக்கம் கலைந்தது துடுக்கு நினைவால்
தாக்கப் பட்டேன் தலையைக் கிளப்பி
வட்டு மின்விசையைத் தட்டினேன் மளக்கென்று;
வெட்ட வெளிச்சம் விளைத்தது விளக்கு
மணிப்பொறி இரண்டரை மணிகாட் டியது
தனிப்பரும் அவாவுடன் தாள்இற கெடுத்தேன்
எழுந்த எண்ணத்தை எழுதத் தொடங்கையில்
முழந்தொங்கு தாடி முதியோர் ஒருவர்
நெஞ்சில் தோன்றி "நீஇதை எழுதுதல்
கொஞ்சமும் சரியல்ல என்று கூறினார்.
இளைஞன் ஒருவன்" எழுதினால் தீமை
விளைந்தி டாது விளைந்திடா தென்றான்.

இந்தத் தொல்லை எதற்கு நமக்கு
வந்த எண்ணத்தை மனதில் அழுத்தி
ஏடுநிறைத்திட ஏதாவ தொன்றைத்
தேடுக என்று செப்பினான் ஒருவன்.

என்னடா இழவா இருக்கின் றதென்று
முன்போல் வட்டு முனையைத் தொட்டேன்
இருண்டது படுத்தேன்; எனினும் தூங்கிலேன்
ஒருவர் பேச்சுக்கு உடன்படேன் என்று
வட்டுமின் விசையைத் தட்டி உட்கார்ந்து
பட்டதை எழுதிப் படித்துப் பார்த்தேன்;
முதல மைச்சரே இதனைக் கேட்பீர்;
பதினா யிரவர் பார்ப்பனர் கூடி
உமதுநல் லாட்சியை ஒழிக்கத் திட்டம்
அமைத்தனர் நீர்உம் அருமைத் திராவிடர்
கழகந் தன்னைக் கடிதே வளர்ப்பீர்.
கிழவரே அதற்கோர் வழியும் சொல்வேன்
''கருஞ்சட்டைப் படைமேல் எரிந்து விழுக
வருந்திங்க ளுக்குள் வளர்ந்திடும் கழகம்''

அமைச்சருக் கிதனை அனுப்ப லாமா?
அனுப்பலாம் என்றதோர் அறிவு; நீஅதை
மடித்துவை என்றதோர் மற்றோர் அறிவு.
மணிப்பொறி ஐந்து மணி அடித்தது
என்னடா இழவாய் இருக்கின் றதென்று
மடித்து வைத்தேன் மற்றிரண்டு நாளில்
கருஞ்சட் டைப்படை கலைக்கப் பட்டதாய்த்
தெரிந்தேன் நாள்வரிச் செய்தித் தாளால்
மறுநாள் கழக வளர்ச்சியும் தெரிந்தேன்.

முழுதுணர்ச்சியால் எழுதுவேன் இதனை
முழுதும் உணர்ந்த முதல மைச்சரே
கவினுறு திராவிட கழகத் தின்மேல்
இன்னும் கொஞ்சம் எரிச்சல் கொள்க
இன்னும் ஒருகோடி இளைஞரைத் தருக,
பொன்னும் ஒளியும் நீவிரும் யாமும்,
இன்னும் கொஞ்சம் எரிச்சல் கொள்க
வன்மனக் கூட்டமும் மகிழும் உம்மை
இன்னும் கொஞ்சம் எரிச்சல் கொள்க
திராவிடம் திராவிடர் ஆளும்
ஒரேஇடம் ஆகும் உம்பெயர் ஓங்குமே!

## அண்ணல் பெயர் வாழ்க

எடுப்பு

பிறந்தவர் யாவரும் பெற்றறி யாப்புகழ்
பெற்ற காந்தி அண்ணலைப் பிரிந்தோமே உலகில் (பி)

உடன் எடுப்பு

இறந்தார் அண்ணல் எங்கணும் பிறந்தார்
ஈந்துவக் கும்அனைத்தும் உலகுக் கீந்தார் (பி)

அடிகள்

அறிந்தோர் யாவரும் அறிஞரென் றேத்தினார்
அருளே உருவென உலகினர் வாழ்த்தினார்
திறந்தெறிந் தாங்கிலர் படிப்பையும் மாற்றினார் (பி)
திருநாட் டுரிமைகண் டனைவரும் போற்றினார்

மதவெறி தன்னலம் மறைந்திட உழைத்தார்
மாபெரு நிலைநோக்கி நாட்டினை அழைத்தார்
உதவா வேற்றுமை அனைத்தையும் பழித்தார்
உலகின் நினைவில்தன் பெயரைவைத் திழைத்தார் (பி)

வாழிய காந்தி அண்ணலின் நினைவே
வாழிய வாழிய அன்னோர் பெயரே!
ஆழிசூழ் உலகில் அவர்கண்ட பாதை
அனைவரும் தொடர்க இன்புற்று வாழ்க (பி)

## எங்கள் கொடி!

வைகறை இருட்டையும் செங்கதிர் நகைப்பையும்.
திராவிடர் மணிக்கொடி குறிக்கும்!
வாழ்விருள் தவிர்ப்பதோர் தனிப்பெரும் புரட்சியை
வரவேற்றல் கொடியின் நோக்கம்!

துய்யபன் னூறாயி ரந்திரா விடமக்கள்
கொடிநெடுந் தறியினைச் சூழ்ந்தே
தோய்கருஞ் சட்டையால் துயருளங் காட்டியும்
சுடர்விழிகள் நாளின்மேல் வைத்தும்

ஐயகோ வாரீரோ திராவிட மக்களே
ஆனஉம் மானத்தைக் காப்பீர்
அடிமையினை மிடிமையினை மாற்றுவீர் என்னவே
அழைத்தனர் இதை மறுத்தே

வையகம் எதிர்க்கட்டும்! அதிகார மக்கள்தாம்
வாட்படை யொடும்வரட் டும்
வன்சிறை இதோஎன்று காட்டட்டும்! திராவிடம்
மீட்பதெம் குறியாகுமே!

## டாக்டர் சுப்பராயன்

பிறர்க்குநலம் செய்வதிலே தனக்குண் டான
பெரும்பற்றால் வீழ்ச்சியுற்றான் சுப்பு ராயன்!
அறத்தினிலே தவறுகிலான் பிறர்செல் வத்தை
அணுவளவும் தான் அடைய எண்ண மாட்டான்.
திறத்தினிலே எவனுக்கும் இளைத்தா னில்லை
செய்கையிலே உறுதியுளான் தன்மா னத்தைக்
குறைத்துக்கொண் டுயிர்வாழான் அலுவல் ஒன்றே
குறியென்று நினைக்குமொரு குள்ள னல்லன்

சாதியினை நம்புகிலான் சமயப் போர்வை
தானணிந்து வாழுமோர் சழக்க னல்லன்
நீதியிலே பற்றுடையான் திராவி டத்தின்
நிலைமையிலே கருத்துடையான் தோழ ரேநாம்
பாதியிலே அவன்செயலை அளக்க வேண்டாம்
பயனுண்டு சுப்பரா யன்தன் னாலே.
மீதியுள்ள நாட்களிலே சுப்ப ராயன்
மிகுதிறமை திராவிடர்க்கே நன்மை யாகும்!

## செந்தமிழ் நாடு

### (இருபொருள் வெண்பா)

அண்டிமுயல் வேங்கைவர அன்புடையாள் ஆளன்வர
கண்டிறக்கும் காடு கமழ்நாடு—வண்டு
பறக்குமென் கூந்தலார் பற்றும் அறமே
சிறக்குமென் செந்தமிழ் நாடு.

இதில கண்டிறக்கும் என்ற தொடரானது :
கண்டு+இறக்கும் என்றும் கண்+திறக்கும் என்றும் பிரிக்கப்படும் வகையால் இருபொருள் தருகின்றது. எனவே, அண்டும் முயல் வேங்கைவர, கண்டு இறக்கும் காடுகமழ் நாடு என்றும், அன்புடையாள் ஆளன் வரக் கண் திறக்கும் காடுகமழ் நாடு எனவும் வரிசை படுத்திப் பார்த்துப் பொருள் கொள்ள வேண்டும்.

ஒருபுறம் அண்டிய முயலானது—வேங்கை (திடீரென) வரக்கண்டு (அச்சத்தால்) இறந்து போகின்ற காடு; தன்னிட மிருக்கும் சந்தனம் அகில் முதலியவற்றால் மணம் வீசுகின்ற நாடு.

மேலும்;

அன்புள்ள குறப்பெண் (தோழி முதலியவர்கள் என்ன கூறியும் நட்டதலை நிமிராமல்) ஆளன் வரவே, கண் திறந்து மகிழ்கின்ற காடு கமழ் நாடு;

இத்தகைய நாடு எப்படிப் பட்டது? யாருடையது எனில், வண்டானது குடியிருக்கும் மலர்த்தேன் கருதிப் பறந்து கொண்டிருக்கும், கூந்தலுடைய பெண்கள் விரும்பி நடத்துகின்ற அறமே சிறந்திருக்கின்ற என் செந்தமிழ் நாடு என்பது இச் செய்யுளின் பொழிப்புரை.

கூடிக் குலவுநரும் கொல்புலியைச் சீறுநரும்
ஓடத் துலாவெடுக்கும் ஒண்குன்ற—நாடுதான்
ஆர்ந்ததென் பாற்குமரி ஆய்வடக்கு வேங்கடமே
சேர்ந்ததென் செந்தமிழ் நாடு.

ஓடத்து+உலா எடுக்கும் என்றும் இருவகையாய்ப் பிரித்துப் பொருள் கொள்க. உலா எடுத்தல்—உலாவி வருதல், துலாஎடுத்தல்—துலாக்கோலைத் தூக்குதல். குலவுநர்—குலவுகின்றனர். காதலர்கள் சீறுநர்—சீறுகின்றவர் ஒண் குன்றம்—ஒளி மிக்க மலை, ஆர்ந்த—நிறைந்த புனல் நிறைந்த என்றபடி. சேர்ந்தென்—சேர்ந்தது என் எனப் பிரிக்க.

## ஆள வந்தார் இறுதி அறிக்கை

(எடுப்பு)

இந்த—
இறுதி அறிக்கையை
ஆளவந்தார்க்கு விடுப்போம்—அவர்
இணங்கி வராவிடில்,
கிளர்ச்சிப் படை எடுப்போம்!

(உடனெடுப்பு)

"பிறர்க்கிட மின்றித் திராவிட நாட்டைப்
பிரித்திட வேண்டும்இப் போதே—இதைப்
பின்னும் வடக்கர் சரக்கினை விற்கப்
பெருஞ்சந்தை ஆக்குதல் தீதே!

இந்த—
இறுதி அறிக்கையை
ஆளவந்தார்க்கு விடுப்போம்!

(அடிகள்)

இறைமையும் ஆட்சி முறைமையும் மக்கள்
இணக்கமும் ஆம்அமைப் போடு—மண்ணில்
எவர்க்கும் அரசியல் நுணுக்கம் உணர்த்திய
இன்பத் திராவிட நாடு

கறைபட்டு மற்றவர் கையில் அகப்பட்டுக்
கால மெல்லாம் பட்ட பாடு—நன்று
கருதுகின் றோம்இனி வரைந்திட வேண்டும்
புதிய இலக்கிய ஏடு!

இந்த—
இறுதி அறிக்கையை
ஆளவந்தார்க்கு விடுப்போம்!

ஆங்கிலர் தம்மை அடுத்தார்; துருக்கரின்
ஆட்சியை ஆதரித்தார்—நம்
ஆள்வலி கொண்ட திராவிடர் தம்மை
அழுத்த இவ்வாறு செய்தார்
தீங்குறும் ஆளவந் தார்க்கும் சிறைக்கும்
திராவிடர் அஞ்சுதல் இல்லை—எழில்
தெற்கு முனைவங்கம் மேல்கீழ்க் கடல்கள்
திராவிட நாட்டினர் எல்லை.

இந்த—
இறுதி அறிக்கையை
ஆளவந்தார்க்கு விடுப்போம்!

வேதத்தின் பேர்சொல்லித் தெற்கை வளைக்க
விளைத்தனர் சூழ்ச்சிகள் அந்நாள்—வந்த
வெள்ளையர் ஆட்சி தொலைப்பதன் பேரால்
விழுங்க நினைத்தனர் இந்நாள்
சாதி மதங்கள் வடவர் காலூன்றும்
சாரக்கட் டானது கண்டோம்—நம்
தாயகம் காக்கத் திராவிட மக்கள்
அனைவரும் ஒன்றெனக் கொண்டோம்!

இந்த—
இறுதி அறிக்கையை
ஆளவந் தார்க்கு விடுப்போம்!

## எனது நன்றி

என்தமிழ்க் கவிதைத் தொண்டும்
இனியதோ? நான்பி றந்த
முன்னாள்நன் னாளோ? என்னை
மூதிர்அன்பால் வாழ்த்தல் நன்றோ?
இன்னும்நான் பல்னாள் வாழ்ந்தால்
என்னால்இப் பொன்னாட் டார்க்கே
என்னதான் நன்மை என்ப
தெனக்கேதும் விளங்க வில்லை!

மலேயாவில் அங்கங் கேயும்
மன்னிய நிறுவ னத்தார்
பலரும்என் பிறந்த நாளில்
பகர்ந்தனர் எனக்கு வாழ்த்து!
நிலவிய அன்புத் தோழர்
நேருற வாழ்த்துச் சொன்னார்
அலைகடற் கப்பால் வாழ்வார்!
அன்பால்என் அகத்தில் வாழ்வார்!
ஊக்கத்தை எனக்க ளித்தார்
உயர்மல யாவில் உள்ளார்
தூக்கத்தில் பிதற்ற நேர்ந்தால்
தூய்தமிழ் பிதற்றும் என்வாய்
ஆக்கத்தை எனக்கிந் நாட்டார்
அளித்திட்ட அறிவை எல்லாம்
தேக்கியென் தமிழ்மேன் மைக்கே
செலவிடக் கடமைப் பட்டேன்.

மலேயாவின் தோழர்க் கெல்லாம்
மனமார்ந்த நன்றி! அன்னார்
கலையாத அன்பி னோடும்
கலந்துற வாகிச் செல்வம்
தலையான தென்றே எண்ணித்
தக்கதாம் வழியிற் றேடிச்
செலவுமட் டாகச் செய்து
செந்தமிழ் போற்றி வாழ்க!

(தமது பிறந்ததினத்தை ஒட்டி மலேயாவிலிருந்து வாழ்த்துத் தந்திகளும், பாராட்டுச் செய்திகளும் அனுப்பி அன்பர்கட்குக் கவியரசர் பாரதிதாசன் அவர்கள் தெரிவித்த நன்றியறிதல்)

## மெதுப் போக்குத் திராவிடனுக்கு முற்போக்குத் திராவிடன் மொழிதல்

வாய்ப்பான வேளையடா அண்ணே — நீ
வால்குழைத்து வாழ்வதுண்டோ அண்ணே!
தீர்ப்பான சேதிஒன்று சொல்வேன் — தி
ராவிடத்தை மீட்கமுயல் அண்ணே!
காய்ப்பேறிப் போனதடா அண்ணே — உன்
காட்டிக் கொடுக்கும் இழிதன்மை
தாய்ப்பால் குடித்திருப்பாய் அண்ணே — எனில்
தன்மானம் போனதென்ன அண்ணே!

பண்டைத் திராவிடநா டண்ணே—இது
பாராண்ட தாயகமாம் அண்ணே!
கொண்டு வடக்கனிடம் தந்தாய்—அங்குக்
கொடிதூக்க ஒப்பினையே அண்ணே!
சுண்டைக்காய் அதிகாரம் பெற்றாய்—உன்
தூய்மையினை நீஅதற்கு விற்றாய்
வண்டியிலே ஏற்றிவிட்டாய் மானம்—உன்
வாளெடுக்கநீ மறந்தாய் அண்ணே!

உன்னருந் திராவிடத்தை அண்ணே—அவர்
உருக்குலைக்க உனையழைத்தார் அண்ணே!
"என்னருந் திராவிடத்தில் நீர்யார்—என்
றே" கேட்க நிறைந்தாய் அண்ணே!
தின்னவரும் நாய்நரிகள் கையால்—நீ
சீரடைதல் இல்லையடா அண்ணே
அன்னை உனை வேண்டுகின்றாள் அண்ணே—அவளுக்
காட்சிதர நீவருவாய் அண்ணே!

## எங்கள் திராவிடம்

தங்கம் விளைந்த நிலம்—எங்கள்
தாய்நிலம் போற் காண்கிலம்—உயர்
செங்கதிர் போல்—திங்கள்போல்—துலங்கும்தி
ராவிட மாநிலமே!

எங்கும் வளப்பம் மிகும்—புகழ்
எண்ணத் தகும்நாயகம்—கழை
தெங்கும்செந் நெல்கமுகும்—விளையும்தி
ராவிட நல்லகமே!

அன்பு பதிந்த இடம்—எங்கள்
ஆட்சி சிறந்த இடம்—நல்
இன்பம் நிறைந்த இடம்—எமைஎல்லாம்
ஈன்ற திராவிடமே!

மன்னும் அதன்புகழ் "வானே"—சொல்லும்
வாய்க்கது தித்திக்கும் தேன்—உயிர்,
என்பு, குருதி, நல்லூன்—எலாம்எங்கள்
இன்பத்தி ராவிடந் தான்!

திராவிட நன்னாடு—கொண்ட
சீருக் கொருகேடு—தனைக்
கருதும் பிறநாடு—போர்த்திறத்தைக்
காட்டுக நம்மோடு

அரியது செய்திடுவோம்—தனி
ஆட்சி நிறுவிடுவோம்—மிகப்
பெரியது நம்நாடு—திராவிடம்
பெற்றியை வாழ்த்திடு வோம்!

## உலகம் உன்உயிர்

## உன்உயிர் இவ்வுலகம்!

ஒவ்வொரு நினைவும் உன்றன்
உலகிற்கே! செயல்ஒவ் வொன்றும்
இவ்வைய 'நன்மைக் கே'என்
றெண்ணுதல் பெற்றா யாகில்
செவ்வையாம் நினைவுண் டாகும்
செயலெல்லாம், நல்ல வாகும்!
அவ்'வானின்' நோக்கம் காண்பாய்!
அதன்பெருஞ் செயலைக் காண்பாய்!

உன்வீட்டைப் போற்று கின்றாய்
ஆயினும் உன்றன் வீட்டின்
பின்வீட்டைக் கெடுக்க எண்ணல்
பேதமை யாகும் அன்றோ?
உன்வீட்டுக் குப்பை தன்னை
அயல்வீட்டில் ஒதுக்க வேண்டா !
பொன்என்றே உன்றன் ஊரைப்
புகல்வதில் பிழையே இல்லை.

ஆயினும் அயலூர் தன்னை
அழித்திட எண்ண வேண்டாம்
தூயஉன் வாய்க்கால் நீரைத்
துய்ப்பாய்நீ! அயலூர் நோக்கிப்
பாயும்நீர் அதிலே நஞ்சு
கரைப்பது பழுதே யன்றோ!
தீயன தவிர்த்த நெஞ்சம்
வையகம் செழிக்கும் வித்து

உன்பிரஞ் சிந்தி யாநல்
உணர்வுக்கும் ஒழுக்கத் திற்கும்
தன்மானத் திற்கும் ஏற்ற
தன்மையில் இருப்ப தாயின்
அன்புக்கொள். நாளும் போற்று
மற்றுமுன் அணித்தா யுள்ள
பொன்நகர் எதிர்த்த வைய
முற்போக்கை எதிர்த்தல் போலாம்!

அயலூர்ச்சட் டத்திற் கேநீ
ஆட்பட வேண்டும் என்று
மயலூர்ந்த நெஞ்சத் தார்கள்
வாய்ப்பறை அடிப்பா ராயின்
துயிலாதே அவர்கள் சட்டம்
துன்பத்தை விளைப்ப தாயின்
நயம்பட உரைஉன் அன்பின்
கானில நன்மை எண்ணி.

## காமராசர் வெற்றி

ஈண்டுகாங் கிரஸ்குழுவின் தலைமைக் காக
இற்றைநாள் தேர்தலினை நடத்தி னாராம்,
தூண்டினராம் திராவிடரைப் பார்ப்ப னர்கள்
தோற்கடிப்பீர் காமராஜ் தன்னை என்று!
மாண்டதுவாம் அப்போட்டி! பார்ப்ப னர்கள்
மண்கௌவிச் சாய்ந்தாராம் என்தோ ழர்கள்
மீண்டும்உயர் காமராஜ் வென்றார் என்றார்
வேறெவர்தான் வெற்றிபெற முடியு மென்றேன்.

அறிவுடையார் மானமுள்ளார் காம ராசர்
அன்புடையார் திராவிடநன் மக்கள் மீதில்!
நெறியறிந்து செலத்தக்க ஆற்றல் உள்ளார்
நெஞ்சத்தில் தெளிவுடையார் தன்ன லத்தைச்
சிறிதேனும் எண்ணாத பெரும்பண் புள்ளார்
திராவிடத்தைக் காத்திடுமோர் உறுதி சொன்னார்
பிறரிடத்தில் நமைவிற்றுப் பெருமை கேட்கும்
மாபோசி டீகேசீ போன்றார் அல்லர்.

தீதுசெய வடக்குவந்து செப்பி னாலும்
சிறிதேனும் ஒப்பாமை அவர்பால் கண்டோம்.
வேதத்தைக் காட்டிஇது தணல்என் றாலும்
வேகாது விருதுநகர் பருப்பாம் என்றே
ஓதிடுமோர் ஆழ்ந்தபெருங் கொள்கை உள்ளார்
உயர்நோக்கும் இனப்பற்றும் உயிராய்க் கொண்டார்
சேதிஇனி ஒன்றுண்டு காம ராசர்
திராவிடத்துத் திருமேனி இன்னும் என்ன?

## வடமொழி எதிர்ப்பு

பூசாரி கன்னக்கோல் வடமொ ழிக்குப்
பொதுப்பணத்தைச் செலவழித்துக் கழகமெல்லாம்
ஆசிரியர் அமைத்திடவும் சட்டம் செய்தார்
ஐயகோ அறிவிழந்தார் ஆள வந்தார்!

பேசத்தான் முடிவதுண்டோ? அஞ்சல் ஒன்று
பிறர்க்கெழுத முடிவதுண்டோ அச்சொல் லாலே!
வீசாத வாளுக்குப் படைவீ டொன்றா?
வெள்ளியினாற் பிடிஒன்றா வெட்கக் கேடே!

வடமொழியைத் தாய்மொழிஎன் றுரைக்கும் அந்த
வஞ்சகர்தம் இல்லத்தில் பேசும் பேச்சு
வடமொழியா? பிழைப்புக்கு வாய்த்த தென்ன
வடமொழியா? கிழமைத்தாள் நாளின் ஏடு
வடமொழியா? எழுதும்நூல் பாடும் பாட்டு
வடமொழியா? நாடகங்கள் திரைப்ப டங்கள்
வடமொழியா? அலுவலக நடைமு றைகள்
வடமொழியா? மந்திரமென் றேமாற் றத்தான்
வடமொழிஎன் றால்அதைத்தான் மதிப்பா ருண்டோ

திராவிடரை அயலார்கள் என்பார் அந்தத்
திராவிடரை எவ்வகையி லேனும் அண்டி
உருவடையும் நிலையுடையார் பேடி மக்கள்
உவப்படைய வடமொழிக்கே, ஆள வந்தார்
பெருமக்கள் வரிப்பணத்தால் சிறப்புச் செய்தார்
பிறர்காலில் இந்நாட்டைப் படைய லிட்டார்
திராவிடரோ அன்னவர்தாம்? மான முள்ள
திராவிடரோ? மக்களோ? மாக்கள் தாமோ!

## ஞாலப் பெரியார் பாதை

இசை : செஞ்சுருட்டி — தாளம் : ஆதி

விடுதலை இல்லாத போது—மொழி
ஏது?—இனம்
ஏது?—பண்டை
மேலான வரலாறும் ஏது? நீ
விலக்கல் இலாததமிழ் இலக்கியத் தின்சல்லி
வேரும் சிறிதும் நிலைக் காது
கொடிநாட்டி வாழ்ந்தனை மண்ணி—லதை
எண்ணித்—தமிழ்
எண்ணி—அந்தக்
கொடியவரை நடுங்கப் பண்ணி—கொடுங்
கோலைமுறித்த பின்புன் வேலை முடிந்ததென்று
கொட்டடா முரசு நண்ணி
தாய்க்கும கன்செய்யும் தொண்டும்—ஒன்
றுண்டு—நன்
றுண்டு—தாய்

குண்டு—மேலும்
தளைநீக்க வேண்டும்வெ
தமிழன்நீ தமிழ்ப்பழங் குடிக்கோர் இழுக்கென்றால்
கண்டு.
சாக்காடும் உனக்குக்கற்
நீதான்—புலி
பாக்கியம் பெற்றவன்
நீதான்—சிங்கம்
நீதான்—இந்தப்

தாய்தான்—தமிழ்ப்
பாராண்ட மறத்திஉன்
பண்பாட்டை மிதிப்பவன் பழிவாங்கப் படவேண்டும்
நாய்தான்.
சும்மா இருந்தால் நீயோர்
தெந்நாள்?—இல்லை
தெற்கை வடக் காண்ட
முன்னாள் – அஃ
திந்நாள்—கேள்

உள்நாள்?—நல்ல
சீர்பட வேண்டுமன்றே
திருவேண்டுல் புகழ்வேண்டும் தமிழ்க்குரி மைவேண்டும்
தீயர் தொலையும் நாளே பொன்னாள்
கரண்டி—யாற்
பொற்குவை தன்னைக்
சுரண்டிப்—பல
வண்டி—ஏற்றிப்

உண்டி?—உன்
போனான் நமக்கே திங்கே
பொய்யாத வாழ்வெங்கே மெய்யான உணர்வெங்கே
மண்டி?
போயின வோஇருள்
வேலை—இது
இன்றே உனது முதல்
காலை—கொடுங்
கோலைத்—துண்டாய்

தாலே—பார்
ஓடிக்க வேண்டும்திறத்
முன்னணி
உன்படை! உன்னினம் நில்லதன்
மூலை?
உனக்குப் பகைவர் எந்த
வேண்டு!—உரம்
நன்றிக்கு வாழ்ந்திட
வேண்டும் – திறம்
வேண்டும்—உன்

வேண்டும்—நம்
நாட்டிற்கே நீவாழ
ஞாலப் பெரியார் செல்லும் பாதையினை விடாதே
ஈண்டும்!
விடுதலைப் பெரும்பயன்

## தமிழகம் மீளவேண்டும்
## ஆரிய ஆட்சி ஒழிய வேண்டும்

செந்தமிழ்ச் சொற்களை இந்தியால் எழுதுதல்
அறிவிலாச் செயல்! அறமிலாச் செயல்!
வடவரின் இந்த மடமை எண்ணத்தை
முளையிலே கிள்ளி எறிதல்நம் முதற்கடன்
ஏனெனில்,

எழுத்தைக் கொல்வது மொழியைக் கொல்வதே
மொழியைக் கொல்வது இலக்கியம் கொல்வதே
இலக்கியம் கொல்வதோ இனத்தைக் கொல்வதே
இனத்தைக் கொல்வ ததெதற் கெனில், தமிழர்
நிலத்தைச் சுரண்டித் தமது நிலையினை
உயர்த்த, வடவரின் உள்ளம் இதுதான்

நேருவின் ஆட்சி நெடுநா ளாக
செந்தமிழர்க்குச் செய்யும் தீமைகள்
இம்மியேனும் குறைந்த பாடில்லை
நேருவின் ஆட்சி மாறவேண்டும்.
ஒழிக்க வேண்டும் உயர்தமிழ் மக்கள்

இந்தியை எத்துப் பேசிப் புகுத்தியது!
சாதி ஒழிப்பாரைச் சாக டித்தது!
பாரோர் அறியப் பார்ப்பனர் ஆட்சியை
நிறுவிற்றுத் தமிழரைக் கறுவிற்றுக் கொல்வதாய்!

எந்தத் துறையிலும் இம்மி அளவும்
உரிமை தரேன்என உருமிற்றுப் பன்றி!
தமிழர் செல்வத்தைத் தயங்காது சுரண்டிற்று.
எங்குள தமிழ இனத்தார் தம்மையும்
கயமை மனதாற் காட்டிக் கொடுத்தது
தமிழக நன்செய் தருநெல் லை எலாம்
அயலார்க் கென்றது; பசிஉமக் கென்றது!

நம்இ னத்தார் செம்மைத் தமிழர்கள்
இலங்கை அரசினால் எய்தும் இன்னலை
ஆதரித்தது நேருவின் ஆட்சி!

மலையத் தமிழர்கள் நிலைமை நன்றெனில்
நெஞ்சு கொதித்தது நேருவின் ஆட்சி
அங்குள தமிழர் தொல்லை அடைந்திடில்
ஆம்ஆம் என்ற தறமிலான் ஆட்சி!

தமிழை அழிக்கத் தமிழனைத் தேடிக்
காசு தந்து அலுவல் காட்டி
ஊக்கம் செய்த துயர்விலான் ஆட்சி!

"ஆகாஷ் வாணி" — அதனை நீக்குக!
"வானொலி" — ஆக்குக! என்று கெஞ்சினும்
இதற்கும் மறுப்பா எங்கே அடுக்கும்?
தமிழன் உயிரையா தருதல் வேண்டும்
இந்த உரிமை எய்து தற்கு?

ஆரியர் ஆட்சி நீங்க வேண்டும்
ஒழித்துக் கட்ட வேண்டும்
விழுப்பத் தமிழகம் மீட்சி பெறவே!

கோவையில் விளம்பி ஆவணி 30ல் நடந்த
உஷா — நாராயணசாமி

## திருமண வாழ்த்துப்பா

தமிழகம் போற்றும் நாரா
யணசாமி தகுதி மிக்க
அமிழ்துநேர் மொழிஉ ஷாவை
அடைந்ததால் எலாம் அடைந்தான்
கமழ்மலர்க் குழலி நல்ல
கற்புடை உஷாஆம் நங்கை
அமைந்தநற் சீர்த்தி நாரா
யணன்பெற்றாள் எல்லாம் பெற்றாள்!

பண்பமைந் திட்ட நல்யாழ்
பாணன்கைப் பதிந்த வாறும்
தெண்ணிறை வண்ணத் தும்பி
தேன்மலர் படிந்த வாறும்
வெண்ணிலா முகத்து ஷாவும்
நல்லிடம் மேவ லானாள்
அண்ணலும் அவ்வா றேயாம்
அவள்அவன் தமிழும் பாட்டும்!

தேசிய சேமிப் பென்னும்
திருநாட்டுப் பெருமன் றத்தின்
மாசிலாத் தலைவ ரான
வரதரா ஜுலுவும், மிக்க
தேசுறு சந்தி யாவும்
செய்தவத் தாற்பி றந்து
பேசுமாங் கிலத்தும் தேர்ந்த
உஷாவின்சீர் பெரிதே அன்றோ!

பன்னுமல் லேக வுண்டன்
பாளையத் திராம கிருஷ்ணன்
அன்னபூ ரணம வர்தம்
அன்பினிற் பிறந்த மேலோன்
பொன்னிறை கோவை தன்னில்
பொறியியல் கல்லூ ரிக்கு
மன்விரி வுரைசெய் நாரா
யணசாமி மாட்சி என்னே!

ஒரேகாதல் பாட்டுப் பாடும்
இரண்டுள்ளம் ஒன்றை ஒன்று
சரேலெனத் தழுவக் கண்டோம்
தங்கத்து மணவ றைக்குள்!

வரா இன்பம் வரப்பெற் றார்கள்
மணமக்கள் குறைவோ ஒன்றும்
இராஇல்ல றத்தேர் தன்னை
இழுப்பார்கள் புகழூர் நோக்கி

மேற்றோளில் மாலை சூட்டிக்
கீழ்க்கண்ணால் நோக்கி னாள்பெண்!
கோற்றோளில் மாலை சூட்டிக்
குறுநகை புரிந்தான் ஆளன்!
ஆற்றோரப் புனலிருந்தும்
அவாமிக இருந்தும் இன்றும்
நேற்றேபோல் இருந்தோம் என்று
நினைந்தன இருநெஞ் சங்கள்!

தமிழிசை வடவர்க் கெல்லாம்
தந்தநற் கருவி தந்த
அமிழ்திசை மழையும், வானில்
அவிழ்மலர் மழையும், மேலோர்
கமழ்வாழ்த்து மழையும், பன்னீர்
கைம்மாற்று மழையும், கூடு
அமைமண மக்கள நெஞ்சத்
தன்பினை நனையச் செய்யும்!

திருமண மக்கள் நல்ல
திருவேந்திப் புகழு மேந்திப்,
பருதியும் நிலவும வாழும்
பல்லாண்டு வாழ்வும் ஏந்திக்
கருவிலே தமிழ்ப்பண் பாடு
கமழ்மக்கள் பேரர் ஏந்திப்
பெருவாழ்வு வாழ்க உற்றார்
பெற்றோரும் தம்மும வாழ்க!

திருநிறை செல்வர்

**பத்ம திலகம் — வேலாயுதனார்**

## திருமண வாழ்த்து

வாழ்கநீ செல்வி பத்ம திலகமே வாழ்க! வாழ்க!
ஆழ்கடற் புவியில் வாழ்வின் அறம்வகுத் தல்வ றத்தைத்
தாழ்விலா தியற்று தற்குத் திருமணம் தக்க தென்றார்
சூழ்மண மன்றில் நீயும் தூயனும் துலங்கக் கண்டேன்!

மங்கல இசை ததும்ப மலர்மணம் ததும்ப பன்னீர்த்
திங்கள்வெண் கலசந் தன்னிற் சில்லென்று குளிர் ததும்பத்
தங்குறா திரண்டுள் ளத்திற ததும்பிட அன்பு வெள்ளம்
மங்கையுன் எழில் ததும்பத் ததும்பிற்றுன் மணாளன் ஆசை

மறைவிலா தெவர்க்கும் நன்மை வாய்ந்திடப் பொதுத்தொண்
டாற்றும்
துறைவலார் செல்வ னாருன் தந்தையார் தூய செல்வத்
திறையனார் வேலா யுதனார் மணாளர், உன் இன்ப வாழ்விற்
குறைவிலாக் குறையே யன்றிக் குதூகலம் உனக்கே பத்ம

தனிப்பெரும் கடல்! த மிழ்ச்சேய்! சொக்கலிங் கனார்த வத்தால்
சனப்பெருங் கடலிற் றோன்றும் சந்திரஸ்! குணத்தின் குன்று!
இனப்பெருங் கடலின் வேலா யுதனெனும் அமுத ஊற்றை
மனப்பெருங் கடல ளாவ இன்பத்தில் வதிக பத்மா!

வில்லாண்மைத் தமிழர்க் கின்ப விடுதலை மறிக்கும் பேதப்
புல்லாண்மைச் சுய நலத்தார் புலன்மாற்றி இனங்காக் கின்ற
நல்லாண்மை மக்கள் பெற்று நற்பேரர் பேரர் கண்டு
பல்லாண்டு மணாள னோடு பாரில்நீ டுழி வாழி!

## வள்ளல் சிவாசி கணேசனார் வாழ்க!

அள்ளிக் கொடுத்தனர் ஓரிலக் கத்தை அறிவுதரும்
பள்ளிக்குட் பிள்ளைகட் கெல்லாம் உணவு பரிந்தளிக்க!
உள்ள முதலமைச் சர்காம ராசர் உவந்து பெற்றார்
வள்ளல் சிவாசி கணேசனார் வாழிய வாழியவே!

ஓரிலக் கப்பணம் மாணவர் உண்ணக் கொடுத்ததன்றி
வாரிப் பலவாம் நிறுவனங் கட்கும் வழங்குவதாய்
ஊரினர் கேட்க உறுதி யளித்திட்ட உண்மைவண்மைச்
சீரியர் ஆன சிவாசி கணேசனார் வாழியவே!

ஊணு றக்கங் கொளார் உற்ற மனைவி யுடன்கிடவார்
வீணர் வலைக்குட் படார்மட மாதர் விழிக்குட்படார்
வாணாளில் இந்நாள் வரைக்கும் இராப்பக லாய்உழைத்தே
காண்நில வானார் கணேசர் படக்கூத்தர் மீன்களுக்கே!

அவர்இவர் என்னா துலகத்தி லுள்ளவர் உள்ளமெல்லாம்
கவர்பவ ராய்ப்படக் கூத்தர் வானத்திற் கதிரவனாய்
எவர்இது நாள்மட்டும் தோன்றினார் பொன்பெற்றார்
ஈத்துவந்தார்?
எவர்புகழ் ஏற்றார் அவர்தாம் கணேசனார் வாழியவே!

குணத்தால் அடித்தனர் குள்ளர் எதிர்ப்பைத் தமிழகத்தில்
பணத்தால் அடித்தார் அறியாமைப் பேயைப்பாரப்
பார்மனத்தில்
வணத்தால் அடித்த முகம்,நடிப் பால்அச் சடித்துவண்மை
மணத்தால் அடித்தார் புகழைக் கணேசனார் வாழியவே!

## வள்ளல் சிவாசி கணேசனார் வாழ்க!

பள்ளியில் மாண வர்கள்
பகலுண வுண்ணும் வண்ணம்
அள்ளிஓர் இலக்கம் ஈந்த
அண்ணல் கணேசர் இந்நாள்,
புள்ளினம் பாடும் சோலை
மதுரையின் போடி தன்னில்
உள்ளதோர் தொழிற் பயிற்சி
பள்ளிக்கும் ஈத்து வந்தார்!

இன்றீந்த வெண்பொற் காசோ,
இரண்டரை இலக்க மாகும்!
நன்றிந்த உலகு மெச்சும்
நடிப்பின் நற் றிறத்தால் பெற்ற
கின்றொத்த பெருஞ்செல் வத்தைக்
குவித்தீந்த கணேச னார்போல்
என்றெந்த நடிகர் ஈந்தார்
இப்புகழ் யாவர் பெற்றார்?

தமதென்று வையம் ஆண்ட
தமிழரின் தமிழ கத்தை
எமதென்று பிறரு ரைக்கும்
இழிநிலை போக்க எண்ணாத்
தமிழக நடிக ருக்கும்
தகுதிரைப் படக்கா ரர்க்கும்
இமைதிறந் திடக்,க ணேசர்
இரண்டரை கொடுத்தார் போலும்!

உரிமையும் உயர்வும் கொண்ட
உலகநா டுகள்அ னைத்தும்
கருவியாய்க் கொண்ட ஒன்று;
கல்வியே என்ப தெண்ணித்
திரிபிலா அறிவின் மிக்க
சிவாசிநற் கணேச னாரும்
அருவியாய்ச் சொரிந்தார் செல்வம்,
அரும்பயிர்க் கல்வி வேரில்

தேவைக்கு மேற்கொண் டுள்ள
செல்வம்,தன் நாட்டு மக்கள்
ஆவதற்கே சேர்க்க வேண்டும்;
அறம் அஃதே அறிவும் அஃதே
நாவலர் கணேசர் இந்த
நல்வழி கண்டு மற்றும்
ஈவோர்க்கும் வழிகாண் பித்தார்
எந்நாளும் வாழ்க நன்றே.

## வாழ்த்துப்பா

அண்ணாமலைப் பல்கலைக் கழக 25-ம் ஆண்டு
வெள்ளி விழாவில் பாரதிதாசன்
வாழ்த்துப் பாக்கள்!

தண்ணுறுந் தாயகம் ஒண்மை எய்த
அண்ணா மலைநகர் ஆக்கி, அண்ணாமலைப்
பல்கலைக் கழகம் பண்ணி, எண்ணிலா
நல்லா சிரியரை நயந்து பல்வகைத்
துறைதொறும் வகுப்பு நிறைவுற மாணவர்க்
கறிவுபெற வருகென அன்பழைப் பனுப்பிக்
கழகம் தனது காலெடுத் தூன்றி
நடக்கத் துவங்கிற் றென்ற நன்னிலை
அடைவித் தான்எழில் அண்ணாமலை அரசு!

அந்நிலை அந்நாள் பல்கலைக் கழகம்
அடைந்த தென்றால் அதற்குக் காரணம்
கனிந்த உள்ளத்துக் காவலன் கைப்பொருள்
இழப்பு மட்டுமா அண்ணலின் இடையறா
உழைப்பும் காரணம் தழைதமிழ் நாட்டில்
உடைமை உடலுழைப் பிரண்டும் உதவிய
கொடையிற் பெரிய கோமான் ஒருவனைக்
காட்டெனிற்செட்டி நாட்டானைக் காட்டுவோம்!

காய்ப்புநா ளின்முன் காய்த்துப் பழுத்தமாந்
தோப்புப் போன்ற தூய்கழ கத்தாய்
அதற்குள் எத்தனை ஆயிரம் அறிஞரை,
எத்தனை ஆயிரம் முத்தமிழ்ப் புலவரை
ஈன்று புரந்தந்தாள்! ஈடெடுப் பில்லா
எழுத்தா ளர்களை—எத்தனை பேர்களை
அளித்தாள்!—பொருளின் பெற்றி ஆயுநர்
தமிழிசை வல்லுநர் அமிழ்தப் பாவலர்
இந்தா இந்தா—என்று தந்தாள்!

ஒருநூற் றாண்டில் தரத்தகு பயனைக்
கால்நூற் றாண்டில் தந்தது கழகம்
அதற்கு வையம் அடிநாள் விழிபெற
வண்தமிழ் வழங்கியார் வழி வழி வந்த
பேரா சிரியரைக் கழகம் பெற்றதும்
பாரா சிரியர் புகழும் பண்புறு
சீபீ ராம சாமியை அடைந்ததும்
கன்றினை ஆவெனக் கழகத்தை ஓம்பும்
அறிஞன் முத்தையனை அண்ணலின் புதல்வனைப்
பெற்றதும் அன்றோ உற்ற காரணம்!

வயலும் ஏரும் மழையும் எருவும்
இருந்தும் என்ன செய்வேன் என்னுமோர்

ஏழைக்கு விதைநெல் ஈந்நான் போல
அரசன் அண்ணாமலை திருநாட்டுக்குப்
பண்டைப் பெருமையும் பதியும் நிதியும்
இருந்தும் வருந்தும் நிலைமை எண்ணி
அறிவின் ஊற்றுத் திறந்தான், அப்பெரு
நிறுவனம் வெல்க நீடுவா ழியவே!
அண்ணா மலைபுகழ் விண்ணென விரிக!
அன்னோன் மக்களும் சுற்றமும் மற்றும்
கழகம் காக்கும் கணக்காயர்களும் மாணவர் தாமும்
எழிலுறு சிபீ இராம சாமியும்
வாழிய பைந்தமிழ் நாடு
வாழிய வாழிய வண்தமிழ் நன்றே

(வேறு)

தேனூற்றும் பூவில் தமிழூற்றும் வண்டுதிகழ்
பொதும்பர்
வானூற்று நண்ணுதில் லைக்கண் அண்ணாமலை
மன்னளித்த
ஆனூற்றுப் பாலின் அறிவூற்றி டும்பல்
கலைக் கழகம்
கால்நூற் றாண் டுங்கண்டு பல்லூழி யுங்காண
வாழியவே!

## சென்னை மாகாணத் தமிழாசிரியர் மூன்றாவது மாநாட்டுக்குப் பாரதிதாசன் அனுப்பிய

## வாழ்த்து!

தமிழா சிரியர் மா நாடு வாழ்க!
தகுமவர் நோக்கங்கள் வெல்க!
அமுதே நிகர்த்த தீந்தமிழ் தன்னை
இளைஞருக் கருத்துவார் தம்மை,
நமதா ளவந்தார் மதிப்பதே இல்லை
நன்றான ஒற்றுமை பெற்றே
"எமதா ணையேற்பீர் ஆளவந்தாரே
இல்லையேல் வீழ்வீரெ"ன் றுரைக்க.

உரிய தாய்மொழி மக்களுக் கீவோர்
நாட்டினுக் குயிரினை ஒப்பார்
அரிய நறசெயல் செய்பவர் மக்கட்
கறிவினை யூட்டுவா ராவார்
பிரித லின்றி ஆசிரி யர்கள்
ஒற்றுமைப் பேற்றினை எய்திப்
பெரியர் என்று தாம்தமை எண்ணும்
பிற்போக் காளரை வீழ்த்த!

ஏழைக்கு விதைநெல் ஈந்நான் போல
அரசன் அண் ணாமலை திருநாட்டுக்குப்
பண்டைப் பெருமையும் பதியும் நிதியும்
இருந்தும் வருந்தும் நிலைமை எண்ணி
அறிவின் ஊற்றுத் திறந்தான், அப்பெரு
நிறுவனம் வெல்க நீடுவா ழியவே!
அண்ணா மலைபுகழ் விண்ணென விரிக!
அன்னோன் மக்களும் சுற்றமும் மற்றும்
கழகம் காக்கும் கணக்காயர்களும் மாணவர் தாமும்
எழிலுறு சிபீ இராம சாமியும்
வாழிய பைந்தமிழ் நாடு
வாழிய வாழிய வண்தமிழ் நன்றே

(வேறு)

தேனூற்றும் பூவில் தமிழூற்றும் வண்டுதிகழ்
பொதும்பர்
வானூற்று நண்ணுதில் லைக்கண் அண் ணாமலை
மன்னளித்த
ஆனூற்றுப் பாலின் அறிவூற்றி டும்பல்
கலைக் கழகம்
கால்நூற்றாண் டுங்கண்டு பல்லூழி யுங்காண
வாழியவே!

### சென்னை மாகாணத் தமிழாசிரியர் மூன்றாவது மாநாட்டுக்குப் பாரதிதாசன் அனுப்பிய

## வாழ்த்து!

தமிழா சிரியர் மாநாடு வாழ்க!
தகுமவர் நோக்கங்கள் வெல்க!
அமுதே நிகர்த்த தீந்தமிழ் தன்னை
இளைஞருக் கருத்துவார் தம்மை,
நமதா ளவந்தார் மதிப்பதே இல்லை
நன்றான ஒற்றுமை பெற்றே
"எமதா ணையேற்பீர் ஆளவந்தாரே
இல்லையேல் வீழ்விரே"ன் றுரைக்க.

உரிய தாய்மொழி மக்களுக் கீவோர்
நாட்டினுக் குயிரினை ஒப்பார்
அரிய நறசெயல் செய்பவர் மக்கட்
கறிவினை யூட்டுவா ராவார்
பிரித லின்றி ஆசிரி யர்கள்
ஒற்றுமைப் பேற்றினை எய்திப்
பெரியர் என்று தாம்தமை எண்ணும்
பிற்போக் காளரை வீழ்த்த!

தமிழர் நாட்டை தமிழரே ஆள்க
தமிழரால் வணங்கிடத் தக்கோர்
தமிழா சிரியரே! இந்நிலை இந்நாள்
தளரினும்; தழைத்திடும் நாளை!
இமய வெற்பில் தம்பெயர் பொறித்த
இனத்தர் நாமென உணர்க
அமைதி மாய்க்கும் வடவர் தம்,பிடி
அகலுக நாளும்வா ழியவே;

5—2—59 புதுவை', புலவர் குமாரசாமி அவர்கட்கு நடை பெற்ற பாராட்டு விழாவின்போது; பொன்னாடை போர்த்துப் பொற்கிழி அளித்து வாழ்த்துரை நிகழ்த்திய

சென்னை மாநில முதலமைச்சர் **காமராசர்**
அவர்கட்கு விழாக் குழுவின் சார்பில்

## பாரதிதாசன் வாழ்த்து

அமிழ்து பசித்தோர்க் ககப்பட் டதுபோல்
தமிழர்க்குக் கிடைத்த தகுகாம ராசரே?
தமிழகம் நிறவெறிக் தலைவனால் தொல்லை
சுமந்து துடிப்பது நீங்க, நீவிர்
அமைச்சுப் பதவிக்கொப்பிய அருட்டிறம்
தமிழர் பலபல தலைமுறை மறப்பரிது

குமரி தொடங்கி இமையம் வரையுள
பெருநிலம் ஒருநா டெனும் பேராட்சி
ஒருபுறம் உங்களை இழுக்க, மறுபுறம்
அலுவல் அனைத்தும் தமக்கே என்னும்
தலைகொழுத்த சாதி இழுக்க
நொடிப்பொழு தேனும் நுண்முறை வாழாமல்
அடிப்படை நலங்கள் தமிழகம் அடைய
உள்ளத்தால் பொய்யா துழைக்கும்நீர் தமிழர்கள்

உள்ளத்துள் எல்லாம் உள்ளீர் ஐயா
புதுவையிற் புலவர் குமார சாமிக்கு
நிதிதந்து பொன்னாடை போர்த்த நீவீர்
வருதல் வேண்டும் என்றே மாகப்
பெரும்பணிக் கிடையிலும் வருதல் ஒப்பினீர்
செய்தநன்றி சிறிதும் மறவோம்
வாழ்க காம ராசரே!
வாழ்கநும் ஆட்சி தமிழ்வாழ்தற் பொருட்டே!

## ஈத்துவக்கும் செம்மல் ஏ.கே. வேலனார் வாழ்க!

முன்னும் கொடுத்தார் கரைந்தக்கல் லூரிதான்
முன்னுறவே
பின்னும் கொடுத்தார் புலவர் குழுநலம்
பெற்றிடவே
மன்னும் தமிழ்க்கென்று வாய்மூடு முன்நிதி
வைத்துவிட்டேன்
என்னும்ஏ. கேவேல னார்வாழ்க செந்தமிழ்க்
கீத்துவந்தே!

இருபத்தை யாயிரம் ஐயா யிரமென
இன்தமிழுக்
கருளிச் சிறந்தார் திரைப்பட வணிகர்;
ஆக்குநர்; ஆம்
பெருமுத் தமிழிற் புலவர்; பிறர்நலம்
பேணுநல்லார்;
திருவுற்றே கேவேல னார்வாழ்க நானிலச்
சீர்த்திபெற்றே!

## தறித் தொழிலாலே !!

எடுப்பு

தறித் தொழிலாலே—கைத்
தறித் தொழிலாலே......

உடனெடுப்பு

தமிழ்த் திருநாடே—என்
தமிழ்த் திருநாடே
தழைத்து வருகின்றாய்—வறுமையைத்
தணித்து வருகின்றாய் வாழ்க!
தறித் தொழிலாலே......

அடிகள்

பறிக்கும் பட்டாடை!—கண்ணைப்
பறிக்கும் பட்டாடை!—ஒளி
பாய்ச்சும் நூலாடை!
சிறக்கும் வானும் கதிரும் நிலவும்
சேர்த்து நெய்த பொன்னாடை
செந்தமிழ் நாடே தந்தாய்!
சிறுமையைத் தவிர்த்தாய் நாட்டின்
பெருமையை வளர்த்தாய் வாழ்க!
தறித் தொழிலாலே......

அழகு செய்வ தெல்லாம்—அழகுக்
கழகு செய்வ தெல்லாம் கைத்தறி
ஆடைகள் அல்லவோ?
இழைகள் எல்லாம் பால் நுரையாய்
பழந்தமிழ் நாடே அளித்தாய்
பாவையரின் ஆடவரின்
ஆவலைத் தவிர்த்தாய் வாழ்க!
தறித் தொழிலாலே......

## கைத்தறி ஆடை

ஆடையிற்சி றந்ததுகைத் தறிஆடை —மக்கள்
அனைவர்க்கும் நல்லதந்தத் தேனோடை
ஓடையில் தேனைஅள்ளி உண்ணவாரீர் —அள்ளி
உண்டுகைத் தறிக்குதவி பண்ணவாரீர்!
சேலையிற்சி றந்தகைத் தறிச்சேலை —அது
தேவைக்கு ரியவண்ண மலர்ச்சோலை —குளிர்
சோலைவண் ணமலர்கள் வாங்கவாரீர் —நம்
தூயகைத் தறித்தொழிலைத் தாங்கவாரீர்!
வேட்டியிற்சி றந்ததுகைத் தறிவேட்டி —களை
வெற்றிக்கெல் லாம் அதுவே வழிகாட்டி —புகழ்
காட்டும் கலைக்குநலம் காட்டவாரீர்
கைத்தறித்தொ ழிலைநிலை நாட்டவாரீர்!
எந்நாட்டினும் தென்னாட்டுக் கைத்தறித்தொழில்—திசை
எட்டும் பரப்பியது தன்பே ரெழில் —நம்
தென்னாட்டுக் கைத்தறித் தொழில்ஓங்க —ஓங்கச்
செல்வநிலை யும்கலையும் செழித்தோங்கும்

## அவன் புகழ் வாழ்க!

(சண்டே அப்சர்வர் பி. பாலசுப்பிரமணியனார்
பிரிவு பற்றியது)

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
எனும் உண்மை உணர்ந்தவன் தமிழைக்
கொன்றே பிழைப்பவர் தமிழர்ஒற் றுமையைக்
குலைத்ததுமே அவர்தம துடைமை
தின்றே பிழைப்பவர் ஆகிய பார்ப்பன
ஓநாய்கள் வெற்றியில் திரிந்த
அன்றே எதிர்த்தவன்! அணிவீரன்! பால
சுப்பிர மணியனை இழந்தோம்.

நாடுண்டு கூட்டத் தமிழர்கள் உண்டு
நல்ல'வில்' சண்டேஅப் சர்வர்

ஏடுண்டு கூரம் பெழுத்துண்டு கையில்
''எங்கந்தப் பகையான நரிகள்?
கேடுண்டு போகட்டும்'' எனத்தன துடம்பு
கிழத்தனம் அடைந்திடும் வரைக்கும்
பாடென்ப தெல்லாம் பட்டவன் பால
சுப்பிர மணியனை இழந்தோம்.

ஆங்கிலந் தன்னில் எழுத்தாளன் பேச்சாளன்
ஐந்தாறு மொழியறி வுடையான்!
தாங்காத வறுமைதான் தாக்கினும் பார்ப்பனர்
தாக்கினும் தமிழர்க்கு நேர்ந்த
தீங்கினைத் தீர்ப்பதில் தளர்கிலான் பால
சுப்பிர மணியனை இழந்தோம்!
ஈங்கெவர் அவன்செய்து வந்தநற் றொண்டினுக்
கீடுசெய் திடவல்லார் அறியேம்!

பாலனாம் குரிசிலை இழந்தகதல் தமிழ்த்தாய்
இழந்தனன் படைவீரன் தன்னை!
ஏலாத துன்பத்தை ஏற்றது குடும்பம்!
பெருமையை இழந்தனர் நண்பர்!
மேலான் பருவுடல் மறைந்தனன்; அன்னவன்
மிகக்கொண் டபுக ழுடம்பு
காலமெல்லாம் உள்ள தமிழர்க்கு நல்ல
கருத்தினைத் தந்துவா ழியவே!

## காமராசர் கருதவில்லை!

வடக்கில் ஓர்ஊர் மண்ணில் அமிழ்ந்ததாய்த்
திடுக்கிடும் செய்தி கேட்டோம் ஒருநாள்
அப்படிப் பன்முறை அமிழ்ந்த துண்டாம்!
அப்படி இனியும் அமிழ்தல கூடும்.
ஏனெனில் காரணம் இயம்பு கின்றோம்!

பெருநிலம் உட்புறம் அரிப்புக் கொள்ளவும்
கருந்தரை சேறாய்க் கலங்கவும்—வெள்ளம்
எந்த நேரமும் பாய்ந்துகொண் டிருந்தால்
அந்த நாடே— அரோகரா! அரோகரா!

ஆடிப் பாடி அளவு மீறாமல்
வருவதும் வரவு நிற்பதும் ஆன
செம்புனல் ஆற்றைத் தெய்வம் என்று
நம்பெரும் புலமைத் தமிழர் நவிலுவர்

தேவைக்கு மேலும் திரளும் வெள்ளம்
பேயென்று கூறுவர் தமிழ்ப் பெரியோர்

பண்டை நாள்வட பாங்கில் வாழ்ந்த
ஒண்டமிழ் மக்களும் ஒண்டுமா ரியரும்
தெற்கு நன்றெனச் சேர்ந்தனர் என்றால்
தெற்கில் பேயாற்றுத் தீமை இல்லை!

காமராசர் கருதா தொருநாள்
வடக்கில் வற்றாக் கங்கை இருப்பதால்,
கிடப்போம் அவர்கீழ் என்று கிளத்தினார்!

காவிரி ஊற்றின் கண்தூர்ந் தாலும்
வைகை யூற்றின் வாய்திறந் தாலும்
தமிழன் உரிமையோடு சாக வேண்டும்!
அடிமையாய்க் கங்கை ஆறு பெற்றும்
வாழ்வது மானம் இலாமை என்று
பச்சைத் தமிழர் பகர்ந்தால்
மெச்சுவோம் மீசை முறுக்கேறும் நமக்கே!

## பட்டாளம் கிளம்பிற்றுக் கொட்டடா பறை !

நான்கு கோடித் தமிழர் பட்டாளம்
நாட்டை மீட்கக் கிளம்பிற்றுக் கண்டாய்
தீங்கு செய்யும் வடவரின் ஆட்டம்
செல்லா தென்று கொட்டுவெற் றிப்பறை!

நாங்கள் அல்ல ஆட்பட் டிருப்பவர்
நாங்கள் நாட்டை ஆளப் பிறந்தவர்
வேங்கை எழுந்தபின் நரிகட் கிங்கே
வேலை இல்லை என்றுநீ கொட்டு!

ஆண்ட வர்க்கு வாய்த்தது தொண்டோ
ஆளுந் தகுதியும் வடவருக் குண்டோ!
தோண்ட வேண்டாம் வடவர்சாக் குழியென்று
சொல்லிக் கொட்டடா கொட்டுவெற் றிப்பறை!

பழைய வரலாறு தெரியாத தங்கள்
பாட்டன் மாரைக் கேட்டால் சொல்லுவர்
அழையா வீட்டில் நுழைந்த திடக்கே
அழியப் போவது வடக்கே வடக்கே!

## ஆட்பட்டிருப்பது வெட்கம் !

இசை : காபி — தாளம் : ஆதி

மிடிமையே கொடுக்கும் குடிமையே கெடுக்கும்
அடிமை வாழ்வும் ஒருவாழ்வா?—நம்

கொடிய தளை அறுக்க உரிமைக் கொடிபறக்க
கூடிப் படை எடுத்தல் தாழ்வா?

படிமன்னர் தொழும் மூன்று முடிமன்னர் வழிவந்தோம்
பழிமன்ன வாழ்ந்திட லாமா?—நாம்
தொடுத்தது போர்! பகை தொலைந்தது பார்என்று
சொல்லிட இரண்டு நாள் ஆமா?

ஒருகுடி ஓரினம்! ஒருமொழி கொண்டவர்
ஒன்றுபட்டார் என்ற பேச்சு—நேர்
திருவி லாப்பகைவர் செவியினில் வீழட்டும்
தீர்ந்து போகும் அவர் மூச்சு.

உருவற்றுப் போகட்டும் தமிழினம் என்றென்றே
ஓயா துழைக்கும்ஒரு கோட்டி—அதன்
கருவற்றுப் போம்படி செய்வோம் நமக்குள்ள
கைகள் எட்டுக்கோடி ஈட்டி.

ஆளாக வந்தவர் ஆள்வதும் ஆண்டவர்
ஆட்பட் டிருப்பதும் வெட்கம்—மறத்
தோளாய் இருந்தவை தோலா யினஎன்று
சொன்னால்இவ் வையம்சி ரிக்கும்.

தூளாய்ப் பறந்திடும் வஞ்ச நெடுங்குன்றம்
தூங்கும் தமிழர்வி ழித்தால்—பின்
ஆளப்பி றந்தவர் ஆளுகின்றா ரென
அறிவோர் வரைவார்எ ழுத்தால்.

வாழ்க்கையி லோர்சுவை,வையத்தி லோர்புகழ்!
வாரி ரோதமிழ்ச்சிங் கங்காள்!—வெந்
தீக்காட்டில் வாழ்கின்ற செந்தமிழ் நாட்டன்னை
மீட்க நமையழைக் கின்றாள்!

வீழ்ச்சி அறிந்ததில்லை வேங்கைக ளேஎழுவீர்
வீரம் நமைப்பிரிந்த தில்லை—நம்
தாய்க்கா விலங்கு? தமிழ்க்கா துயரமிங்கு?
தாக்குவீர்; தீர்ந்தது தொல்லை!

## வெல்க தமிழ்நாடு

இலங்கறத்தால் வீரத்தால் புகழைச் செய்த
இத்தமிழ கத்தாய்க்கு வடக்கன் இட்ட
விலங்கறுக்கப் புறப்பட்டான் தமிழர் தந்தை!
வெல்கவே வெல்கவே என்றார் நாட்டார்
கலங்காத நெஞ்சத்து மறவர் கூட்டக்
கடலொன்று படைஎன்று தொடரும் போதும்
துலங்காமூஞ் சிக்கூட்டம் ஒன்று மட்டும்
துட்டடித்துக் கொண்டிருத்தல் வெட்கக் கேடு!

தமிழினத்தைத் தலைகவிழ்த்துத் தமிழ கத்தில்
தன்னினத்தை வளர்ப்பதென்ற பார்ப்பான் ஆட்சி
நமைநோக்கி எளியஉரை ஒன்று சொன்ன
நாக்கறுக்கப் புறப்பட்டான் தமிழர் தந்தை!
தமிழ்வெல்க தமிழ்வெல்க என்றார் நாட்டார்;
தமிழர்படை தரைகிழியத் தொடரும் போதும்
உமிழ்பார்ப்பான் எச்சிலுக்கோர் கூட்டம் மட்டும்
உட்கார்ந்து கொண்டிருத்தல் வெட்கக் கேடு!

ஆளவந்தார் காலடியில் அமிழ்து கண்டே
அதற்காகப் போராடும் கூட்டம் ஒன்று!
மீளுகநம் தாயகமே என்று கூறி
மேற்செல்லும் மற்றுமொரு பெரிய கூட்டம்!
கோளரிகாள், சிறுத்தைகளே, இவ்வி ரண்டில்
குறிகெட்டுத் திரிகின்ற நரிக்கூட் டத்தின்
ஊளைபெறும் வெற்றியது நாட்டின் தோல்வி
உயர்நோக்கம் தோற்பின் அது நாட்டின் வெற்றி

சீரில்லை; சிறப்பில்லை அன்னையான
திருநாட்டை மீட்பதிலே ஆசை யில்லை
கூரில்லை அறிவினிலே; கொள்கை இல்லாக்
கோடரியின் காம்புகளைக் கான்று மிழ்ந்து
நேரில்லை யாருமே தமிழர்க் கென்று
நிலமதிரத் திரண்டெழுந்து தில்லி என்ற
பேரில்லை என்றாக்கித் தீர்க்க வேண்டும்
பெற்றதமிழ் நாட்டைநாம் பெறுதல் வேண்டும்!

## விடுதலைப் பாட்டு

(தமிழருக்கு மறவர் என்று பேர்)

நாயும் ஒப்பாத அடிமை வாழ்வை
நாலு கோடித் தமிழரா ஒப்புவர்?
தாய்நாட் டிற்குத் தமிழர்நா டென்றுபேர்!
தமிழ ருக்கே மறவர் என்றுபேர்! (நாயும் ஒப்பாத)

தேய்தல் வளர்தல் திங்கள் வழக்கம்
தேயாப் புகழ்செயல் எங்கள் வழக்கம்!
தாய கத்தின் மீட்சிப் போரினில்
சாவும், தமிழர்க் கமிழ்தாய் இனிக்கும்! (நாயும் ஒப்பாத)

வீரம் பிறந்த நாட்டிற் பிறந்தவர்;
வெற்றித் தமிழர்; உலகிற் சிறந்தவர்;
ஆரியர் அல்லர்; மறைந்தி ருந்தே
அம்பு பாய்ச்சும் பூரியர் அல்லர் (நாயும் ஒப்பாத)

குறைஒன்று தாயகம் கொள்ளவும் பாரோம்
குன்று பெயரினும் உள்ளுரம் தீரோம்
சிறையும் நோயும் கட்டிலும் தென்றலும்!
செந்நீர் சிந்தல் தேன்சிந்து பாடல்! (நாயும் ஒப்பாத)

## போ போர்க்கு !

(வாகைத் திணை)

துறை : மூதின் முல்லை

பாலுண்ணும் பிள்ளையே
விடு மார்பை!

வேல்வைத்த தோளான் நமது நிலத்திற்
கால்வைத்தான் இன்றே கட்டழிக்கப் போகாயோ (பால்)

கூர்வேலும் இந்தா—முற்பகை
குத்தி வளைந்ததை நன்றாய்

ஆராய்ந்து தந்தேன் சாத்தடா தோளில்
அறத்தைச் செய்! நட! இதே நாளில் (பால்)

மறக்குடி வந்தோர்—உன்முனோர்
போரில் இறந்தனர் அதோபார்!

பிறங்கிற்றுப் புகழும்! நடுகற்கள் நோக்குக!
பிழைக்கினும் இறக்கினும் புகழேபோ போர்க்கு! (பால்)

## மக்கள் பாசறை

காங்கிரசு தீங்கர சானதால் அதனைத்
தமிழர் ஒதுக்கித் தள்ளினர், மற்றும்
சட்ட மன்றினர் தந்நலச் சுவரில்
முட்டித், தமிழரை முழுதும் இழந்தனர்.
கட்சித் தலைவர்கள் மக்களைக் கைவிட்டுத்
தமக்குத் தலைவர் தாம்என்று வாழ்ந்தனர்.

ஆதலின் தமிழர் அனைவரும் இந்நாள்
எவர்க்கும் எந்த நிறுவனத் திற்கும்
கட்டுப் படாமல்ஓர் பாசறை கண்டனர்,
"தலைவர் பெரியார்" என்றுதாம் கொண்டனர்
மக்கட் பாசறை எக்கட் சிக்கும்
எத்தலை வர்க்கும் அடக்கம் இல்லை
என்பதை மீண்டும் மீண்டும் இயம்புவோம்

அரசியல் அறிந்தவர் அறமு ணர்ந்தவர்
இதனை ஊன்றி எண்ண வேண்டும்

''விடுதலை தமிழ கத்திற்கு வேண்டும்''
சாற்றும் இஃது தமிழரின் மூச்சே
ஆதலின் இந்நாள் தமிழர் அனைவரும்
உருவால் பலர்எனில் உணர்வால் ஒருவரே
இந்நாள் எதிரிகள் தமிழருக் கிருப்பினும்
தமிழ கத்தைத் தமிழரே ஆள்வதாய்ச்
சாற்றினும் அதிலே தவறொன்று மில்லை
தமிழைப் பேசும் தமிழக நிலைமை
இதுஎனில், மற்றத் தமிழகம் எவ்வாறு?
தனிநா டல்ல கேரளம்! தமிழகம்!
தனிநா டல்ல தெலுங்கம் தமிழகம்.
தனிநா டல்ல கன்னடம்! தமிழகம்

ஆயினும் அவற்றின் நிலைமை வேறே,
அங்குளார் அயலார்க் கடங்கி வாழ்குவர்
தம்நிலை உணர்கிலார்! தருதி காண்கிலர்
உணர்வார் விரைவில்! உணரச் செய்வோம்.

திறக்கட்டும் பாசறைக் கதவு! அயல்மேற்
பறக்கட்டும் தமிழர் பட்டாளம்! அயலார்
தொடர்பினை அறுத்துத் தொலையச் செய்யட்டும்.
இங்குத் தமிழ்கொடி யேறுக
எங்கும்பின் ஏறும்! பெரியார் வெல்கவே.

## கொலைப்படை வேண்டும்

பீரிட்டடிக்கும் உடற்குருதி கண்டாள்
சேரா திருந்திடப் பழகு—வரும்
பேர்வீர னுக்கிதே அழகு!
(பீரிட்டடிக்கும் உடற்குருதி)

நேரிட்ட போரிலே உன்விழுப் புண்ணில்
நின்பகை நடுமார்பில் நீசெய்த புண்ணில்
(பீரிட்டடிக்கும் உடற்குருதி)

மீன் உண்ணத் தான்வேண்டும் தேடு!நீ
மிக உண்ணத் தான்வேண்டும் ஆடு!
நான்உண்ட துண்டு புலிக்கறியி னோடு
நல்லகர டிக்கறியை! உயர்வென்று பாடு
(பீரிட்டடிக்கும் உடற்குருதி)

ஊன்வாங்க வேண்டாம், உயிரோடு வாங்கி
உடம்பு துடித்திடக் கத்தியைத் தாங்கித்
தேன்வாங்கக் கூடழிப் பான்போல ஓங்கித்
திறம்செய்க! உயிரினிற் கண்ணோட்டம் நீங்கி
(பீரிட்டடிக் உடற்குருதி)

வடபாங்கில் முன்னாளில் தமிழரை வென்றார்
வந்திட்ட ஆரியர்! உடம்பையும் தின்றார்
இடம்பெற்ற பின்சைவம் மிகநல்ல தென்றார்
இன்று தேவைப்படல் கொலைப்படை அன்றோ?
(பீரிட்டடிக்கும் உடற்குருதி)

எண்ணாயிரம் தமிழ்மக்களைக் கழுவால்
இழித்த குருதியைத் தேனென்றாள் வழியால்
பண்ணப் பழகடா பச்சைப் படுகொலை
பைந்தமி ழர்க்கெலாம் உயிரடா விடுதலை
(பீரிட்டடிக்கும் உடற்குருதி)

## உழவன் முதற்கேள்வி

விடியற் காலை வேளை—தனில்
விரிந்த தென்னம் பாளை
கடலிலெல்லாம் காட்டிலெல்லாம்
தூவிற்றுப் பொன் தூளை
கடிய நடந்து கொண்டு—கையில்
காளை மாடி ரண்டு—கூட்டிக்
கழனியிலே ஏரிற் பூட்டி
துவக்கினேண்டி தொண்டு
இப்போது மணி ஒன்று—நான்
ஏரைக் கட்டி நின்று—நல்ல
கொப்புக் காரி எதிர்பார்த்தேன்
நீ வருவாய் என்று
பப்பளி வண்ணச் சேலை—இரு
காதில் இழைத்த ஓலை
இப்படி அப்படிப் பளபளத்ததைக்
கண்டேன் எதிர் மூலை
கொண்டு வந்தாய் சோறு—மீன்
குழம்பு மிளகின் சாறு—நீ

அண்டை யில் வை நம் தெருவில்
நடந்த தென்ன கூறு
தண்டமிழர் ஆள—நம்
தமிழ்நாடு மீள—நல்ல
தொண்டு செய்தவ ரைச்சிறைக்குக்
கொண்டா போனார் நீள?

## இராசாசி வயிற்றெரிச்சல்

உம் நாடகம் செல்லுமா நரியாரே?

சென்னை விலங்கு மருத்துவம் செய்முறைக்
கல்லூரி யின்தமிழ்க் கழகந் தன்னைத்
தொடக்கம் செய்த இராசாசி சொன்னார்:
"வெறுங்கூச்ச லிடுவதால் சாதிவேர் அறாது"

பெரியார் தாமும், பெரியார் கொள்கைக்
குரியார் தாமும், சாதிக் கொள்ளைநோய்
ஒழிக்கும் பணியில் ஓய்விலா துழைப்பது
வையம் அறியும்! மறுக்க ஒண்ணாது!
வெறுங்கூச்ச லிடுவதாய் இராசா[illegible]ம்பினால்
ஆரைப் பற்றி விளம்பிய தாகும்?

வெல்லும் பெரியார் வெறும்பேச்சுக் காரரா?
வீரத் தமிழர் வெறும்பேச்சுக் காரரா?
முன்னால் நீர்ஓர் முதல மைச்சராய்
இருந்தீர் இந்தியைக் கொண்டு வந்தீர்!
உமது வாலை ஒட்ட அறுத்தது
பெரியார் வெறும்பேச்சுத் தானா? பேசுக
அமைச்சுக் கட்டி லும் அரோகரா ஆனதே,
பெரியார் வெறும்பேச்சுக் காரரா? பேசுக;

சாதி கனவிலும் தலைகாட் டாமல்
காதிலும் சாதிக் கதைகே ளாமல்
ஒழிக்கப் படுவதை உணர எண்ணினால்
விழிக்குக் கறுப்புக் கண்ணாடி வேண்டாம்!
ஒருவர்மேல் ஒருவர் அன்புவைத் தால்தான்
ஒழியும் சாதி வெறுப்பால் ஒழியாது''
அடியோடு மரத்தை அகற்ற எண்ணுவோன்
ஆணி வேர்மேல் அன்புவைப் பானோ!
வன்பு மிக்க சோறுவிற் பான்மேல்
அன்பு வைத்த பெரியார் அறிவுரை
என்னா யிற்று? நன்று கருதுக!
பார்ப்பான் என்ற பேர்ப்பல கைதான்
போனதா புகலுக! இல்லையே! இல்லையே!

ஆயிரம் தமிழர், அன்புப் போரில்
புழுவாய்த் துடித்தனர், போனதா பலகை?
எப்போது பலகை எடுக்கப் பட்டது?
தப்பேது மின்றி எண்ணுக சற்றே!
வரிவாய்ப் படித்ததாய் விளம்பி நிற்பீர்
பெரிய அலுவல் பார்த்ததாய்ப் பேசுவீர்
ஆண்டில் முதுமை அடைந்தேன் என்பீர்
"மக்கள் நிகர்'' எனும் மிக்க சிறிய
பாடமும் அறியாக் குள்ள
நாடகம் செல்லு மோநரி யாரே?

## குடும்பத்தோடு புறப்படு!

வீட்டைப் பூட்டிக் குடும்பத் தோடு
நாட்டை மீட்க இன்றே ஓடு!

காட்டியதாம் கைவரிசை தில்லி—அதை
சீட்டுக் கிழிந்து போனதென்று சொல்லி (வீட்)

ஆட்டுவாராம் ...க்குவாராம்
அழிப்பாராம் ஒழிப்பாராம்
ஓட்டுவாராம் நம்மை அல் வடக்கர்—மேலும்
தீட்டுவாராம் கத்தியை அவ்வி டக்கர் (வீட்)

வெற்றி பெற்றால் மீள்வ தென்று
வீழ்ச்சி யுற்றால் சாவதென்று
நற்றமிழன் னைக்குறுதி கூறு!—அட
நாம் தமிழர்! நாம் தமிழர்! ஏறு (வீட்)

செந்தமிழைக் கொல்லச் சொல்லி
சிரகத்தை அழிக்கச் சொல்லி
இந்தியினைக் கற்கச்சொல்லி சொல்லி—ஒரு
மந்தியாட்டம் ஆடியதாம் தில்லி (வீட்)

தாய்க்கரிசி இல்லை என்பார்
தமிழர்க்கெல்லாம் தொல்லை என்பார்
வாய்க்கரிசி போட்டுக்கொண்டு முந்து—நல்ல
போர்ப்பரிசு நீபெற நினைந்து! (வீட்)

## தாய்மார், போருக்கு மக்களை அனுப்புக!

அருந்திய பால்முலை
ஆறுத் தெறிந்த தாய்
அறத்துணை பூண்ட
மறத் தமிழ் நாடு! (அருந்திய

வரும்பகைக் களிற்றின் நெற்றியிற் புதைந்தவேல்
வாங்காது வந்ததன் தீங்கான மைந்தன் (அருந்திய)

தெரிந்திருக்கும் தமிழர் தம் வீரம்!
இடையி லேமறந் திருக்கவும் கூடும்;
சரிந்த பகைவர்கால் தமிழகம் தீண்டுமுன்
தாய்மார் மக்களை அனுப்புக தாக்கவே (அருந்திய)

இமய வட்டாரம் தாக்கிய சோழன்
இருந்த மலைத்தொடர் சோழமலைத்தொடர்!
தமிழன் தாக்கினை மறந்தாரைத் தாக்கத்
தாய்மார் மக்களைப் போருக் கனுப்புக (அருந்திய)

இமய வெற்பின் அண்டையிற் பெரிதாய்
இன்னும் உண்டதன் பேர்? சோழன் கணவாய்!
தமை மறந்து பகைவர் புகுந்தனர்
தாய்மார் மக்களைப் போருக் கனுப்புக (அருந்திய)

காட்டியதாம் கைவரிசை தில்லி—அதை
சீட்டுக் கிழிந்து போனதென்று சொல்லி (வீட்)

ஆட்டுவாராம் அடக்குவாரா
அழிப்பாராம் ஒழிப்பாராம்
ஓட்டுவாராம் நம்மை அவ் வடக்கர்—மேலும்
நீட்டுவாராம் கத்தியை அவ்வி டக்கர் (வீட்)

வெற்றி பெற்றால் மீள்வ தென்று
வீழ்ச்சி யுற்றால் சாவதென்று
நற்றமிழன் னைக்குறுதி கூறு!—அட
நாம்தமிழர்! நாம்தமிழர்! ஏறு (வீட்)

செந்தமிழைக் கொல்லச் சொல்லி
சிரகத்தை அழிக்கச் சொல்லி
இந்தியினைக் கற்கச்சொல்லி சொல்லி—ஒரு
மந்தியாட்டம் ஆடியதாம் தில்லி (வீட்)

தாய்க்கரிசி இல்லை என்பார்
தமிழர்க்கெல்லாம் தொல்லை என்பார்
வாய்க்கரிசி போட்டுக்கொண்டு முந்து—நல்ல
போர்ப்பரிசு நீபெற நினைந்து! (வீட்)

## தாய்மார், போருக்கு மக்களை அனுப்புக!

அருந்திய பால்முலை
ஆறுத் தெறிந்த தாய்
அறத்துணை பூண்ட
மறத் தமிழ் நாடு! (அருந்திய

வரும்பகைக் களிற்றின் நெற்றியிற் புதைந்தவேல்
வாங்காது வந்ததன் தீங்கான மைந்தன் (அருந்திய)

தெரிந்திருக்கும் தமிழர்தம் வீரம்!
இடையி லேமறந் திருக்கவும் கூடும்;
சரிந்த பகைவர்கால் தமிழகம் தீண்டுமுன்
தாய்மார் மக்களை அனுப்புக தாக்கவே (அருந்திய)

இமய வட்டாரம் தாக்கிய சோழன்
இருந்த மலைத்தொடர் சோழமலைத்தொடர்!
தமிழன் தாக்கினை மறந்தாரைத் தாக்கத்
தாய்மார் மக்களைப் போருக் கனுப்புக (அருந்திய)

இமய வெற்பின் அண்டையிற் பெரிதாய்
இன்னும் உண்டதன் பேர்? சோழன் கணவாய்!
தமை மறந்து பகைவர் புகுந்தனர்
தாய்மார் மக்களைப் போருக் கனுப்புக (அருந்திய)

## தமிழன் உணவே தமிழர்க்கு அமிழ்து!

அகவல்

சாப்பாட்டு வேளையில் தஞ்சா வூரின்
நிலையம் சேர்ந்தது நெடும்புகை வண்டி!
திரு.வீர மணியின் திருமணம் வாழ்த்தித்
திருச்சியி னின்று திரும்பும் எனக்குப்
பெரும்பசி வயிற்றைப் பிசைவதா யிற்று!
நானோ,
பார்ப்பனன் தொட்டதைத் திரும்பியும் பாரேன்
தமிழன் உணவு தாங்கி வாரானா
என்று நினைத்துக் கிடக்கையில், எதிரில்
தமிழன், ஒருவன் தலைப்பெட் டியுடன்
சுவைநீர், இட்டலி, தூய, வடை எனும்
அமிழ்தைஎன் காதில போட்டான்! அழைத்தேன்

அரையணா விழுக்காடு வடைகள் ஆறும்,
அவ்விழுக் காடே அன்பின் இட்டளி
மூன்றும், பருப்புக் குழம்பில் முழுகத்
தாயென இட்டான்; சேயென உண்டேன்.
சுவைநீர் சுடச்சுடத் தந்தான் பருகினேன்

இத்தனைக்கும் ஆறணா என்றான்!
அத்தனை யுண்டேன் தந்ததோ ஆறணா!
தஞ்சை வண்டிச் சரகில்ஓர் தமிழன்
மலிவு விலையில் உண்டி வழங்கினான்
என்பதில் வியப்பே இல்லை. ஆனால்,
இத்தனை சுவையினை எங்கும்நான் காண்கிலேன்.
உண்டி விற்கும் உண்மைத் தமிழரே
அண்டிய தமிழர், அமிழ்தமிழ் தமிழ்தெனச்
செப்பும் வண்ணம் செய்திறம் பெறுக!

உண்டி கொள்ளும் உண்மைத் தமிழரே,
தமிழன் உணவே தமிழர்க்கு அமிழ்து!
தமிழர் தமிழனை ஆத ரிக்க!
தஞ்சைத் தமிழன் செய்தது போல
இனிதே யாயினும், எட்டியே ஆயினும்,
வாழ்வ தாயினும் சாவ தாயினும்
தமிழன் ஆக்கிய துண்க
தமிழகம் தன்னுரி மைபெறற் பொருட்டே.

## தில்லிக்கு எச்சரிக்கை

### வானொலியை ஆக்கு! ஆகாஷ்வாணியை நீக்கு!

வானொலியாம் தமிழ்நீக்கி ஆகாஷ் வாணி
வடசொல்லை அங்குவைத்தார்! தமிழர் நாட்டில்

தேனொலியாம் தமிழ்இருக்க வடக்கு நஞ்சைச்
செந்தமிழர் காதினிலே ஊற்றி னீரே
ஏனையா எனக்கேட்டார் விசுவ நாதர்
இதுதானே சரிஎன்றார் ஆள வந்தார்
பூனை அல்ல தமிழ்நாடு நெஞ்சம் அஞ்சாப்
புலி என்று காட்டுமட்டும் அவர்தி ருந்தார்.

இளவழகன் தமிழ்நாட்டான்; ஆகாஷ் வாணி
எனும் இழிவு தொலையுமட்டும் உண்ணேன் என்றான்;
உளஅழகை வெளிக்காட்டிச் சூளு ரைத்தே
உயர் திருச்சி வானொலியின் நிலையத் தின்முன்
எளிதாக நாட்டாரை எழுப்பி விட்டே
ஏதுமிலாத் தனியாள்போல் உட்கார்ந் துள்ளான்
இளவழகன் எண்ணமே தமிழர் எண்ணம்!
எச்சரிக்கை செய்கின்றேன் தில்லி யார்க்கே.

## புகழைத்தேடு

சோறு வேண்டும் துணிவேண்டும்—நல்ல
கூறை வேண்டும்வே றென்ன வேண்டும்?
(சோறு)

ஆறுசெல்ல ஊர்தி வேண்டு மெனில்
அதுபெற்ற பின்பும் ஆசையா தூண்டும்?
(சோறு)

ஈறு வேண்டும்உன் ஆசைக்கு! மேன்மேல்
ஏற்றம் வேண்டினால் புகழ்தேட வேண்டும்
நாறுவேண்டும் மலருக்கு! நீ தமிழ்
நாட்டுக்கு நாளும் உழைத்திட வேண்டும் (சோறு)

புகழாசை கொள்ளுக; பொருளாசை தள்ளுக!
புகழொன்றே நிலைஎன்ற தேவர்சொல் எண்ணுக!
இகழ்வரும் மிகுபொருள் தேடுங்கால்! தமிழ்மீட்பில்
என்ன நேர்ந்தாலும் அவைஎலாம் இன்பமே
(சோறு)

அழகிய இயங்கியில் நீ செல்லுகின்றாய்;
அடிமை என்றுனைப் பிறன சொல்லுகின்றான்!
பழுது போக்கித் தமிழகம் மீட்பையேல்
பார்ப்பான் நல்லதோர் தமிழனைப் பார்ப்பான்
(சோறு)

தமிழன் உயர்ந்தவன் என்றுசொல் கின்றாய்;
தமிழன் வீரன் என்றுசொல் கின்றாய்;
தமிழன் அடிமை எனும்பழி போக்குங்கால்
தமிழா உன்புகழ் நிலையாக்கு கின்றாய்! (சோறு)

## பசி தீர்த்த பாவை

அழகிய நிகழ்ச்சி ஒன்றை
அன்புள்ள சர்மா சொல்லி
எழுதுக செய்யு ளாக
என்றனர் எழுத லானேன்
எழுதும்இக் கருத்தை நாட்டில்
எல்லோரும் பின்பற் றத்தான்
எழுதினேன் என்ப தில்லை;
புதுமைகண் டின்பங் கொள்க!

புகைவண்டி தனிலோர் அச்சுப்
பொற்பாவை அமர்ந்தி ருந்தாள்!
தகும்ஒரு செம்மல் தானும்
அவளெதிர் அமர்ந்தி ருந்தான்!
மிகப்பலர் இருந்தார்; பின்னர்
வகுப்பைவிட் டிறங்கி விட்டார்
திகழ்பவர் இருவர்; வாயைத்
திறவாத ஊமை யர்கள்!

அவள்பார்ப்பாள் அவன் முகத்தை
அவன்பார்ப்பான் அவள் முகத்தை!
அவள்பார்ப்பாள் அவன் முகத்தில்
அல்லலை! அவள் முகத்தில்
அவன்பார்ப்பான் அல்ல லைத்தான்!
காரணம் அறிவ தற்கோ
அவனுந்தான் ஆவ லுற்றான்
அவளுந்தான் ஆவ லுற்றாள்!

துடியாத தோகை யாளின்
துடியிடை துடித்தல் கண்டான்
அடிவயிற் றின்மேல் கையை
அணைப்பானை அவளும் கண்டாள்!
நொடிதோறும் மங்கை துன்பம்
நூறுபங் காதல் கண்டான்
வடிகின்ற கண்ணீர் கண்டாள்
வல்லாளன் முகத்தில் மங்கை!

அவள்படும் துன்பத் திற்குக்
காரணம் கேட்டா னில்லை!
அவன்எதற் கல்லல் உற்றான்
அதைஅவள் கேட்டா ளில்லை.
அவளும்தன் தொல்லை பற்றி
அறிவிக்க வில்லை, அன்னோன்
நவிலவே இல்லை தன்னை
நலித்திடும் நலிவு பற்றி

ஆயிரம் தேள்க டுப்பை
அடக்கிக்கொண் டிருந்தார் அந்த
ஆயிழை யாளும் நல்ல
அழகனும் யார்பொ றுப்பார்?
தீயினில் புழுக்க ளானார்
செந்தமி ழன்னைக் குள்ள
தூய்மைகா ணாரைக் கண்டு
துடிப்பார்போல் துடிது டித்தார்!

கைம்மலர் மார்பு தாங்கக்
கண்மலர் அருவி பாய்ச்ச
விம்மினாள் வாய்அ விழ்ந்து
வீழ்ந்தன துன்பச் சொற்கள்
'வெம்முலை பால்கட் டிற்றே'
மெல்லிஇவ் வாறு சொல்லச்
செம்மலும் பசித்தீ என்றான்
திகைத்தன இரண்டு நெஞ்சும்!

உணர்வெனும் உலகு சேர்ந்தார்
ஒருநொடிப் போதில்! கீழ்மைக்
குணம்வெந்து மடியக் கண்டார்
கொடுங்கச்சு முடிய விழ்த்தாள்
இணைமுலைக் கண்ணைக் கௌவி
இம்மென்று பால்கு டித்தான்
தணிந்தனன் கடும்ப சித்தீ
தணிந்தனள் பால்க டுப்பே!

பறந்தது புகைச்சாக் காடு
நின்றது பக்கத்தூரில்!
மறந்திடேன்! நன்றி! சென்று
வருகின்றேன் என்றான்! என்றாள்
பிறந்தவர் வாழும் வாழ்வு
பிறர்நன்றி யில்தொ குப்பே!
மறவாத தூய உள்ளம்
இறவாத வாழ்வு நல்கும்.

## அன்னை

கண்காக்கும் இமைபோல என்னைக்
காத்தவள் அன்றோ எனைஈன்ற அன்னை!
எண்ணும் எண்ணங்கள் இழைக்கும் செயலெலாம்
எனக்கே ஆக்கி ஈஎறும் பணுகாமல்
(கண்காக்கும்)

பொன்னல்ல அவளாசை பூணல்ல அவளாசை
புத்துருக்கு நெய்ஒழுகும் உணவல்ல அவளாசை

என்நல்ல வாழ்வை அவள்காணும் இன்பம்
எப்போதெப்போ தென்ப தவள்ஒரே ஆசை
(கண்காக்கும்)

அன்பு மணாளன் காதலைத் தள்ளி
ஐந்தாண்டு வரைஎனை அமிழ்தாய் அள்ளிப்
பொன்முலை யூட்டிச் செந்தமிழ்ப் பள்ளி
புகுத்தும் வரைக்கும்என் மேல்ஒரே புள்ளி
(கண்காக்கும்)

வாழ்ந்தாள் என்றால் தனக்கென்றா வாழ்ந்தாள்?
வருந்தினாள் என்றால் தனக்கென்றா வருந்தினாள்?
தாழ்ந்தாள் மேனி! தனக்கென்றா தாழ்ந்தாள்?
தன்னுடல் பொருள்ஆவி எனக்கன்றோ ஈந்தாள்?
(கண்காக்கும்)

உரையினை ஈன்றவள் செந்தமிழ் அன்னை
உறைவிடம் ஈன்றவள் தமிழக அன்னை
கருவிலே இவையெல்லாம் அடையவே முன்னைக்
கனிவயி றேத்தினாள் அவளேமுதல் அன்னை
(கண்காக்கும்)

## நல்ல மனைவி

என்,

வாழ்க்கைப்பயிர் செழிக்கவந்த
வான்மழை அவளே — இன்பத்
தேன்மழை அவளே

கீழ்க்கடல்மேல் கதிர்வருமுன் விழிமலர்ந்திடுவாள்
தொழு தெழுந் திடுவாள்
(என்)

இல்வாழ்க்கைக் கேற்றகுணம்
செயல்கள் உடையவள்
செல்வவரு வாய்க்குத்தக்க
செலவு செய்பவள்

நல்லார்வணங்கும் கற்பைஉயி ரென்றுநினைப்பாள்
எல்லாம்பெற் றேனிவளை நான்மணந்ததனால்

தன்னையும் தான்மணந்த
துணைவன் தன்னையும்
தன்னினத்து தமிழ்ப்பெருங்குடி
தனிப் பெருமையையும்

எந்நாளும்காப்பதிலே இம்மியும் தவறாள்
பொன்னேட்டிற் புகழ்எழுதும் நன்னயமுடையாள்.

## யானைமுகன்

செந்தமிழர் கான்றுமிழ்ந்த தீச்சரக்கு
வினாவிடை வெண்பா

ஆனபல் லாயிரம் ஆண்டறிந்த தென்னாட்டில்
யானை முகம்புகுந்த தெவ்வாறு?—மானே,
அடக்கமிலா ஆரியரால் ஆறாம்நூற்றாண்டில்
வடக்கினின்று வந்த சரக்கு;

திருவாத வூரார் திருவாச கத்தில்
ஒருயானை மூஞ்சிதான் உண்டா? கருங்குயிலே
கூனாம் கொடும்பல்லன் வந்திடுமுன் வந்ததே
தேனாம் திருவா சகம்.

கூனாம் கொடும்பல்லன் — யானை முகன்.

கலையுண்ட முன்னைக் கழகத்தார். யானைத்
தலைகண்ட துண்டா தமிழில்?—கொலைவழியே
அன்னை குளித்தால் அழுக்கெடுத்துப் பிள்ளை செய்தான்
இன்னவெலாம் அந்நாளில் ஏது?

கழகம்—தமிழச் சங்கம். சங்க நூல்களின் பிள்ளையார் பேச்சே இல்லை என்றபடி.

பாவில்வரு நஞ்செனவே யானைமுகன் பைந்தமிழ்
நூலில் நுழைந்தவகை எவ்வாறு?—வாலிழையே
பல்லவர் புத்தர் படைஎடுத்தார், செந்தமிழில்
வல்லவர் வாயடைத் தார்.

வால்இழை—தூய அணி அணிந்தவள்

அடுத்துக் கெடுத்தார்கள் அந்தமிழை என்றால்
எடுத்துக்காட்டேதேனும் உண்டோ? —வடுக்கண்ணாய்.
மூவா யிரம்சொன்னான் மூலன் என்றார் சேக்கிழார்
பாஏது மேல்நாற்பா னேழ்?

திருமூலர், 3000 பாடல்களே சொன்னதாகச் சேக்கிழார் சொல்ல அதற்கு மேல் 47 செய்யுட்கள் எங்கிருந்து வந்தன என்றபடி.

நாற்பத்தேழ் செய்யுளையும் நல்லதிரு மந்திரத்தில்
ஏற்பத் திணித்தார் எதை எண்ணி?—வேற்கண்ணாய்.
"ஐந்து கரத்தினை" ஆனதொரு செய்யுள்செய்து
முந்தவைத்தார் மூலன் நூ வில்.

திருமூலர் திருமந்திரத்தில் "ஐந்து கரத்தனை" என்று யானைமுகன் பாட்டைச் செய்து முதலில் செருகினார் என்றபடி.

தூயதிரு மூலனார் சொன்னதொடக் கச்செய்யுள்
ஆய அதுதான் எதுபுகல்க?—நேயையே
"ஒன்றவன் தானே" எனல் என்று சேக்கிழார்
நன்று நவின்றாரன் றோ?

திருமந்திரத்தின் முதற் செய்யுளாக "ஒன்றவன் தானே" என்று தொடங்கும் முழுமுதற் கடவுள்பற்றிய செய்யுளையே சொல்லி வைத்தார் என்க.

ஆத்திகர் என்ற அறிவிலிகள் இவ்வாறு
நாத்திகம் யாதுக்கு நாடினார்?—ஏத்தழகே
செல்லாத யானைமுகன் செல்லுபடி ஆக்கஇந்தப்
பொல்லாங்கு சூழ்ந்தார் புகுந்து,

வந்த சிறுசரக்கு வாங்குநர்இ லாச்சரக்குச்
செந்தமிழர் கான்றுமிழ்ந்த தீச்சரக்கு—முந்தவிடும்
பானைவயிற் றுச்சரக்குப் பல்நீண்ட கைச்சரக்கு
யானைமுகன் என்னும் சரக்கு.

## துணைவர் இலக்கணம்

மாலை ஏழு மணிக்கு வெள்ளையன்
வேலை யாக வெளியிற் சென்றவன்
மிதிபறக்க மிதி வண்டி பறக்க,
அதிவி ரைவாய் வீட்டை அடைந்து
கிள்ளையே கிள்ளையே கேள்செய்தி என்று
துள்ளிய வண்ணம் சொல்ல லானான்
அழகரும் அம்மையும் மூன்று மக்களும்
காற்றுக் குக்கடற் கரையில் இருந்தனர்
ஏழரை மணிக்கெலாம் புகைவண் டி ஏறி
ஊருக்குப் போவதாய் உரைத்தனர் அவர்கள்
இங்குண வுண்பதாய் ஏற்றுக் கொண்டனர்
எங்கே எழுந்திரு! சரியாய் இடையில்
அரைமணி தானுண்டு—அதற்குள் சமையல்
முடிய வேண்டும் இந்தா மூன்றுகுடம்
தண்ணீர், குண்டான், தட்டு முட்டுகள்
என்றே எதிரில் வைத்தான்! கிள்ளை
சின்னபடி ஒன்றரை கழுவிச் சேர்த்தே
வெள்ளையன் மூட்டிய அடுப்பின் மேல்உள
பானையில் இட்டு, வற்றற் பானையும்
எண்ணெயும் புளியும் உப்பும் இட்டு
சட்டியும் வட்டிலும் தான் தொட்டிருக்கையில்
மிளகாய்த் தூள்மேல் வெள்ளையன் ஓட்டிய
குழவி குருகுரு வென்றது! குழம்பு

சோற்றை இறக்கிய அடுப்புமேல் சொளசொள
என்றே வற்றல் நன்று மணக்கக்
கொதித்தது! கிள்ளை கை கொத்த வரையையும்,
வெள்ளை யன்கை வெண்டைக் காயையும்,
ஆய்ந்தன குழம்பை அங்ஙனே இறக்கிப்
பொன்னெனக் கொத்தவரைப் பொரியல் இறக்குமுன்
வெள்ளையன் வாழை இலையினை வெடுக்கென
அறுத்துத் திருத்திக் கழுவிஅப் படியே
கூடம் பெருக்கிக் கூடப் பாய்இட்டு
நீடுசால் நிறைய நீர்நி றைத்துச்
செம்பும், துடைக்கத் துணியும் வைத்துத்
தன்னனா தான தான தானனா
என்று பாடிக் கொண்டே "என்ன"
என்று கூவினான் "எல்லாம் ஆயிற்று"
என்று மறுமொழி எழுப்பினாள் கிள்ளை
மணிப்பொறி டிங்கென ஏழரை வகுத்தது
நடுக்கட் டினில்ஓர் நாற்கா லிகளும்
விரிப்புப் பெட்டிமேல் வெற்றிலைத் தட்டும்
அழகின் சிரிப்பென அமைத்து முடித்து
வெள்ளையன் கைகூப்பி வேண்டக் கிள்ளைவாய்
மலர்தூய் வருக வருக என்ன
அழகர் வந்தார் அம்மை வந்தாள்
மழலை பேசி மக்கள் வந்தனர்
இருக்கை காட்ட இருந்தனர், உங்கள்
சிரிக்கும் சிறுவர் எங்கென்று கேட்க
வீட்டுப் பாடம் விரும்பி அங்கொரு
வீட்டுக் கேகினர் என்றது கேட்டுக்
கைய லம்பத் திரும்பினர் கண்டனர்
இருகையில் தண்ணீர் ஏந்தி நிற்கும்
தமிழ்ச்செல் வத்தைப் பாண்டியப் பையனை!
வாழ்த்தினர் வியந்தனர் செம்புநீர் வாங்கி
கைகால் முகம்கழீஇக் கடிதிற் சென்றே
எட்டுமணி கிட்டிற் றெனஉட் கார்ந்தனர்
ஐவர்க்கு நால்வர் அருந்தொண் டாற்ற
விருந்துண்டு வெற்றிலை கைக்கொண்டு தெருவில்
வந்தனர், மாட்டு வண்டி வந்தது
வணக்கம் வாழ்த்து நன்றி வழங்கச்
சலசலச் சலங்கை மாடுகள் சரேலென
விரைந்தன. வெள்ளையன் உடன்வி ரைந்தான்
புகைச்சல் வண்டி போனதோ கிடைத்ததோ
என்று கிள்ளை வீட்டுக் கேகினள்.
இரண்டு கடிகை ஏகின! அந்தப்
புகைவண் டியது 'பூ'வென் றாதிற்று
வெள்ளையன் கிள்ளையே என்றழைத் தபடி
வண்டி கிடைத்ததே வண்டி கிடைத்ததே
அரைமணி அளவில் சோறுகறி ஆக்கிய

உன்றன் திறமை உவமை யிலாதது
என்றான் வெள்ளையன்; கில்ளை இசைப்பாள்
ஆடவர் உலகே ஆடவர் உலகே
எனக்கென் துணைவர் போலநின்
மனைமார்க்கு நீதுணை புரிந்து வாழ்கவே.

## திருவரங்கப்பெருமாள் செத்த பத்து!

திருவரங்கத் தார்தீய்ந்தார் அன்னார் மனைமார்,
இருவரங்குத் தீய்ந்தார்கள் இந்தப்—பெருநாள்
ஓர்விளம்பிப் பங்குனியின் ஒன்பதாம் நாள்! இதுபார்ப்
பார்விளைத்த தன்றிவே றார்.

மேம்பட் டுலகளந்தார் வேகையிலே தாம்கிடந்த
பாம்புப் படுக்கையும் வெந்ததுவாம்—சாம்பலாய்ப்
பூண்ட மணியெல்லாம் போனதுவாம்! பொன்னெல்லாம்
நீண்டோடிற் றாம்உருகி நேர்.

கருவறையில் உற்றதீக் காட்டை அவிக்கப்
பெருமாளால் ஆமோ? பெருமாள்—திருவடியால்
ஊர்ப்பானை எல்லாம் உருட்டி உயிர்வாழும்
பார்ப்பாரால் ஆமோ? பகர்.

மலரவனை யும்சிவனை யும்படைத்த மாயன்
சிலர்வைத்த தீயணைத்த லின்றிக்—கலகலென
அத்தீயில் வேகையிலே ஆன திருச்சியினோர்
அத்தீ அணைக்கவந் தார்.

வருவதற்குள் மண்ணுண்டான் தீயுண்டான் மற்றும்
கருவறையில் எல்லாம் கரியாய்க்—கரிந்தனவாம்
நெட்டைக் கருங்கல்லே நீறாகும் போதுவண்ணப்
பட்டாடை என்ன படாது!

கரிய பெருமாள் அடியார் முகத்தில்
கரியைத் தடவிக் கரியாய்க்—கரிந்தானாம்
தானிருந்தும் பார்ப்பனரைத் தாங்கினான் தான்செத்தும்
தானம் தரும்படிவைத் தான்.

கருங்கல் எரிந்ததென்று கண்ணீர் சொரிந்தார்
திருந்தா மடையர்! சிரித்தே—இருந்தார்கள்
பார்ப்பார்! திருமால் படிவம் புதுக்கையிலே
ஊர்ப்பணத்தை உண்ணலாம் என்று.

ஆயிரம் ஆண்டாய்ப்பல் லாயிரம் கோடிஎன்று
தீயாப் பணம்பறித்தான் தீயானான்!—தாய்நாடே
செல்வத் திருக்கோயில், நீபெற்ற மாணவரின்
கல்வித் திருக்கோயி லாக்கு.

நடமாடக் கோயில்ஆம் நம்பர்க்கொன் றீயில்
படமாடக் கோயிற் பரமர்க்—குடன்ஆகும்!
என்றார் திருமூலர்! நெய்வடையை ஈந்தாரே
தின்றாரா கல்லார் சிறிது?

ஆளவந்தீர் மக்கட் கறிவைப் பெருக்காமல்
மாளுகின்றீர் மாளுங்கள்! மாளுங்கள்!!—நாளும்
உருவணக்கத் தாலே திருவழியும்! உள்ளப்
பெருவணக்கத் தால்பெருகும் பேறு!

## தமிழர்க்கு வாழ்க்கைச்சுவை ஏது?

உணவு விடுதி ஒன்றில்ஓர் அறையில்
இருவர் தங்கினர். ஒருவன் தமிழன்
மற்றவன் பிரான்சு நாட்டு வாணிகன்!

கமழ்புனல் ஆடி அமிழ்துண வுண்டு
தூயுடை உடுத்துச் சாய்வுநாற் காலியிற்
சாய்ந்த தமிழன், தன்னெதிர் நடப்பதை
பாடிக் கொண்டே பார்த்தி ருந்தான்!

அறை வெள்ளிக்குக் காற்கோப்பை யுணவு
கேட்டு, வாங்கி உண்டு, கிழிந்த
உடையுடன் பிரான்சினன் எதிரில் உள்ள
சாய்வு நாற்காலியிற் சாயத் தொடங்கினான்.

தமிழன் அவனை நோக்கிச் சாற்றினான்:—
"சுவையிலா உணவையும் தூய்ப்பது, பிரான்சில்
உள்ளவ ரிடத்திலும் உண்டோ நண்பரே."
தமிழனை நோக்கிப் பிரான்சினன் சாற்றினான்:—
"உயர்சுவை உணவை உண்பதென்பது
தமிழகத் தமிழ ரிடத்திலும் உண்டோ?"

பின்னும் பிரான்சினன் பேசு கின்றனன்:—
எரிச்சல் உறுவதேன் இன்தமிழ் நண்பரே
பிறந்தஉம் நாட்டைப் பிறன்ஆள் கின்றான்;
வாழ்க்கையில் சுவையும் வாய்ப்ப துண்டோ!

வாழ்க்கைச் சுவையிலான் வாய்ச்சுவை யுடையனோ!
இன்றுநீர் உண்டதில் என்சுவை கண்டீர்?
கமழ்புனல் ஆடினீர்; அமிழ்துண வுண்டீர்
நீர்ஓர் அடிமை என்பதை நினைந்திரோ!

என்று தமிழனை எண்ணத்தில் ஆழ்த்தினான்
கமழ்புனல் கழிபுனல், ஆனது தமிழற்கே.
அமிழ்துண வோக்காளம் அடைந்தான்
உமிழ்ந்தது தமிழனை அறிவுலகு கான்றே!

## வருக விடுதலை வாழ்வு.

விடுதலை வாழ்வே வாவா—எம்
வெற்றிப் பயனே வாவா
கெடுதலை மாய்த்தாய் வாவா—ஒரு
கீழ்மை தொலைத்தாய் வாவா
தடதட வென்றே சாதி—எனும்
தடையை இடித்தாய் வாவா
அடிமை தவிர்த்தாய் வாவா—நல்
அன்பில் உயர்ந்தாய் வாவா

வாழ்வின் பயனே வாவா—தமிழ்
மக்கள் விருப்பே வாவா
தாழ்வு தவிர்த்தாய் வாவா—எம்
தமிழின் காப்பே வாவா
ஏழ்மை துடைத்தாய் வாவா—நல்
இன்பக் கடலே வாவா
ஆழப் புதைத்தாய் மடமை—நல்
அறிவில் உயர்ந்தாய் வாவா

ஒருமொழி யால்ஓர் இனமாம்—அவ்
வோரின மேஒரு நாடாம்
ஒருநா டின்னொரு நாட்டைப்—போய்
ஒடுக்குதல் ஒப்பாய் வாவா
ஒருவன் வாழ ஒருவன்
உழைக்க வேண்டும் என்னும்
இருளைப் பிளப்பாய் வாவா—இங்
கெவர்க்கும் ஒளியே வாவா

ஊனும் உடையும் வீடும்—நல்
உயிரின் நலமொடு கல்வி
பேணும் வகையில் யாண்டும்—காணில்
பெரியவர் சிறியவர் இல்லை
ஆணுரி மைப்பெண் ணுரிமை—நல்
அறத்தின் காப்பே வாவா
வாணாள் இடையில் தமிழர்—பெற்ற
மாசு துடைத்தாய் வாவா

உரிமை வாழ்வே வாவா—எம்
ஒற்றுமை விளைவே வாவா
பெரிது முயன்றார் தமிழர்—அவர்
பெற்றதொர் பேறே வாவா
அறிது புரிந்தார் தமிழர்—அவர்
ஆர்ந்த புகழே வாவா
வரைகடல் உலகும் தமிழுப்—வானும்
வாழ்நாள் வாழ்வாய் வாவா.

## எட்டி கரும்பாகாது

மீனாட்சி எனும்பெயரை மாற்றிக் கொண்டாள்
கயற்கண்ணி எனும் பெயரை மேவலானாள்
என்என்றார் உறவினர்கள். தமிழாற் கொண்ட
என்விழியை என் அன்பர் இனிதாய் உண்பார்!
ஆனதனால் என்றுரைத்தாள்! தீர்த்தம் என்னும்
அதைவிட்டு நீர்என்றாய் ஏனோ என்றார்
தேனாகப் பருகுவர்என் இதழ்நீ ரைத்தான்.
தீர்த்தமெனில் அணுகாரே என்று சொன்னாள்.

கயற்கண்ணி தமிழ்மகளாய்க் காட்சி தந்தாள்.
கருப்பனுக்கு! விருப்பமெலாம் அவள்தான் என்றான்.
அயலெவரும் அறியாமே ஒருநாட் காலை
ஐந்துமணிப் புகைவண்டி ஏற லானார்
வெயிலப்பன் இதுகண்டான். கருப்பா இஃது
மேன்மையோ எனக்கேட்டான். கரும்பன் சொல்வான்;
இயல்பாக நான்பெற்ற எதிர்கா லத்தின்
இன்பெனும்நாட் குறிப்பவளின் முகக்கண் ணாடி!

வண்டியும்போய் அயல்நிலையம் நின்ற போது
மங்கையுடன் கருப்பன்தான் இருந்த பெட்டி
கண்டதிலே இருமாதர் ஏறி னார்கள்;
கைப்பிள்ளை புனற்செம்பு துணிமு டிப்புக்
கொண்டொருத்தி குந்தஇடம் பார்த்து நின்றாள்
கொழுமட்டைத் தலைஒருத்தி அவள்பின் நின்றாள்
திண்டாட்டம் நீக்கிடுவாய் கயற்கண் ணாளே
சிறுகுழந்தை யொடுதாய்பார் என்றான் அன்பன்

அன்னையும் பிள்ளையையும் கைவி லக்கி
அடுத்துநின்ற மொட்டையினை "இருங்கோ" என்றே
தன்னிடத்திற் சரிபாதி ஒதுக்கித் தந்தாள்
தமிழினத்தின் மேல்வெறுப்பை ஒதுக்கா மங்கை!
இன்னலுற்றான் அன்னைக்கும் பிள்ளைக் குந்தன்
இருப்பிடத்தைத் தந்துதான் எழுந்து நின்றான்!
சென்னைபோய்ச் சேர்ந்ததுவாம் புகைச்சல்வண்டி
சேரவில்லை அவ்விரண்டு கசப்புள் ளங்கள்

நல்லுணவு விடுதிஒன்றில் தங்கி னார்கள்
நாள்போகும்; கிழமை போம்; திங்கள் செல்லும்
அல்லல்மட்டும் அணுவளவும் நீங்க வில்லை
அவளுக்கும் அவனுக்கும்! ஒருநாள் அங்கே
நல்லதொரு வெயிலப்பன் வந்து சேர்ந்தான்;
"நலந்தானா?" எனக்கேட்டான் கருப்பன் சொன்னான்
தொல்லையண்ணே! நான்பெற்ற எதிர்கா லத்தின்
துன்பெனும்நாட் குறிப்பவளின் முகக்கண் ணாடி!—

மெல்லிஅவள் படக்கூத்த னொடுதொ லைந்தாள்
மீட்சிபெற்றேன் எனக்கருப்பன் வீடு சேர்ந்தான்.

## பெரியார் சொல் வெல்கவே!

காலையிலே உணவருந்தி வேலைக்குச் சென்றான்
கடைத்தெருமேற் செல்லுகையில் இருவர்எனை நோக்கி
வேலெறிந்த தைப்போலே விட்டெ றிந்த சொற்கள்
விளைத்தமனத் தொல்லையினை என்னென்று சொல்வேன்
''சேலோடுவில் புலிஉயர்த்தோர் வழிவந்தேன் என்பான்
செந்தமிழ்நாட் டடிமைஇவன்'' என்று சொல்லிப்போனார்
வேலைக்கு நேரந்தான் ஆயிற்றே என்று
விரைவாக நான் நடந்தேன். குறுக்கிட்டான் ஓர் ஆள்!

காங்கிரசு மேன்மையினை மிகவாகச் சொன்னான்
கதைமுடிந்த பின்என்றன் ஆதரவு கேட்டான்
காங்கிரசை ஆதரித்தால் என்னவரும் என்றேன்
கைநிறையச் செல்வம்வரும் என்றுரைத்தான். நானும்
திங்கரசை ஆதரித்தால் செருப்படியும் வருமே
எனச்சொல்லிச் செல்லுகையில் ஒருநொண்டிப் பார்ப்பான்
நாங்கள்தாம் சரியாக நடப்பவர்கள் என்றான்
நகைக்காமல் மற்றவர்கள் நொண்டிகளோ என்றேன்.

அனைத்துலகக் கட்சிஇது! மக்களெலாம், உடைமை
அனைத்தையுமே பொதுவாக அடையவைக்கும் கட்சி!
இனைத்துணையும் பொதுப்பணத்தைத் திருடாத கட்சி!
தெரிந்தவரைத் தெரியாமற் கொலைசெய்யாக் கட்சி!
மனைவிநீ! கணவன்நான் என்றுசோ றுண்டு
மங்கையரை ஏமாற்றிப் பிள்ளைகொடுத் தோடும்
புனைசுருட்டுக் காரரிலாப் பொன்னான கட்சி!
போடிந்த உண்டியிலே பணம்‌என்றான் மேலும்.

இவ்வூரார் நிலத்தையெலாம் வீடுகளை யெல்லாம்
எண்ணி எண்ணிப் பார்த்ததிலே உன்றன்விழுக் காடு
நெய்வேலி சேர்ந்தாப்போல் நன்செய்ஒரு வேலி.
நீஇருக்கும் கூரையண்டை மாடிவீ டொன்றும்
இவ்வாரம் உன்பேருக் காக்குவதாய் எங்கள்
ஊர்க்குழுவி னோரெல்லாம் தீர்மானம் செய்தார்
உன்குடும்பம், நாளைவரும் தேர்தலிலே எம்மை
ஒரேயடியாய் ஆதரிக்க வேண்டுமென்று சொன்னான்.

விட்டாலே போதுமென்று விரைவாக நடந்தேன்
விடமாட்டேன் உன்னைஎன மற்றொருவன் வந்தான்
''பட்டாளத் தலைமைமட்டும் தில்லிக்கு வேண்டும்
பார்ப்பானை அணுவளவும் திட்டுவதே இல்லை

ஒட்டாக மாகாண உரிமைமட்டும் தேவை
உயர் தமிழும் தேவை அதில் வடமொழியும் வேண்டும்
தட்டாமல் எம்மைநீ ஆதரித்தால் போதும்''
தமிழரசுக் கழகத்தான் இவ்வாறு சொன்னான்.

அரிவாளும் நெற்கதிரும் அடையாளங் காட்டி
அடுத்தொருவன் வந்தென்னை நடுத்தெருவில் நிறுத்தி
எரிவெய்யில் கால்களையும் தலையினையும் தீய்த்தே
எரிக்கின்ற நேரத்தில் காதினையும் எரித்தான்
தரவேண்டும் ஆதரவு தரவேண்டும் என்றான்
சரிஎன்றேன் விடவில்லை ஒரேஓட்டமாகத்
தெருத்தாண்டிப் போகையிலே தோழரே என்று
செப்பியது காதில்விழத் திரும்பினேன் அங்கே

திமுக வென்று சொன்னபடி சிரிக்குமுகக் குள்ளத்
திருமேனி ஒன்றுநின்றதனை நான் கண்டேன்
நமதுகழகந்தனிலே நீசேர வேண்டும்
நடிக்கவைப்போம் சினிமாவில் கதைஎழுதச் செய்வோம்
கமழும்உன் பேர் இந்தக் கண்ணில்லா நாட்டில்!
கலைஞன்நீ ஆய்விடலாம் என்றான் கவிஞன்நீ
எமதன்றோ இந்நாடு? சட்டசபை போக
எண்ணமா அடுத்தநொடி பார்த்துக்கொள் என்றான்,

ஓடத்தான் வழிபார்த்தேன் விட்டபாடில்லை
உயர்சினிமாக் கம்பெனியாம் வாஎன்று சொன்னான்.
நாடகமாம்! கம்பெனியாம்! வாவென்று சொன்னான்
நங்கைமார் அழகழகாய் உண்டென்றான் பாவி,
போடாநீ என்றுரைத்தேன் போனபாடில்லை
புறத்தினிலே இழுத்தெறிந்தேன் போகவழி பார்த்தேன்
நாடோடி நாயொன்று குரைத்த தென்னைப்பார்த்து
நடுங்கிநின்றேன் இதுவுமொரு கட்சியோ என்றே.

(வேறு)

நேரந் தவறிநான் வேலைக்குச் சென்றதனால்
வேலைக்கு வேண்டாம் நீ நாளைக்கு வாஎன்று
நாராயணசாமி ஐயர் நவின்றிடவே
''நாலைந்து பிள்ளைகள் பெண்டாட்டி ஒருத்தி
தாரும் அரை நாள்வேலை சாகா திருப்பதற்கே
என்றுபல வாறுநான் சாற்றவும் அக்கொடியன்
ஊரில்இடமில்லா நேரத்தில் நீங்கள் எலாம்
ஒழிந்தால்தான் என்ன முழுகிப்போம் என்றுரைத்தான்.

எனக்குப்பின் வந்த இரண்டுதடிப் பார்ப்பனர்க்கும்
என்கண் எதிரினிலே வேலைதந்தான். ஒருபுறத்தில்
நினைப்பினிலே ஆழ்ந்தவனாய் நீளப் படுத்துவிட்டேன்
நெஞ்சநெருப்புக்கு நல்லமழை வந்ததுபோல்

சினக்கும் கடல்ஒலிபோல் சாதி ஒழிகஎன்று
செப்பியது கேட்டேன் பெருங்கூட்டம் நான்கண்டேன்
இனவெறியைக் கிளப்பிவிடும் இவைகளைத் தில்லி
இன்றே சிறையிலிட வேண்டுமென்று சொல்லி

நாரா யணசாமி நவின்றான் அதேநேரம்
நம்தமிழ் நாட்டை விடுவிப்போம் என்றதொரு
சீரான பேரொலியும் செவிக்கமுதாய்ச் சேர்ந்ததங்கே!
தெருநோக்கி ஓடினேன் ஓடுகையில் என்கையை
நாரா யணசாமி பற்றினான் வேலையைநீ
ஒப்புக் கொள்என்று நவின்றான் என்நிலையதனை
ஆராய்ந்தேன் நாட்டின் அடிமைநிலை ஆராய்ந்தேன்
அழுதனவே என்கண்கள்! சுத்திதாக்கின கைகள்!

சாதி ஒழிகஎன்றும் தமிழ்நாடு மீள்கஎன்றும்
தத்தளிக்கும் என்னருமைத் தமிழர் கிளர்ச்சியினை
மோதி அழிக்கஎண்ணும் கட்சிகளும் வாழ்வனவோ!
முத்தாகப் பேசிப்பொய் மூட்டைகளை இங்கவிழ்க்கும்
தீதான கட்சிகட்கும் ஆதரவு சேர்வதுண்டோ?
செந்தமிழர் எல்லாரும் ஓர்குலமே! நம்நாடு
போதிய நல்லுரிமை பூணாதா? என்னாத
புழுக்களுக்கும் கட்சிஒன்றா? பெரியார்சொல் வெல்லுகவே!

## பெரியார் அறப்போர்!

செயற்கருஞ்செயல் செய்தல் வேண்டும்;
பெறற்கரும்புகழ் பெறுதல் வேண்டும்!

பிறவியிற் சாதி உண்டெனப் பிதற்றியும்,
அறிவை அழித்தும் ஒற்றுமை அழித்தும்,
தமிழகம்—உலகம் உமிழக மாகி
ஒழியவும், நாடொறும் அழிவுசெய் துவரும்
அயலான் அடியை அடையப் பெறுவது
செயற்கருஞ்செயல் செய்வ தாகுமோ?
பெறற்கருபுகழ் பெறுவதாகுமா?

தன்இனம் தன்மொழி தன்நாடு தன்கலை
இன்ன வற்றின் உயர்வை இழிவெனப்
பிறருளம் மகிழப் பேசி வாழ்பவன்
துணைவேந்த னாயினும்தமிழன் துறைக்குத்
தலைவ னாயினும் அந்தத் தமிழன்
செயற்கரு மூறு செய்தவ னாவான்;
பெறற்க ரும்பழி பெற்றவ னாவான்.
ஆயிர மாயிரம் ஆண்டுக ளாகத்
தீய சாதிஇந் நாட்டைத் தீய்ப்பதை

ஆயிர மாயிரம் ஆண்டுக ளாகத்
தூயவர் முயன்றும் தொலைத்தா ரில்லை!
அதனால் இந்த அழகிய தமிழகம்
மதிப்பற்று வாழ்வு மங்கி வருவதும்
உலகம் அறிந்த ஒன்றாம்! இன்று
நிலையிற் றமிழரை உயர்த்தவும் நீங்கா

மாசு நீக்கவும் வந்த பெரியார்
அறப்போர்ப் பறைமுழக்கு—அதோகேட் கின்றது!
தொல்சீர்த் தமிழர்க்கு நல்ல வாய்ப்பிது!
செயங்க ருஞ்செயல் செய்தல் வேண்டும்
பெறற்க ரும்புகழ் பெறுதல் வேண்டும்!
கல்வி அமைச்சரோ செல்வ அமைச்சரோ
இயன்ற மட்டும் பங்கை ஏற்க;
அப்பெரும் போரில் அறப்படை யணியில்

கடைசி வரிசையிற் காணும் தொண்டனின்
செருப்புத் துடைப்பதோர் செயலை யேனும்
செய்க அஃது செயற்கருஞ் செயலே செயலே!
பெறுக அதனால் பெறற்கரும் புகழே!
ஆலைக் காரர் ஆகுக அவர்தம்

தோலைக் காசுக்குத் தொலைப்பார் போலப்
பெரியார் அறப்போர் பெருமதிப்பினைச்
சிறிதென இனிப்பது நீக்கித் திருந்தித்
தொண்டரொடு தொண்டு செய்து கிடக்க
சட்டை மாட்டித் தலைக்கணி செய்து
பட்டு டுத்துப் பகட்டுமோர் தமிழனும்
என்னினும் தாழ்ந்தவன் என்னும் ஆரியன்
தன்னிலும் தாழ்ந்தவன் நான்நான் நான்எனும்"
மடமை மாய்வ தெந்நாள்? அந்நாள்
இந்தநாள்! அரியது செய்க!
நந்தம் பெரியார் படையொடு நடக்கவே!

## எவர் பெரியார் அவர் வாழ்க!

குமரி நாட்டின் தமிழ்நான் மறைகள்
அமிழ்ந்தன! வடவர் மறைகள் நிமிர்ந்தன!
தமிழன் முதலில் உலகினுக் களித்த
அமிழ்துநேர் தத்துவம் ஆன எண்ணூல்
அமிந்தது வடவரின் அறிவுக் கொவ்வாப்
பொய்மைகள் மெய்ம்மைகள் ஆகிப் பொலிந்தன!
அகத்தியன் தொல்காப் பியன்முத லானவர்
தகுதிறம் தமிழிற் பெறுதிறம் அருளிய
எண்ணருங் கண்ணிகர் தமிழ்பாடும் ஏடுகள்

மறைந்தன! வடவர் தீயொழுக்க நூற்கள்
நிறைந்தன! இந்த நெடும்புகழ் நாட்டில்!
"தீதுசெய் யற்க செய்யில் வருந்துக
ஏதும் இனியும் செய்யற்க" வெனும்
விழுமிய தமிழர் மேன்மை நெஞ்செலாம்
கழுவாய் எனுமொரு வழுவே நிறைந்தது.

"நல்குதல் வேள்வி" என்பது நலியக்—
கொல்வது வேள்வி எனும்நிலை குவிந்ததே!
ஒருவனுக் கொருத்தி எனும் "அகம்" ஒழிய
ஐவருக் கொருத்தி எனும் அயல் நாட்டுக்
குச்சுக் காரிக்குக் கோயிலும் கட்டி
மெச்சிக் கும்பிடும் நிலையும் மேவிற்று.
மக்கள் நிகர்எனும் மாத்தமிழ் நாட்டில்
மக்களில் வேற்றுமை வாய்க்கவும் ஆனதே!
உயர்ந்தவன் நான்என் றுரைத்தான் பார்ப்பான்!
அயர்ந்தவன் நான்என் றுரைத்தான் தமிழன்
இப்படி ஒரு நிலை காணுகின் றோமே
இப்படி எங்குண் டிந்த உலகில்?

இறந்த காலத் தொடக்கத் திருந்து
சிறந்த வாழ்வுகொள் செந்தமிழ் நாடு
இழிநிலை நோக்கி இறங்குந் தோறும்
பழிநீக் கிடஎவன் பறந்தான் இதுவரை?
இதுவரை எந்தத் தமிழன் இதற்கெலாம்
பரிந்துபோ ராடினான்? எண்ணிப் பார்ப்பீர்!
தமிழன் மானம் தவிடுபொடி ஆகையில்
வாழாது வாழ்ந்தவன் வடுச்சுமந்து சாகையில்
'ஆ'என்று துள்ளி மார்பு தட்டிச்
சாவொன்று வாழ்வொன்று பார்ப்பேன் என்று
பார்ப்பனக் கோட்டையை நோக்கிப் பாயுமிவ்
அருஞ்செயல் செய்வார் அல்லால்
பெரியார் எவர்?—நம் பெரியார் வாழ்கவே!

## உலகுக்கு மீட்சி உண்டா?

### புத்தர்—பெரியார்—வள்ளுவர்

கந்தை உடைஉடுத்துக் கைப்பிள்ளை தானேந்தி
வந்தாள் ஒருத்தி "வழியேதும் இல்லைஉங்கள்
வீட்டில்இட்ட வேலை செய்வேன் வேண்டிய தெல்லாம் என்றன்
பாட்டுக்குத் தக்கபடி" என்று சொன்னவுடன்
சோறு தருவதென்றும் திங்கள் தொறும் வெள்ளி
ஆறு தருவதென்றும் வேலைக் கமர்த்திடவே

இட்டபணி செய்தாள் நடுப்பகலில் என்மனைவி
வட்டியிலே சோறுகறி வட்டித்தே உண்ணஎன்றாள்,

"சாலையிலோர் வீட்டுக் குறட்டில்என் தாய்ஒருத்தி
மேலும் இரண்டுபேர் தங்கையரை வெம்பசிதான்
வாட்டி வருத்தும் இந்த வட்டியொடு போய்அவர்க்கே
ஊட்டி வரவேண்டும்" என்றே உரைத்துநின்றாள்
உண்ணாரோ? ஊட்டுவதேன்? என்றுரைத்தாள் என்மனைவி;
"கண்ணில்லார் மூவரும்" என்றாள்கலங்கும் கண்ணுடைய
என்மனைவி நெஞ்சம் இரங்கியே "நீஓடி
அன்னவரை இங்கே அழைத்துவா" என்றுரைத்தாள்.

சாய்வுநாற் காலியிலே சாய்ந்திருந்தேன் என்எதிரில்
தாய்இரண்டு பெண்கள் தலைமகளின் கைபற்றி
வந்து வரிசையாய் நின்றார்கள் பிள்ளைக்குக்
குந்தியே பாலூட்டிக் கொண்டேவே லைக்காரி
மூவர்க்கும் சோறூட்டி மூன்றுவிரல் தானுண்டு
யாவர்க்கும் நெஞ்சில் இரக்கத்தை ஊட்டிநின்றாள்.
ஏழைப் பணிப்பெண்ணே "இந்த நகரமன்றம்
ஏழைகளுக் கேதேனும் ஏற்பாடு சேய்கிலையோ"
என்றுநான் கேட்டவுடன் "இந்த நகரமன்றம்
ஒன்றுமில்லா எங்கட்கா ஒத்தாசை செய்யுமெ"ன்றாள்

எண்ணக் கடலிலே நான்ஆழ்ந்தேன் இக்கிழவி
கண்ணில்லாள் காமத்தை வென்றிருந்தால், இன்றிந்தப்
பெண்ணிரண்டும் ஏழைப் பெரியபெண்ணும் பிள்ளையும்
உண்ணுதற்கும் கட்ட உடைக்கும் சிறிதேனும்
ஒத்தாசை யற்ற உலகில் பிறந்தழியார்!
தொத்துநோய்க் காமம்வந்து தொட்டுவிட்ட போதிலுமே
கற்றவர்கள் சொல்லும் கருத்தடைமு றைகளைப்பின்
பற்றியிருந் தாலும் பழிநேர்ந் திராதன்றோ!

கண்ணிலார் இம்மூவர் மட்டுமா? எண்ணிலார்!
எண்ணிலார் காதிலார்! காலிலார். கையிலார்
எண்ணிலார்! உண்ணிலார் எண்ணிலார்! ஏதிருந்தும்
உள்நிறை வில்லார் உலகத்தில் எண்ணிலார்
தப்ப முடியாத சாவுகள் மூப்புநோய்
எப்புறமும் உண்டன்றோ, முப்போதும் துன்பன்றோ!
புத்தர்பிரான் அன்றுகண்ட பொல்லா உலகென்முன்
பெத்தெனக்கு தித்தது. நான் "போ"என்றேன் போகவில்லை

எண்ணிப்பார் என்றுரைத்தான் எங்கிருந்தோ புத்தர்பிரான்
எண்ணக் கடலினை நேறவில் லைநானும்
மக்களெலாம் காமத்தை மாய்க்கத்தான் வேண்டுமா?
மக்கள்வரும் வாயில்களைச் சாத்தத்தான் வேண்டுமா!

யாரும் பிறவாமை இன்ப நிலைதானா!
பாரில் பிறப்புநிலை பட்டழிய வேண்டுமா?
ஈரா யிரத்தைந்நூ றியாண்டின்முன் இவ்வுலகில்
சீரார்ந்த புத்தர்நெறி இன்னும் சிறக்குமா?

ஈரோட்டார் என்பெரியார் "மக்களிலே தாழ்வுயர்வுப்
போராட்டம் வேரற்றுப் போனால் உலகில்
நலிவில்லை எய்தும் நலம்" என்றருளி னாரே!
தலையின்மேற் கொள்ளவே தக்கதன்றோ அன்னதுவும்?
வள்ளுவனார் இப்பெரிய வையத்தைக் காப்பதற்கோர்
தெள்ளு தமிழ்ப்பாட்டும் செப்பினார்—அஃது
பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாம் தலை!

## தாய் தன் குழந்தைக்கு

கூடுகட்டி முடிக்க—ஓடிப் பாடு பட்டுக்
கோட்டுப் புன்னை அரும்பு—போல முட்டை இட்டு
மூடிஅடை காத்து—முழுவே லையும் கெட்டு?
முந்திரிக் கொடடையைப்போல்— குஞ்சு பொறித்தது சிட்டு

காடும் வீடும்சென்று—கம்போ நொய்யோ தேடிக்
காலை மாலைதோறும்—குஞ்சு வயிற்றை மூடிக்
கேடு செய்யும்காக்கை—கிட்டா வண்ணம் நாடிக்
கிட்ட இருந்து படிப்பு—கற்றுக் கொடுக்கும் பாடி

சிட்டுக் குஞ்சு படிக்கும்—பள்ளிக் கூடம் கூடு
சின்ன குழந்தை படிக்கும்—பள்ளிக் கூடம் வீடு
சிட்டுக் குஞ்சுக் கெல்லாம்—தாய்சொல் தானே ஏடு?
சின்ன குழந்தாய் நீயும்—தாயின் சொல்லை நாடு.

போகா இடங்கள் போனால்—பொல்லாங்கெல்லாம் நேரும்
பொல்லா ரோடு சேர்ந்தால்—பொய்யும் புரட்டும் சேரும்
கூகூ என்றே அழுதால்—குரலோ மிகவும் சோரும்
கொட்டம் செய்யா திருந்தால்—பெற்றோர் எரிச்சல் தீரும்!

தூசித் தரையில் குந்தி—துணியைப் பாழாக் காதே
துள்ளிக் குதித்து வீழ்ந்தே—பல்லை இழக் காதே
பேசுந் தமிழை நன்றாய்ப்—பேசமற வாதே
பெற்ற தமிழ் நாட்டின்—பெருமை குறைக் காதே

பெரியோர் பேசும் போது—குறுக்கில் பேசல் தொல்லை
பிஞ்சில் பழத்திற் குள்ள—சுவையி ருப்ப தில்லை
தெரியா விட்டால் கேட்பாய்—தெரிந்தார் சொல்லும் சொல்லைத்
திரியா தேநீ காடு—மேடு பள்ளம் தொல்லை!

எரியும் விளக்கை வாயால்—என்றும் ஊதல் தீமை
இனிதாய்த் தமிழில் பேசத்—தெரியாதவன் ஊமை
மரியாதைகாட்டாமை—வணங்குவானோர் ஆமை
வாழ்த்துக எந்நாளும்—வளர் தமிழச் சிமை

## தாயும் சேயும்

அன்னைதன் பிள்ளையை அணைத்தாள்—அதனால்
கோடையிற் குளிர்புனல் ஓடையிற் குளித்தாள்
குழந்தை அசைத்த குளிர்மலர்க் கையவள்
உடலிற் படுமவள் உயிரே சிலிர்க்கும்!
அன்னை சுவைத்த அச் சின்னஞ் சிறுகால்
வடியும் சாற்றுக் கொடிமுந் திரிக்குலை!
செந்தா மரையின் சிற்றிதழ் போன்ற
இமையிடை உலவும் எழிற்கரு வண்டெனும்
கண்ணும் கண்ணிற் கலந்த ஒளியும்,
உண்ண உண்ண உளந்தெவிட் டாது!

பின்னிய தடுக்கில் வண்ணத் துகில்மேல்
சின்னதாய் அமுதச் சேற்றால், திருந்திய
அச்சிற் பதித்தெடுத்(து) ஆவியும் சேர்த்த
பச்சைக் குழந்தை பால்ஒழுகு வாயொடு
கால்கை அசைத்துக் கருமயிர் அசைய
மேற்செலும் பார்வை மின்னிக் கிடப்பதை!
பெற்றவள் அன்பு பெருகப் பெருக
உற்றுப் பார்ப்பாள் உவப்பாள்; சிரிப்பாள்!

தன்னரும் உடலைத் தரையில் தாழ்த்துவாள்
அன்புறு குழந்தையின் அழகு முகத்தொடு
தன்முகம் சேர்ப்பாள்; தாங்கா மகிழ்ச்சியில்
தன்னிதழ் பொன்னிதழ் மேல்வைத்
தன்பி லூறிஞ்சுமுத்தம் அனைத்துலகு விலைபெறுமே.

## அன்னையின் அன்பு

தூங்கா விடிற்பிள்ளை, தூங்காள்! பிணிவகையால்
தீங்காயின் தீங்குறுவாள் ஊண்எதுவும்—வாங்காள்!
சமைப்பதற் கோதையல்? மக்களுலகை
அமைப்பதற்கே! அவ்வன் பரிது.

படிப்பாள் பயன்நுகர்வாள் பாங்காகச் சோறு
வடிப்பாள் வரும்விருந்தை ஓம்பத்—துடிப்பாள்
எதுசெயினும் கைப்பிள்ளை எண்ணம் மறவாள்
அதுவும் உலகில் அரிது.

பால்குடிக்கும் பிள்ளை பதறாமல் ஓர்கையை
மேல்வளைத் தொருக்கணித்து, மேனியோ —நால்கையோ
சற்றா யினும்அசையா தவ்விரலைத் தான்கழிக்கும்
நற்றாய்சீர் ஞாலத் தரிது.

## குழந்தைக்கு அழைப்பு

/ தாய் தந்தை போட்டி

[தோழியிடம் இருக்கும் குழந்தையை நோக்கித் தாய் தன் கையேந்தியபடி]

தாய் ; என்னிடம் வா சின்னப்பா!

தந்தை ; என்னிடம் வா பொன்னப்பா!

தாய் : பால் கொடுப்பாள் அன்னை
படுத்த ணைப்பாள் அன்னை
தாலாட் டுவாள் அன்னை—நீ
தாவிடுவாய் என்னை

என்னிடம் வா சின்னப்பா.

(கருநாடக தேவகாந்தாரி)

தந்தை : அம்மா ஒரு வம்பி
அவளையே நீ நம்பிச்
செம்மை யாய்வி ரும்பி—நீ
செல்ல வேண்டாம் தம்பி.

என்னிடம் வா பொன்னப்பா.

(வலச்சி)

தாய் : அப்பா தாம்அ டிப்பார்
அம்மா தான்அ ணைப்பாள்
இப்போதென்மேல் தப்பா—உனக்
கென்மேலேவெ றுப்பா?

என்னிடம் வா சின்னப்பா.

(காப்பி)

தந்தை : ஆசையுன்மேல் இல்லை
அவள் கடிப்பாள் பல்லை—அவள்
ஏசுகின் ற சொல்லை—நீ
ஏற்காவிட்டால் தொல்லை,

என்னிடம் வா பொன்னப்பா.

(சிந்து பைரவி)

தாய் : காதலோ என் மீது
கடுகடுப்புன் மீது—உனக்
கேது துணை ஓது—தம்பி
யானுனக்கே தோது

என்னிடம் வா சின்னப்பா.

(பியாக்)

தந்தை : உன் தாயைமறந்தேன்—அவள்
உதவியும் துறந்தேன்—நீ
இன்பமென்றறிந்தேன்—உனை
ஏந்த நான்பறந்தேன்

என்னிடம் வா பொன்னப்பா.

(கமாஸ்)

தாய் : பிள்ளைக்கான வாய்ப்பே—தன்
பெற்றதாயின் காப்பே—இங்
குள்ளவரின் ஏய்ப்போ, உயிர்
உருக்கும்வேலந் தோப்பே.

என்னிடம் வா சின்னப்பா.

(சுருட்டி)

தந்தை . அன்னைகெட்டிக் காரி—அவள்
அதிகப்பேச்சுக் காரி
என்னையேநீ கோரி—வா!
எடுத்தணைப்பேன் வாரி

என்னிடம் வா பொன்னப்பா!

## துடைப்பிள்ளைக்குத் தொடக்கக் கல்வி!

அப்பா என்றுசொல்—எங்கே?
அப்பா என்றுசொல்
அப்பா அப்பா அப்பா
அப்பா என்றுசொல்—எங்கே
அப்பா என்றுசொல்.

தெப்பி வடித்த தேனைப் போலச்
சிப்பி உடைத்த முத்தைப் போல
முப்பெரு வேந்தர் வழிவந்தவனே,
முத்தமிழேஉயி ராய்வந் தவனே
அப்பாவும் நானும் செய்தவ நிலத்தில்
அன்பு விளைக்க விளைந்தாய் மகனே (அப்பா)

குறள் படித்தால் அறம்பு கட்டும்—என்
கொம்புத்தேனே அது நாளைக்கா கட்டும்
நிறை*மூன் றெழுத்தே இன்பம் கொட்டும்
நேரே உன்வாய் இன்றுதிறக் கட்டும் (அப்பா)

''அம்மா'' என் றாய் பாதி தானே?
அப்பா என்மீதித் தேனே
செம்மை யாய்ச் சொல் அதனைத் தானே
செவிநான் பெற்ற பேறென் பேனே (அப்பா)

## இளையமாணவர் திருநாள்

(அகவல்)

### காலை

காலையில் எழுந்து வயிறு கழித்துப்
பாலைப் போலப் பல்லைத் துலக்கிப்
பட்டுப்போல உடம்பு குளித்துச்
சிட்டுப் போலத் தலையை வாரித்
தடுக்கில் குந்தித் தந்ததை உண்டும்
உடுப்பை உடுத்திச் சுவடி எடுத்தும்
துள்ளிக் கூடம் விட்டுப்
பள்ளிக் கூடம் பறக்குமாம் கிளியே!

### பள்ளிக்கூடம்

நல்லாசிரியர் பாடம் சொல்வார்;
எல்லா ரும்தாம் இருந்து கேட்பார்,
கெட்ட பிள்ளைகள் கேட்க மாட்டார்.
நல்ல பிள்ளைகள் நன் றாய்க் கேட்பார்!
அண்டையில் இருக்கும் பிள்ளைக ளோடு
சண்டை யிடுவது சரியே இல்லை!
நத்தை போல எழுதலா காது;
முத்தைப் போல எழுத வேண்டும்
கணகண வென் று வீட்டு
மணி அடித்ததும் வருமாம் கிளியே!

### நடுப்பகல்

நடுப்பகல் உணவு நன் றாய் உண்டு
படிப்பதை எல்லாம் நன் றாய் படித்து
முழுதும் கணக்கைப் போட்டு முடித்தும்
எழுதச் சொன்னதை எழுதி முடித்தும்

*மூன்றெழுத்து—'அப்பா'

தப்பா சரியா என்று சொல்ல
அப்பா இடத்தில் அதையே காட்டித்
தெருவோ ரம்பள் ளிக்கு
விரித்த குடையுடன் போகுமாம் வெல்லமே;

வழியில்

பள்ளிக் கூடம் போகும் போது
துள்ளிக் குதிப்பார் துடுக்குப் பசங்கள்;
ஓட்ட மாக ஓடக் கூடாது!
வீட்டுத் திண்ணையில் ஏறக் கூடாது!
போகும் போது வம்பு கூடாது!
நேராய்ப் பள்ளிக் கூடம்
சீராய்ப் போகுமாம் செல்லக் கிளியே!

மாலை

மாலை வேளையில் பள்ளிக் கூட
வேலை முடித்து வீட்டுக்கு வந்து
பழமோ பயறோ அம்மா கொடுத்ததை
அழாமல் வாங்கி அமைவாய் உண்டு
தெருவோ ரத்தில் சிரித்து விளையாடி
விருவி ரென்று வீட்டுக்கு வந்து
விளக்கின் அருகில் சுவடி விரித்துப்
பனிச்செ ன்று மனத்திற் படியப் படித்துச்
சோறுண்டு தூங்கும் பிள்ளை போல்
வேறுண்டா வீடு நிறைந்த செல்வமே?

## பார்த்து நட!

தெருவோரம் இடது பக்கம்
செல்லும் நல்ல பிள்ளை!
வருபவர்மேல் இடித்துக் கொள்ளும்
பிள்ளை ஒரு நொள்ளை.
மாடு வரும் குதிரை வரும்
வருமல்லவா வண்டி?
வரக்கண்டும் விலகாமல்
இருப்பவன் ஓர் நொண்டி.

ஆடுவரும் எருமை வரும்
முன்னே போனால் மிதிக்கும்'
அழுக்கு மூட்டைக் கழுதைவரும்
பின்னே போனால் உதைக்கும்.
மணி அடிக்கும் ஊது கேட்கும்

ஏமாறக் கூடாது
வண்டி வந்தால் தீமையல்ல
வா? செவிடா காது?

கல்லிருக்கும் முள்ளிருக்கும்
காலிற்பட்டால் தொல்லை.
கண்ணிருந்தும் காணாதவன்
போல முட்டாள் இல்லை.
புல்லிருக்கும் அதற்குள்ளே
பூச்சிபொட்டுக் கிடக்கும்
புற்றிருக்கும் அதற்குள்ளே
பாம்பிருந்து கடிக்கும்!

## படி

எடுப்பு :

நூலைப்படி—சங்கத்தமிழ்
நூலைப்படி—முறைப்படி
நூலைப்படி

உடனெடுப்பு :

காலையிற்படி கடும்பகல் படி
மாலை,இரவு பொருள்படும் படி
நூலைப் படி

அடிகள் ;

கற்பவை கற்கும்படி
வள்ளுவர் சொன்னபடி
கற்கத்தான் வேண்டும் அப்படிக்
கல்லாதவர் வாழ்வதெப்படி? நூலைப்படி!

அறம்படி பொருளைப் படி
அப்படியே இன்பம் படி
இறந்ததமிழ்நான் மறை
பிறந்ததென்று சொல்லும்படி நூலைப்படி!

அகப்பொருள் படி அதன்படி
புறப்பொருள் படி நல்லபடி
புகப் புகப் படிப்படியாய்ப்
புலமை வரும் என்சொற்படி நூலைப்படி!

சாதி என்னும் தாழ்ந்தபடி
நமக்கெல்லாம் தள்ளுபடி
சேதி அப்படி தெரிந்துபடி
தீமை வந்திடுமே மறுபடி நூலைப்படி

பொய்யிலே முக்காற்படி
புரட்டிலே காற்படி
வையகம் ஏமாறும்படி
வைத்துள்ள நூற்களை ஒப்புவதெப்படி நூலைப்படி!

தொடங்கையில் வருந்தும்படி
இருப்பினும் ஊன்றிப்படி
அடங்காஇன் பம்மறுபடி
ஆகும்என்ற ஆன்றோர் சொற்படி நூலைப் படி!

## பேசு

கணகண வென்று மணியடித்தது
காது கேட்கலையா?—பாப்பா
காது கேட்கலையா? தம்பி
காது கேட்கலையா?—உன்
கையில்சுவடிப் பையை எடுக்க
நேரம் வாய்க்கலையா?

முணுமுணு வென்று மூலையிலே
நின்றால் என்னவரும்?—பாப்பா
நின்றால் என்னவரும்?—தம்பி
நின்றால் என்னவரும்?—என்
முன்னேவந்து சொன்னால் வாயின்
முத்தா சிந்திவிடும்

பலகை இல்லையா எழுதப்
பலபம் இல்லையா?—பாப்பா
பலபம் இல்லையா?—தம்பி
பலபம் இல்லையா?—வீட்டுப்
பாடம்எழுத மறந்த துண்டா,
அந்தத் தொல்லையா?

சலவை செய்து வந்தசட்டை
வேண்டும் என்றாயா?—அழுக்கு
வேண்டாம் என்றாயா?—தம்பி
வேண்டாம் என்றாயா?—இதோ
சலவைச்சட்டை போட்டுக் கொண்டாய்
சிரித்துக் கொண்டாயா?

மனத்தில் உள்ளதை எடுத்துச்சொல்ல
வாயும் இல்லையா?—பாப்பா
வாயும் இல்லையா?—தம்பி
வாயும் இல்லையா?—நீ
வாய்திறந்தால் கொடுக்கத் தந்தை
தாயும் இல்லையா?

தனித்தமிழில் கலகல என்று
தட்டாமல் பேசு—பாப்பா
தட்டாமல் பேசு—தம்பி
தட்டாமல் பேசு—நீ
சாலைஓரம் நடக்க வேண்டும்
எங்கே கை வீசு!

## திருடாதே

குருடன் இடத்திலும் திருடாதே ஒன்று!
கொல்லுமே உன்னை உன்நெஞ்சே நின்று (குருடன்)

திருடன் ஒருதரம் தப்பிவிட் டாலும்
திருடித் திருடித் திருடிமேன் மேலும்
பெரிய திருடனாய் பலஆண்டின் காலம்
பெறுவான் தண்டனை! சிரிக்குமே ஞாலம்! (குருடன்)

பசித்த போதிலும் பொறுப்பது பாங்கு
பருக்கை ஒன்றைத் திருடலும் தீங்கு
பிசைந்த கூழுக்கும் பிறர்உப்பு வேண்டாம்
பிழை செய்யும் நண்பனை யும்விட்டு நீங்கு (குருடன்)

நீபடி! நீஉழை! நீபிழை நன்றாய்
நீபிறர்க் குதவிசெய் நற்குணக் குன்றாய்
நீபடி செந்தமிழ் நூலெலாம் ஒன்றாய்
நீதமிழ்க் குள்ள பகைஎல்லாம் வென்றாய் (குருடன்)

## உடற்பயிற்சியும் கறிகாய் விளைவும்

வாடகைக்கோர் சின்னநிலம் வாங்கிக் கொண்டானே
குப்பன்—வாங்கிக்கொண்டானே
மண்வெட்டியை விடியுமுன்பு தாங்கிக்கொண்டானே!
மேடிடித்தும் பள்ளந்தூர்த்தும் மிக உழைத்தானே
குப்பன்—மிகஉழைத்தானே
வேளையுடன் அலுவலுக்கும் விரும்பிச்செல்வானே!
பாழடைந்ததோர் கிணற்றுநீரில் பயனும்கண்டானே
குப்பன்—பயனும்கண்டானே
பத்துத்தோண்டி நீரைமொண்டு பாய்ச்சிடுவானே!

வாழைநட்டான் கீரைநட்டான் அவரைபுடலைகள்
குப்பன்—அவரை புடலைகள்
வாங்கிநட்டான் நாளடைவில் ஓங்கவைத்தானே!
காலைமாலை உடற்பயிற்சி கண்டுவந்தானே

அதனால்—கண்டுவந்தானே
கையும்மெய்யும் நல்லுறுதி கொண்டுவந்தானே
பாலைத்தரும் கறவைக்குப்புல் பார்த்துக்கொண்டானே
குப்பன்—பார்த்துக் கொண்டானே
பச்சைக்கறி காய்கள்எல்லாம் விளைத்துக்கொண்டானே!

## எலிகள்

எண்ணினால் நூறிருக்கும்
எங்கள் வீட்டின் எலிகள்—அவை
இரவுபகல் பண்டங்களைத்
திருடுவதில் புலிகள்!

கண்ணெதிரில் ஓடிஒன்று
கதவிடுக்கில் மறையும்—அங்குக்
காய்ச்சிவைத்த நெய்யினிலே
பாதிக்குமேல் குறையும்!

பிண்ணாக்கைத்தின் றஎலி
பானையையும் உடைக்கும்—நல்ல
பெட்டியினைத் துளைத்தஎலி
பட்டினையும் கடிக்கும்!

எண்ணெயினைக் குடிக்கும்ஒன்று
புளியைஒன்று தின்னும்—அங்கு
இரண்டெலிகள் பழச்சிப்பை
இழுக்கும் முன்னும்பின்னும்

அழகனம்பி முழவினொலி
அறையினிலே கேட்கும்—அங்கு
ஐந்தெலிநெல் சாலின்மேல்
மூடியையுந் தூக்கும்!

பழஞ்சுவடி ஏட்டை எல்லாம்
பழுதுபார்க்கும் ஒன்று—புதுப்
பாடலையும் திருத்திவைக்கும்
ஏடுகளைத் தின்று!

குழந்தை தூங்கும் போதுமயிர்
கத்தரிக்கும் ஒன்று—சிறு
குடுகுடுவென் றோடும்ஒன்று
குதித்திடும்மற் றொன்று!

தழைந்தநாட்டில் நுழைந்தவட
நாட்டினரைப் போலே—நமைத்
தாக்குமிந்த எலிகள் தொல்லை
நீக்கவேண்டும் மேலே!

## எலிக்குஞ்சும் பூனைக்குட்டியும்

பானை இடுக்கில் எலிக்குஞ்சு—தனைப்
பார்த்து விட்டது பூனைக்குட்டி
நான் நான் என்றது பூனைக்குட்டி—அங்கு
ஞைஞை என்றதே எலிக்குஞ்சு!

போன தப்புறம் எலிக்குஞ்சு—நேர்
போன தங்கும் பூனைக்குட்டி
ஏன்ஏன் என்றது பூனைக்குட்டி, பானைக்
கிப்புறம் வந்ததே—எலிக்குஞ்சு!

பானை மேலே எலிக்குஞ்சு—தொத்தப்
பார்த்து விட்டது பூனைக்குட்டி
பானை மேலும் பூனைக்குட்டி—வரப்
பாய்ந்த துள்ளே எலிக்குஞ்சு!

பானை எண்ணெயில் எலிக்குஞ்சு—கூடப்
பதை பதைத்தது பூனைக்குட்டி
தானே செத்தது பூனைக்குட்டி—தான்
தன்னால் செத்ததே எலிக்குஞ்சு!

## உங்கள்தெரு கெட்டதெரு

உங்கள்தெரு வீட்டின் முன்னே
மாடு கட்டி யிருக்கும்—அங்
குள்ளசாணி சிறுநீரில்
கொசுக்கள் நோயைப் பெருக்கும்!

அங்கங் கேயும் வீட்டெதிரில்
குப்பைகூளம் கிடக்கும்—எனில்
அதனை நாயும் கோழி யும்போய்க்
கிளரிக் காற்றைக் கெடுக்கும்.

தங்குழந்தை தெருவில் பகலில்
வெளிக்குப் போகக் கண்டு—நல்ல
தந்தையரும் இருட்டினிலே
செய்வர் அந்தத் தொண்டு!

மங்கையரோ ஆடவரோ
சண்டையிடும் போது—பல
வண்டைமொழி பேசிடுவார்
காதுபொறுக் காது!

தகுந்ததொரு படிப்பகமும்
இல்லைஉங்கள் தெருவில்—எனில்
சாலையில்லை நிழலுமில்லை
கெடும்உடம்பு விரைவில்!

அகமாரப் பிறர்க்கின்னல்
செய்வதில்லை என்னும்—ஓர்
அன்பிருந்தால் உம்தெருவில்
அழகு தூய்மை மன்னும்!

நகராண்மைக் கழகவிளக்கும்
ஒளியைச்செய்வ தில்லை—எனில்
நாலைந்துநாய் வழிமறிக்கும்
அதுபெருத்த தொல்லை!

வகுத்துள்ளர் சட்டமெனில்
அவைகள் மட்டும் போதா—நன்
மனச்சான்று வேண்டுமென்று
வழுத்துவதும் தீதா?

## அக்கக்கா!

அக்கக்கா என்றதாம் கிள்ளை
அழகான எங்கிளிப் பிள்ளை
அக்காவும் வந்தனள் தானே
அங்கே இருந்ததொரு பூனை
நிற்காமல் ஓட்டினாள் அக்கா
நில்லாமல் போனதுசு ருக்கா
அக்காஉள் ளேபோகும் முன்னம்
அக்கக்கா என்றதாம் பின்னும்.

அஞ்சாமல் ஒருதிருடன் வந்தான்
அக்காவைப் பார்த்தான்ப றந்தான்
அஞ்சாறு கோவைப்ப ழத்தை
ஆறேழு கொய்யாப்ப ழத்தை
மஞ்சள் பலாச்சுளை வித்தை
மட்டாய்க் களாப்பழக் கொத்தை
கொஞ்சமாய் வேர்க்கடலை முத்தைக்
கொடுத்தனள் உண்டதாம் தத்தை

## குழந்தை வளர்ப்பு

ஒருதேன் கூட்டில் இரண்டா யிரம்அறை
யிருந்தன; அழகாய் இருந்தன. தூய்மையாய்
இருந்தன. ஒன்றுபோல் இருந்தன அன்றோ!

அவ்வறை தோறும் அழகிய குழந்தைகள்
செவ்வனே வாழும். தேன்குடித் துறங்கும்.
என்ன அழகிய ஏற்பாடு! மிகமிக
நேர்மை யான நிறுவனம் அன்றோ
தழைந்த வாழ்வு தாய கம்பெறக்
குழந்தைகள் தம்மைக் கூட்டி வளர்ப்பது
முடியா தென்று முணுமுணுப் பார்க்கு
முடியு மென்று மொழிந்தன ஈக்கள்!
ஈக்கள் செய்தன இச்செயல் இந்நாட்டு
மாக்கள் செய்ய மதிபடைத் தலரே!

ஈன்றவர் ஈன்றார் இளங்குழந் தைகளை
தேன்கூட் டைப்போல் திருந்த வளர்ப்பது
நாட்டை முன்னின்று நடத்துவார் கடமை.

ஒருநாட் டிலுள்ள உடைமை அனைத்தும்
பெருநாட் டத்தோடு பேசுவ தாயின்
அந்நாட்டுக் குழந்தைகட் கன்றோ உரியவை?
இந்நாட் டவர்க்கெலாம் ஏற்றவை செய்வதாய்த்
தலைமை பெற்றவர் தங்கள் குழந்தையின்
நிலையை மட்டும் நினைத்தால் போதுமா?
தூய செவிலித் தாயை அமைத்தும்
நோயுறா வண்ணம் நுண்முறை நாடியும்
ஆவன செய்வதை அறியா தவர்யார்?

எம்பிள்ளைகட்கே யாம்வாழ் கின்றோம்
செம்புபோல் செழும்பொன் செலவழிக் கின்றோம்
என்று நாளும் இயம்பினார் அன்றோ?
அதுபோல் அன்னைநாட் டருஞ்செல் வங்களை
வளர்க்கும் பொறுப்பை வாங்கவேண் டாமா?
இவ்வாண் டில் இத்தனை இளங்குழந் தைகள்
செவ்வெண்ணெய் இன்றிச் செத்தன என்ற
நிலைமுழுதறிந்தும் தலைமுழுகித் தீர்ப்பதா?
மாந்தர் பொதுஇயல்பு மண்ணாக லாமா?
மனச் சான்றுமா வருத்த வில்லை!

தெருத்தோறும் தெருத்தோறும் பெருத்த வீடு
மருத்துவர், மருந்து, திருத்தச் செவிலியர்
கட்டில்கள், தொட்டில்கள், கணக்கர் அமைக்க!
தெருத்தோறும் கருப்பெற்ற செயிழை மாரைக்

கருத்தொடு நாடொறும் கண்கா ணிக்க!
குழந்தை பெறும்நாள் குறுகிடில் அவரை
மருத்துவ வீட்டில் வரவ ழைக்க
பெறும்நோய் இன்றிப் பெறும்வகை செய்க!
குறுநகை மதலையைக் குளுகுளு வென்று
மனமார்ந்த அன்பொடு வளர்த்து வருக
இரண்டாண் டானபின் இந்தா என்று
குழந்தை பள்ளிக்குக் கொடுத்து விடுக!
இன்னவை அனைத்தும் இன்னே செய்து
பொன்னா டாக்குதல் பொதுக்கடன் நமக்கே
குழந்தை வளர்ப்பு நிறுவனம்
தழைந்து திராவிடத் தாயகம் வாழ்கவே!

## காட்சி

'காட்சி' என் றெழுது தம்பி—சிலர்
காக்ஷிஎன் பார்அது தப்பாம்
காட்சிஎன் னும்பெயர் தம்பி—கேள்
காண்எனும் சொல்லின்வி னைவாம்!
'மாட்சிஎன் றெழுது தம்பி—அது
மாண்எனும் சொல்லின்வி னைவே!
மாட்சிஎனில் பெருமை யாகும்—இந்த
வகையை அறிந்துகொள்ள வேண்டும்!

அடிக்கடி 'உத்யோகம்' என்பர்—அதை
அலுவல்என் றுரைத்திடு தம்பி
படிப்பது வாசித்தல் இரண்டில்—உன்
பழந்தமிழ் முன்னது தம்பி!
உடுத்திடும் வேட்டியை வேஷ்டி—என
உரைப்பதும் பெருப்பிழை அன்றோ?
தடுப்பினும் சாதமென் பார்கள்—அதைத்
தமிழினில் சோறென்று நீசொல்!

## விண் மீன்

வானத்து நீலப்பட் டாடை—அதில்
வாரிஇ றைத்தமுத் துக்கள்
மேனி சிலிர்த்திடும் கண்டால்—அவை
விண்மீன்கள் என்றுசொல் வார்கள்
மீன்என்று சொல்லுவ தேனோ—அவை
மின்னிடும் காரணம் தானோ;
நீர்நிலை மீன்கள்நம் மீன்கள்—அவை
நீலவா னக்கடல் மீன்கள்

## தேர்வு

கொய்யாப் பழத்துக்குக் கொம்புண்டு காலுண்டு
கூறும் எருதுக் கிரண்டும் இல்லை
கையால் எழுதிய எழுத்தினை நீயேஉன்
கண்ணினால் பார்த்துச் சொல் பிள்ளாய்!

மெய்என்று சொல்வதைப் பொய்யென்று சொல்வார்கள்
வேடிக்கை யாயிது பிள்ளாய்?
ஐயா ஒருவரி டம்சென்று கேள்இதை
அவர் மெய்யும் பொய் யாகலாமா?